# ஏழு வார்த்தைகள்



எஸ். பரமானந்தம் ஐயர்

# ஏழு வார்த்தைகள்

எஸ். பரமானந்தம் ஐயர்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS 600003

*COPYRIGHT*

*Seventh Edition*, 1973

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1973. B5776

# முகவுரை

உலக இரட்சகர் சிலுவை மீதிருந்து அருளிச்செய்த ஏழு திருவாக்குகளைத் தியானிக்கும்படி வருடாவருடம் நாம் ஆலயத்தில் கூடுகிறோம். பெரிய வெள்ளிக்கிழமை மூன்று மணிநேர ஆராதனைக்குப் புருஷர், ஸ்திரீகள், பிள்ளைகள் ஆவலோடு கூடிவருவது வழக்கம். இந்த மூன்று மணிநேர ஆராதனையை ஆசீர்வாதமாக்கிக்கொள்ளவேண்டும் என்கிற கருத்து நமக்குள்ளிருக்கவேண்டும். ஏழு வார்த்தைகள்பேரில் வழக்கமாய் ஏழுபேர் பிரசங்கிப்பார்கள். ஏழுபேர் கிடைக்காமற்போனால் இருக்கிறவர்களே இரண்டு மூன்று வார்த்தைகளை எடுத்துப் பேசுவார்கள். ஏழு பிரசங்கிகளில் யார் கெட்டிக்காரரென்று கவனிப்பதும், ஆராதனை முடிந்தபின் அதைப் பற்றிப் பேசிக்கொள்வதும் நமக்கொரு சோதனையாயிருக்கிறது. இந்த ஆராதனை நடக்கும் எல்லா ஆலயங்களிலும் ஏழுபேர் பேசவேண்டியதிருப்பதால், ஏழு நல்ல பிரசங்கிகளை ஒரே ஆலயத்தில் காண்பது கஷ்டம். இதனாலே மூன்று மணிநேர ஆராதனைக்கு வருகிறவர்களில் சிலர் கொஞ்சநேரம் அங்கே இருந்தபின் மற்றப் பிரசங்கங்களைக் கேட்கும்படி வேறு ஆலயங்களுக்கு எழுந்துபோகிறதும், அங்குள்ளவர்கள் இங்கே வருகிறதுமாயிருப்பார்கள்.

சிலுவைத் தியானம் மகா பயபக்திக்குரிய காரியம். மரத்தில் தொங்கினவர் இன்னாரென்று அறிவோமானால், அவரருளிய திருவாக்குகளைப் பயபக்தியோடும் வணக்கத்தோடும் தியானிப்போம்; பேசுகிறவர்களும் பயபக்தியோடும் உணர்வோடும் பேசுவார்கள். இப்போது நம்மில் காணப்படும் பல குறைவுகளுக்கு இடமிராது. சிலுவைக் காட்சியை நமது கண்களுக்குமுன் நிறுத்துவோம். சிலுவையில் விளங்கும் தேவ கிருபையின் ஐசுவரியத்தையும், ஆராய்ந்து முடியாத அவரது அன்பின் பிரவாகத்தையும் அறிந்துகொள்ளும்படி ஆவல்

கொள்வோம். நமது பாவங்களே அவரது மரணத்துக்குக் காரணமென்பதை உணர்ந்து, சிலுவையினடியில் நம்மைத் தாழ்த்தி, அவரை நமது ஜீவனுக ஏற்றுக்கொள்வோம். உருக்கம் நிறைந்த இரட்சகர் நமது மீறுதல்களை மேகத்தைப் போலவும், நமது பாவங்களைக் கார்மேகத்தைப்போலவும் அகற்றுவார். அவர் தமது இரட்சிப்பையும் சமாதானத்தை யும் நமக்கருளுவார்.

'எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும்' என்று பவுல் சொன்னதுபோல, சொன்னவைகளை மறுபடியும் சொல்லக்கூடாதென்கிற விதிக்கு நான் கட்டுப்படாமல், கிறிஸ்துவின் சிலுவையையும், அவரது மரணத்தையும், அவர் உண்டுபண்ணின உன்னதமான இரட் சிப்பையும், கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக்கொள்வதின் அவசி யத்தையும் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறேன். எத்தனை யாய்க் கற்ருலும் அவரது சிலுவையின் இரகசியத்தைப் பூரண மாய் அறியமுடியாது. அது தெய்வீகமானது. கிறிஸ்துவின் ஆராய்ந்து முடியாத ஐசுவரியத்தை ஆவியானவர் படிப்படி யாக வெளிப்படுத்திவருகிருர். லெந்து நாட்கள், பெரிய வெள்ளிக்கிழமையில் மாத்திரமல்ல; எக்காலத்திலும் தேவ மக்கள் இந்தப் புத்தகத்தை ஆழ்ந்த கருத்துடன் படிக்கும்படி மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தப் புத்தகத்திலுள்ள குற்றங்களையும் குறைவுகளையும் அன்புள்ள ஆண்டவர் கிருபையாய் மன்னித்து, இதைப் படிக் கும் தமது மக்களைப் பரிபூரணமாய் ஆசீர்வதிப்பாராக.

*இராயபுரம்*
*டிசம்பர் 1941*

**எஸ். பரமானந்தம்**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| சிலுவைக் காட்சி .. .. .. | 1 |
| முதலாம் வார்த்தை .. .. .. | 17 |
| இரண்டாம் வார்த்தை .. .. .. | 35 |
| மூன்றும் வார்த்தை .. .. .. | 53 |
| நான்காம் வார்த்தை .. .. .. | 71 |
| ஐந்தாம் வார்த்தை .. .. .. | 91 |
| ஆறும் வார்த்தை .. .. .. | 104 |
| ஏழாம் வார்த்தை .. .. .. | 124 |
| கிறிஸ்துவின் சிலுவை .. .. .. | 142 |
| சபைகளின் நிலைமையும் தேவ ஊழியரும் .. .. | 166 |

# சிலுவைக் காட்சி

'அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்' *(யோ. 19:18).*

இரண்டாயிரம் வருடங்களுக்குமுன்னே திபேரியுராயன் ரோமாபுரியில் இராஜ்யபாரம் பண்ணின பதினைந்தாம் வருடம், பொந்திய பிலாத்து யூதேயாவுக்குத் தேசாதிபதி யாயும், ஏரோது கலிலேயாவுக்கு அதிபதியாயும், அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரியராயும் இருந்த காலத்தில், நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து எருசலேம் நகரத்திற்கு புறம்பேயுள்ள கொல்கொதா என்னும் இடத்திலே சிலுவையில் அறையப்பட்டார். மனுமக்களை இரட்சிக்கும்படி தேவ குமாரன் சிலுவையில் மரித்தார் என்பது கட்டுக்கதையல்ல, அது சரித்திர உண்மைதான் என்பதற்கு மேற்கூறிய அரசாங்க விவரம் பலத்த ஆதாரம்.

சிலுவை மரணம் மகா குரூரமும் மிகுந்த அவமானமுமான ஓர் தண்டனை. ரோமர் தங்கள் அடிமைகளையும், தேசக் கலகக்காரரையும் சிலுவையிலறைந்து கொல்லுவார்கள். சிரச்சேதம் உயிரை உடனே போக்கிவிடும். சிலுவையோ உயிரைச் சீக்கிரம் போக்காமல் நீடித்த அவஸ்தையைக் கொடுக்கும். சிலுவையில் அறையப்பட்டவர்கள் உடனே சாவதில்லை. இரண்டு மூன்று நாட்கள்வரை தொங்கிக் கொண்டிருந்து சாவார்கள். ஆகையால் அவர்களைச் சீக்கிரம் சாகடிக்கும்படி அவர்கள் காலெலும்புகளை முறிப்பார்கள். சிலுவையில் தொங்கும் சரீரம் இங்குமங்கும் அசையமுடியா மல் முழுப்பாரமும் ஆணிகளில் தொங்குவதால் வேதனை சகிக்க முடியாது. அத்துடன் நடுப்பகல் உஷ்ணமும் தேகத்தில் விழவே நாவறண்டு அகோர தாகத்தால் கதறுவார்கள். நமதாண்டவரோ நீண்ட நேரமாக சிலுவையில் தொங்க வில்லை. நாலு அல்லது ஐந்து மணி நேரத்துக்குள்ளாக தமது

காரியத்தை முடித்துக்கொண்டார். அவருடைய காலெலும்பு களை முறிக்கும்படி போர்ச்சேவகர் அவரண்டை வந்தபோது அவர் மரித்துப்போனாரென்று கண்டார்கள். இவ்வளவு சீக்கிர மாக அவர் மரித்தது உண்மைதானாவென்று பிலாத்து ஆச்சரி யத்துடன் கேட்டான். அவருடைய ஜீவனை எடுக்க ஒருவனா லும் முடியாது, சத்துருக்களின் இஷ்டப்படி அவர் சாகாமல் தமது சித்தப்படியே தாம் குறித்தநேரத்தில் தமது ஜீவனை விடும் அதிகாரமுடையவராயிருந்தார்.

## சிலுவைக் கூட்டம்

பஸ்காப் பண்டிகையை ஆசரிக்க இலட்சக்கணக்கான ஜனங்கள் எருசலேமுக்கு வருவார்கள். இச்சமயத்திலேதான் ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்டார். இந்தப் பண்டிகை யில் விசேஷமாக எல்லாருடைய கவனமும் பேச்சும் இயேசு வைப்பற்றியே யிருந்தது. ஏனென்றால் அவருடைய கீர்த்தி ஏற்கெனவே எங்கும் பிரஸ்தாபமாயிற்று. மேலும் அவர் நகரத் திற்கு பவனி வந்ததும், ஜனங்களுடைய ஆர்ப்பரிப்பும் இன்னும் அதிகமாய் அவர்களுடைய கவனத்தை இழுத்துக்கொண்டது. அப்படிப்பட்ட ஒரு பெரியாரை சிலுவையிலறைந்தார்க ளென்றால் எப்படியிருக்கும்? இக்காட்சியைக் காணத் திரளான ஜனங்கள் சிலுவையண்டை கூடிவிட்டார்கள். இவர்கள் பல வகுப்பாராயிருந்தார்கள்.

**ரோமப் போர்ச்சேவகரை** சிலுவையினடியில் உட்கார்ந்திருக்கக் காண்கிறோம். இவர்களுக்குச் சிலுவையில் தொங்குகிறவரைப் பற்றி யாதொரு சிரத்தையும் கிடையாது. அவர் இருந்தால் தான் என்ன, செத்தால்தான் என்ன? தங்களுக்குக் கிடைத்த கட்டளைப்படி காரியத்தை முடித்துவிடவேண்டியது. அவ் வளவுதான். சிலுவையில் மரிப்பவருடைய உடமை அவரைச் சிலுவையிலறைந்த நாலு போர்ச்சேவகரைச் சேரும். அந்தப் படி அவருடைய வஸ்திரங்களைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டார்கள். தையல் இல்லாத அங்கியைச் சீட்டுப்போட்டு ஒருவன் எடுத்துக்கொண்டான். உலகத்தில் மனுஷர் தங்க ளுக்கு இருக்கும் வீடுகளைப்பற்றியும் சேமிப்பில் உள்ள பணத் தைப்பற்றியும் பெருமையாய்ப் பேசிக்கொள்வார்கள். இவ ருக்கோ தேகத்தில் உடுத்தியிருந்த துணிகளைத் தவிர வேறு

ஆஸ்தி கிடையாது. தலைசாய்க்க இடமற்ற அவருடைய ஆஸ்தியெல்லாம் அவ்வளவுதான். இந்தப் பெரிய ஆஸ்திக்கு நிர்விசாரிகளும் அவரை சிலுவையிலறைந்தவர்களுமான ரோமப் போர்ச்சேவகர் சுதந்தரவாளிகளானார்கள்.

யூத அதிகாரிகளான பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், மூப்பரும் சிலுவையண்டை நிற்கிறார்கள். இவர்களில் சதுசேயரான பிரதான ஆசாரியர்களே அவரைச் சிலுவையிலறைவதற்கு முக்கிய காரணஸ்தர். ஆண்டவரைப் பிடித்ததுமுதல் அவர் சிலுவையிலறையப்பட்டதுவரை சரித்திரத்தில் பரிசேயர் பேர் வரவில்லை. அவருடைய ஊழியநாட்களில் பரிசேயரே ஆண்டவரோடு அதிகமாய்ச் சம்பந்தப்பட்டவர்கள். ஆரம்பத்தில் அவரிடத்தில் பிரியமாயிருந்தார்கள். அவரை அழைத்து விருந்து கொடுத்திருக்கிறார்கள். சிலர் அவருக்குச் சீடருமானார்கள். ஆனால்,வரவர அவரைப் பகைக்கவும் கொலை செய்யவும் தீர்மானித்தார்கள். ஆண்டவர் அவர்களுடைய மாயத்தையும் வீணாராதனைகளையும் பலமாகக் கண்டித்தார். தாங்கள் எதிர்பார்த்தபடி ரோமருடைய ஆளுகையிலிருந்து யூதரை விடுவிக்கும்படி அவர் பிரயாசப்படவில்லை. ஆகையால் அவரை முற்றிலும் பகைத்தார்கள். சதுசேயரான பிரதான ஆசாரியரோ உயிர்த்தெழுதலைப்பற்றி ஓர் சமயம் ஆண்டவரோடு தர்க்கித்ததைத் தவிர வேறொன்றிலும் அவரோடு பேச்சுவார்த்தைகள் வைத்துக்கொள்ளவில்லை. கிறிஸ்துவின் மரணம் அவரது அடியார் யாவருக்கும் திடீரெனச் சம்பவித்ததாகத் தோன்றினது. இவ்வளவு சீக்கிரத்தில் அவர் மரிப்பார் என்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. இந்தச் சடுதி மரணத்திற்குக் காரணம் சதுசேயரான பிரதான ஆசாரியரே. ஆண்டவருக்கு மரணாக்கினை கூறின பிரதான ஆசாரியனாகிய காய்பா சதுசேயருக்குத் தலைவன். பரிசுத்த ஊழியத்தை நிறைவேற்றும் ஆசாரியர்கள் உலகமக்களாயிருந்தார்கள். பக்திமார்க்கம் இவர்களுக்கு முழு வெறுப்பு. ரோமை இராஜாங்கத்தில் இவர்களுக்குப் பற்றுதல் அதிகம். அவர்கள் ஆலய ஆதாயத்தினால் பிழைத்துக்கொழுத்தவர்கள். ஜனங்களுக்குள்ளே ஆண்டவருக்கிருந்த செல்வாக்கு தங்களுடைய ஆதிக்கத்தைப் பாழாக்குமென்று பொறாமைகொண்டு தீவிரமாய் அவரைக் கொலைசெய்யத் தீர்மானித்தார்கள். சிலுவை

சரித்திரத்தில் பரிசேயர் பேர் ஏன் வரவில்லையென்று கேட்போம். வேதபாரகர் அநேகமாய்ப் பரிசேய வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். பரிசேயர் என்பதற்குப் **பிரிந்தவர்கள்** என்று அர்த்தம். இவர்கள் வேதவிரோதிகளான சதுசேயரை விட்டும் புறஜாதியாரை விட்டும் பிரிந்தவர்கள். வேதபாரகரும் பரிசேயரும் ஒன்றுதான். சுவிசேடத்தில் இவர்கள் பேர் சேர்ந்தே வரும். ஆண்டவர் பரிசேயரைப் பலமாய்க் கண்டித்தது சதுசேயருக்குச் சந்தோஷம். அவர் சதுசேயரைக் கடிந்து கொண்டு தேவாலயத்தைச் சுத்திகரித்தது பரிசேயருக்கும் சந்தோஷம். இவர்களுக்குள் பிரிவினை இருந்தபோதிலும், முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்துவும் ஏரோதும் ஆண்டவர் சிலுவை சம்பந்தமாக சிநேகிதரானது போல, இவர்களும் அவரைச் சிலுவையிலறைவதற்கு இச்சமயம் ஒன்றாய்க் கூடிக்கொண்டார்கள்.

இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு இவர்கள் செய்த முயற்சி இவ்வளவு அவ்வளவல்ல. முந்தின நாள் தொடங்கி இராமுழுவதும் கூட்டங்கூடி பேசி, காலையில் பிலாத்திடம் வெகுநேரம் போராடி வெற்றிபெற்றார்கள். சிலுவையிலறையும்படி பிலாத்து அவரை ஒப்புக்கொடுத்தபின்பு கட்டளையை நிறைவேற்றவேண்டியது ரோமருடைய வேலை. இனிமேலாவது அதிகாரிகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பக்கூடாதா? போகமாட்டார்கள். அவரைச் சிலுவையிலறைவதையும் அவர் சாவதையும் கடைசிவரை பார்த்துத்தான் திரும்ப வேண்டுமென்பது அவர்கள் பிடிவாதம். பெரும்பாதையுள்ள இடத்தில் அவர் சிலுவையில் தொங்கினபடியால் அவ்வழி நடந்துபோனவர்கள் ஆண்டவரைத் தூஷித்துக்கொண்டே போனார்கள். யூத அதிகாரிகளும் அவரைத் தூஷிக்க ஆரம்பித்தார்கள். அவர் தம்மைப்பற்றிச் சொன்னவைகளைப் பரியாசமாக அவருக்கே திருப்பிச் சொல்லுகிறார்கள். தேவகுமாரனே, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவனே, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தவனே, கிறிஸ்துவே, இஸ்ரவேலின் இராஜாவே, தேவாலயத்தை இடித்து மூன்றுநாளில் கட்டுகிறவனே சிலுவையிலிருந்து இறங்கிவா, உன்னை விசுவாசிப்போம் என்று பரியாசம் பண்ணுகிறார்கள். வேதனையோடு தொங்குகிற அவருக்கு இந்தப் பரியாசமும் இகழ்ச்சியுமான வார்த்தைகள்

எப்படியிருந்திருக்கும்? அவர் பதில் பேசவேயில்லை. சிலுவையிலிருந்து இறங்கி வரக்கூடிய வல்லமை அவருக்கு இருந்தபோதிலும், சிலுவையோடு அவரை இறுகக்கட்டின அன்பின் கட்டிலிருந்து அவரால் விலகமுடியவில்லை. 'நீ தேவனுடைய குமாரனுனல்' என்னும் பரியாச வார்த்தைக்குப் பதில் வராமலும் இல்லை. அது அவருடைய சீடரிடத்திலோ சிநேகிதரிடத்திலோ இருந்து வரவில்லை. குதிரைமீது வீற்றிருந்து, சிலுவையின் காரியங்களை நடத்தின அதிகாரியான ரோமை நூற்றுக்கதிபதியிடமிருந்து வந்தது. 'இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்.' சம்பவித்த அதிசயங்களைக் கவனித்த அவன்: 'மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்' என்று பகிரங்கமாய் அறிக்கைசெய்தான்.

ஆண்டவருக்கு ஊழியஞ்செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடு வந்திருந்த அநேக ஸ்திரீகள் தூரத்தில் நின்று சிலுவைக் காட்சியைப் பார்க்கிருர்கள். இவர்களில் அவருடைய தாயார், மகதலேனு மரியாள், கிலேயோப்பா மரியாள், யாக்கோபு யோவானுடைய தாயாகிய சலோமே என்பவள், இன்னும் அநேக ஸ்திரீகளைக் காண்கிறோம். எல்லாருடைய பெயரும் சொல்லப்படவில்லை. அவருக்குப் பின்சென்று அவருக்குப் பணிவிடை செய்தவர்களில் ஏரோதின் காரியக்காரரான கூசாவின் மனைவி யோவன்னுளும், சூசன்னுளும் இந்தக் கூட்டத்தில் இருந்திருக்கவேண்டும். எருசலேமுக்கு இரண்டு மைலுக்குக் கிழக்கேயுள்ள பெத்தானியாவில் வசித்த மார்த்தாள் மரியாள் ஆண்டவருக்கு மிகவும் அருமையான சகோதரிகள். அவர்களும் கட்டாயம் ஸ்திரீகள் கூட்டத்தில் இருந்திருப்பார்கள். சனிக்கிழமைதானே நம்முடைய வீட்டில் விருந்து சாப்பிட்டார்; ஐந்து நாளுக்குள்ளேயா இந்த முடிவு அவருக்கு வந்ததென்று நெஞ்சம் பதைக்க, கண்ணீர் பெருக சிலுவையைப் பார்த்தவண்ணமாய் நிற்கிருர்கள். இவர்களில் மகதலேனு மரியாளுக்கு ஆண்டவர்மீதுள்ள அன்பு அதிகம். எல்லாரும் போனபின்பும் சிலுவையண்டை கடைசிவரை இவள் நின்ருள். அவருடைய சரீரத்தை இறக்கி, அதை யோசேப்பின் கல்லறைக்கு எடுத்துச்சென்றபோது, இவளும் கூடவே போனுள். யோசேப்பும் நிக்கோதேமும் அவரை அடக்கம் செய்து திரும்பினபின் மகதலேனு மரியாளும் மற்ற

மரியாளும் கல்லறைக்கு எதிரே வெகுநேரம் உட்கார்ந்திருந்து பின்பு வீட்டுக்குப் போனுர்கள். உயிர்த்தெழுந்த இரட்சகர் முதன் முதல் மகதலேனு மரியாளுக்குத் தரிசனம் அளிக்க வேண்டுமானுல் அவளுடைய அன்பே அதற்குக் காரணம்.

அவர் இவ்வளவு சீக்கிரமாய் மரித்துப்போவாரென்று இந்த ஸ்திரீகள் கனவிலும் நினைக்கவில்லை. இராஜ்யம் சீக்கிரம் ஸ்தாபிக்கப்படுமென்றும், இஸ்ரவேலுக்கு நல்ல காலம் வரப் போகிறதென்றும் நம்பியிருந்தார்கள். தன் இரண்டு மக்களும் அவருடைய வலது இடது பக்கத்தில் இருக்கும்படி மன்ருடின சலோமே இப்போது என்னசெய்வாள்? அவர்கள் நம்பிக்கை முற்றிலுமாய் அழிந்தது. அவர்கள் அன்போ அழியவில்லை. சிலுவையில் தொங்கின ஆண்டவர் தூரத்தில் நிற்கும் இந்த ஸ்திரீகள் கூட்டத்தைப் பார்த்தார். அவர்கள் தமக்குச் செய்த அன்பின் பணிவிடைகளை நினைத்தார். அவர்களை இந்தச் சமயத்தில் கண்டது அவருக்கு எவ்வளவோ ஆறுதலா யிருந்தது. ஸ்திரீகள் எல்லாரும் அவரிடத்தில் அருமையாகவே நடந்துகொண்டார்கள். ஒருவராவது அவரைப் பகைக்கவு மில்லை, பாடுபடுத்தவுமில்லை. எருசலேமின் ஸ்திரீகள் விசு வாசிகள் அல்ல, ஆனுல் அவர் எங்கும் நன்மை செய்துவந்த தயாளரென்று அறிந்திருந்தார்கள். அவர் சிலுவை சுமந்து கொல்கொதாவுக்குப் போகிற வழியில் அவருக்குப் பின்சென்று அவருக்காகப் புலம்பி அழுதார்கள். கஷ்டத்தோடு நடந்து போகிற ஆண்டவர் அவர்களைத் திரும்பிப் பார்த்து: எருச லேம் குமாரத்திகளே, எனக்காக நீங்கள் அழவேண்டாம் என்ருர்.

இது தவிர, கலிலேயாவில் அவருக்கு அறிமுகமான அநேகரும் அவராலே நோய்கள் நீங்கிக் குணமானவர்களும் மரணத்திலிருந்து அவரால் எழுப்பப்பட்டவர்களும் அங்கே நின்ருர்கள். இந்தப் பண்டிகைக்குத் தவருமல் எல்லாரும் வருகிற வழக்கமாகை யால் ஆண்டவரைக் கண்டு பேசி, அவரிடம் நன்மைபெற்ற அநேகர் இந்தச் சிலுவைக் காட்சியைக்காணும்படி நேரிட்டது. அதிகாரிகளுக்குப் பயந்ததினுல் அவர்கள் வாய்திறந்து பேச வில்லை. என்ருலும், அவர் தொங்குகிற பரிதாபக் காட்சியைச் சகிக்கமுடியாமல் 'தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு திரும்பிப்போனுர்கள்.'

சீடர்களில் யாராகிலும் அங்கே நின்றிருக்கமாட்டார்களா? யோவான் சிலுவையண்டை நிற்கிறார். யூதாஸ் நான்று கொண்டு செத்தான். மற்ற பத்துபேரும் எருசலேமிலேதானே இருந்தார்கள். உடனே சிலுவையண்டைவரத் தைரியமில்லாமல் போனாலும் கடைசி நேரத்திலாவது வந்து கூட்டத்தோடு கூட்டமாய்த் தூரத்தில் நின்று சிலுவைக் காட்சியைப் பார்த்திருக்கமாட்டார்களா? கர்த்தர் உயிர்த்தெழுந்தார் என்று சீடர்கள் தோமாவுக்குச் சொன்னபோது அவர் என்ன சொன்னார்? 'அவருடைய கைகளில் ஆணிகளாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்' என்றார். ஆண்டவர் பிடிபட்டவுடன் தோமா மறைந்துபோனார். சிலுவைக் காட்சியையும், ஈட்டியால் அவரை விலாவில் குத்தினதையும் யோவான் பக்கத்திலிருந்து பார்த்தவர். இதைப்பற்றி தோமாவோடு பேச யோவானுக்குச் சமயமில்லை, மகன் மரித்த துக்கத்தில் மரியம்மாள் அமிழ்ந்திருக்க, அந்தச் சனிக்கிழமை முழுவதும் யோவான் அம்மாளோடேயே இருக்கவேண்டியதிருந்தது. அவர் எங்கும் போவதற்கில்லை. அப்படியிருக்க, கிறிஸ்துவின் காயங்களைப்பற்றி தோமா அவ்வளவு விவரமாய்ப் பேசவேண்டுமானால் அவர் எங்கேயாவது மறைவாய் நின்று சிலுவைக் காட்சியைப் பார்த்திருக்கவேண்டும். மற்றவர்களும் பார்த்திருப்பார்களென்று நாம் நம்பலாம். சிலுவையைச் சூழ்ந்துநின்ற இந்தக் கூட்டத்தார் எல்லாருக்கும் சிலுவைக் காட்சி பெருந்தோல்வியாகக் காணப்பட்டதேயன்றி வெற்றியாகவோ மகிமையாகவோ தோன்றவில்லை.

## சிலுவையின் இரகசியம்

இயேசுகிறிஸ்து சிலுவைமரத்தில் அறையுண்டு தொங்குவதையும், பல வகுப்பாரான கூட்டத்தார் அங்கே நின்று இந்தக் காட்சியைப் பார்ப்பதையும் கவனித்தோம். அவருடைய சிலுவையின் விசேஷம் அவ்வளவுதானா? அவ்வளவுதான் என்றால் கள்ளன் சிலுவைக்கும் இதற்கும் வித்தியாசமில்லை. ஆனால், கிறிஸ்துவின் சிலுவையோ பரம இரகசியம். அவரது மரணத்தாலுண்டான இரட்சிப்பையும், வெற்றியை

யும், மகிமையையும் விஸ்தரிக்க முடியாது. உலகத்தார் பார்வையில் படுதோல்வியாகத் தோன்றின மரணமே விசுவாசிகளுக்கு வெற்றியாயிற்று. மனுமக்களை ஆண்டுகொண்ட சகல தீமைகளையும் அவர் சிலுவையில் அழித்து மகத்தான இரட்சிப்பை உண்டுபண்ணினுர். சாவுக்கும் சாபத்துக்கும் ஏதுவான நியாயப்பிரமாணத்தைக் குலைத்து சிலுவையில் ஆணியடித்தார். பரிசுத்தராகிய அவர் பாவ மாம்சத்தின் சாயலில் வந்து, நமது பாவத்தை ஏற்றுக்கொண்டு, நமக்காகப் பாவமாகி, பாவத்தைத் தமது மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். உலகத்தை ஜெயித்தார். உலகத்தின் அதிபதியும் மரணத்துக்கு அதிகாரியுமான சாத்தானைத் தமது மரணத்தாலே அழித்தார். தமது உயிர்த்தெழுதலினுலே ஜீவனையும் அழியாமையையும் வெளியரங்கமாக்கினுர்.

கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து அப்போஸ்தலனுக்கு அருளப்பட்ட வெளிப்படுத்தல் உன்னதமானது. அவர் குணப்படுதலில் பரம ஒளி பிரகாசித்ததுபோலவே அவருடைய சிலுவை உபதேசத்திலும் பரம ஒளி பிரகாசிக்கிறது. அவர் கிறிஸ்துவின் சிலுவையைப் பரலோகத்தில் உள்ளவைகள், பூலோகத்தில் உள்ளவைகள், காணப்படுகிறவைகள், காணப்படாதவைகளான சகலத்துக்கும் நடுநாயகமாக நிறுத்துகிருர். நமது இரட்சிப்பின் சம்பந்தமாக நாலு காலங்களை நினைத்துப் பேசுகிருர்.

முதலாவது, நமது இரட்சிப்பு உலகத் தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் ஆயத்தமாக்கப்பட்டதென்றும், நாம் தேவனுடைய பிள்ளைகளும் சுதந்தரமாகும்படி உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மைத் தெரிந்துகொண்டாரென்றும் எழுதுகிருர். கிறிஸ்து உலகத் தோற்றத்துக்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்று திரும்பவும் திரும்பவும் வாசிக்கிருேம். ஒன்று கெட்டுப்போனுல் பிந்தி அதற்கு நிவாரணம் தேடுவது உலக இயற்கை. இரயில் ஓடும் பாலம் உடைந்துபோனுல் இனிமேல் அது உடையாதபடி தகுந்த ஆலோசனை செய்து வேறுவிதமாய்க் கட்டுவார்கள். நமது இரட்சிப்பின் காரியமோ அப்படியல்ல. நமது இரட்சிப்பு இடையிலுண்டான தேவ எண்ணமல்ல. நாம் கெட்டுப்போன பின்பு நம்மை எப்படி இரட்சிக்கலாம் என்று தேவன் பிந்தி

ஆலோசனை செய்தவரல்ல. உலகம் உண்டாவதற்குமுன்னே, மனுஷர் உண்டாவதற்குமுன்னே, மனுஷன் பாவம் செய்யாத தற்குமுன்னே நமது இரட்சிப்பு பரத்தில் ஆயத்தமாக்கப்பட்டது. தமது நித்திய மகிமையில் பங்குபெறுவதற்குத் தேவன் மனுஷனை உண்டாக்கினார். சுயாதீன சித்தமுள்ள மனுஷன் பாவம் செய்வான் என்று அவருக்குத் தெரியும். அவன் பாவம் செய்தாலும் அவர் தமது தீர்மானத்தைக் கைவிடப்போகிறவரல்ல. ஆகையால் பாவம் வெளிப்படுமுன்னே இரட்சிப்பு ஆயத்தமாயிருந்தது. இது நமக்கு எவ்வளவு சந்தோஷமான செய்தி! இது தேவனுடைய முன்னறிவைக் காட்டுகிறது. சுருக்க ஆயுசுள்ள நமக்கு இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற கணக்குண்டு. இறந்தகாலத்தை மறந்தோம், நிகழ்காலத்தைக் காண்கிறோம், எதிர்காலத்தை அறியோம். நித்தியவாசியாகிய அவருக்குக் காலமேது? அவருக்கு எக்காலமும் தற்காலமே. அவர் சகலத்தையும் முதலிலிருந்து கடைசிவரை காண்கிறார். தேவனுடைய முன்னறிவில் நமது இரட்சிப்பின் காரியங்கள் ஏற்கெனவே நிறைவேறி முடிந்தன. நம்மிலுள்ள எவ்விதத் தகுதியினிமித்தம் உண்டான இரட்சிப்பல்ல. பாவ உணர்வு, மெய்மனஸ்தாபம், உபவாசம், மனந்திரும்புதல், நற்கிரியைகள் முதலான எவ்வித நிபந்தனைகள்பேரிலும் உண்டான இரட்சிப்பல்ல. உலகம் உண்டாகுமுன்னே, மனுஷன் உண்டாகுமுன்னே, பாவம் தோன்றுமுன்னே கிருபையுள்ள தேவன் தமது இரட்சிப்பை ஆயத்தம்பண்ணினார். இரண்டாயிரம் வருடங்களுக்குமுன்னே கிறிஸ்து பெத்லேகேமில் பிறந்தபோதிலும் 'அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது' என்று சொல்லப்பட்டிருப்பதுபோல, கிறிஸ்து மனுஷர்கண்கள் காண ஓர் நாளில்சிலுவையிலறையப்பட்டபோதிலும், அவருடைய சிலுவை அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது என்று சொல்லலாம். இரட்சிப்பின் ஆயத்தம் உலகத் தோற்றத்திற்குமுன்னே.

இரண்டாவது, காலம் நிறைவேறினபோது உலகோர் கண்கள் காண வெளியாக்கப்பட்ட இரட்சிப்பு. உலகத் தோற்றத்துக்குமுன் தேவனுடைய பார்வையில் ஆயத்தமான இரட்சிப்பு, ஏற்ற காலத்தில் மனுஷர் கண்கள் காண வெளியாக்கப்பட்டது. அது திடீரென்று வந்ததல்ல. தேவன் தமது குமாரன் மூல

மாய்க் கொடுக்கப்போகிற இரட்சிப்புக்கு தமது ஜனத்தைப் பக்குவப்படுத்திவந்தார். பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றினுர். ஆராதனைகள், பலிகள், அடையாளங்கள், சடங்குகள் மூலமாகவும் தீர்க்கதரிசிகளைக்கொண்டு கிறிஸ்துவின் பிறப்பு, ஜீவிய ஊழியம், பாடுகள், மரணம் முதலியவற்றைத் தெளிவாகப் போதித்ததின் மூலமாகவும் இரட்சகர் வரும்போது அவரை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக ஜனத்தை ஆயத்தப்படுத்திவந்தார். சொந்தமானவர்களோ அவரை அறியாமல் சிலுவைக்கு அவரை ஒப்புக்கொடுத்தார்கள். சத்துருக்கள் தங்கள் பகையைத் தீர்த்துக்கொண்டதாக நினைத்தபோதிலும் தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியே, அவருடைய முன்னறிவின்படியே அவர் சிலுவைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்பதை அவர்கள் அறியார்கள். அந்த மரணத்தின் மூலமாய்த் தேவன் உண்டுபண்ணின மகத்தான இரட்சிப்பையும் அவர்கள் அறியார்கள்.

உலகம் தோன்றுமுன்னே, மனுஷன் உண்டாகுமுன்னே, பாவம் உண்டாகுமுன்னே நமது இரட்சிப்பு தேவபார்வையில் ஆயத்தமாக்கப்பட்டது. நமக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. நம்மிலுள்ள எந்த நற்கிரியைகளினிமித்தமோ, எந்தத் தகுதியினிமித்தமோ இரட்சிப்பு உண்டானதல்ல. ஏனென்றால் மனுஷன் இன்னும் சிருஷ்டிக்கப்படவில்லை. அதுபோல கிறிஸ்துவின் சிலுவையில் வெளிப்பட்ட இரட்சிப்பும் நம்மிலுள்ள எந்த நற்கிரியைகளினிமித்தமோ, எந்தத் தகுதியினிமித்தமோ உண்டானதல்ல. ‘நாம் பாவிகளாயிருக்கையில், அக்கிரமக்காரராயிருக்கையில், பெலனற்றவர்களாயிருக்கையில், சத்துருக்களாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்’ (ரோ. 5:6–10). இங்கேதான் தேவனுடைய அன்பும் அவரது கிருபையின் ஐசுவரியமும்வெளிப்படுகிறது. இங்கேதான் நமது பாவம் எவ்வளவு பொல்லாததென்றும், பாவம் நீங்கும் வழி எவ்வளவு தெய்வீகமானதென்றும் அறியலாஞேம். மனுஷர் காணத்தக்கதாக கிறிஸ்து சிலுவையில் மரிக்காவிட்டால் தேவனுக்கு நம்மீதுள்ள அன்பையும், அவர் நமக்காக தமது குமாரனுக்குள் ஆயத்தம்பண்ணின இரட்சிப்பையும் நாம் ஒருக்காலும் அறிய முடியாது. இரட்சிப்பு நம்மால் உண்டானதல்ல. அது தேவ

னுடைய ஈவு. அவரே இரட்சிப்பை நமக்காக உண்டுபண்ணின வர். ஒருவனும் பெருமைபாராட்ட இடமில்லை.

மூன்றாவது, விசுவாசிகளின் ஜீவியத்தில் பலிதப்படுகிற இரட்சிப்பு. அதுவே இந்தக் கிருபையின் காலத்தில் நடந்துவருகிற காரியம். ஆண்டவர் சிலுவையில் அறையுண்டு மரித்து, பின்பு உயிர்த்தெழுந்து பரலோகம்போய், தாம் சிலுவையில் சம்பாதித்த மகத்தான இரட்சிப்பை, தமது ஆவியின் மூலமாய் விசுவாசிகளின் உள்ளங்களில் பலிதப்படுத்துகிறார். சீடர்களுக்குச் சிலுவையென்றால் முழு வெறுப்பு. கிறிஸ்துவின் மரணம் அவர்களுக்குப் பெரிய அவமானம். அப்படிப்பட்டவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்துவின் சிலுவையை எவ்வளவோ உயர்த்திப் பேசினார்கள். பவுலுக்கோ சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவையன்றி வேறே சுவிசேடமுமில்லை; வேறே பிரசங்கமும் இல்லை. இதற்குக் காரணம், ஆண்டவர் உயிர்த்தெழுந்தபின் தாம் சிலுவையில் சம்பாதித்த இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை அவர்களுடைய இருதயங்களில் பலிதப்படுத்தினார். தங்களுக்குள் பெரிய மாறுதலைக் கண்டார்கள். பழைய பாவங்கள், பலவீனங்கள், அறிவீனங்கள் நீங்கின. கிறிஸ்துவே அவர்களுக்குள் வந்து தமது இரட்சிப்பின் ஆசீர்வாதங்களினால் அவர்களை அலங்கரித்தார். மற்றவர்களுக்கு இந்த இரட்சிப்பின் சுவிசேடத்தைக் கூறி அறிவிக்கும் சாட்சிகளாகப் புறப்பட்டுப்போனார்கள். சிலுவைக் காட்சியின் மூலமாய் ஆவியானவர் நமது பாவங்களை நமக்கு உணர்த்தி, கடவுள் தமது குமாரனைத் தந்து நமக்குப் பாராட்டின அன்பை வெளிப்படுத்தி, மெய்மனஸ்தாபத்தையும் மனந்திரும்புதலையும் நம்மில் உண்டாக்குகிறார். தேவகிருபையினால் வந்த இலவசமான இரட்சிப்பை மிகுந்த பணிவோடு ஏற்றுக்கொள்ளுகிறோம். தமது இரட்சிப்பை நாம் ஏற்றுக்கொள்ளும்படி ஆண்டவர் எவ்வளவோ பொறுமையோடும் அன்போடும் நம்மை அழைக்கிறார். இதுவே கிருபையின் காலம். அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்.

நாலாவது, இனி வெளிப்படப்போகிற சம்பூரண இரட்சிப்பு. இது அநாதியில் தேவனுடைய முன்னறிவில் ஆயத்தமாக்கப்பட்ட இரட்சிப்பு; காலம் நிறைவேறினபோது மனுஷர் கண்கள் காண சிலுவையில் வெளியாக்கப்பட்ட இரட்சிப்பு; தேவாவி

யானவர் மூலமாய் விசுவாசிகளின் ஜீவியத்தில் இப்பொழுது பலிதப்பட்டு வருகிற இரட்சிப்பு; இனி வருங்காலத்தில் நாம் பிரமிக்கத்தக்கதாக வெளிப்படப்போகிற சம்பூரண இரட்சிப்பு. இரட்சிப்பின் பரிபூரணத்தை இன்னும் நாம் அடையவில்லை. ஆண்டவரோ நம்மை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவரா யிருக்கிறுர். நம்மிலுள்ள பலவீனங்கள் குறைவுகள் முற்றிலு மாய் நீங்க, நமது அற்பமான சரீரம் அவரது மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபமாக்கப்படும். நாம் சரீரத்திலும் ஆவியிலும் பூரண இரட்சிப்பைப் பெற்று என்றும் ஆண்ட வரைப் போற்றுவோம். அல்லேலூயா!

அவருடைய சிலுவையின் பலனுக பூலோகத்திலுள்ளவை கள், பரலோகத்திலுள்ளவைகள் யாவும் தேவனேடு ஒப்புர வாகும். உலகத்திலுள்ள பாவங்கள், பாவத்தால் விளைந்த கேடுகள் யாவும் நீக்கப்பட்டு, நீதி வாசமாயிருக்கும் புதிய பூமியும் புதிய வானமும் உண்டாகும். ஆண்டவர் சகலத்தை யும் புதிதாக்குவார். அக்காலத்தில் தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார். அவர் சித்தம் ஒன்றே எங்கும் செய்யப் படும். அவர் இராஜ்யமே எங்கும் ஆளுகை செய்யும். அவர் நாமம் எந்நாளும் மகிமைப்படும்.

## முன் குறித்தல், தெரிந்துகொள்ளுதல்

நமது இரட்சிப்பின் சம்பந்தமாய் அப்போஸ்தலன் முன் குறித்தது, தெரிந்துகொள்ளல் என்னும் வார்த்தைகளைப் பலவிடங்களில் உபயோகிக்கிறுர். இந்த வார்த்தைகள் ஆதி முதல் மிகுந்த தர்க்கத்திற்கும் விபரீதமான போதனைகளுக்கும் காரணமாயிருந்தன. தேவன் சிலரை இரட்சிப்புக்கென்று முன் குறித்து, தெரிந்துகொண்டது மெய்யானுல் நாம் எவ்வளவு பிரயாசப்பட்டாலும் தேவபக்தியாய் நடந்தாலும் பிரயோஜன மென்ன என்று நினைப்பவர்களும் கேட்பவர்களும் உண்டு. இது நியாயமான கேள்விதான். ஆனுல் தேவன் ஒருக்காலும் சிலரை இரட்சிப்புக்கென்றும் மற்றவர்களை ஆக்கினைக்கென்றும் முன் குறிப்பதுமில்லை, தெரிந்துகொள்வதுமில்லை. அப்போஸ்தலன் உபயோகிக்கிற இந்த இரண்டு வார்த்தைகளைப்பற்றி நாம் கொஞ்சமாகிலும் கலங்க அவசியமில்லை. இந்த வார்த்தை களைச் சொன்ன அப்போஸ்தலனே வேறிடங்களில் வேறுவித

மாய்ப் பேசுகிறுர். 'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறுர்' என்றும், 'எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாயிற்று' என்றும் எழுதியிருக்கிறுர். மேலும் இயேசுகிறிஸ்து 'உலக இரட்சகராக வந்து, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்திருக்கிறுர். நம்மை நித்திய மகிமையில் சேர்க்கும்படி 'அவர் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்திருக்கிறுர்.' அவர் பாவிகள் எல்லாரையும் தம்மிடத்திற்கு வரும்படி அழைக்கிறுர். ஒருவனுகிலும் கெட்டுப்போவது அவருக்குப் பிரியமில்லை. அப்படியானுல் முன் குறித்தல், தெரிந்துகொள்ளல் என்பதற்கு அர்த்தமென்ன? இது தேவனுடைய முன்னறிவைக் குறிக்கும். மேலும் ஒருவர் இரட்சிக்கப்பட்டபின் இந்த வார்த்தைகள் உபயோகிக்கப்படுகிறதேயல்லாமல் அதற்கு முந்தியல்ல. அப்போஸ்தலன் ஓரிடத்தில் பிரசங்கிக்கப்போகும்போது, ஜனங்களைப் பார்த்து: உங்களில் சிலரைத் தேவன் இரட்சிப்புக்கு முன் குறித்திருக்கிறுர், மற்றவர்களை நரகத்துக்கு முன் குறித்திருக்கிறுர் என்று அவர் ஒருபோதும் சொன்னவரல்ல. பிரசங்கம் முடிந்தபின் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டவர்களைப் பார்த்து: நீங்கள் தேவனுல் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று அறிந்து அவரை ஸ்தோத்திரிக்கிறேம் என்று அவர்களிடத்தில் தனித்துப் பேசுகிறுர். விசுவாசியாதவர்களைப் பார்த்து: 'நீங்களோ தேவ வசனத்தை ஏற்றுக்கொள்ளாமல் அதைத் தள்ளி உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராக்கிக்கொள்ளுகிறீர்கள்' என்கிறுர் (அப். 13:46). மறுநாள் அவர் பிரசங்கிக்கும்போது முந்தி விசுவாசியாமல் போனவர்களில் சிலர் உணர்வடைந்து, இரட்சகரை ஏற்றுக்கொள்ளுகிறதாயிருந்தால் அவர்களைப் பார்த்து: நீங்களும் தேவனுல் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று அறிந்து அவரை ஸ்தோத்திரிக்கிறேம் என்று சொல்லமாட்டாரா? 'முன் குறித்தல்,' 'தெரிந்துகொள்ளல்' என்னும் வார்த்தைகள் இரட்சிக்கப்பட்டவர்கள் விஷயமாய்ச் சொல்லப்படுகிறதேயன்றி மற்றவர்களுக்கல்ல. தேவன் ஒருக்காலும் சிலரை நித்திய ஜீவனுக்கென்றும், மற்றவர்களை ஆக்கினைக்கென்றும் முன் குறிப்பவரல்ல, நாம் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக்கொண்டது மெய்யானுல், அவருடைய

கிருபையை நினைத்து, மீட்கப்பட்ட கூட்டத்தாரோடு தேவன் நம்மையும் தமது பிள்ளைகளாயிருக்கும்படி தெரிந்துகொண்டாரே என்று சந்தோஷப்படுகிறோம். அவருடைய முன்னறிவில் நாம் குறிக்கப்பட்டு அவரால் தெரிந்துகொள்ளப்பட்டோமே என்கிற அறிவு நமக்குள் தைரியத்தையும், கைவிடப்படோம் கெட்டுப்போகமாட்டோம் என்கிற நம்பிக்கையையும், நிச்சயத்தையும் நமக்குக் கொடுக்கின்றன. தெரிந்துகொள்ளப்படுவதும் ஆக்கினைக்குள்ளாவதும் நமது கையில்தான் இருக்கிறது. ஆண்டவருடைய அன்பை மதித்து அவரை ஏற்றுக்கொள்ளும்போது தெரிந்துகொள்ளப்பட்டோம் என்று மகிழுகிறோம். அவரது பேரன்பையும் கிருபையையும் அசட்டை செய்து பாவ வழியில் நிலைத்திருக்கிறவர்கள் தங்களைத் தாங்களே நரகத்திற்கு அனுப்புகிறார்கள். ஆசீர்வாதமோ, சாபமோ, ஜீவனோ, மரணமோ, இரட்சிப்போ, ஆக்கினையோ நாம்தான் தெரிந்துகொள்ளவேண்டியது. நம்மீதுள்ள அன்பினால் தமது அருமைக் குமாரனைக் கொடுத்த பரம பிதாவுக்கு ஒருவராகிலும் கெட்டுப்போவது எவ்வளவேனும் பிரியமில்லை.

பாவிகள் இரட்சிக்கப்பட வேறே வழியிருந்திருக்குமானால் தேவன் தமது குமாரனைச் சிலுவைக்கு அனுப்பியிருக்கமாட்டார். சிலரை இரட்சிக்கவும் மற்றவர்களை ஆக்கினைப்படுத்தவும் கிறிஸ்து சிலுவையில் மரிக்கவில்லை. கிறிஸ்துவின் சிலுவை மனுமக்களை இழுத்துக்கொள்ளும் தேவகாந்தம். சிலுவைக் காட்சியைப்போல் பாவியின் உள்ளத்தை உருக்கக்கூடியது வேறில்லை. பாவ அகோரத்தைச் சிலுவையில் காண்கிறோம். பாவத்தின்மீதுள்ள தேவ பகையைச் சிலுவையில் காண்கிறோம். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தையும் அவரது அன்பின் பெருக்கத்தையும் சிலுவையில் காண்கிறோம். பாவம் ஆக்கினைக்குள்ளானதையும், மரணமும் மரணத்துக்கு அதிகாரியான பிசாசும் அழிக்கப்பட்டதையும் சிலுவையில் காண்கிறோம். பாவிகளை விசுவாசத்தின் மூலமாய் நீதிமான்களாக்கும் தேவ ஞானத்தையும் சிலுவையில் காண்கிறோம். சிலுவையைப்போல் நமது பாவத்தை வெளிப்படுத்தக்கூடியது எது? சிலுவையைப்போல் கிறிஸ்துவின் பாடுகளின் இரகசியத்தை வெளிப்படுத்தக்கூடியது எது? சிலுவையைப்போல் அவருடைய அன்பின் பிரவாகத்தையும் அதிசயமான கிருபையையும்

வெளிப்படுத்தக்கூடியது எது? சிலுவையைப்போல் ஆண்டவர் அடைந்த வெற்றியையும் மகிமையையும் வெளிப்படுத்தக் கூடியது எது? சிலுவையைப்போல் சர்வலோகங்களையும் ஒற்றுமைப்படுத்தக்கூடிய சக்தி வேறெது?

நம்முடைய நீதியல்ல; நம்முடைய புண்ணியமல்ல; நமது நற்கிரியைகள் அல்ல; நம்மிலுள்ள எவ்விதமான தகுதியுமல்ல; அவருடைய இலவசமான கிருபையே இவ்வளவு மகத்தான இரட்சிப்புக்குக் காரணம். மறைவான அந்தக் கிருபை இரட்சகர் சிலுவையில் நிறைவேற்றின அன்பின் தியாகத்தால் வெளிப்பட்டது. இரட்சிப்பு முதலிலிருந்து கடைசிவரை தேவனுடைய செய்கையாயிருக்கிறது. நாம் தேடாதிருக்க அவர் நம்மைத் தேடினர். நாம் நினையாதிருக்க அவர் நம்மை நினைத்தார். நாம் விரும்பாதிருக்க அவர் நம்மை விரும்பினர். நாம் கேளாதிருக்க அவர் தமது ஜீவனை நமக்காகக் கொடுத்தார். நாம் நிர்விசாரிகளாயிருக்க அவர் தமது ஆவியால் நம்மோடு பேசினர். நாம் கவனியாதிருக்க அவர் நம்மை அழைத்தார். இவை யாவற்றிற்கும் காரணம் அவருடைய **அன்புதான்**. உலகத்தின் பாவமெல்லாம் சேர்ந்தாலும் அவரது அன்பை மாற்ருது, குறைக்காது, அழிக்காது. சமுத்திரங்கள் ஆயிரக்கணக்கான மைல் தூரம் விசாலமாயிருந்தாலும் அவைகளுக்கும் கரைகள் உண்டு. தேவ அன்பின் சமுத்திரத்திற்கோ எல்லை கிடையாது. எல்லையில்லா அன்பு, எல்லையில்லா கிருபை! அந்த அன்பின் சமுத்திரம் பிரவாகித்து வரும்போது நமது கோடிக்கணக்கான பாவங்கள் இருந்த இடம் தெரியாமல் பறந்துபோகும், பாவ சாயல் மறைந்து தேவ சாயல் நம்மில் காணப்படும். இதுவே அன்பின் இரட்சகரை தங்கள் ஜீவனுக ஏற்றுக்கொண்டு அவரிலே பிழைப்பவர்களுடைய அனுபவம். இதுவே விசுவாசிகளின் ஜீவியத்தில் ஆவியானவர் பலிதப்படுத்துகிற உன்னதமான இரட்சிப்பு. நாம் நமது சொந்தக் கிரியைகளையும் பிரயாசங்களையும் ஜெபதபங்களையும் இடைவிடாமல் நினைத்து, பரமபிதா நமக்காக எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்திருக்கிருர் என்பதைக் கவனியாமல் போகிறேம். '**என்னை** நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்' என்று ஆண்டவர் திட்டமாகச் சொல்லியிருந்தும், நாம் நம்மையே நோக்கிப் பார்த்து நிர்ப்

பந்தராகிறோம். நமக்கு விசுவாசமில்லையே, அன்பில்லையே, பரிசுத்தமில்லையே, பலமில்லையே, சந்தோஷமில்லையே என்று காலமெல்லாம் புலம்பிக்கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்? இவை யாவும் எப்படிக் கிடைக்கும், எங்கேயிருந்து வரும் என்பதை நாம் அறியவில்லையே. நமது கண்கள் எப்போதும் சிலுவைக் காட்சியை நோக்கவேண்டும். தேவன் தமது குமாரனுடைய மரணத்தின் மூலமாய் உண்டுபண்ணியிருக்கும் இரட்சிப்பின் ஒழுங்கையும், ஆவிக்குரிய நித்திய ஆசீர்வாதங்களையும் நாம் பார்க்கும்போது, பாவ உணர்வோ, விசுவாசமோ, அன்போ, தேவ ஐக்கியமோ, பரிசுத்தமோ, தேவ பலமோ சகலமும் தானாக நம்மில் உண்டாகும். ஆண்டவரைப் பிரியப்படுத்த நான் என்ன செய்யவேண்டும் என்பதல்ல; என்னை இரட்சிக்கும்படி ஆண்டவர் என்ன செய்திருக்கிறார் என்பதே காரியம். நமது இரட்சிப்பு நம்மால் அல்ல, முதலிலிருந்து கடைசிவரை தேவன் நமக்குள் நடப்பிக்கும் கிரியையாயிருக்கிறது.

நாம் ஆயிரம் ஆராதனைகளை நடத்தினாலும், ஆயிரம் ஆசாரங்களை அனுசரித்தாலும் இரட்சிப்பின் மாறுதல் நமது ஜீவியத்தில் காணப்படாவிட்டால் கிறிஸ்துவின் சிலுவைக் காட்சி நமக்கு வீண்காட்சியாகும். மூன்று மணி நேர ஆராதனையும் வீணாகும். உத்தமமாய்த் தம்மைத் தேடுகிறவர்களை ஆசீர்வதிக்க தேவன் நமது நடுவிலிருக்கிறார். ஆகையால் பயபக்தியோடும் வணக்கத்தோடும் ஆண்டவர் திருவுளம்பற்றின ஏழு வார்த்தைகளையும் தியானிப்போம். தேவாவியானவர் சிலுவையின் இரகசியத்தை நமக்குள் வெளிப்படுத்தி நம்மை ஆசீர்வதிப்பாராக.

# முதலாம் வார்த்தை

'அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிருர்களே' என்ருர் *(லூ. 23:24)*.

**ம**னுஷர் மரணத்தறுவாயில் சொல்லும் கடைசி வார்த்தைகள் முக்கியமானவை. அவர்கள் சாகும்போது கடைசியாக என்ன சொன்ஞர்கள் என்று கேட்பது நமக்கு வழக்கம். ஆகிலும் கடைசி வார்த்தைகளைக்கொண்டே நாம் முடிவு செய்யவுங்கூடாது. பழைய ஏற்பாட்டில் எத்தனையோ பக்தர்கள் மரணவாக்கின்றியே மரித்தார்கள். அவர்களில் யாக்கோபு, யோசேப்பு, மோசே சொன்ன கடைசி வார்த்தைகள் மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் ஸ்தேவான் மரிக்கும்போது சொன்ன வார்த்தைகளைக் காண்கிறோம். ஆனுல் பவுல், பேதுரு, யோவான் முதலான அப்போஸ்தலருடைய மரணவாக்குகளை அறியோம்.

கடைசி வார்த்தையிலேதான் நமது மோட்சமும் நரகமும் இருக்கிறதென்று நினைக்கவேண்டாம். எத்தனையோ அருமையான தேவபக்தர்கள் காலமெல்லாம் ஆண்டவருக்கு ஊழியஞ் செய்து, வியாதிப்பட்டு, பலவீனமாகி, நரம்புகள் தளர்ந்து, கண்மங்கி, காதடைத்து, யாதொன்றும் பேசமுடியாமலே மரித்துபோகிருர்கள். இன்னும் பல அருமையான விசுவாசிகள் கடைசி நேரத்தின் வேதனையால் என்னத்தையோ உளறியிருக்கிருர்கள். இவர்களை நரகத்தில் போடுகிறதா? அல்லது காலமெல்லாம் தேவனை மறந்து, மனங்கொண்டபடி நடந்து, பாவவழி சென்றவர்கள், மரணவேளையில் ஜன்னிக்கோஷ்டத்தால் பாடிக் கைதட்டி இரதங்கள் வருகிறது, தூதர்கள் தோன்றுகிருர்கள் என்று சொல்வதாலே இவர்களை மோட்சத்திற்கு அனுப்புகிறதா? நமது கடைசி வார்த்தைகள் அருமையாயிருந்தால் நல்லதுதான். ஆனுல் தேவன் நமது மரண நேரத்தின் வார்த்தைகளைக்கொண்டு மாத்திரம் முடிவு செய்கிறவரல்ல.

நெடுகிலுமுள்ள ஜீவியத்துக்கேற்றபடி தீர்ப்புச் செய்வார். காலமெல்லாம் அவரை அறியாதிருந்து மரணவேளையில் மனந் திரும்பி இரட்சிக்கப்படுகிறவர்களும் உண்டு. காலமெல்லாம் உத்தம ஜீவியஞ்செய்து மரண நேரத்தில் மயங்கி பேசமுடியா மல் போகிறவர்களும் உண்டு. நமது அன்புள்ள இரட்சகரின் மரணவாக்குகள் நமக்கு அருமையிலும் அருமையாயிருக்கின் றன. அவைகளை ஏற்றபடி தியானிக்க தேவாவியானவர் துணை செய்வாராக.

ஆண்டவர் சிலுவைமீதிருந்து அருளிய வார்த்தைகள் ஏழு. அவைகள் அவரது திருவுள்ளத்தை நமக்கு வெளிப்படுத்து கின்றன. அவர் வாய்திறவாமல் மௌனமாக மரித்திருந்தால் நாம் ஒன்றுமே அறிய முடியாது. ஆறு அல்லது எட்டு வார்த்தைகளைச் சொல்லாமல் ஏழு முறைமாத்திரம் அவர் பேசவேண்டியதென்ன? வேதாகமத்தில் ஏழு என்னும் இலக்கம் ஏராளமாக வருகிறது. இங்கே அவைகளை எடுத்துச் சொன்னால் விரிவாகும். தேவன் ஏழு என்னும் இலக்கத்தை விசேஷித்த நோக்கத்தோடு விசேஷித்த போதனையாகத் தந்திருக்கிறார். ஏழு என்பது பூரணமாகும். ஆண்டவர் சிலுவையிலே நமது இரட்சிப்பின் வேலையைப் பூரணமாகச் செய்துமுடித்தார் என்பது இந்த இலக்கம் காண்பிக்கிறது.

## வியாகுல வழி

இரட்சகர் தமது சிலுவையைச் சுமந்துகொண்டு கொலைக் களம் சென்ற காட்சி கல்லான இருதயத்தையும் உருக்கக் கூடியதாயிருந்தது. வியாழன் இரவுமுதல் மறுநாள் சிலுவையி லறையப்பட்டதுவரை அவர் பட்டபாடுகளும் வேதனைகளும் கொஞ்சமல்ல. கெத்செமனேயின் பயங்கரமான போராட் டத்தை நாம் அறியமுடியாது, நாவினால் சொல்லவுமுடியாது. தேவதூதன் வந்து அவரைத் தேற்றியிராவிட்டால், அங்கே தானே உயிர் போயிருக்கலாம். யூதாஸ் காட்டிக்கொடுத்து மறைந்தான். பேதுரு அவரை அறியேன் என்று மறுதலித் தார். சீடர்கள் ஓட்டம் பிடித்தனர். அருள்நாதரோ பாவிகள் கையில் தம்மை ஒப்புவித்தார். அவரைப் பிடித்த அன்றிரவுமுதல் விடியற்காலம்வரை அவரடைந்த அவமானங் களுக்கு அளவில்லை. சத்துருக்கள் ஊடே ஊடே நித்திரை

செய்து இளைப்பாறினார்கள். அவரையோ இரக்கமற்ற போர்ச் சேவகர் கைகளில் ஒப்புவித்து படாதபாடுகளையும், நிந்தை களையும் அனுபவிக்கும்படி விட்டுவிட்டார்கள்.

அநியாய விசாரணை ஆறு. அன்னாவுக்குமுன், காய்பாவுக்கு முன், சனகரீம் சங்கத்துக்குமுன், பிலாத்துமுன், ஏரோதுமுன், மறுபடியும் பிலாத்துமுன். இவ்வாறாக இரு கரங்களும் கட்டப் பட்ட தேவ ஆட்டுக்குட்டி இங்குமங்கும் இழுபட்டு மேடு பள்ளங்களில் நடந்து அவஸ்தையுற்றார். அக்கிரமக்காரனான பரபாஸைப் பிலாத்து விடுதலைசெய்து அன்பின் களஞ்சி யத்தைச் சிலுவையிலறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான். முதுகில் வாரடிகளால் மிகுதியான இரத்தம் சிந்த, முட் கிரீடம் சிரசில் இறுத்தப்பட்டதால் தேகம் நடுங்க, முகம் நிறைய எச்சில் வடிய, சகலவித குரூரங்களையும், நிந்தைகளை யும், தூஷணங்களையும் அனுபவித்து, பசியாலும் தாகத் தாலும் கால்கள் தள்ளாடி, அரை உயிரும் குறை உயிருமாகத் தமது சிலுவையைச் சுமந்துகொண்டு ஒரு மைல் தூரமுள்ள கொல்கொதாவுக்கு நடந்துபோகிறார். போகிற வழியில் எருசலேமின் குமாரத்திகள் அவர் பரிதாபக் கோலத்தைக் கண்டு புலம்பி அழுதார்கள். அவர், அவர்களைத் திரும்பிப் பார்த்து: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றார். சற்றுதூரம் சென்றபின் நடக்கமுடியாமல் சிலுவையோடே கீழே விழுந்தார். அவ்வழி வந்த சீமோனைச் சிலுவையைச் சுமக்கும்படி ரோமர் கட்டாயப்படுத்தி, ஆண்ட வரைத் தாங்கிப் பிடித்துக் கொலைக்களம் சேர்ந்தார்கள். சிலுவையில் அறையப்படுகிறவர்கள் வேதனை தெரியாமல் சாகும்படி அவர்களுக்கு மயக்கம் தரும் பானத்தைக் குடிக்கக் கொடுப்பது தனவந்தரான ஸ்திரீகள் வழக்கம். ஆண்டவர் அதை ருசிபார்த்து தாம் தெளிந்த புத்தியோடு பாடுபட்டு மரிக்க விரும்பினதால் அப்பானத்தை வெறுத்துத் தள்ளிவிட் டார். பின்பு அவரைச் சிலுவையிலறைந்தார்கள். சிலுவை மரத்தைக் கீழே போட்டு, அவரை அதன்மேல் படுக்கவைத்து, கைகளையும் கால்களையும் இழுத்து மரத்தோடு சேர்த்து வைத்து, ஆணிகள் ஊடுருவிச் செல்லும்படி கனத்த சுத்தியால் ஓங்கி அடித்தார்கள். அப்புறம் ஆணிகளில் தொங்கின அந்தச்

சரீரத்தோடே சிலுவையைத் தூக்கி ஏற்கெனவே தோண்டி யிருந்த குழியில் தொப்பென இறக்கினுர்கள். ஆணிகள் சதையையும் நரம்பையும் ஊடுருவிப்பாய, அவர்கள் சிலுவை யைத் தூக்கிக் குழியிலிறக்குகையில் உண்டான அசைவால் தேகம் நடுங்கித் துடிதுடிக்க, சகிக்கமுடியாத கொடிய வேதனையை அனுபவிக்கும் இந்தச் சமயத்திலேதான், 'பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிருர்களே' என்று மன்ருடினுர். இது அதிசயத்திலும் அதிசயம்!

## முதல் வார்த்தை ஜெப வார்த்தை

ஆண்டவர் சிலுவையில் சொன்ன ஏழு வார்த்தைகளில் முதலும் நடுவும் கடைசியுமான மூன்று வார்த்தைகள் பிதாவைப் பார்த்துச் சொன்னவைகள். அவர் வாய்திறந்து சொன்ன இந்த முதல் வார்த்தை ஜெபமாயிருக்கிறது. சகிக்க முடியாத இந்த வேதனையான சமயத்தில் பிதாவை நோக்கி ஜெபிக்கிருர். ஆபத்துக்காலங்கள், மரணவேளைகளில் அவ பக்தர்களுங்கூட கடவுளை நோக்கிக் கூப்பிடுவது வழக்கம். அப்படியாளுல் எப்போதும் பிதாவோடு தங்கி அவரோடு இடைவிடாது சம்பாஷித்துவந்தவர் இந்தவேளையில் அவரை மறப்பதெப்படி? ஜெபம் அவருக்கு ஜீவன். தோட்டத்திலே பயங்கரமான போராட்டம் ஆண்டவரையும், சீடரையும் சூழ்ந்துவந்த நேரத்தில் சீடர் தூங்கிக்கொண்டிருந்தார்கள். இரட்சகரோ மிகவும் ஊக்கமாய் ஜெபம் செய்துகொண்டிருந் தார். அவர் சீடரிடம் வந்தபோது அவர்கள் நித்திரையி லிருப்பதைக் கண்டு, சோதனையில் அகப்படாதபடிக்கு ஜெபம்பண்ணுங்கள் என்ருர். ஒவ்வொரு முக்கியமான சமயத்திலும் ஜெபத்தின் மூலமாய்த் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வார். சிலுவை வார்த்தைகளை ஜெபத்தில் தொடங்கி ஜெபத்தில் முடிக்கிருர். ஜெபம் அவருக்குச் சுவாசம். துன் பங்கள் பெருகி, பயமும் திகிலும் நம்மை ஆண்டுகொள்ளும் போது ஜெபம் பறந்துபோகிறது. ஆறுதல் தேடி மனுஷரிடம் ஓடுகிருேம். நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாழாகி சகலமும் நமக்குப் பிரதிகூலமாகத் தோன்றும்போது மனஞ் சோர்ந்துபோகிருேம். ஜெபம் செய்வதை விட்டுவிடுகிருேம்.

ஆனுல், அதுதான் ஜெபிக்கவேண்டிய சரியான வேளே என்பதை ஆண்டவர் நமக்குக் காண்பிக்கிருர். எல்லாம் தமக்கு விரோதமாகி, மனுஷர் பார்வையில் பெருந்தோல்வி யுற்றுத் தவிக்கும் இவ்வேளேயில் உடனே ஜெபிக்கிருர்.

**பிதாவே** என்று சொல்லி ஜெபிக்கிருர். வியாழன் இரவு முதல் சிலுவை வரை அவர் பட்டபாடுகளும், கொடுமைகளும் கொஞ்சமல்ல. தேற்றுவார் யாருமில்லே. பரலோகமும் பூலோகமும் ஒன்றுபோல் அவரைக் கைவிட்டதாகத் தோன்று கிறது. பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் அவரை வளேந்து கொண்டு தங்கள் கூரான கொம்புகளால் அவரைப் பீறு கின்றன. சத்துருக்களின் ஏளனமும், பரியாசங்களும், தூஷணங்களும் அவர் திருநெஞ்சைப் பிளக்கின்றன. இவ் வாருன அநியாயமும் அக்கிரமமும் கனத்த இருள்போல் அவரை மோதுகின்ற சமயத்திலுங்கூட **பிதாவே** என்கிருர். என்ன, இன்னும் பிதாவா? பிதாவின்பேரில் எவ்வளவோ அன்பும் நம்பிக்கையுமுள்ளவராயிருந்தார். அவருடைய சித்தத்தின் படியே நடந்து அவரை மகிமைப்படுத்திஞர். அப்படியிருந்தும் கொஞ்சமும் தம்மைக் கவனிக்காமல் கொடிய பாடுகளுக்கு ஒப்புவித்துவிட்டாரே. இன்னும் பிதாவா? ஆம், இன்னும் பிதாதான். முந்தின இரவில் மேல்வீட்டில் தமது சீடர்க ளோடு பேசிக்கொண்டிருந்தபோது தமக்கு நேரிடப்போகிற சகல பாடுகளேயும் அறிந்திருந்தும் ஏறக்குறைய ஐம்பதுதரம் **பிதா, பிதா** என்று சொன்ஞர். தோட்டத்தில் இரத்த வேர்வை சிந்தும்படியான கொடிய போராட்டத்தில் **அப்பா பிதாவே** என்று சொல்லி ஜெபித்தார். சிலுவையிலறையப் பட்ட இந்த வேதனேயான சமயத்திலும் **பிதாவே** என்று கூப்பிடுகிருர். என்னதான் நேரிட்டபோதிலும் பிதாவின்மீது அவருக்கு இருந்த நம்பிக்கையும் அன்பும் கொஞ்சமாகிலும் தளரவேயில்லே. இன்ப காலத்திலும், துன்ப காலத்திலும் பிதா அவருக்குப் பிதாதான்.

இதுவே நாம் அவரிடத்தில் பிரதானமாய்க் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம். இவ்வுலகத்தில் தேவ மக்கள் தவிக்கவும், துன்மார்க்கர் செழிக்கவும் காணும்போது நீதியுள்ள கடவுள் இருக்கிருரா என்று கேட்கிருேம். நமது ஆலோசனேகளும், முயற்சிகளும் தவறி சகலமும் குழப்பமாகத் தோன்றும்போது,

தேவன் மனுஷரை நடத்துகிறது உண்மைதானு அல்லது எல்லாம் தற்செயலாகத்தான் நடக்கிறதோ என்று கேட்கிருேம். நாம் விரும்புகிறபடியே காரியங்கள் எல்லாம் கைகூடி வந்தால் பிதா நல்ல பிதா. அவர் விரும்புகிற பாதையில் நம்மை நடத்துவாராஞல், அது நமக்குப் பிரியமில்லே. முறுமுறுக்கவும், பலவாருய்ப் பேசவும் ஆரம்பிக்கிருேம். தேவன் தமது நேசகுமாரனே நடத்தின பாதை இன்பமானதல்ல. என்ருலும், அந்தப் பாதைதான் உலகத்துக்கு இரட்சிப்பும், பிதாவுக்கு மகிமையுமான பாதையாயிற்று. நம்மையும் நமது காரியங்களேயும் பிதாவின் கையில் விட்டுவிடும்போது, அவர் தமது தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை நடத்துவார். ஒன்று வாய்த்தாலும் அவருக்கு ஸ்தோத்திரம், வாய்க்காவிட்டாலும் அவருக்கு ஸ்தோத்திரம். நமக்கு என்ன நேரிட்டாலும் நம்மீதுள்ள பிதாவின் அன்பு ஒருக்காலும் மாறுவதில்லே. இப்போது விரோதமாகத் தோன்றும் சகலமும் நன்மைக்கேதுவாக முடியும் என்பது நிச்சயம். இந்த நிச்சயம் குமாரனிடத்தில் பூரணமாயிருந்ததால் மகா வேதனேயும் கஷ்டமுமான இச்சமயத்திலுங்கூட பிதாவே என்று கூப்பிடுகிருர். எக்காலத்திலும் அப்பா பிதாவே என்று ஜெபிக்கும் சிறந்த பக்தியைத் தேவன் நமக்குத் தருவாராக.

## மன்னிக்கும்படி வேண்டுதல் செய்கிருர்

சிலுவையிலறையப்பட்ட மனுஷர் பேசுகிறது வழக்கம். வேதனே சகிக்கமுடியாமல் புலம்புவார்கள், முறுமுறுப்பார்கள், கடவுளேத் தூஷிப்பார்கள், விடுவிக்கும்படி கெஞ்சுவார்கள், தங்களேச் சிலுவையிலறைந்தவர்களேச் சபிப்பார்கள். அதுபோல இவரும் தங்களேச் சபிப்பார் அல்லது ஆக்கினே கூறுவார் என்று விரோதிகள் எதிர்பார்த்தார்கள். ஆனுல், அவரிடத்தில் எவ்விதமான முறுமுறுப்போ, புலம்பலோ, சாபமோ காணப்படவில்லே. அவர் தமக்காகக் கவலேப்பட்டவரல்ல. அவர்கள் அவரை வைதபோது, பதில் வையவில்லே. பாடுபடுத்தினபோது பயமுறுத்தவில்லே. ஆணி அறைந்தபோது ஆக்கினே கூறவில்லே அல்லது இவர்கள் அநியாயமாக என்னே வதைத்துக் கொல்லுகிருர்களே, தெய்வமே இவர்களே இந்நிமிடத்தில் அழித்துப்போடும் என்று

முறையிடவுமில்லே. அப்படிக் கேட்டிருந்தாலும் அது நியாயமாயிருந்திருக்கும். அதற்குப் பதிலாக, 'பிதாவே இவர்களுக்கு **மன்னியும்**' என்று வேண்டிக்கொள்ளுகிறுர். சிலுவையிலறையப்பட்ட ஒருவன் தன்னேச் சிலுவையிலறைந்த வர்களுக்கு மன்னிக்கும்படி ஜெபித்ததை நாம் கேட்டதே இல்லே. ஆகையால், இந்த நூதனமான மன்றுட்டு சத்துருக் களுக்குப் பிரமிப்பை உண்டாக்கியிருக்கும். பாவிகளே இரட் சிக்கும்படி வந்தவர் அவர்களே எப்படி அழிப்பார்? எப்போதும் மனுமக்கள் மத்தியில் தமது அன்பையும், அனுதாபத்தையும் வெளிப்படுத்தும் சுபாவமுள்ளவர் இந்நேரத்தில் மாத்திரம் வேறுவிதமாய் நடப்பதெப்படி? அவர்கள் மூர்க்கவெறிகொண் டிருக்கிறுர்கள்; அவரோ அவர்களுக்காகப் பரிதபிக்கிறுர். அவர்கள் அவரை வேதனேப்படுத்துகிறுர்கள்; அவரோ அவர் களுக்காக வேண்டுதல் செய்கிறுர். அவர்கள் அவரைக் கொல்லுகிறுர்கள்; அவரோ அவர்களே உயிர்ப்பிக்க விரும்பு கிறுர். பாவிகளோடு தம்மை ஒன்றுக்கி, அவர்கள் பாவத் தைச் சுமந்துதீர்க்க வந்தவர், அவர்கள் பட்சத்தில் நின்று அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறுர். தாம் சுமந்து தீர்க்கிற உலகத்தின் பாவத்தில் சிலுவையிலறைந்த பாவத்தையும் சேர்த்துக்கொண்டார். இது வேறே பாவம் என்று அவர் பிரித்து வைக்கவில்லே. ஆ, அவருடைய பாடுகளுக்கொப்பான பாடுகள் உண்டோ? அவருடைய அன்புக்கொப்பான அன்பு உண்டோ? அவருடைய மன்னிப்புக்கொப்பான மன்னிப்பு உண்டோ? 'அவர் தமது ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக **வேண்டிக் கொண்டதினிமித்தம்** அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப் பேன்' என்று தீர்க்கதரிசி முன்னுரைத்தபடி காரியம் நடந்தது.

**மன்னிக்கும்படி பிதாவைக் கேட்கிறுர்.** சத்துருக்கள் செய்த கொடுமைகள் யாவும் நமக்கு விரோதமாகச் செய்யப்பட் டிருக்க இவரல்லவா அவர்களுக்கு மன்னிக்கவேண்டியது. அப்படியிருந்தும், 'பிதாவே இவர்களுக்கு மன்னியும்' என் கிறுர். அவர்கள் தமக்கல்ல, தம்மை அனுப்பின பிதாவுக்கு விரோதமாகவே இந்தப் பாதகத்தைச் செய்கிறுர்கள் என்று கண்டார். கிறிஸ்து தாமாக உலகத்துக்கு வரவில்லே.

பிதாவே அவரை அனுப்பினர். குமாரனை ஏற்றுக்கொள்ளுகிறவன் அவரை அனுப்பின பிதாவை ஏற்றுக்கொள்கிருன். குமாரனைக் கனம்பண்ணுதவன் பிதாவைக் கனம்பண்ணுதவன். குமாரனைச் சிலுவையிலறைகிறவன் பிதாவைச் சிலுவையிலறைகிருன். ஆகையால் இது பிதாவுக்கு விரோதமான பாவம் என்று கண்டு: 'பிதாவே இவர்களுக்கு மன்னியும்' என்று பிதாவைக் கேட்டுக்கொள்ளுகிருர்.

மேலும், அவர் திடீரென முதல் முதலே மன்னிக்கும்படி பிதாவைக் கேட்டதைப் பார்க்கும்போது வேருெரு காரணமும் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. வனந்தரத்தில் இவர்களுடைய பிதாக்கள் மோசேக்கு விரோதமாக எதிர்த்து நின்று முறுமுறுத்த சமயத்தில் தேவன்: சற்று விலகு மோசே, இந்த ஜனத்தை ஒரு நிமிடத்தில் அதமாக்குவேன் என்ருர். அந்தப்படியே செய்தார். கோராகு தாதத்தான் அபிராமை பூமி பிளந்து விழுங்கிப்போட்டது. பெரிய அழிவு வராதபடி மோசே முகங்குப்புற விழுந்து மன்ருடவேண்டியதாயிற்று. தேவ திருக்குமாரனை, அன்பின் சொரூபியை, சிலுவையிலறைந்த இந்தப் பாதகத்துக்குமுன் உலகிலுள்ள பாவமெல்லாம் ஒன்றுமில்லை. இவர்களுக்கு மன்னிக்கும்படி ஆண்டவர் பிதாவைக் கேட்டிராவிட்டால், ஒருவேளை அந் நிமிடமே தேவகோபம் அவர்களைப் பட்சித்திருக்காதோ? அப்போது உண்டான பூமி அதிர்ச்சி இன்னும் மகா பயங்கரமாகப் பிளக்க அவர்கள் யாவரும் உயிரோடே விழுங்கப்பட்டிருக்கக் கூடுமே. அது நியாயமாகவும் இருக்குமே. ஆண்டவர் செய்த விண்ணப்பம் அவர்களைத் தற்காத்தது என்கலாம்.

**யாருக்கு மன்னிப்பு?** அவரைச் சிலுவையிலறைந்த சமயத்தில் பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று கேட்டதால் தம்மைச் சிலுவையிலறைந்தவர்களுக்காக மாத்திரம் மன்னிப்புக் கேட்டதுபோல் தோன்றும். ஒருவிதத்தில் அது சரிதான். இந்த மன்னிப்பு முதலாவது ரோமப் போர்ச் சேவகரைக் குறிக்கும். அவரை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்த யூத அதிகாரிகளான வேதபாரகர், பிரதான ஆசாரியர், மூப்பர் இவர்களுடைய மன்னிப்பையும் குறிக்கும், பிலாத்து ஏரோதுவையும் குறிக்கும். அவரை வாரினுல் அடித்து, முட் கிரீடத்தை வைத்து, முகத்தில் துப்பி, அவரை அடித்த போர்ச்

சேவகர்களையும் குறிக்கும். இந்த மன்னிப்பு யூதர், ரோமர், கிரேக்கருக்கு மாத்திரமல்ல, உலகிலுள்ள எல்லா மனுஷருக்கும் உரியதாகும். இக்காலத்திலிருக்கிற நாம் யூதரோடும், ரோமரோடும் சேர்ந்து அவரைச் சிலுவையிலறையவில்லையென்றாலும், அவருடைய சிலுவைப் பாடுகளுக்கு நாமும் காரணரென்பதை மறுக்கமுடியாது. 'நமது மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார், நமது அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது.' நமது பாவங்கள் மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாக அவர் சிலுவையில் தொங்கினார். ஆகையால், ஆண்டவர் கேட்டுக்கொண்ட மன்னிப்பு **மகா விசாலமானது**. உலகத்தின் பாவத்துக்காகச் சிலுவையில் தொங்கினவர் உலகத்துக்காக மன்னிப்புக் கேட்பது நியாயமே.

**ஆண்டவர் தாம் போதித்தபடியே நடக்கிறார்.** 'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்' என்று போதித்தார். தாம் போதித்தபடியே இப்போது நடந்து காண்பிக்கிறார். கொடிய பாடுகளை அனுபவிக்கும் இவ்வேளையில் தமது போதனையை வார்த்தை வார்த்தையாக நிறைவேற்றுகிறார். உலகத்தில் மகாத்துமாக்கள் ஞானிகள் எழும்பி சன்மார்க்க உபதேசங்கள் செய்வதுண்டு. தாங்களோ அதன்படி நடப்பது கஷ்டம். ஆண்டவர் யூதக் குருக்களைக் குறித்து: அவர்கள் போதனையின்படி செய்யுங்கள், அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள், ஏனென்றால் அவர்கள் சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள் என்றார். போதனை அறிவுக்குரியது, சாதனை ஜீவியத்துக்குரியது.

**பதிலுக்குப் பதில் செய்வதும் பழிவாங்க விரும்புவதும் மனுஷர் சுபாவம்.** பிறர் செய்யும் குற்றங்களை மனதார மன்னிப்பது எளிதல்ல. 'உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவைப் பகைப்பாயாக' என்பது முற்பிதாக்களின் சித்தாந்தம். அந்தப்படியே அவர்கள் நடந்தார்கள். பழைய ஏற்பாட்டு ஆகமங்

களிலும் சங்கீதங்களிலும் இதன் உண்மையைக் காண்கிறோம். இரண்டு கண்களையும் இழந்த சிம்சோன் கடைசி நேரத்தில் கடவுளைப் பார்த்து, கர்த்தாவே, என் கண்களுக்குப் பதிலாக இந்தப் பெலிஸ்தரிடம் பழிவாங்கும்படி இந்த ஒருமுறை என்னைப் பலப்படுத்தியருளும் என்று ஜெபித்தான். அப் போஸ்தலன் யோவான்: வானத்திலிருந்து அக்கினி இறங்கி சமாரியரை அழிக்கும்படி கேட்டார். பரிசுத்த பவுல்: 'கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்' என்றும், 'வெள்ளை யடிக்கப்பட்ட சுவரே, கர்த்தர் உம்மை அடிப்பார்' என்றும், 'கன்னானாகிய அலெக்சாந்தர் எனக்கு வெகு தீமை செய்தான், அவனுடைய செய்கைக்குத் தக்கதாக கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக' என்றும் பேசியிருக்கிறார். எவ்வளவு பக்தர் களானாலும் பரீட்சை நேரிடும் சமயத்தில் தங்களை மறந்து, கோபத்துக்குள்ளாகி, தகாத வார்த்தைகளைப் பேசிவிட்டு, பிந்தி அதற்காக வெட்கமும் துக்கமும் அடைந்திருக்கிறார்கள். நமதாண்டவரிடத்தில் அப்படிப்பட்ட யாதொரு குறிப்பும் கிடையாது. அவருடைய போதனையைப் பார்க்கிலும் சாதனை அதிகம். தீமைக்குத் தீமை பரிகாரமல்லவென்பதை அவர் திட்டமாய் அறிவார். அன்பின் பலமே உலகத்தை ஜெயிக்கும் என்பதும் அவருக்குத் தெரியும். அந்தகார அதிபதி தன் முழு பலத்துடன் அவரைத் தாக்குகிறான். அவர் பட்ட பாடுகள், அவமானங்கள், வேதனைகளைக் கவனிக்கும்போது கொஞ்ச மாவது அவர் மனதில் எரிச்சல் வந்திருக்காதா என்று நினைப் போம். உள்ளத்தில் கோபம் வைத்து, வெளியில் சாந்தம் காண்பிக்கிறவர்கள் உண்டு. ஆண்டவர் உள்ளும் புறம்பும் ஒன்றுபோலிருந்தார். அன்பின் சொரூபியாகிய அவரை என்ன பாடுபடுத்தினாலும் அன்பு அன்பாகவேயிருக்கும். அந்த அன்பைச் சிலுவையிலறைந்து கொல்லமுடியாது. சிலுவையி லறைந்து அடக்கம்பண்ணினாலும் அது மறுபடியும் உயிரோடே எழும்பி வந்துவிடும். உலகத்தின் பாவமெல்லாம் சேர்ந் தாலும் அவருடைய அன்பை மேற்கொள்ளமுடியாது. பாவ அகோரம் பெருகின சிலுவையின் அன்பு மிகவும் ஏராளமாகப் பெருக, பாவம் இருந்த இடம் தெரியாமற்போயிற்று. அங்கே பாவத்துக்கும் அன்புக்கும் நடந்த போராட்டத்தில் அன்பு வெற்றிபெற்றது.

## மன்னிப்பதற்குக் காரணம் சொல்லுகிறுர்

தம்மைப் பாடுபடுத்திக் கொலைசெய்யும் சத்துருக்களை மன்னிப்பதற்குக் காரணம் சொல்லுகிறுர். 'பிதாவே இவர்களுக்கு மன்னியும், ஏனென்றுல் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறுர்களே' என்கிறுர். ஆண்டவர் செய்த ஜெபங்களில் காரணம் சொல்லி மன்றுடின ஜெபம் இது தான். எங்கேயாகிலும் எப்போதாகிலும் இப்படி நடந்ததுண்டா? மனுஷர் பொதுவாகத் தங்கள் குற்றங்களை மறைக்கக் காரணம் தேடுவார்கள். மற்றவர்கள் விஷயத்திலோ அவர்கள் குற்றங்களை உறுதிப்படுத்தக் காரணம் தேடுவார்கள். ஆண்டவரோ தமக்கு விரோதமாகச் செய்த பாதகங்களை மன்னிக்கக் காரணம் தேடுகிறுர். 'மன்னியும், ஏனென்றுல் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறுர்களே' என்கிறுர்.

அவரைச் சிலுவையிலறைந்த ரோமைப் போர்ச்சேவகர் அவரை இன்னுரென்றும், யாருக்கு இப்படிச் செய்கிறேம் என்றும் அறியமாட்டார்கள். அதிகாரிகள் தங்களுக்குக் கொடுத்த கட்டளைக்குக் கீழ்ப்படிந்து காரியத்தை முடித்தார்கள். யூதாஸ் அறியமாட்டானே? அவன் அநீதத்தின் கூலியை விரும்பி அன்பரைக் காட்டிக்கொடுத்து துரோகியாகி மாண்டான். ஆண்டவர் பிலாத்துமுன் நிற்கிறுர். அவனுக்கு எவ்வளவு பெரிய சிலாக்கியம். அவனே சுயநலக்காரன். மனுஷன் தயவை நாடி நியாயஞ்செய்யத் தவறினுன். அவர் ஏரோதிடம் போனுர். எவ்வளவு கிருபை! துன்மார்க்கனும் கொலைபாதகனுமான அவன் அவரை நிந்தித்துப் பரியாசம் பண்ணி அனுப்பிவிட்டான். இவர்கள் யாவரும் குற்றவாளிகளே! யூத அதிகாரிகளைப்பற்றி என்ன? அவர்களும் அறியாதவர்களோ? அவர்கள் காரியங்களைக் கவனித்தால் அவர்களுக்கு மன்னிக்கவே கூடாதென்று நாம் சொல்லுவோம். உலகத்திலுள்ள ஜாதிகளில் இஸ்ரவேலரைத் தமது சொந்த ஜனமாகத் தெரிந்துகொண்டு தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி வந்தார். ஆலயம் அவர்களுடையது. வேதம் அவர்களுடையது. ஆராதனைகள் அவர்களுடையது. உடன்படிக்கை அவர்களுடையது. பிதாக்கள் அவர்களுடையவர்கள். தீர்க்கதரிசிகள் அவர்களுடையவர்கள். மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்

களிடம் பிறந்தார். அவர் அவர்கள் மத்தியில் சஞ்சரித்து உபதேசம்பண்ணினுர். எங்கும், எல்லாருக்கும், எப்பொழுதும் நன்மை செய்தார். அவருடைய மாசற்ற ஜீவியத்தைக் கவனித்தார்கள். அவருடைய அற்புதங்களேயும் அடையாளங் களேயும் கண்டார்கள். தமது குமாரனே அவர்களிடம் அனுப் பும்போது அவர்கள் அவரைத் தடையின்றி ஏற்றுக்கொள்ளத் தக்கதாக பலவிதத்திலும் அவர்களேத் தேவன் பக்குவப் படுத்தி வந்தார். ஐயோ, சகலமும் பாழாயிற்று. அவர்க ளுடைய உலக சிந்தையும், அவபக்தியும், மாய்மால ஜீவியமும், சடங்காசாரங்களும் அவர்களுடைய கண்களேக் குருடாக்கி அவர்களேக் கல்லறைக் குழிகளுக்கு ஒப்பாக்கிற்று. அவர்களுடைய சிலாக்கியங்களேக் கவனித்தால் கிறிஸ்துவை இரட்சகராக அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கவேண்டியது. 'வேருெருவரும் செய்யாத கிரியைகளே நான் அவர்களுக் குள்ளே செய்யாதிருந்தேனுனல் அவர்களுக்குப் பாவமிராது. இப்பொழுதோ அவர்கள் என்னேயும் என் பிதாவையும் கண்டு பகைத்தும் இருக்கிருர்கள்' என்ருர். 'உன்னேச் சந்திக்கும் காலத்தை நீ அறியவில்லேயே' என்று எருசலேமைக் குறித்துப் புலம்பி அழுதார். இப்படிப்பட்ட தோஷிகளே உடனே அழிப்ப தல்லவா நியாயம். அப்படியிருந்தும்: 'பிதாவே, இவர் களுக்கு மன்னியும், ஏனென்ருல் தாங்கள் செய்கிறது இன்ன தென்று அறியாதிருக்கிருர்களே' என்று ஆண்டவர் இவர்களுக் காகவும் மன்ருடுகிருர்.

நமது பாவங்கள் யாவும் நமது அறியாமையின் பலனுகவே யிருக்கிறது. ஆண்டவரே, நாங்கள் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களே மன்னியும் என்கிருேம். கொஞ்சம் அமர்ந்து யோசிப்போமானுல் அ றி ந் து என்பதிலேயே அறியாமை இருக்கக் காண்போம். ஆண்டவரே, நான் அறிந்துதானே இதைச் செய்தேன் என்று சொல்லும்போது: நீ அறிந்திருந்தால் இதைச் செய்திருக்கமாட்டாய் என்று பதில் சொல்லுகிருர். எவ்வளவு காருண்யம்! நாம் பாவம் செய்யும்போது நாம் செய்கிறது இன்னதென்று நமக்குத் தெரிகிறதில்லே. அது நமக்குள்ளும் நமது மூலமாய்ப் பிறருக் குள்ளும் எவ்வளவு தீமையை விளேவிக்கிறதென்பதை அச் சமயத்தில் நாம் அறிகிறதில்லே. பாவம் வஞ்சனேயுள்ளது.

அது நமது புத்தியின் கண்களைக் குருடாக்கிவிடுகிறது. பிந்தி அதைக் குறித்துத் துக்கப்பட்டு நம்மை நாமே நொந்து கொள்ளுகிறோம். தாவீது உணர்த்தப்பட்டபின்: தேவனே, உமது கண்களுக்கு முன்பாக இந்தப் பொல்லாங்கானதை நடப்பித்தேன் என்று பிந்தி அறிக்கையிட்டார். நம்மையும் நமது பலவீனங்களையும் நாம் பூரணமாய் அறிந்தவர்களல்ல. தேவன் இருக்கிறார், பார்க்கிறார், கேட்கிறார் என்னும் பொது அறிவு வேறே. அவர் நமது உள்ளத்தில் வசிக்க அவரது அன்பின் பலத்தாலே நாம் பிழைப்பது வேறே.

அறியாமையும் பாவம்தான். நெருப்பு கைபிசகாய்ப் பற்றிக் கொண்டாலும் சரி, வேண்டுமென்று கொளுத்தினாலும் சரி வீடு எரிந்து அழிவது நிச்சயம். அறிந்து செய்தாலும், அறியாமல் செய்தாலும் பாவம் பாவம்தான். அதன் கேடு கேடு தான். 'அறிந்து செய்கிறவன் அநேக அடிகள் அடிக்கப்படுவான், அறியாமல் செய்கிறவன் சில அடிகள் அடிக்கப்படுவான்.' அதுதான் வித்தியாசம். இருவருக்கும் தண்டனை உண்டு. அறியாமை குற்றமல்லவென்றால் ஆண்டவர் அதற்காக மன்னிப்புக் கேட்கவேண்டியதென்ன? மன்னிப்பு என்னும் வார்த்தையே குற்றமுண்டென்பதை ரூபிக்கிறது. யூதர்கள் ஆண்டவரை அறிந்து ஏற்றுக்கொண்டிருக்கவேண்டியது. அவர்கள் அறியாமல் போனதற்கு அவர்கள் பாவ ஜீவியமே காரணம். 'பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே' என்று ஆண்டவர் வேண்டிக்கொண்டபோதிலும், அவர்களுடைய அறியாமை அவர்களுக்கு மன்னிப்பைக் கொண்டுவரவில்லை. அறியாமை பாவமாகும்போது அது எப்படி மன்னிப்பதற்குக் காரணமாகும்? 'தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேடத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினை' வரப்போகிறதென்று பதில் சொல்லுகிறார். மேலும் 'தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது, தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்; ஆகையால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை' என்றும் வாசிக்கிறோம். தங்களைக் கிருபையாய்ச் சந்தித்த தேவகுமாரனை அசட்டை செய்த யூதர்கள் போக்குச் சொல்லமுடியாது.

ஆகையால் அவர்களுடைய அறியாமை பாவம்தான். பாவமா யிருக்கிற அறியாமை மன்னிப்பதற்குக் காரணமாகாது. ஆகையால் அவர்கள் மன்னிக்கப்படுவதற்கு வேறு வழி இருக்க வேண்டும். கிறிஸ்துவின் மரணமே அந்த வழி.

## அவர்களுக்கு மன்னிப்புக் கிடைத்ததா?

ஆண்டவர் செய்த மன்ருட்டு அங்கீகரிக்கப்பட்டதா? அவரைச் சிலுவையிலறைந்தவர்களுக்கு மன்னிப்புக் கிடைத்ததா? 'பிதாவே நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர்' என்று சொன்ஞரே, இந்த விண்ணப்பத்துக்குப் பிதா செவிகொடுத்தாரா? இதை நாம் அறியவேண்டும்! மன்னிப்பை கொடுக்கிறவருக்கும் மன்னிப்பைப் பெறுகிறவர்களுக்கும் சம்பந்தம் இருக்கவேண்டும். மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்க நிலேமை அவர்களில் உண்டாகாமல் தேவன் மன்னிப்பைக் கொடுக்கமுடியாது. இரட்சகர் செய்த விண்ணப்பம் பிதாவின் பக்கத்தில் மன்னிப்புக்கு வழியை உண்டாக்கிற்று. மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்குப் பாவிகளிடத்திலும் வழி உண்டாகவேண்டும். பாவ உணர்வும் மனந்திரும்புதலுமே அதற்கு வழி. அவர்கள் மனம் திரும்பாவிட்டாலும் பரவாயில்லே, ஆண்டவர் செய்த ஜெபமே போதும் என்ருல், மனந்திரும்புதல் இல்லாமலே ஆண்டவருடைய வேண்டுதலால் உலக முழுவதையும் இரட்சித்துவிடலாமே. பாவிகள் மன்னிக்கப்படுவதற்கு அவருடைய ஜெபமே போதுமென்ருல் அவர் சிலுவையில் மரிக்கவேண்டியதில்லேயே. பாவிகள் மன்னிக்கப்படுவதற்கு அவர் ஜெபமே போதுமென்ருல் நாம் சுவிசேடத்தைப் பிரசங்கிக்க அவசியமில்லேயே. பாவிகள் இரட்சிக்கப்பட அவர் ஜெபமே போதுமென்ருல் நாம் மனந்திரும்பி விசுவாசிக்கவேண்டியதில்லேயே.

இரட்சகர் அவர்களுடைய அறியாமைக்காகப் பரிதபித்து மன்னிக்கும்படி பிதாவை வேண்டிக்கொண்ட சமயத்திலேதான் அவர்கள் அவரைப் பரியாசம்பண்ணவும், நிந்திக்கவும், தூஷிக்கவும் துணிந்தார்கள் என்று வாசிக்கிறேம். அப்படியாஞல் ஆண்டவர் செய்த மன்ருட்டு வீணுய்ப்போயிற்றே? அல்ல. அந்த விண்ணப்பம் அந்நிமிடத்தில் நேரிட இருந்த அழிவுக்கு அவர்களேக் காப்பாற்றினது. அவர்கள் மனந்

திரும்பி இரட்சிக்கப்படுவதற்கு நாற்பது வருடக் கால தவணையையும் கொடுத்தது. இந்த ஜெபத்தின் பலனாக வலதுபக்கத்துக் கள்ளன் குணப்பட்டான். நூற்றுக்கதிபதியும் அவனோடே கூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும் மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டார்கள். அங்கே நின்றுகொண்டிருந்த ஜனங்கள் எல்லாரும் தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள். ஏழு வாரங்களுக்குப்பின், அதாவது பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி சிலுவையில் சம்பந்தப் பட்டவர்கள் ஆயிரக்கணக்கில் இரட்சிக்கப்பட்டார்கள். பேதுரு யூதர்களைப் பார்த்து: 'சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்' என்று சொல்லி கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார். மூவாயிரம் ஐயாயிரமாக இரட்சிக்கப்பட்டார்கள். ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்துக்குக் கீழ்ப் படிந்தார்கள். பேதுரு சொன்னதுபோலவே பவுலும்: 'எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை அறியாமல் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்கள்' என்றும், 'இப் பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அவரை அறியவில்லை; அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே' என்றும் எழுதியிருக்கிறார்கள். ஆண்டவர் செய்த மன்றாட்டு வீணாய்ப் போகவில்லை. அவருடைய விண்ணப்பத்தின் பலன் பாவத்தைக் குறித்து உணர்த்தும் பரிசுத்த ஆவியானவர் வந்தபின் வெளிப்பட்டது.

## நமக்குப் போதனை

ஆண்டவர் செய்த இந்த உருக்கமான மன்றாட்டிலிருந்து இரண்டு காரியங்களை அறிந்துகொள்ளுகிறோம். நாம் மன்னிக்கப்படும் வழியையும் பிறருக்கு நாம் மன்னிக்கவேண்டிய அவசியத்தையும் காண்கிறோம்.

உலக சரித்திரத்தில் மகா கொடிய பாதகத்தைச் செய்த சண்டாளருக்கு மன்னிக்கும்படி ஆண்டவர் வேண்டிக்கொண்டதைப் பார்க்கும்போது எப்பேர்ப்பட்ட பாவிக்கும் மன்னிப்பு கிடைக்கும் என்கிற நம்பிக்கை உண்டாகிறது. சாத்தான் சிலுவைக் காட்சியை நமது கண்களுக்கு மறைத்து, நமது

பலவீனங்களையும் பாவங்களையுமே நமக்கு ஞாபகப்படுத்தி மனஞ்சோர்ந்துபோகச் செய்கிறுன். என்னைப்போன்ற பெரும் பாவிக்கும் மன்னிப்புக் கிடைக்குமோ என்கிற சந்தேகம் உண்டாகும்போது, நாம் மேலும் மேலும் கெட்டுப்போக ஏதுவாகிறது. சிலுவையில் வெளிப்பட்ட தேவ அன்பின் பெருக்கத்தையே நாம் எப்போதும் நோக்கவேண்டும். எல்லை யில்லா அவரது அன்பின் சமுத்திரமும் கிருபா சமுத்திரமும் வெள்ளம்போல் பிரவாகித்து வரும்போது நமது பாவங்கள் இருந்த இடம் தெரியாமல் பறந்துபோகின்றன. அவரது அன்புக்கொப்பான அன்பும், அவரது மன்னிப்புக்கொப்பான மன்னிப்பும் இல்லை. ஒருவன் எவ்வளவு பெரும்பாவியாயிருந் தாலும், எவ்வளவு காலத்துப் பாவியாயிருந்தாலும், துணிகர மான பாவியாயிருந்தாலும் அன்பர் பாதத்தைப் பிடித்துக் கொண்டால் அந்நிமிடமே அவனை இரட்சிப்பார். பாவமன்னிப் பின் நிச்சயத்தையும் சந்தோஷத்தையும் அருளுவார். அவர் மன்ருட்டு அன்ருேடு நின்றுபோகவில்லை. இந்த நிமிடத்திலும் நமது பாவங்கள் மன்னிக்கப்படும்படி பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறுர். அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ள மனமில்லாதவன் தன்னைத்தானே கெடுத்து நரகத்துக்கு ஆளாக்கிக்கொள்ளுகிறுன்.

இந்த ஜெபம் நாம் பிறருக்கு மன்னிக்கவேண்டு மென்பதை யும் நமக்குப் போதிக்கிறது. அவரிடத்தில் இரக்கம் பெற்ற நாம் பிறருக்கு இரங்கவேண்டும். 'நான் உனக்கு இரங்கினது போல நீ உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண் டாமோ?' என்றும், 'நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனுல் என் பரமபிதாவும் உங்களுக்கு அப்படியே செய்வார்' என்றும் சொன்னுர். ஆண்டவர் நமது மன்னிப்பைப் பிறர் மன்னிப் போடு இணைத்திருக்கிறுர். 'எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல் எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்' என்று அடிக்கடி ஜெபிக்கிறேம். பிறருக்கு மன்னிக்க நமக்கு மனம் இல்லாமற் போனுல் இந்த விண்ணப்பம் நமக்கே விரோதமாகும். ஆண்ட வரே, நாங்கள் மற்றவர்களுக்கு மன்னிக்காததுபோல நீரும் எங்களுக்கு மன்னிக்கவேண்டாம் என்று சொல்வதாகும்.

'ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயுமிருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்' என்கிறார் (எபே. 4:32). பிதாவினிடத்தில் அன்பும் பிறரிடத்தில் பகையுமா யிருக்கமுடியாது. 'தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.' 'அன்பில் நிலைத் திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.'

ஆனால் பிறர் குற்றங்களை மனப்பூர்வமாய் மன்னிப்பது இலேசல்ல. அது இலேசாயிருந்தால் இவ்வளவு விரோதமும் பகையும் பிரிவினையும் நமக்குள்ளே காணப்படமாட்டா. தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற தேசத் தார் சிலுவைக் காட்சியையும், சத்துருக்களுக்கு மன்னிக்கும் படி ஆண்டவர் செய்த அன்பின் வேண்டுதலையும் கவனித்து நடந்திருந்தால் இவ்வளவு பயங்கரமான யுத்தங்களும், இலட் சக்கணக்கான உயிர்ச்சேதங்களும் உண்டாகா. ஆண்டவரை யும் அவரது அன்பின் கட்டளையையும் அசட்டை செய்ததே இந்த அழிவுக்குக் காரணம். பகையை விதைத்து அன்பை அறுக்கிறவன் யார்?

சிலருக்கு மன்னிப்பது இலேசாகவும் இன்னும் சிலருக்கு மன் னிப்பது முடியாததாகவும் தோன்றலாம். நமது சுயபலத்தால் ஒருவருக்குமே மன்னிக்கமுடியாது. அது கூடுமானால் அது நமது மன்னிப்பேயல்லாமல் தேவ அன்பின் பலத்தால் உண்டான மன்னிப்பல்ல. ஆண்டவர் சிலுவையில் மன்னித்த போது சிலரை விட்டு விட்டு மற்றவர்களுக்கு மன்னித்தவ ரல்ல. அவரைப்போல் பாடுகளும் அவமானங்களும் அடைந்து நாம் சிலுவையில் அறையப்படவில்லை. அற்ப சொற்ப காரி யங்களை மன்னிப்பதே நமக்குக் கஷ்டமாயிருக்கிறது. காரணம் நமக்குள் தேவ அன்பில்லை. கிறிஸ்துவின் சிந்தை நமக்குண் டாகவில்லை. அன்பின் ஆவியானவர் நம்மை நிரப்பவில்லை.

மன்னிப்பதற்கு ஆண்டவர் காரணம் கூறினார். அந்தச் சிந்தையும் நமக்கு வேண்டும். மற்றவர்கள் நமக்கு விரோத மாகச் செய்த தப்பிதங்களைப் பிரமாதமாக்கி எப்போதும் அவைகளை நினைத்தவண்ணமாயிருக்கிறோம். ஆனால் நாம்

மற்றவர்களுக்கு எந்தெந்த விஷயத்தில் கஷ்டம் கொடுத்திருக்கிறோம் என்பதை யோசிக்கிறதில்லை. நம்மை அவர்கள் வெறுப்பதற்கு அவர்களிடத்திலும் காரணங்கள் இருக்கலாம். அவர்களுக்கு மனவருத்தத்தை உண்டாக்கின நமது தவறுதல்களை நாம் யோசிக்கவேண்டும். காரணமில்லாமல் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோகவில்லை. ஒரு வார்த்தை, ஒரு கோபம், அன்பற்ற பார்வை, அசட்டை, தப்பெண்ணம் முதலான காரியங்கள் அவர்களையும் நம்மையும் பிரித்திருக்கலாம். அதை உடனே சரிப்படுத்தாததால் வரவர பிளவு விசாலமாகிவிட்டது. திரும்பவும் அவர்களோடு பேசுகிறதென்றால் மாம்சத்துக்குக் கஷ்டமாயிருக்கிறது. அந்தக் கஷ்டம் நமக்குள் இருக்கும் பெருமைக்கு அடையாளம். நமது பெருமையோ, ஆண்டவர் கட்டளையோ, எது பிரதானம்? மேலும் ஒருவரும் நம்மை வாரினால் அடித்து, முட்கிரீடம் வைத்து, முகத்தில் துப்பி, பலவாறாய்த் தூஷித்து, சிலுவையிலறையவில்லை. அப்படிப்பட்ட பாவிகளுக்கு ஆண்டவர் மனப்பூர்வமாய் மன்னித்து, நாமும் பிறருக்கு மன்னிக்கவேண்டுமென்பதற்கு மாதிரி காண்பித்துப் போதித்திருக்கிறார். ஆகையால் மற்றவர்களுக்கு நாம் செய்த தப்பிதங்களை அவர்களுக்கு அறிக்கையிட்டு அவர்களோடு ஒப்புரவாகவேண்டும். அவர்கள் நமக்குச் செய்த தப்பிதங்களை நாம் அவர்களுக்கு மன்னிக்கவேண்டும். மன்னிக்கும் சிந்தையில்லாதவர்கள் பிதாவின் சமுகத்தைக் கிட்டிச் சேர முடியாது. சத்துருக்களுக்கு மன்னித்த கிறிஸ்துவின் அன்பு நமது உள்ளத்தை நிரப்பினால் அல்லாமல் இது ஒருபோதும் பலிக்காது. அவர் பாதத்தில் காத்திருந்து பரிசுத்த ஆவியின் மூலமாய் தேவ அன்பை நமது உள்ளத்தில் ஊற்றும்படி ஊக்கமாய் ஜெபித்து வரவேண்டும். அப்போது தேவ அன்பும் பிறர் அன்பும் நமது பங்காயிருக்கும். அதைப்போல் பாக்கியமும் மகிழ்ச்சியுமான ஜீவியம் வேறில்லை.

# இரண்டாம் வார்த்தை

**'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்றார்** *(லூ. 23:43)*.

ஆண்டவர் முதல் வார்த்தை சொன்னபின் மறுபடியும் என்ன சொல்லுவாரோ என்பது யாருக்கும் தெரியாது. இந்த இரண்டாம் வார்த்தை அவர் வாயிலிருந்து பிறந்ததற்கு வலது பக்கத்துக் கள்ளனே காரணம். அவரைச் சிலுவையி லறைந்தபோது பாவமன்னிப்பின் முதல் வார்த்தையை வெளி யிட்டார். அப்புறம் பேசாமல் மௌனமாயிருந்தார். சத்து ருக்கள் எவ்வளவோ தூஷிக்கிறார்கள், பரியாசம்பண்ணு கிறார்கள், நீ தேவ குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா, அப்பொழுது உன்னை விசுவாசிப்போம் என்கிறார்கள். அவர்கள் என்னென்ன பேசினபோதிலும் ஆண்டவர் வாய் திறக்கவில்லை. இந்தக் கள்ளன் அவரைப் பார்த்து: 'ஆண்ட வரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்' என்று சொன்ன நிமிடத்தில் அவர் வாய் திறந்து: 'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்று இந்த இரண்டாம் வார்த்தையைக் கூறினார். முதல் வார்த்தையில் பாவமன்னிப்பை மொத்தமாக அறிவித்தார். இரண்டாம் வார்த்தையில் இரட்சிப்பின் ஆசீர்வாதத்தைக் குறிப்பாக இந்தக் கள்ளனுக்கு அருளினார். அவனும் வணக்கத்தோடும் நன்றியோடும் திருவாக்கை ஏற்றுக்கொண்டு அகமகிழ்ந் தான்.

## இரு கள்ளர் சரித்திரம்

ஏரோது ராஜா எருசலேம் ஆலயத்தைக் கட்டின சமயத்தில் நாற்பதினாயிரம்பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். இவர் களில் அநேகர் பிழைக்க வழியில்லாமல் வழிப்பறி செய்வதி

லும், கொள்ளையடித்துச் சாப்பிடுவதிலும் காலம் தள்ளி னார்கள். இப்படிப்பட்ட கூட்டத்தார் கைகளிலேதான் எருச லேமிலிருந்து எரிகோவுக்குப்போன மனுஷன் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு அவனை அடித்துக் காயப்படுத்தி குற்றுயிராக விட்டுப்போனார்கள். இவர்களும் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். இத்துடன் இவர்கள் ரோமர் ஆளுகையை எதிர்த்துக் கலகம் செய்த கூட்டத்தாரையும் சேர்ந்திருந்தார்கள். ஆகவே இவர்கள் வெளியரங்கமாய் ஜனங்களோடு சேர்ந்து சஞ்சரிக்கக்கூடாமல் அதிகாரிகள் கைக்குத் தப்பும்படி மலையோரங்களிலே மறை வான இடங்களில் மறைந்திருந்து வழிப்போக்கரைக் கொள்ளை யடித்துப் பிழைத்தார்கள். இவர்கள் இருவரும் என்னென்ன அக்கிரமங்களைச் செய்தார்களென விவரம் சொல்லப்படா விட்டாலும் அவர்களுக்குக் கிடைத்த கொடிய தண்டனையைப் பார்க்கும்போது இவர்கள் படுபாவிகள் என்பது தெளிவா கிறது. மேலும் குணப்பட்ட கள்ளன் மற்றவனைப் பார்த்து 'நீ தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்' என்று சொல்லுகிறதில் இதன் உண்மை விளங்குகிறது.

## கிறிஸ்துவின் சிலுவை நடுவிலே

'கள்ளர் இருவரையும் இரண்டு பக்கங்களிலும் ஆண்டவரை நடுவிலுமாகச் சிலுவையில் அறைந்தார்கள்.' இது யார் செய்த ஏற்பாடு? யூதரை வெட்கப்படுத்தும்படி 'இவன் யூதருடைய இராஜாவாகிய இயேசு' என்று எழுதி அவருடைய சிரசுக்கு மேலாகத் தொங்கவைத்த பிலாத்து, இன்னும் அவர்களை வெட்கப்படுத்தும் நோக்கமாய் இரு கள்ளர் நடுவிலே அவரை சிலுவையிலறையும்படி கட்டளையிட்டிருக்கலாம் அல்லது சத்துருக்களான யூத அதிகாரிகளே அவருக்கு நிந்தையாக அவருடைய சிலுவையை நடுவில் நிறுத்தும்படி செய்திருக்க லாம் அல்லது அன்று நடந்த விசாரணையில் அவர் முக்கிய மான குற்றவாளியாக நடத்தப்பட்டபடியால் போர்ச்சேவ கரே தங்கள் இஷ்டப்படி அவர் சிலுவையை நடுவில் நிறுத்தி யிருக்கலாம். இது யாருடைய ஏற்பாடாயிருந்தாலும் சரி,

ஒன்று நிச்சயம்: 'அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப் பட்டார்' என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று. மேலும் அவர்கள் தங்கள் இஷ்டப்படி அவருக்கு விரோதமாக என் னென்ன செய்தபோதிலும், முதுகின் வாரடிகளோ, முட் கிரீடமோ, சிவப்பு அங்கியோ, முகத்தின் எச்சியோ, நிந்தை பரியாசமோ, நடுச்சிலுவையோ என்னவானாலும் சகலமும் வேதவாக்கியங்களின்படியே நடந்தன. அருமை இரட்சகரைப் பற்றிக்கொள்ளும் விசுவாசிகளுக்கு இவைகள் யாவும் எவ் வளவோ மேன்மையும் மகிமையுமாக இருக்கின்றன. அழகான முகமுள்ள ஒரு தாய்க்கு அவள் கைகளில் தழும்பு உண்டாகி பார்க்க விகாரமாயிருந்தது. இதைக் கவனித்த அவளுடைய சின்ன மகள் தன் தாயைப் பார்த்து: அம்மா, நீங்கள் எவ் வளவோ அழகாயிருக்கிறீர்கள், ஆனால் உங்கள் கைகளைப் பார்க்கும்போது அவலட்சணமாயிருக்கிறது என்று சொன் னாள். உடனே தாய் மகளைப் பார்த்து: என் கண்ணே, நீ சிறு குழந்தையாகத் தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்தபோது நமது வீடு தீப்பற்றிக்கொண்டது. நெருப்பு உன்னைச் சூழ்ந்து கொள்ளவே நான் பாய்ந்து விழுந்து உன்னை எடுத்து உன் உயிரைக் காப்பாற்றினேன். அச்சமயம் நெருப்பு என் கைகளில் விழுந்ததால் இவ்வளவு அவலட்சணமாகிவிட்டது என்றாள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த சிறு பெண் தாரை தாரையாகக் கண்ணீர்விட்டு அழுது: அருமை அம்மா, உங்கள் முக அழகைவிட உங்கள் கைகளே இப்பொழுது எனக்கு அழகாய்த் தோன்றுகிறதென்றாள். நமதாண்டவரடைந்த நிந்தை அவமானங்கள் நம்மை உன்னத மகிமைக்கு உயர்த்தி விட்டபடியால், 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டமாட்டோம்' என்ற பவுலோடு சேர்ந்து நாமும் சொல்லலாமே.

சத்துருக்கள் அவர் சிலுவையை நடுவில் நிறுத்தினபோதி லும் அது தேவ ஏற்பாடாகவேயிருந்தது. நடுவே எக்காலத்தி லும் அவர் ஸ்தானம். பிதா குமாரன் ஆவியில் நடுவிலிருப் பவர் அவர். வனாந்தர பிரயாணத்தில் இஸ்ரவேலர் நடுவில் சென்ற ஞானக் கன்மலை அவர். இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருந்தவர்கள் நடுவில் தோன்றின பாலகன் அவர். பன்

னிருவயதில் போதகர் நடுவிலிருந்த பிள்ளையாண்டான் அவர். ஜனங்கள் தம்மைச் சூழ்ந்துகொள்ள நடுவிலிருந்து போதித்த வரும், நோய்களைக் குணமாக்கினவரும் அவர். பிலாத்துமுன் ஜனங்கள்சூழ அவர்கள் நடுவில் நின்ற கைதி அவர். இப்போது இரு கள்ளர் நடுவில் தொங்குகிறவரும் அவர். உயிர்த் தெழுந்தபின் சீடர் நடுவில் தோன்றி சமாதானம் கூறினவர் அவர். பரதீசின் நடுவிலிருக்கும் ஜீவவிருட்சம் அவர். ஏழு குத்துவிளக்குகளின் நடுவில் நிற்பவர் அவர். எங்கே இரண்டு பேர் மூன்றுபேர் கூடுகிறார்களோ அவர்கள் நடுவில் இருப்பவர் அவர். உலகத்தை நியாயம் தீர்க்கும்போது நடுவிலிருக்கும் நியாயாதிபதி அவர். மறுமையில் பரிசுத்தவான்களின் நடுவில் மகிமையாய்ப் பிரகாசிப்பவரும் அவரே. எக்காலத்தி லும் நடுவே அவருடைய இடம். சகலமும் அவருக்குள் நிலை நிற்கிறது. இவ்வாறு எக்காலத்திலும் நடுவில் இருப்பவர் இங்கே மாத்திரம் இடமாற்றுவாரா? உயிரோடிருக்கையில் பாவிகள் மத்தியிலிருந்த அன்பன் சாகும் வேளையில் தமது சிநேகிதரை விட்டு விலகிப்போவாரா?

## கள்ளர் நிந்தித்தல்

'அவரோடேகூட சிலுவையிலறையப்பட்டிருந்த கள்ளரும் அவரை நிந்தித்தார்கள்' என்று மத்தேயுவும் மாற்கும் சொல் கிறார்கள். லூக்காவோ: 'சிலுவையிலறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் அவரை இகழ்ந்தான்' என்று சொல்லுகிறார். இதை எப்படிச் சரிப்படுத்துகிறது? கலகக் காரர் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் செய்த அக்கிரமத்தை அந்தக் கூட்டத்தாரே செய்ததாகப் பேசுவது வழக்கம். அப்படியானால் மற்ற இரண்டு சுவிசேடகரும் எழுதினது பொய்யாகுமே. அப்படியல்ல, இடதுபக்கத்துக் கள்ளன் நிந்திக்க ஆரம்பித்தபோது வலதுபக்கத்துக் கள்ளனும்சேர்ந்து நிந்தித்திருக்கலாம். இதற்கு முன்னும் இந்த மனந்திரும்பாத கள்ளனாலேயே இவனும் இழுப்புண்டு பொல்லாத காரியங் களைச் செய்திருக்கவேண்டும். இந்தச் சமயத்திலும் அவனால் இழுப்புண்டு வேண்டாவிருப்பாய் ஆண்டவரை நிந்தித்தான் என்று தோன்றுகிறது. இஸ்ரவேலுக்கு இராஜ்யத்தைத் திரும்பக் கொடுப்பாரென்று நம்பி ஜனங்கள் அவரைப் பின்

சென்றிருக்க, யாதொரு பிரயத்தனமும் செய்யாமல் ஒரு கோழைபோல் சாகிருரே என்று நிந்தித்திருக்கலாம். அதிகாரி கள் அவரை நிந்தித்துத் தூஷித்தபோது அவர்கள் தயவைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களோடு சேர்ந்து நிந்தித்திருக்க லாம் அல்லது நாய் வாலே ஒருவன் பிடித்திழுக்க, அது பக்கத்தில் வந்தவனேக் கடிக்கிறதுபோல தங்கள் வேதனேயைப் பொறுக்கமுடியாமல் பக்கத்தில் தொங்கினவரை நிந்தித்திருப் பார்கள். தங்களேச் சிலுவையிலறைந்தவர்களேத் தூஷிக்கா மல் தங்களேப்போல் வேதனேப்பட்டுச் சாகிற மனுஷனே நிந் தித்தது எவ்வளவு அக்கிரமம்! இப்படியிருக்க, வலதுபக்கத்துக் கள்ளன் நிந்திப்பதைத் திடீரென நிறுத்திவிட்டு ஆழமாய் யோசிக்கத் தொடங்கினுன். அதுவே அவனுக்கு இரட்சிப்பாக முடிந்தது.

## கள்ளன் செய்த மன்ருட்டு

'ஆண்டவரே, நீர் உமது இராஜ்யத்தில் வரும்போது அடியேனே நினேத்தருளும்' என்ருன். என்ன ஆச்சரியம்! ஐயா, இயேசுவே! எங்களேப்போல் வேதனேப்பட்டுச் சாகிற உம்மை தெரியாமல் நிந்தித்துவிட்டோம், தயவாய்ப் பொறுத்துக் கொள்ளும் என்று சொன்னுலே போதுமே. அவன் செய்த விண்ணப்பமோ ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இந்தச் சமயத் தில் ஆண்டவருடைய நிலேமையையும் அவர் காரியங்களேயும் கவனிக்கும்போது யார்தான் இப்படிச் சொல்ல முடியும்? விசாரணே முழுவதிலும் அவரடைந்த பாடுகளும் அவமானங் களும் கொஞ்சமல்ல. அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப் பட்டு சிலுவையில் தொங்குகிருர். அதிகாரிகளும் கூடியிருந்த ஜனங்களும் சேர்ந்து அவரைப் பரியாசம் செய்து தூஷித்த வண்ணமாயிருக்கிருர்கள். அவர் தம்மைப்பற்றிப் பிரஸ்தா பித்த காரியங்கள் யாவும் வியர்த்தமாய் முடிந்ததாகத் தோன்றுகிறது. அவர் ஊக்கமாய்ச் செய்துவந்த வேலே சித்தி பெருமல் படுதோல்வியடைந்தவரைப்போல் தொங்குகிருர். அவருக்காகப் பரிந்து பேசுவாரில்லே. நம்பியிருந்த சீடர்கள் ஓடி மறைந்தார்கள். சிநேகிதர்கள் கலங்கிக் கண்ணீர் வடிக் கிருர்கள். நன்மைப்பெற்ற திரளான ஜனங்கள் பயந்து பேச்சற்று நிற்கிருர்கள். வானமும் பூமியும் சேர்ந்து அவரைக்

கைவிட்டதுபோல் காணப்படுகிறது. சகலமும் அவருக்கு விரோதமாயிருக்கிறது. அவர் பானம்பண்ணும் பாத்திரத்தின் கசப்பை அறிந்தவன் யார்?

இப்படிப்பட்ட நிலைமையிலிருந்து தவிக்கும் ஒரு குற்றவாளியைப் பார்த்து: 'ஆண்டவரே, நீர் உமது இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்' என்று யார் சொல்லக் கூடும்? இவனுடைய விசுவாசத்துக்கு நிகருண்டோ? எபிரேயர் பதினோராம் அதிகாரத்தில் விசுவாசிகளின் பேர் வரிசை வருகிறது. அவர்களில் யாராகிலும் இந்தக் கள்ளனுடைய விசுவாசத்துக்கு முன் நிற்பார்களா? ஐயா, நீர் என் வீட்டுக்குள் வர நான் பாத்திரனல்ல, இருக்கிற இடத்திலிருந்து ஒரு வார்த்தை சொன்னால் போதும், என் வேலைக்காரன் பிழைப்பான் என்று நூற்றுக்கதிபதி சொன்னபோது ஆண்டவர் ஆச்சரியப்பட்டு ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லையே என்றார். அப்படியானால் இந்தக் கள்ளனுடைய விசுவாசத்தைப்பற்றி எவ்வளவோ ஆச்சரியப்பட்டிருப்பார். ஆனால் அதைப்பற்றி யாரோடு பேசுவார்? எல்லாரும் விரோதிகளாயிருக்கிறார்களே. அவரோடு கூடவேயிருந்து, இராஜ்யத்தின் போதனைகளை அடிக்கடி கேட்டு, அற்புதங்களைக் கண்டு பிரமித்த சீடருக்கு சகலமும் பாழாய்ப்போனதாகத் தோன்றினது. அவரை விடாது பின்சென்ற பக்தியுள்ள ஸ்திரீகளுடைய நம்பிக்கை முழுவதும் அழிந்தது. தங்களைக் கைவிட்டு மடிந்துபோனாரே என்று புலம்பினார்கள். இருண்ட மேகத்திலிருந்து திடீரென சூரியன் பிரகாசிப்பதுபோல இந்தக் கள்ளனுடைய விசுவாசம் அந்தகாரத்தினூடே பிரகாசித்தது. ஆண்டவரே, நீர் உமது இராஜ்யத்தில் வருவீர் என்கிறான். ஓடி ஒளித்த சீடர் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைத் தரிசித்தபின் உடனே நம்பாமல் படிப்படியாய் விசுவாசித்து சந்தோஷப்பட்டார்கள். அவர் உன்னதம் போய் பரிசுத்தாவியை அனுப்பினதின்பின் இயேசுவை ஆண்டவரும் கிறிஸ்துவுமென்று பிரஸ்தாபித்தார்கள். பவுல் தமஸ்குவுக்குப் போகிற வழியில் பரம இரட்சகரைத் தரிசித்தார். ஒரு சமயம் மூன்றும் வானம்வரை சென்று பரதீசுக்குள் பிரவேசித்து மனுஷர் பேசக்கூடாததும் வாக்குக் கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டார். அவ்வளவு

மேலான சிலாக்கியம் பெற்றவர் எங்கும் பிரயாணம்பண்ணி கிறிஸ்துவை மகிமைப்படுத்தினது ஆச்சரியமல்ல. இந்தக் கள்ளனே ஆண்டவருக்குச் சீடனுயிருந்தவனுமல்ல, ஆவியைப் பெற்றவனுமல்ல, பரதீசைக் கண்டவனுமல்ல. அப்படியிருந்தும் சகலமும் கிறிஸ்துவுக்கு விரோதமாயிருக்கும் இந்த நேரத்தில், அவர் எல்லாராலும் கைவிடப்பட்டுக் கொடிய நிந்தைகளை அனுபவித்துச் சாகும் சமயத்தில் **ஆண்டவரே** என்றும், **உமது இராஜ்யம்** என்றும் பேசவேண்டுமானுல் இவனுடைய விசுவாசம் ஆபிரகாமின் விசுவாசத்தையும் தாண்டுகிறதல்லவா? ஐயா, இவர்கள் உம்மைத் தூஷித்துப் பாதகனைப்போல் நடத்துகிறுர்கள்; நீரோ எனக்கு ஆண்டவர். இவர்கள் உம்மை ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்றுர்கள்; நீர் இராஜாவென்றும், உமக்கு இராஜ்யமுண்டென்றும் நான் அறிவேன். சிலுவையோடே நீர் ஒழிந்தீர் என்று இவர்கள் நினைக்கிறுர்கள்; இந்தச் சிலுவை உம்மைக் கொல்லாதென்றும் நீர் என்றென்றும் பிழைத்திருப்பீரென்றும் நான் நிச்சயித்திருக்கிறேன். இவன் இராஜாவல்ல, இவனை அகற்றும் அகற்றும் என்று இவர்கள் பிலாத்துவைக் கேட்டார்கள். நானே நீர் என் இராஜாவென்றும், நீர் உமது இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்துக்கொள்ளவேண்டுமென்றும் மன்றுடிக் கெஞ்சுகிறேன் என்றுன்.

இதைக் கேட்டவுடன் ஆண்டவருக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. 'அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை அவமதித்துச் சிலுவையைச் சகித்தார்.' அந்தச் சந்தோஷத்தை ஆரம்பித்தவன் இவனே. அவர் ஆவி பிரியுமுன்னே தமது ஆத்ம வருத்தத்தின் முதற் பலனைக் கண்டார். ஜனங்கள் தம்மை இன்னுரென்று அறிய வேண்டுமென்றே அவர்கள் நடுவில் அவர் சஞ்சரித்து, போதகம்பண்ணி அற்புதக் கிரியைகளை நடப்பித்து வந்தார். தமது ஊழியத்தின் முடிவில் ஜனங்கள் தம்மை யாரென்று சொல்லுகிறுர்கள் என்று சீடர்களிடம் விசாரித்தார். ஜனங்கள் பலரும் பலவிதமாய்ப் பேசிக்கொள்ளுகிறுர்கள் என்று சீடர்கள் சொல்லவே, நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். நீர் **ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து** என்று பேதுரு சொன்னுர். இந்த அறிக்கை இரட்

சகருக்கு ஆறுதலைக் கொடுத்தது. பிதா சொல்லிக்கொடுக்க பேதுரு செய்த இந்த அறிக்கையைப் பார்க்கிலும் கள்ளனுடைய அறிக்கை மகா உன்னதமானது. ஏனென்றால் பேதுருவுக்குக் கிடைத்த சிலாக்கியங்களில் ஒன்றாகிலும் இவனுக்குக் கிடைக்கவில்லை. பேதுரு அறிக்கை செய்த காலம் ஆண்டவர் மகிழ்ச்சியோடு ஊழியம் செய்த நல்ல காலம். கள்ளன் அறிக்கை செய்த சமயமோ ஆண்டவர் பாதகனைப் போல கைவிடப்பட்டுச் சிலுவையில் சாகும் சமயம். தம்மையும் தமது இராஜ்யத்தின் தன்மையையும் இவன் அறிந்து கொண்டதுமன்றி, சத்துருக்கள் காதுகேட்க அவன் செய்த இந்த மகத்தான அறிக்கை ஆண்டவருக்கு அளவில்லாத சந்தோஷத்தைக் கொடுத்தது. தாம் சிலுவையில் தொங்குவதைக்கூட மறந்துபோனார். அவன் விண்ணப்பத்துக்கு உடனே பதிலளித்தார்.

## ஆண்டவர் அருளிய பதில்

'என்னை ஏன் வேண்டிக்கொள்ளுகிறாய்? நானும் உன்னைப் போல ஒரு பலவீன மனுஷன்தானே. உன்னைப்போல் ஆக்கினையடைந்து சாகிறேன். மறுமையைப்பற்றியோ, இராஜ்யத்தைப்பற்றியோ எனக்கென்ன தெரியும்' என்று சொன்னாரா? அல்ல.

'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்றார். பாவியைத் தேடிவந்த நாதன் இவர். பாவிக்காய் உயிர்க்கொடுக்கும் அன்பன் இவர். தம்மைத் தேடிவரும் பாவிகளை ஒருக்காலும் புறக்கணிக்காத கர்த்தர் இவர். இந்தப் பாவியின் மன்றாட்டுக்கு உடனே பதிலளித்தார். ஆண்டவரே, நீர் உமது இராஜ்யத்தில் வருங்காலத்தில் அடியேனை நினைத்தருளும் என்றான். மகனே, இனிமேல் அல்ல, இன்றைக்கே நீ என்னோடு இருப்பாய் என்கிறார். அடியேனை நினைத்தருளும் என்று மாத்திரம் கேட்டான். அவருடைய இராஜ்யத்தில் பிரதானமான இடத்தைத் தேடினவனல்ல. தன்னை மறந்துவிடாமல் நினைத்துக்கொண்டால் அதுவே போதும் என்று எண்ணினான். நாம் பெரியவர்களைப் பார்த்து: ஐயா, கொஞ்சம் கண் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கேட்பதைப்போலவே இவன்

விண்ணப்பமும் இருந்தது. அக்காலத்தில் தனக்கு ஏதோ கொஞ்சம் இரக்கம் கிடைத்தாலும் போதுமென்பதே அவன் ஆசை. ஆனுல், நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிற தற்கும் மிகவும் அதிகமாய் நமக்குச் செய்ய வல்லவராகிய கர்த்தர் அவனைப் பார்த்து: அப்பா, வெகுகாலம் சென்றல்ல, இன்றைக்கே உனக்கு இரட்சிப்பு வந்தது. கடைசி இடமல்ல, என்னேடுகூடவே இருக்கும் பாக்கியம் பெற்ருய். உத்தரிக்கும் ஸ்தலமல்ல, இன்பமான பரதீசிலே நீ வாழுவாய். இவைகளைப் பற்றி உனக்கு எவ்வித சந்தேகமும் வேண்டாம் என்பதற்கு மெய்யாகவே என்கிற வார்த்தையைச் சேர்த்துச் சொல்லு கிறேன் என்ருர். செபதேயுவின் மக்களான யாக்கோபும் யோவானும் ஆண்டவரிடம் வந்து, அவருடைய இராஜ்யத் திலே ஒருவன் வலதுபக்கத்திலும் ஒருவன் இடதுபக்கத்திலும் உட்காரும்படி அருள்செய்ய வேண்டுமெனக் கேட்டார்கள். அவர் அவர்களைப் பார்த்து: நீங்கள் கேட்டுக்கொள்வது இன்னதென்று உங்களுக்கே தெரியவில்லையே என்ருர். ஆண்டவர் உயிர்த்தெழுந்தபின் சீடர்கள் அவரைப் பார்த்து: ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள். பிதாவானவர் தமது ஆதீனத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளை யும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல என்ருர். காலமெல் லாம் கூடயிருந்து இராஜ்யத்தின் போதனைகளைக் கேட்ட இவர்களுக்கு தேவராஜ்யத்தின் தன்மை என்னவென்பது தெரியாதிருக்க, காலமெல்லாம் கொலை கொள்ளைகள் நடப் பித்த இந்த கள்ளனே இராஜ்யத்தின் ஆவிக்குரிய தன்மையை அறிந்து மன்ருடினுன். ஆகையால் கர்த்தர் தாமதமின்றி உடனே அவன் விண்ணப்பத்துக்கு மனமுவந்து பதிலளித்தார். 'பிதாவே, உலகத்தோற்றத்துக்குமுன் நீர் என்னில் அன்பா யிருந்தபடியால் நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கே யிருக்கிறேனே அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்' என்று தமது அடியார்களுக்காக வேண்டிக் கொண்டார். அதுவே அவருடைய விருப்பம். அந்தப் பாக்கியம் முதல் முதல் இந்தக் கள்ளனுக்கே கிடைத்தது.

## பரதீசு

'நீ என்னுடனேகூடப் பரதீசில் இருப்பாய்' என்கிருர். பரதீசு என்பது பாரசீக வார்த்தை. அது செழிப்பான பூங்கா வனத்தைக் குறிக்கும். அதை எபிரேயர் எடுத்து மேலான கருத்தில் உபயோகித்தார்கள். நாலு நதிகள் பாய்ந்த தேவ னுடைய தோட்டமாகிய ஏதேனை யூதர் பரதீசு என்று சொல்லுவார்கள். பரதீசு என்னும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் வருகிறது. ஒன்று, ஆண்டவர் இந்தக் கள்ளனுக்கு அருளின வாக்கில் காண்கிருேம். இரண் டாவது, பவுல், தாம் மூன்ரும் வானம் வரைக்கும் எடுக்கப் பட்டதாகவும், அங்கே பரதீசுக்குள் பிரவேசித்ததாகவும் சொல்லுகிருர் (2 கொ. 12:3). அங்கே அவர் கண்டவை களையோ கேட்ட வார்த்தைகளையோ மனுஷர் வாக்குகளால் சொல்லமுடியாதென்கிருர். ஆகையால் அதைப்பற்றி அவர் விவரம் சொல்லவில்லை. மூன்ருவது, ஜெயங்கொள்ளுகிற வனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலுள்ள ஜீவ விருட்சத் தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்று ஆவியானவர் சொல்லுகிருர் (வெளி. 2:7). அது 'ஆபிரகாமின் மடி' என்றும் அழைக்கப்படுகிறது. லாசரு மரித்து தேவ தூதரால் ஆபிரகாமின் மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான் என்றும், அங்கே அவன் தேற்றப்பட்டான் என்றும் வாசிக் கிருேம். அது 'பலிபீடத்தின் கீழ்' என்றும் அழைக்கப்படு கிறது. அங்கே இரத்தச்சாட்சிகளான விசுவாசிகள் தேவனைப் பார்த்து நியாயத்தீர்ப்பு தாமதிப்பானேன் என்று கேட் கிருர்கள். இன்னும் கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. மறுமையின் காரி யங்களை நாம் விவரமாய் அறியக்கூடாமற்போனுலும், இவ் வாக்கியங்களைக் கவனிக்கும்போது பரதீசு என்பது பாக்கிய மும் சந்தோஷமுமான இடமென்றும், தேறுதலும் இளைப் பாறுதலுமுள்ள நிலைமையென்றும் அறிகிருேம். ஆண்டவர் சொன்னதோடுகூட பவுல் சொல்வதையும் கவனிப்போ மானுல் பரதீசு என்பது கிறிஸ்துவைத் தரிசிக்கும் இடமாகும். அப்போஸ்தலன் தன் தேகத்தை விட்டுப் பிரிந்தவுடனே கிறிஸ்துவுடனே கூடவிருக்கத் தனக்கு ஆசை உண்டென்றும், அது அதிக நன்மையாயிருக்கும் என்றும் சொல்லுகிருர்.

இந்தக் கள்ளன் மறுமையின் பாக்கியத்தை எதிர்பார்த்தவ னல்ல. 'ஆண்டவரே என்னை நினைத்தருளும்' என்று மாத் திரம் கேட்டான். 'இன்று என்னுடனேகூடப் பரதீசிலிருப் பாய்' என அவர் திருவாக்கருளினுர். கொடிய தாகத்தோடும் வேதனையோடும் தொங்கிச் சாகிற மனுஷனுக்கு இவ்வாக்கு சொல்லமுடியாத மகிழ்ச்சியைக் கொடுத்தது. இரட்சகர் சற்றுமுந்தி பரதீசுக்குள் பிரவேசித்தார். அங்கிருந்து இவன் வருகையை எதிர்பார்த்தார். கொஞ்சநேரத்துக்குள் இவனும் பரதீசில் பிரவேசித்து தன் இரட்சகராகிய இயேசுவை வணங்கி அவரோடுகூட பரதீசின் பாக்கியத்தை அனுப வித்தான்.

## இந்த அதிசய மாறுதல் எப்படி உண்டாயிற்று?

இவன் தன் ஜீவகாலத்தை நிர்விசாரத்திலும் கொலை களவு களிலும் செலவிட்ட பாதகன். தான் செய்த அக்கிரமங்களுக் காகப் பிடிபட்டு இந்த கொடிய தண்டனையை அனுபவிக் கிறுன். இதுவரை தான் செய்த பாவங்கள் போதாதென்று தனக்கு யாதொரு தீங்கும் செய்யாத நன்மைச் சொரூபியை நிந்தித்து ஆக்கினையைக் கூட்டிக்கொள்ளுகிறுன். இப்படிப் பட்டவனிடத்தில் திடீரென இந்த மாறுதல் உண்டான தெப்படி? அந்தகாரத்தில் அமிழ்ந்திருந்த பாவி, நிமிடத்தில் ஜீவ ஒளியில் பிரவேசிக்கிறுன். ஒரு நிமிடத்திற்குமுன் ஆக்கினைக்குள்ளிருந்தவன் மறு நிமிடத்தில் தேவ புத்திரனு கிறுன். பாதாளத்தை நோக்கிச் சென்றவன் பரதீசுக்கு ஆளாகிறுன். சாவுக்குரியவன் ஜீவனுக்குரியவனுகிறுன். இந்த மாறுதல் எப்படி வந்தது? அவன் மனந்திரும்பும்படி ஆண்டவர் அவனுக்குப் போதிக்கவில்லை. அவன் பேசினபின்புதான் ஆண்டவர் அவனேடு பேசினுர். அவன் பாவங்களைக் குறித்து அவனை அவர் கண்டிக்கவில்லை. நீ இன்னின்ன காரியங்களைச் செய்தால் உனக்கு மன்னிப்புக் கிடைக்குமென்று சொல்ல வில்லை. அவன் ஞானஸ்நானம் பெற்றவனல்ல. நற்கருணை வாங்கினவனல்ல. ஒரு சபையைச் சேர்ந்து கடவுளை வணங் கினவனல்ல. சிலுவைப்போதனை, பாவமன்னிப்பு, நீதிமா னுகுதல் முதலான வேதசாஸ்திரங்களைக் கற்றவனுமல்ல. ஆவியானவர் வந்து சபைகள் உண்டான பின்பே சிலுவையைப்

பற்றிய கொள்கைகளும் உபதேசங்களும் பெருகின. காலத்துக்குக்காலம் அக்கொள்கைகள் பெருகிக்கொண்டேபோகின்றன. இவனுக்கோ எந்த வேதசாஸ்திரமும் தெரியாது. அப்படியிருக்க இந்தப் பலத்த மாறுதல் அவனில் எப்படி உண்டாயிற்று? ஆண்டவரை நோக்கி இரக்கத்துக்காகக் கெஞ்சும்படி அவனை ஏவிவிட்டதென்ன?

அவனில் திடீரென உண்டான மாறுதலுக்குக் காரணம் இருக்கவேண்டும். வடக்கு நோக்கிப்போகிற ஒருவன் திடீரென தெற்கே திரும்பி நடப்பானுனல் அவன் மனதில் ஓர் எண்ணம் திடீரென உண்டாயிருக்கவேண்டும். பவுல் தமஸ்குவுக்குப் போகிற வழியில் சடுதியாய்ப் பிரகாசித்த ஒளியால் உணர்வடைந்து குணப்பட்டார். பிலிப்பி பட்டணத்துச் சிறைச்சாலைக்காரன் இரவில் நடந்த சம்பவங்களைக் கண்டு திடீரென இரட்சிப்பைத் தேடினுன். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு இருதயத்தில் குத்தப்பட்டவர்கள் உடனே இரட்சிக்கப்பட விரும்பினுர்கள். இவ்வாறு பல காரணங்களால் குணப்பட்டவர்களும் குணப்படுகிறவர்களும் உண்டு. இந்தக் கள்ளன் குணப்பட்டதற்கோ காரணம் சொல்லப்படவில்லை. என்ருலும் காரணமில்லாமல் காரியம் இல்லை. நூற்றுக்கதிபதி சிலுவையைச் சூழநடந்த அதிசயங்களைக் கண்டு பயந்து: ‘மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்’ என்று அறிக்கை செய்தான். அவ்வதிசயங்களைக் கண்டு கள்ளன் குணப்பட்டவனல்ல. ஏனென்ருல் அந்தச் சம்பவங்கள் நடப்பதற்கு முன்னமே இவனில் மாறுதலைக் காண்கிருேம்.

இதுதான் காரணம் என்று சுவிசேடத்தில் சொல்லப்படவில்லை. நாமே யூகிக்கவேண்டியதாயிருக்கிறது. நாம் யூகிக்கும் காரணங்கள் சரித்திரத்திற்கும் நடந்த சம்பவங்களுக்கும் முரண்பட்டதாயிருக்கக்கூடாது. இவன் தேவபக்தியுள்ள குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருக்கலாம். இவன் பெற்ருேர் இவனுக்குத் தேவனுக்குப் பயந்து நடப்பதையும் துன்மார்க்கருடன் சேரக்கூடாதென்பதையும் போதித்திருப்பார்கள். அப்படியிருந்தும் இவன் பொல்லாதவர்களோடு, விசேஷமாய்த் தன் தோழனுகிய இடதுபக்கத்துக் கள்ளனேடு சேர்ந்து தன் ஜீவியத்தைப் பாழாக்கிப்போட்டான். சாகும்

இந்த வேளையில் பெற்றோரின் அன்பான போதனைகளும் ஜெபங்களும் ஞாபகத்துக்கு வந்து அவன் உணர்வடைந்திருக்கலாம். இவன் குணப்பட்டதற்கு எத்தனை காரணங்களைச் சொன்னாலும் அவைகள் உத்தேசங்களாகுமேயன்றி நிச்சயமாகாது.

அவனில் உண்டான ஆச்சரியமான மாறுதலின் காரணத்தை அவன் செய்த மன்றாட்டிலே காண்கிறோம். ஆண்டவரே என்கிறான். அவரே அவன் இரட்சிப்பின் மாறுதலுக்குக் காரணமானார். கிறிஸ்துவைப்பற்றி இவன் இதற்குமுன் கேள்விப்பட்டிருக்கமாட்டான் என்று நாம் சொல்லமுடியாது. அவருடைய கீர்த்தி எங்கும் பிரசித்தமாயிருந்தது. அவர் இடைவிடாமல் பிரசங்கித்த தேவராஜ்யத்தின் போதனைகளை எல்லாரும் கேட்டார்கள். அவருடைய அற்புதங்களைக் கேட்ட எங்கும் அவர் பேச்சாகவே இருந்தது. அவர் வனாந்தரத்திலும், மலையடிவாரங்களிலும், கடற்கரையோரத்திலும் செய்த இராஜ்யத்தின் பிரசங்கங்களும், பாவிகளைத் தம்மிடம் அழைத்ததும் இவனுக்கு எட்டியிருக்கும். விசேஷமாக இந்தப் பண்டிகைக்கு வந்தவர்கள் அனைவரும் அவரைப்பற்றியே பேசிக்கொண்டு அவரைக் காண ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள். மேலும் அவர் இந்த வாரத்தில் எருசலேமுக்கு ராஜபவனி வந்தது ஜனங்களுக்குள் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கினது. இப்படிப்பட்ட ஒருவரைப்பற்றி இவனுக்கு ஒன்றுமே தெரியாதென்று நினைக்க இடமில்லை. அவர் பிடிபட்டது முதல் சிலுவை வரை நடந்த சம்பவங்களையும் இவன் அறிவான். அவர் சாதாரணமான கைதியல்ல. அதிகாரிகளும் யூதரும் பெருந்திரளாகக் கூடி அவரைச் சிலுவையிலறையும்படி செய்த முயற்சிகளும் கோஷ்டங்களும் கொஞ்சமல்ல. ‘மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள்’ என்று ஆண்டவர் காய்பாவிடம் சொன்னார். இவன் தன்னை இராஜா என்றும் தேவகுமாரன் என்றும் சொல்லுகிறான் என்று அவர்மீது அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். அவரை எவ்வளவோ பாடுபடுத்தினார்கள், வாரினால் அடித்தார்கள், முட்கிரீடத்தை வைத்தார்கள், முகத்தில் துப்பினார்கள், என்னென்ன செய்தபோதிலும் அவர் வாய்திறவா

மல் எவ்வளவோ பொறுமையோடும் சாந்தத்தோடும் அவை களைச் சகித்தார். பிலாத்தும் ஏரோதும் அவரிடத்தில் குற்ற மில்லை என்று சொல்லிவிட்டார்கள். இவை யாவும் இவனுக்கு ஆச்சரியமாயிருக்கும். என்றாலும் அன்று அவன் சிலுவையில் சாகப்போகிறவனாதலால் இவைகளை ஆழ்ந்து யோசித்திருக்க மாட்டான். அவன் பட்ட பாடுகளும் வேதனையுமே அவன் எண்ணமாயிருந்திருக்கும். அவரைச் சிலுவையிலறைந்தபின் அதிகாரிகளும் ஜனங்களும் அவரை நிந்தித்து:நீ தேவகுமாரனா னால், இஸ்ரவேலின் இராஜாவானால் கீழே இறங்கி வா என்று அவரை இடைவிடாது தூஷித்துப் பரியாசம்பண்ணினார்கள். அவரோ: 'பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய் கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே' என்று மன்றாடி னார். இது அவனைத் திடுக்கிடச் செய்தது. அவன் உள்ளம் உடைந்தது. அவர் தலைக்குமேல் 'நசரேயனாகிய இயேசு யூதருடைய இராஜா' என்று எழுதப்பட்டிருப்பதையும் பார்த் தான். இவ்வளவு அகோரபாடுகளையும் அவமானங்களையும் மகா பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, தம்மைச் சிலுவை யிலறைந்து கொல்லுகிற சத்துருக்களுக்கு மன்னிக்கும்படி வேண்டுதல் செய்கிற இவர் யார்? இப்படிப்பட்ட கைதியை நான் கண்டதே இல்லை. இவரை எவரோடும் ஒப்பிடமுடி யாது. யாதொருகுற்றமும் அறியாத இவரை அநியாயமாகக் கொல்லுகிறார்கள். இவர் தம்மைப்பற்றிச் சொன்னவைகள் யாவும் உண்மையாகத்தானிருக்கவேண்டும் என்று தனக் குள்ளே உணர்ந்தான். இச்சமயத்தில் தேவகிருபையும் சேர்ந்து கொண்டது.

மெய்யான குணப்படுதலுக்கு இருக்கவேண்டிய இலட்சணங் களை இவனிடம் காண்கிறோம். இன்னமும் விடாமல் அவரை நிந்தித்துக்கொண்டிருந்த தன் தோழனைக் கடிந்துகொண்டு அவனைவிட்டுப் பிரிந்தான்: 'நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனா யிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?' என்று அதட்டி னான். தன் பாவத்தை ஒத்துக்கொண்டு அறிக்கையிடுகிறான்: 'நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்த வைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்' என்கிறான். கிறிஸ்து குற்றமற்றவர் என்பதைப் பிரஸ்தாபிக்கிறான்: 'இவரோ தகாத தொன்றையும் நடப்பிக்கவில்லையே' என்கிறான். இவைகளைச்

சொல்லி ஆண்டவர் முகத்தைப் பார்த்துத் தனக்கு இரங்கும் படி கெஞ்சுகிறுன். அதைக் கேட்டு ஆண்டவர் அவன் முகமாகத் திரும்பி: இன்னும் கொஞ்சநேரத்திலே நீ என் னேடேகூட இருப்பாயென்று நிச்சயமாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்ருர். சிலுவையில் உயர்த்தப்பட்ட கிறிஸ்துவே அவன் இரட்சிப்புக்குக் காரணம். உயர்த்தப்பட்ட ஆண்டவரின் அன்பு அவனே இழுத்துக்கொண்டது.

## கிறிஸ்து பிரிக்கிருரா?

இரு கள்ளரில் ஒருவன் இரட்சிக்கப்பட்டதேன், மற்றவன் கெட்டுப்போனதேன்? சிலுவையில் நீட்டப்பட்ட அவருடைய கைகள் இருவரையும் சேர்த்துக்கொள்ள ஆயத்தமாயிருந்தன. அப்படியிருந்தும் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்பட்டான், மற்றவன் கைவிடப்பட்டான். ஆண்டவரிடத்தில் பட்சபாத மில்லே. ஆனுல் அவர் போகிற இடமெங்கும் பிரிவினே யைக் காண்கிருேம். 'நான் பூமியில் சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதா னத்தையல்ல, பிரிவினையை உண்டாக்க வந்தேன்' என்ருர். அவர் பிரவேசிக்கும் குடும்பத்தில் பெற்ருேர் மக்களுக்குள் பிரிவினே, சபையில் பிரிவினே, தேசத்தில் பிரிவினே. அது போலவே இந்தச் சிலுவையிலும் பிரிவினே. எருசலேமில் அவர் பிரசங்கித்தபோது சிலர் அவரை நல்லவரென்ருர்கள், மற்றவர்கள் அவர் ஜனங்களே வஞ்சிக்கிறவர் என்ருர்கள். இவ்விதமாக அவர்களுக்குள் பிரிவினே உண்டாயிற்று. அவர் போதனேயில் கோதுமை வேறே, களேகள் வேறே; பதர் வேறே, மணிகள் வேறே; புத்தியுள்ள கன்னிகைகள் வேறே, புத்தியற்ற கன்னிகைகள் வேறே எனப் பிரித்தார். திருஷ் டாந்தமாகப் பேசினபோது: திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீ களில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப் படுவாள்; படுக்கையிலிருக்கிற இருவரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்; வயலில் இருக்கிற இருவரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான் என்று சொன்னுர். கடைசி நாளிலும் இந்தப் பிரிவைக் காண்கிருேம். மேய்ப்பன் வெள் ளாடுகளேயும் செம்மறியாடுகளேயும் வெவ்வேருகப் பிரிப்பது

போல ஆண்டவர் நல்லார் பொல்லாரைப் பிரிப்பார். அது போல இந்த இரண்டு கள்ளரையும் பிரித்தாரோ? ஒருக்காலு மல்ல. இருவரையும் இரட்சித்துக்கொள்ளவே அவர்கள் நடுவில் தொங்கினுர். எல்லாரையும் இரட்சிப்பதற்காகவே உலகில் வந்தார். எல்லாருக்காகவும் தமது உயிரைக் கொடுத் தார். எல்லாரிடத்திலும் அவர் ஒன்றுபோல் அன்பும் கிருபை யுமாயிருக்கிறுர். எல்லாரையும் தம்மிடம் வரும்படி அழைக் கிறுர். அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் இரட்சிக்கப்படு கிறுர்கள். அவரைப் புறக்கணிக்கிறவர்கள் கெட்டுப் போகிறுர்கள். சிலரை இரட்சித்து மற்றவர்களைக் கைவிட வேண்டுமென்பது அவருடைய சித்தமல்ல. கிறிஸ்து பிரிக் கிறவரல்ல.

சில குண்டூசிகளை மேஜையின்மேல் போட்டு ஒரு காந்தத்தை அவைகளுக்குச் சற்று மேலே பிடித்தால் சில குண்டூசிகள் மேலே எழும்பி காந்தத்தில் ஒட்டிக்கொள்ளும். மற்றவைகள் அசையாமல் அப்படியே கிடக்கும். இந்த வித்தியாசம் எப்படி வந்தது? பேரில் வித்தியாசமில்லை; எல்லாம் குண்டூசிகள்தான். நிறத்தில் வித்தியாசமில்லை; எல்லாம் வெண்மைதான். ஆனுல் வித்தியாசம் உள்ளே மறைந்திருக்கிறது. மேலே எழும்பின குண்டூசிகள் இரும்பு; கீழே விடப்பட்ட குண்டூசிகள் பித்தளை. சில குண்டூசிகள் எழும்பாமற்போனது காந்தத்தின் குற்றமல்ல. இரட்சகர் இரு கள்ளருக்காகவும் மரித்தார். அவரது பேரன்பின் காந்தம் இருவரையும் இழுத்தது. வலதுபக்கத்துக் கள்ளன் அவரைப் பற்றிக்கொண்டான். இடது பக்கத்துக் கள்ளனே தன் மனதைக் கடினப்படுத்திப் பித்தளையானுன். அவன் மனந்திரும்பாமல் கடைசிவரை ஆண்டவரை நிந்தித்துச் செத்தான். அவருடைய சிலுவை ஒருவனுக்கு ஜீவனும் மற்றவனுக்கு மரணமுமாயிற்று. இன்றும் அப்படியே. நாம் என்ன சொல்லுகிறது?

## காலதாமதம் மோசம்

எப்பேர்ப்பட்ட பாவியாயிருந்தாலும் கிறிஸ்துவைத் தன் ஜீவனுக ஏற்றுக்கொள்ளுகிறவன் நிச்சயமாகவே இரட்சிக்கப் படுவான் என்பதற்கு இந்தக் கள்ளன் திருஷ்டாந்தமாக இருக்கிறுன். ஆனுல் அவனைப் போல நாமும் சாகும்போது

இரட்சிக்கப்படலாம் என்று நினைப்போமானல் மோசம் போவோம். அவன் காலமெல்லாம் பாவத்தில் ஜீவித்தவன். இரட்சிக்கப்படத்தக்க சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைக்கவில்லை. இந்தக் கடைசி நேரத்தில் கர்த்தரைப் பற்றிக்கொண்டு இரக்கம்பெற்ருன். நமது காரியமோ வேறே. நாம் ஆண்டவரை அறியவும் அவரை ஏற்றுக்கொள்ளவும் நமக்கு எத்தனையோ சிலாக்கியங்கள் அருளப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் கிருபையின் காலத்தை மனதார அசட்டை செய்துகொண்டு போனல் முடிவு மோசமாகவேயிருக்கும். மேலும் மனந் திரும்புதலும் விசுவாசமும் நாம் நினைத்த நேரத்தில் வராது. பாவ ஜீவியம் வரவர நமது இருதயத்தைக் கடினப்படுத்தும். ஆவிக்குரிய தேவகாரியங்களில் பிரியமற்றுப்போகும். ஆகையால் மரணப்படுக்கைக் குணப்படுதல் என்பது வெறுங்கனவாகும். மரணத்தறுவாயில் வேதனை அதிகரிக்கலாம், ஜன்னி கண்டு புத்தி தடுமாறலாம், பேசமுடியாதபடி நாக்கு விழுந்து போகலாம், கேட்கக்கூடாதபடி செவி அடைபடலாம். ஆகையால் மரணப்படுக்கைக் குணப்படுதல் நிச்சயமல்ல.

மேலும் 'இப்பொழுதே இரட்சண்ய நாள்' என்று ஆண்டவர் சொல்லும்போது இனிமேல் பார்த்துக்கொள்ளலாம் என்று பேசுவது துணிகரம். பவுலின் பிரசங்கத்தைக் கேட்டுப் பயமடைந்த பேலிக்ஸ் உடனே இரட்சகரை ஏற்றுக்கொண்டிருக்கவேண்டியது. அவனே பவுலைப் பார்த்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்ருன். அவ்வளவுதான். அந்த நல்ல சமயம் அவனுக்குத் திரும்பக் கிடைக்கவேயில்லை. கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைப் பற்றிக்கொள்ளாமல் காலங்கடத்துகிறவர்களின் முடிவு இப்படியே இருக்கும். இன்னும் கொஞ்சம் யோசித்தால் காலம் கடத்துவதின் மதியீனத்தை அறிந்துகொள்ளலாம். காலம் கடத்துவதால் சகலமும் கேடே தவிர நன்மை ஒன்றுமில்லை. பாவஜீவியத்தை நாடி இரட்சிப்பை அசட்டை செய்கிறவன் ஆண்டவருடைய அன்பை இழந்துபோகிருன்; கிருபையைப் போக்கடிக்கிருன்; தேவாவிக்கு எதிர்த்து நிற்கிருன்; பாவங்களைக் கூட்டிக் கொள்ளுகிருன்; மனதைக் கடினப்படுத்துகிருன்; ஆத்துமாவைச் சேதப்படுத்துகிருன்; சாத்தானுக்கு உதவி

செய்கிறுன்; தன் ஜீவியத்தைப் பாழாக்குகிறுன்; தேவ நடத்துதலே இழந்துபோகிறுன்; தன் குடும்பத்துக்கும் மற்றவர் களுக்கும் சாபமாயிருக்கிறுன்; கடைசியில் இரக்கத்தைக் காணுமல் மாண்டுபோகிறுன். காலதாமதம் மோசம்! ஏசா பிந்திக் கண்ணீர்விட்டுக் கவலேயோடு தேடியும் மனமாறுதலேக் காணுமற்போனுன். யூதாஸ் அன்பரின் எச்சரிப்பை அசட்டை செய்து மனந்திரும்பக்கூடாமல் நான்றுகொண்டு செத்தான். ‘அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப் படுத்துகிறவன் சகாயமின்றிச் சடுதியில் நாசமடைவான்.’

இரட்சிக்கப்பட்டவனே கர்த்தரோடே சஞ்சரிக்கிறுன். பரதீசின் பாக்கியத்தை ருசிக்கிறுன். அவன் ஜீவியம் நதிகளேப் போல் அநேகருக்கு ஆசீர்வாதமாயிருக்கிறது. அவன் தனக்கு ஆசீர்வாதம், தன் குடும்பத்துக்கு ஆசீர்வாதம், தன் சபைக்கு ஆசீர்வாதம், பிறருக்கு ஆசீர்வாதம், தேவராஜ்யத்துக்கு அனுகூலம். முடிவில் அவன் சமாதானத்தோடே தேகத்தை விட்டுப் பிரிந்து பரதீசில் பிரவேசித்து ஆண்டவரோடுகூட இருப்பான். அவன் அனுபவிக்கும் சந்தோஷத்துக்கு அளவில்லே.

# மூன்றும் வார்த்தை

**'இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீடனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீடனை நோக்கி: அதோ உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீடன் அவளைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டான்'** (*யோ. 19:26,27*).

## மரியம்மாள் சரித்திரம்

மரியம்மாளைச் சிலுவையினடியில் காணுமுன் அவர்கள் சரித்திரத்தைச் சுருக்கமாய்க் கவனிப்பது நல்லது. அம்மாளுடைய சொந்த ஊர் நாசரேத். யோயாக்கீம், அன்னாள் என்பவர்கள் பெற்றோர். யோசேப்பின் ஊரும் நாசரேத்துதான். இவர் தகப்பன்பேர் யாக்கோபு. யோசேப்பு தச்சன். மரியம்மாளை யோசேப்புக்கு மனைவியாக நியமித்ததை பார்க்கும்போது அம்மாள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. இவர்கள் ஏழையாயிருந்தபோதிலும் மரியம்மாளும் யோசேப்பும் யூதாக்கோத்திரத்தில் தாவீதின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்பது நிச்சயம்.

யூதருக்குள் கலியாணம் நடப்பதற்கு ஒரு வருடத்துக்குமுன் நிச்சயதார்த்தம் நடக்கும். மரியம்மாளுக்கு நிச்சயதார்த்தம் நடந்த சிறிது காலத்துக்குப்பின் காபிரியேல் தூதன் நாசரேத்துக்கு வந்து, அம்மாள் இருந்த இடத்தில் பிரவேசித்து, 'கிருபை பெற்றவளே, வாழ்க! கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்' என்றான். இந்த வார்த்தையைக் கேட்டு மரியம்மாள் கலங்கினார்கள். தேவதூதன் அம்மாளைப் பார்த்து: 'மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு **இயேசு** என்று பேரிடவேண்டும். அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார். கர்த்தராகிய தேவன் அவர் பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை

அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் வம்சத்தை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய இராஜ்யத்துக்கு முடிவிராது' என்றான். அம்மாள் தூதனைப் பார்த்து: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றார்கள். சகரியாவைப் போல் மரியம்மாள் அவிசுவாசப்படவில்லை. கலியாணமாகாத கன்னிகையாகிய தனக்குக் குழந்தை எப்படிப் பிறக்கும் என்பதே அம்மாள் கேள்வி அல்லது தூதன் சொன்ன வாக்கு இனி தான் கலியாணம் செய்துகொள்ளப்போகிற யோசேப்பின் மூலமாய் நிறைவேறும் என்று அம்மாள் அருத்தம்பண்ணிக் கொண்டவர்களுமல்ல. பிறக்கும் குழந்தையைக் குறித்து தேவதூதன் சொன்ன காரியங்களைக் கவனிக்கும்போது அப்படி எண்ணுவதற்கு இடமே இல்லை. ஆகையால் தூதன் மரியம்மாளைப் பார்த்து: 'பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய வல்லமை உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் குழந்தை பரிசுத்தமுள்ளது, தேவ குமாரன் எனப்படும்' என்றான். மேலும் இதை உறுதிப் படுத்தும்படி: உன் இனத்தாளாகிய எலிசபெத்தும் தன் முதிர் வயதிலே ஒரு மகனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள், இது அவளுக்கு ஆறும் மாதம், கடவுளால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை என்றான். உடனே மரியம்மாள் மறுவார்த்தை பேசாமல்: 'இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உமது வார்த்தையின் படி எனக்கு ஆகக்கடவது' என்றார்கள். அம்மாள் இப்படிச் சொன்னது லேசான காரியமல்ல. இதன் மூலமாய் எவ்வளவோ அவமானங்களையும் நிந்தைகளையும் சகிக்கவேண்டியதிருக்கும். நான் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பமாயிருக்கிறேன் என்று சொன்னால் உலகம் லேசாய் நம்பப்போகிறதா? அக்கிரமம் செய்ததுமல்லாமல் வேதாந்தம் வேறேயா என்று உலகம் பேசுமே. சிமியோன் அறிவித்த பட்டயம் அம்மாள் உள்ளத்தில் இப்போதே பாய ஆரம்பித்துவிட்டதென்கலாம். அப்படி யிருந்தும் அது உலகத்துக்கு இரட்சிப்பாயிற்று.

இந்தக் காரியத்தைக் குறித்து மரியம்மாள் யாரோடு பேச முடியும்? யார்தான் நம்புவார்கள்? ஆகையால் தாமதமின்றி தன் இனத்தாளான எலிசபெத்தைக் காணும்படி தீவிரமாய்ப் புறப்பட்டார்கள். தேவ பக்தியும் சிறந்த அனுபவமுமுள்ள எலிசபெத்திடம் தனக்கு அருளப்பட்ட பரம இரகசியங்களைத்

தாராளமாய்க் கலந்துபேசலாம். வாலிபப் பெண்ணாகிய தனக்கு முதிர்வயதுள்ள இனத்தாளிடமிருந்து அனுதாபமும் ஆறுதலும் கிடைக்கும். எலிசபெத்து வசிக்கும் ஊரோ சமீப மல்ல. கலிலேயா நாட்டைவிட்டு யூதேயா நாட்டுக்குப் போக வேண்டும். தெற்கு நோக்கி நீண்ட பிரயாணம் செய்து, ஒலிவமலை, எருசலேம் கடந்து, எபிரோன் மலைநாட்டை அடைந்து, யூதாவிலுள்ள ஓர் ஊரில் சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து எலிசபெத்தை வாழ்த்தினார்கள். இன்னும் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. அப்படியிருக்க எலிசபெத்து மரியம்மாளைக் கண்டதும், 'ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர் வதிக்கப்பட்டவள்' என்றும், 'என் ஆண்டவருடைய தாயார் என்னிடம் வந்தது எனக்கு எதினாலே கிடைத்தது' என்றும் உரத்த சத்தமாய்ச் சொன்னது அம்மாளைப் பிரமிக்கச் செய்தது. காபிரியேல் மரியம்மாளிடம் சொன்ன அதே வார்த்தைகளை எலிசபெத் சொல்லுகிறதானால் ஆச்சரியமா யிராதா? அதைக்கேட்டதும் அம்மா, 'என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது' என்னும் பாட்டைப் பாடினார்கள். மரியம்மாள் எலிசபெத்தோடு ஏறக்குறைய மூன்று மாதம் தங்கி பின்பு நாசரேத்துக்குத் திரும்பினார்கள். அந்த மூன்று மாதங்களையும் அவர்கள் இருவரும் நாள்தோறும் இந்தக் காரியங்களைப்பற்றிச் சம்பாஷிப்பதிலும், ஜெபிப்பதிலும், ஆண்டவரைத் துதிப்பதிலும் செலவிட்டிருப்பார்கள். அந்த வீடு ஒரு மோட்சம்போலிருந்திருக்கும்.

மரியம்மாள் நாசரேத் திரும்பினபின் வேறொரு சங்கடம் நேரிட்டது. அம்மாளுடைய நிலைமையை அறிந்த யோசேப்பு சகிக்கமுடியாத துயரத்தில் அமிழ்ந்தார். அவருடைய ஆத்து மாவிலும் பட்டயம் உருவிப்போனதுபோலிருந்தது. மரி யம்மாள்பேரில் அவ்வளவு மதிப்பும் பிரியமும் வைத்திருந்தார். என்ன செய்கிறது? இரகசியமாய் நீக்கிவிடுவதே மேல் என்று தனக்குள்ளே யோசனை பண்ணிக் கொண்டிருந்தார். கர்த்தரின் தூதன் சொப்பனத்தில் அவருக்குத்தோன்றி: 'உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ளப் பயப்படாதே; அவளிடம் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது, அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடு; அவர் தமது ஜனங்களின் பாவங்களை

நீக்கி அவர்களை இரட்சிப்பார்' என்றான். அப்படியே யோசேப்பு தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டார்.

இதன்பின் குடிமதிப்பு எழுதும்படி யோசேப்பு பெத்லகேமுக்கு போனார். மரியம்மாளுடைய ஸ்திதியைக் கவனிக்கும்போது அவர்களை நாசரேத்தில் தனிமையாக விட்டுப்போவது ஞானமல்ல. அம்மாளும் யோசேப்போடுகூட நீண்ட பயணம் போனார்கள். பெத்லகேமில் இருக்கையில் வேத வாக்கியத்தின்படி இயேசு பாலகன் பிறந்தார். தேவ அறிவிப்பின்படி மேய்ப்பர்கள் வந்து கர்த்தராகிய கிறிஸ்து என்னும் ரட்சகராகிய பிள்ளையைத் தரிசித்துப்போனார்கள். எட்டாம் நாள் அவருக்கு விருத்தசேதனம் செய்து இயேசு என்னும் பேரிட்டார்கள். நாற்பதாம் நாள் சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறினபோது குழந்தையை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள். சிமியோன் என்பவர் தேவாலயத்துக்கு வந்து, திருக்குழந்தையைக் கைகளில் ஏந்தி தேவனை ஸ்தோத்திரித்துப் பாடினார். அன்னாள் என்னும் விருத்தாப்பிய விதவையும் வந்து கர்த்தரைப் புகழ்ந்து அவரைக் குறித்து விசுவாசிகளனைவருக்கும் அறிவித்தாள். கீழ்த்தேசத்து சாஸ்திரிகள் வந்து யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கும் பிள்ளைக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்துகொண்டு சுயதேசம் திரும்பினார்கள். ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தீர்மானித்தான். ஏரோதின் கைக்குத் தப்பும்படி மரியம்மாளும் யோசேப்பும் பிள்ளையை எடுத்துக்கொண்டு எகிப்துக்கு ஓடினார்கள். ஏரோது மரித்தபின்பு எகிப்தைவிட்டுப் புறப்பட்டு நாசரேத்தூருக்கு வந்து அங்கே வாசம்பண்ணினார்கள். அவருக்கு 12 வயதானபோது அவரோடுகூட எருசலேம் பண்டிகைக்குப் போய்த் திரும்பினார்கள். இதற்கு ஆறு வருடம் சென்று யோசேப்பு மரித்தார். நாசரேத்தின் வாழ்க்கையைப்பற்றி நமக்கு விவரம் சொல்லப்படவில்லை. அது மறைவான காலம். அன்புள்ள மகனாகிய இயேசு தச்சுவேலை செய்து தாயாரைப் பராமரித்து வந்தார். இக்காலத்தில் அற்புதங்கள் செய்தார் என்னும் கட்டுக்கதைகளை நம்பக்கூடாது. சாதாரண மனுஷனாகவே தோன்றினார். ஆனால் பாவமற்ற புருஷனாக வளர்ந்தார். இயேசுவின் பிறப்பைப்பற்றிய வரலாறுகளை லூக்கா விவரமாக எழுதியிருக்கிறார். அவருக்கு மரியம்மாளிடமிருந்து விவரங்கள் கிடைத்திருக்க வேண்டும்.

# தாயைவிட்டு மகன் பிரிதல்

நாசரேத்தின் குடும்ப வாழ்க்கை தாய்க்கும் மகனுக்கும் சந்தோஷமும் மனோரம்மியமுமாயிருந்தது. எளிய வாழ்க்கை யானாலும் பரமபிதாவின் பூரண கிருபையால் ஒன்றும் அவர் களுக்குக் குறைவாய்த் தோன்றவில்லை. ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் சிறந்து வளர்ந்த திருக்குமாரன் தாயாருக்கு அருஞ்செல்வமும் ஆனந்த மகிழ்ச்சியுமாயிருந்தார். தாயின் சொற்படியே சகல காரி யங்களையும் செய்து அம்மாளை ஆதரித்துவந்தார். இப்படி யிருக்க அவருக்கு முப்பது வயதானபோது தேவராஜ்யத்தின் ஊழியத்தை நிறைவேற்றும்படிக்குத் தமது ஊரையும், வீட்டையும், தாயாரையும் விட்டுப் பிரிந்தார். அதுமுதல் தாய்க்கும் மகனுக்குமுள்ள சம்பந்தத்தில் பெரிய மாறுதலைக் காண்கிறோம்.

கடவுளைத் தேடி அவரை வழிபடும் ஆவலால் ஞானிகள், ரிஷிகள் தங்களுக்கு அருமையான மனைவி மக்களை வெறுத்து ஏகாந்திகளாக வனசஞ்சாரத்தில் பிரவேசித்திருக்கிறார்கள். மனைவி மக்களை திரும்பிப்பார்ப்பது தாங்கள் ஈடுபட்ட கருமத்துக்கு இடையூறாயிருக்குமென்றஞ்சி அவர்கள் எவ்வளவு அழுது கெஞ்சினாலும் ஏறிட்டுப் பார்ப்பதில்லை. இது வெறுப் போடுகூடிய பிரிவு. நமது இரட்சகரோ தாயை வெறுத்துப் பிரிந்தவரல்ல. தாயின்மீதுள்ள அன்பு சற்றும் குறையவில்லை. ஆனால் பிதாவின் சித்தத்துக்குப் பூரணமாய்த் தம்மைக் கையளித்து,தேவராஜ்யத்தின் ஊழியத்தை நிறைவேற்றும்படி ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுப் புறப்பட்டபின், தமது தாயாரோ, இனத்தாரோ, சிநேகிதரோ, சீடர்களோ ஒருவராகிலும் தமது காரியத்தில் பிரவேசிப்பதை அனுமதிக்க மாட்டார். பிதாவின் சித்தமேயன்றி இனி யாரிடத்திலும் ஆலோசனை கேட்டு நடக்கப்போகிறவரல்ல. அந்த இரகசியம் தாயாருக்குத் தெரியாது.

தனக்கு மிகுந்த அன்பும் ஆதரவுமாயிருந்த மகன் வரவர தன்னை விட்டுப் பிரிந்துபோவதைக் கண்டார்கள். தனக்கு எட்டாமல் விலகியே போகிறாரே என்று நினைத்தார்கள். அவருடைய பன்னிரண்டு வயதில் எருசலேமில் காணாமற் போன மகனைத் தேடி, அவரை ஆலயத்திலே கண்டு: மகனே,

ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? விசாரத்தோடு உன்னைத் தேடினேமே என்று கேட்க, மகன் தாயைப் பார்த்து: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவின் காரியத்தில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா என்ருர். அவர் சொன்ன கருத்தை அம்மாள் அறிந்துகொள்ளவில்லை. ஆயினும் எப்போதும்போல இவ்வார்த்தைகளை தன் மனதிலே வைத்துக் கொண்டார்கள்.

கானூவூர்க் கலியாணத்துக்கு அவர் போயிருந்தார். திராட்ச ரசம் குறைந்துபோனபோது தாயார் மகனிடம் வந்து: அவர் களுக்குத் திராட்சரசம் இல்லை என்ருர்கள். அதற்கு அவர்: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன? என் வேளை இன்னும் வரவில்லை என்ருர். அவர் பன்னிரண்டு வயதில் எருசலேம் ஆலயத்தில் சொன்ன வார்த்தைகளைவிட இந்த வார்த்தைகள் அம்மாளை அதிகமாய்த் திகைக்கச்செய்தது. இதையும் மனதில் வைத்துக்கொண்டு, வேலைக்காரரைப் பார்த்து: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிருரோ அதன்படி செய்யுங்கள் என்ருர்கள்.

அவர் கப்பர்நகூமிலிருந்தபோது ஜனங்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருந்தார். அதிகாரிகளின் பகை முற்றி அவர்கள் அருமை மகனைக் கொலைசெய்ய ஆலோசிக்கிருர்கள் என்ற செய்தி தாயாருக்கு எட்டினது. அவருக்காகக் கவலைப்பட்டு, அவர் மதிமயங்கியிருப்பதாக நினைத்து, அவரைப் பிடித்து ஊருக்குக் கொண்டுபோகும்படி தாயாரும் சகோதரரும் அங்கே வந்து வெளியே நின்று அவருக்குச் செய்தி அனுப்பினுர் கள். ஜனங்கள் அவரைப் பார்த்து: உமது தாயாரும் சகோதரரும் உம்மைத் தேடுகிருர்கள் என்ருர்கள். அதற்கு அவர்: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? தேவ னுடைய சித்தத்தின்படி செய்கிறவர்களே எனக்குத் தாயும் சகோதரருமா யிருக்கிருர்கள் என்ருர். என் தாயார் யார் என்ற சொல் அம்மாளுக்கு எப்படியிருந்திருக்கும்? என்ன! என் அருமை மகன் குணம் இவ்வளவு கடினமாக மாறி விட்டதோ? வரவர என்னைக் கவனியாமல் பிரிந்துபோகிருரே. அவரையே என் பொக்கிஷமாக நான் எண்ணியிருக்க என்னை இவ்வாறு உதறித்தள்ளினுல் நான் எங்கே போவேன்? இது என்ன இரகசியமோ தெய்வமே என்று தாயார் இதையும் மனதில் வைத்துக்கொண்டார்கள்.

வேறொரு சமயம் அவர் பிரசங்கத்தைக்கேட்ட ஒரு ஸ்திரீ பரவசமடைந்து: 'உம்மைச் சுமந்த கர்ப்பம் பாக்கியமுள்ளது' என்று சத்தமிட்டுச் சொன்னாள். அதற்கு ஆண்டவர்: அப்படியானாலும் தேவனுடைய வார்த்தையைக்கேட்டு அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிகப் பாக்கியவான்கள் என்றார்.

நமதாண்டவரிடத்தில் பட்சபாதம் இல்லை. சர்க்கார் வேலை, மிஷன் வேலைகளில் உயர்ந்த பதவியிலிருப்பவர்கள் அநேகமாய்த் தம் இனத்தவர்களையே உத்தியோகங்களில் ஏற்படுத்தும் சுபாவமுள்ளவர்களாயிருக்கிறார்கள். தமது தாயாருக்கும் சகோதரருக்கும் விசேஷித்த தயவு பாராட்டவேண்டும் என்கிற எண்ணம் கிஞ்சித்தேனும் அவரிடத்தில் கிடையாது. இரட்சிப்பின் பிரமாணம் எல்லாருக்கும் ஒன்றுதான். மற்றவர்கள் எவ்விதமாய் ரட்சிக்கப்பட்டு மகிமையடையவேண்டுமோ அதே பிரமாணந்தான் தாயாருக்கும் சகோதரருக்கும். ஒரு சமயம் இனத்தாளான சலோமே என்பவள் அவரிடம் வந்து அவருடைய இராஜ்யத்தில் தன் இரண்டு மக்களும் அவருக்கு வலது, இடதுபக்கம் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கு அருளுவது என் காரியமல்லவென்றார். ஆவிக்குரிய தகுதியே மேலான ஆசீர்வாதங்களைக் கொண்டுவருமே தவிர மாம்சத்தின்படி இயேசுவுக்கு இனத்தாராயிருப்பதினிமித்தம் அவைகள் கிடைக்காது. இனத்தார் என்பதற்காக விசேஷித்த தயவு பாராட்டுவாரானால் அவரை எப்படி நம்பமுடியும்? அது லௌகீகமே தவிர தெய்வீகமாகாது. இதிலேதான் கிறிஸ்துவின் பட்சபாதமற்ற தெய்வீகம் பிரகாசிக்கிறது. அவர் தாயாரிடம் இவ்வாறு பேசினதும் நடந்துகொண்டதும் அம்மாள்மீதுள்ள வெறுப்பினால் அல்ல. மரியம்மாளைப்போல் அன்பான தாயுமில்லை, இயேசுவைப்போல் அன்பான மகனுமில்லை. என்றாலும் பிள்ளையின் காரியம் தாயாருக்கு விளங்கியும் விளங்காமலுமிருக்கிறது. அம்மாள் எவ்வளவு சொந்தம் பாராட்டித் தன் கைகளை நீட்டி அவரை அணைத்துக்கொள்ளப் பார்த்தாலும் மகன் கைகடந்தே போகிறார். என்ன செய்கிறது? இவர் யாரோ, எப்படிப்பட்ட மகனோவென்று அம்மாள் திகைக்க

வேண்டியதாயிற்று. பரிசுத்த ஆவியைப்பெற்று கிறிஸ்துவைப் பூரணமாய் அறியுங்காலத்தில், சகலமும் அம்மாளுக்கு வெளியாகும்.

## சிலுவையினடியில் தாயாரும் சீடனும்

கலிலேயாவில் ஆண்டவருக்குப் பின்சென்று அவருக்குப் பணிவிடை செய்துவந்த ஸ்திரீகள், கல்வாரி மலேக்கு வந்து அவர் சிலுவையில் தொங்குவதை தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். புருஷர் அவருக்குத் தீங்கு செய்தார்களே தவிர, ஸ்திரீகளில் ஒருவரும் அவருக்குத் தீங்கு நினைக்கவுமில்லை, செய்யவுமில்லை. அவரோடு சம்பந்தப்பட்ட ஸ்திரீகள் யாவரும் அவரிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டார்களென்பதைச் சுவிசேடத்தில் காண்கிறோம். ஆண்டவரும் அவர்களை மதித்து அவர்களிடத்தில் அருமையாய் நடந்துகொண்டார். ஆபத்துக் காலங்களில் ஸ்திரீகளிடத்தில் விளங்கும் தைரியம் புருஷரிடம் இராது. சீடர்களும் அவரிடம் நன்மை பெற்றவர்கள் யாவரும் ஓடி மறைந்தார்கள். இந்த ஸ்திரீகளோ அதிகாரிகளுக்கு அஞ்சாமல் அங்கே வந்து நிற்கிறார்கள்.

மகன் தன்னைவிட்டு விலகிப்போனபோதிலும், ஊழிய நாட்களில் அவருடைய கீர்த்தி நாளுக்குநாள் எங்கும் பிரஸ்தாபமாவதைக் கேட்ட தாயார், தேவதூதன் அறிவித்த பிரகாரம் மகன் மகிமைப்படும் காலம் வந்துவிட்டதென நம்பினார்கள். ஆனால், அதிகாரிகள் ஏகோபித்து அவரைப் பகைத்து சிலுவையில் அறைந்து கொலை செய்யத் தீர்மானித்துவிட்டார்கள் என்னும் செய்தி அம்மாளுக்குத் துயரத்தைக் கொடுத்தது. கானாவூர்க் கலியாணத்துக்குப்பின்பு அம்மாளை சிலுவையினடியில் காணும்வரை தாயும் மகனும் சந்தித்துப் பேசினதாகச் சொல்லப்படவில்லை. தாயார் மகனுடைய காரியத்தில் பிரவேசிக்காமல் ஞானமாய் விலகிக்கொண்டதாகத் தெரிகிறது.

தமக்கு நேரிடப்போகிற சகல பாடுகளையும் ஆண்டவர் திட்டமாய் அறிந்திருந்தும் ஓடி ஒளித்துக்கொள்ளாமல் ஒரு சேனைவீரனைப்போல் எருசலேமை நோக்கி நடக்கிறார். திரளான ஜனங்கள் பண்டிகையை ஆசரிக்கும்படி எருசலேமுக்குப் போகிறார்கள். சீடர்கள் பயபக்தியோடு அவரைப் பின்செல்லுகிறார்கள். சகலத்தையும் தன் மனதில் வைத்துச் சிந்தனை

செய்யும் தாயார், மகனுக்கு ஏதோ ஆபத்துக் கிட்டியிருக்கிற தென்பதை உணர்ந்து நாசரேத்தை விட்டு எருசலேமுக்குப் புறப்பட்டார்கள். மகன் நகரத்துக்குள் பவனி வந்ததும் ஜனங்கள் ஆர்ப்பரித்ததும் தாயாருக்கு ஒருபக்கம் சந்தோஷமா யிருந்தாலும், அந்த வாரத்துச் சங்கதிகளைக் கவனித்தபோது அம்மாள் துயரமுற்ருர்கள். தோட்டத்தில் சத்துருக்கள் அவரைப் பிடித்து கைகளைக் கட்டினுர்கள். அன்னு விசாரித்து அவமானப்படுத்தினுன். காய்பா விசாரித்துக் குற்றவாளி யாக்கினுன். சனகரீம் சங்கம் விசாரித்து ஆக்கினைத் தீர்ப்புக் கூறினது. ஏரோது விசாரித்து பரியாசம்பண்ணினுன். பிலாத்து விசாரித்து சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தான். இவை யாவற்றையும் அறிந்த தாயாரின் மனம் என்னமாய்ப் பதைத் திருக்கும்! அருமை மகன் பாரச்சிலுவை சுமந்து தள்ளாடித் தள்ளாடி கொல்கொதா நோக்கி நடக்கிருர். அங்கே அவரைச் சிலுவையில் அறைகிருர்கள். அடிக்கும் சுத்தியலின் சத்தம் அம்மாள் காதில் விழுகிறது. ஐயோ, மாசற்ற என் கண்மணி யைச் சிலுவையிலறைந்து கொல்லுகிருர்களே என்று துடிதுடித் திருக்கமாட்டார்களா?

மற்ற ஸ்திரீகளோடே நின்ற தாயார் அவர்களைவிட்டு சிலுவையண்டை வந்து நிற்கிருர்கள். தான் பெற்ற அன்பு சிலுவையில் தொங்கும்போது அவர்கள் எப்படித் தூர நிற்க முடியும்? அன்பு பயமறியாது. அதிகாரிகளின் மூர்க்கம் அம்மாளின் அன்பை மேற்கொள்ளவில்லை. அதுபோலவே யோவானும் சிலுவையண்டைவந்து நிற்கிருர். இவர் ஆண்டவரின் மார்பில் சாய்ந்துகொண்டிருந்தவர். கிறிஸ்துவின் அன்புக்குரிய சீடன். இவரும் யாருக்கும் அஞ்சவில்லை. 'பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்' என்று நிருபத்தில் எழுதின வரும் இவரே. இப்படி தாயாரும் அன்பின் சீடனும் சிலுவை யண்டை வந்து நின்றது தேவநடத்துதலென்றே சொல்ல வேண்டும்.

மகன் சிலுவையில் வேதனையோடு தொங்கும் சமயத்தில், அதிகாரிகளும் மற்றவர்களும் அவரை நிந்தித்து, தூஷித்து, பரியாசமாய்ப் பேசும் வார்த்தைகளைத் தாயார் கேட்கிருர்கள். என் மாசற்ற மைந்தனே, நன்மைச் சொரூபியை, அன்பின் பிரவாகத்தை, அனுதாபக் கடலை, அரிய செயலோனே,

மனதுருகும் வள்ளலே, என் அற்புதப் புதல்வனே இவர்கள் அநியாயமாகப் பிடித்து, பாதகனேப்போல தீண்டாச் சிலுவை யிலே அறைந்து வேடிக்கை பார்க்கிருர்களே. ஐயோ, என் கழுத்தைத் தழுவிப் பிடித்த அருமைக் கைகளும், நான் ஆவ லோடு எடுத்து முத்தமிட்ட இரு பாதங்களும் ஆணிகளில் தொங்குகிறதே, தேகம் துடிதுடிக்கிறதே. அவர் நாவு வறண்டு போகிறதே. ஏழை அடியாள் நான் பெற்று வளர்த்த என் ஒப்பற்ற மகனுக்கு இச்சமயத்தில் யாதொரு உதவியும் செய்ய முடியாதவளாய்த் தவிக்கிறேனே. இவருக்கு முந்தியே நான் மரித்திருக்கக்கூடாதா? இந்தப் பரிதாபத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கவா நான் இங்கே வந்தேன் என்று மனதில் எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி, இரட்சகர் கெத்செமனே யில் அடைந்த துயரத்தைப்போல் மகனுக்காகத் துயரமடைந் தார்கள் வியாகுலமாதா. என்ருலும் இவ்வளவையும் சகித்துக் கொண்டு அம்மாள் சிலுவையண்டை நிற்பதைக் காண்கிருேம். மயங்கிக் கீழே விழவில்லே. மாரடித்துப் புலம்பவில்லே. தலேவிரிகோலமாய்த் தரையிலே விழுந்து புரளவில்லே. கிருபை பெற்ற தாயாக, எக்காலமுள்ள தனது அமர்ந்த சுபாவத்தின் படியே அங்கே நின்று மகனேப் பார்த்தவண்ணமாயிருக் கிருர்கள்.

## தாயாரின் மனக்குழப்பம்

தன் மகன் சம்பந்தமாய் தேவதூதன் சொன்ன வாக்குகளே யும் நடந்த காரியங்களேயும் நினேக்கிருர்கள். 'கிருபை பெற்றவளே, வாழ்க! கர்த்தர் உன்னுடனே இருக்கிருர். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். நீ ஒரு குமாரனேப் பெறுவாய், அவர் உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார். அவர் பெரியவர். அவர் தேவகுமாரன். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளு வார்; அவருடைய இராஜ்யத்துக்கு முடிவிராது' என்று தேவ தூதன் சொல்லவில்லேயா? 'கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் பிறந்திருக்கிருர்' என்று தேவதூதன் மேய்ப்பர் களுக்கு அறிவிக்க, அவர்களும் வந்து பிள்ளேயைக் கண்டு துதித்துக்கொண்டு போகவில்லேயா? இவர் புறஜாதிகளுக்கு ஒளியும் இஸ்ரவேலுக்கு மகிமையுமாயிருப்பாரென்று ஆவியின்

ஏவுதலால் சிமியோன் சொல்லவில்லையா? கீழ்த்திசை சாஸ்திரிகள் வந்து, இவர் யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறார் என்று சொல்லி, விலையுயர்ந்த காணிக்கைகளைப் படைத்து, சாஷ்டாங்கமாய் விழுந்து என் குழந்தையைப் பணிந்து கொள்ளவில்லையா? இவை யாவும் பொய்யோ மெய்யோ? தேவதூதன் சொல்லை நம்பு: இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள் என்று நானும் பாடினேன். இதைக்கண்ட எல்லாரும் இதுமுதல் என்னை நிர்ப்பாக்கிய மனுஷி என்றல்லவா சொல்லுவார்கள். ஐயோ, மகனே! நாம் கண்ட பலன் என்ன? என் உள்ளம் பதைக்குதே. பிறக்க இடமற்று மாட்டுத்தொழுவத்தில் பிறந்த மகனே! உன் உயிரைக் காப்பாற்ற உன்னை என் வயிற்றோடணைத்துக் கொண்டு எகிப்துக்கு எடுத்துச் சென்றேனே. வீட்டிலிருந்த காலமெல்லாம் என் கிரீடம்போலிருந்தீரே. ஊழியத்தில் பிரவேசித்தது முதல் என்னையும் மறந்து உம்மையும் மறந்து எங்கும் எல்லாருக்கும் எப்பொழுதும் நன்மை செய்துகொண்டு வந்தீரே. உம்மைப்பற்றிய வாக்குகள் யாவும் பலிக்கும் சமயம் வந்துவிட்டதென்றல்லவோ மகிழ்ந்திருந்தேன். எல்லாம் நேர்விரோதமாய் முடிந்ததே. மனுமக்கள்மேல் பரிதாபம் நிறைந்த மகனே, கொடிய பாதகனைப்போலவா நீர் சாக வேண்டும்? இதுதானு தேவ வாக்குகள் நிறைவேறும் விதம்? யாக்கோபின் வம்சத்தை என்றென்றைக்கும் அரசாளுவது இப்படித்தானு? இவர் பெரியவர், உன்னத குமாரன், தேவ குமாரன் என்பதற்கு அர்த்தம் இதுதானு? அருமை மகனே! சகலமும் பாழாயிற்றே. என் நம்பிக்கை அடியோடு கவிழ்ந்ததே. நடுப்பகலில் பிரகாசித்த என் சூரியன், திடீரென அணைந்துவிட்டதே என்று பலவாருய் எண்ணி மனங்கலங்கி நிற்கிருர்கள்.

### மகன் பேசுதல்

சிலுவையினடியில் நிற்கும் தமது தாயாரை இயேசு வானவர் பார்க்கிருர். அம்மாள் மனதில் எழுந்த சகல எண்ணங்களையும் குழப்பங்களையும் கண்டார். தாயாருக்காகப் பரிதபிக்கிருர். ஆனுல், அம்மா நீங்கள் இவ்வளவு தூரம் கலங்க அவசியமில்லை, ஞாயிறு அதிகாலையில் நான் உயிரோடே வந்துவிடுவேன் என்று சொல்லக்கூடாதா? அவர் சொல்ல

வில்லை. தமது சீடர்களுக்கு தமது உயிர்த்தெழுதலைப்பற்றி அவர் திரும்பத் திரும்பச் சொல்லியிருந்தும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. மேலும் அவர் சிலுவையிலறையப்பட்ட வுடனே ஒரு பெரிய இருள் அவர்களை மூடிக்கொண்டதுபோ லிருந்தது. கிறிஸ்து உயிரோடே மறுபடியும் வருவார் என்கிற நம்பிக்கை அழிந்தே போய்விட்டது. சீடர்களில் ஒருவராவது: நாம் ஏன் கலங்கவேண்டும், அவர் மறுபடியும் உயிரோடே வருவதாகச் சொல்லியிருக்கிறாரே என்று மற்றவர்களைத் தைரியப்படுத்த முன் வந்ததாகவுமில்லை. கூடவேயிருந்த சீடர்கள் கதி இப்படியானால், அநேகமாய் மகனைவிட்டுப் பிரிந் திருந்த அம்மாள் நிலைமை எப்படியிருக்கும்? மேலும் வியாழன் இரவில் சீடர்களிடம் தாம் பிதாவிடம் போவது, வாசஸ்தலம் ஆயத்தம் செய்வது, ஆவியை அனுப்புவது, தாமே அவர்களுக் குள் வந்து வாசம்பண்ணுவது முதலான அநேக அருமையான காரியங்களைச் சொன்னார். இதிலொன்றும் தாயாருக்குத் தெரியாது. அன்று இரவு ஆண்டவர் பிடிபட்டவுடன் சீடர்கள் ஓடி மறைந்தார்கள். மறுநாள் காலையில் அவரைச் சிலுவையிலறைந்தார்கள். சீடர்கள் இரவில் கேட்ட இந்த நல்ல போதனைகளை அம்மாளுக்குச் சொல்ல சந்தர்ப்பமில்லை. தாயார் அதைக் கேட்டிருந்தால் இச்சமயத்தில் கொஞ்ச மாவது அவர்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் கிடைத் திருக்கும்.

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டி யாகச் சிலுவையில் தொங்குகிறார். முதல் வார்த்தையில் தம்மைச் சிலுவையிலறைந்த சத்துருக்களுக்கு மன்னிக்கும்படி பிதாவை வேண்டிக்கொண்டார். இரண்டாம் வார்த்தையில் தன் பாவத்தை உணர்ந்து, மனந்திரும்பி, தம்மை விசுவாசித்த கள்ளனுக்குப் பரதீசை வாக்களித்தார். மூன்றுவது அவர் பேசினால் என்ன சொல்லுவார், யாருக்குச் சொல்லுவாரென்று ஒருவரும் அறியமாட்டார்கள். மூன்றும் வார்த்தையில் ஆண்டவர் சிலுவையினடியில் நிற்கும் தமது தாயிடம் பேசு கிறார். அம்மாளைப் பார்த்தவுடனே முப்பது வருடங்களாக அன்புள்ள தாயாரோடு சஞ்சரித்த நாசரேத்தின் குடும்ப வாழ்க்கையை நினைக்கிறார். யோசேப்பு ஏற்கெனவே மரித்துப் போக, விதவையான தாயார் மகனுடைய ஆதரவில் இருந்

தார்கள். தாம் சென்றுபோன பின்பு தாயாரை ஆதரிப்பதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும். தலைசாய்க்க இடமற்ற ஏழையாகிய அவரிடத்தில் தாயாருக்கு வைத்துப்போக பணமோ வேறு ஆஸ்தியோ கிடையாது. அவருடைய ஆஸ்தியெல்லாம் சேர்ந்து அவர் தேகத்தில் இருந்த வஸ்திரங்களே. அவைகளையும் போர்ச்சேவகர் எடுத்துக்கொண்டார்கள். ஆகையால், தாயார் ஆறுதலோடும் சமாதானத்தோடும் வாழுவதற்கு ஏற்ற ஒழுங்கு செய்யவேண்டும்.

அந்த ஒழுங்கு 'அதோ, உன் மகன், அதோ உன் தாய்' என்னும் வார்த்தைகளில் அடங்கியிருக்கிறது. அவர் சொன்ன மூன்றும் வார்த்தை அவ்வளவுதான். எவ்வளவு சுருக்கம்! இதன் கருத்தை யார் அறியக்கூடும்? சர்க்கார் தங்களுக்குள் வழங்குகிற இரகசிய பதங்கள்போல் அல்லவாயிருக்கிறது? சிலுவையின் வேதனை அதிகரித்துக்கொண்டே போனபடியால் அவரால் அதிகம் பேசமுடியாது. தாயும் சீடனும் இந்தச் சுருக்க வார்த்தைகளின் கருத்தை அறிந்துகொண்டார்கள். அன்புக்குச் சகலமும் விளங்கும். அம்மா கலங்கவேண்டாம். உன் துயரம் எனக்குத் தெரியும். உன்னை அனாதையாக விட்டுவிடமாட்டேன். உன் பராமரிப்புக்கு வேண்டிய ஏற்பாடு செய்வேன். என் அன்புக்குரிய யோவானிடம் உன்னை ஒப்புவிக்கிறேன். அவன் என்னைப்போல் உன்னைப் பார்த்துக்கொள்வான். உனக்கு ஒரு குறைவுமிராது என்னும் கருத்தோடே 'அதோ உன் மகன்' என்றார். பின்பு சீடனைப் பார்த்து: அப்பா, இதோ நான் என்னை அனுப்பினவரிடம் போகிறேன். என் தாயின் பரிதாப நிலைமையை நீ காண்கிறாய். அம்மாளை யாரிடம் ஒப்புவிப்பேன்? உன்னைப்போல் என்மீது அன்புள்ளவர்கள் யார்? நீயே என் தாயைப் பராமரிப்பதற்கு ஏற்ற சீடன். இதுவரை அவர்கள் என் தாயாயிருந்தார்கள். இனிமேல் உன் தாயாக ஏற்றுக்கொண்டு அவர்கள் சௌகரியமாயிருப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய் என்னும் கருத்தோடு 'அதோ உன் தாய்' என்றார். இந்த வார்த்தைகளை ஆண்டவர் சொன்னபோது தமது கையை நீட்டி, தாய்க்கும் சீடனுக்கும் குறிப்பிட்டுக் காட்ட முடியாதாகையால் தமது தலையை அசைத்துக் கண்களால் ஜாடை காட்டியிருப்பார். தாய்க்கு யோவானையும், யோவா

னுக்குத் தாயையும் தமது தலே அசைப்பினுல் காண்பித்தார். தாயாரை அங்கிருந்து உடனே அழைத்துப்போகும்படி யோவானிடம் அவர் பேசவில்லே. அதோ உன் தாய் என்று ஆண்டவர் சொன்னவுடனே, யோவான் அம்மாளே எருசலேமி லிருந்த தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றதைப் பார்க்கும் போது, உடனே அழைத்துப்போகும்படி ஆண்டவர் தமது தலேயை அசைத்துச் சைகை காட்டினுர் என்பது நிச்சயம். தாம் இனி அனுபவிக்கப்போகிற கொடிய அவஸ்தையைத் தாயார் பார்க்காதபடிக்கு உடனே போகும்படி ஏவினுர். யோவான் அம்மாளேத் தன் வீட்டில் விட்டபின் சிலுவை யண்டைக்குத் திரும்பி வந்தார். இதற்குள்ளாக நாலாம், ஐந்தாம் வசனங்கள் சொல்லி முடிந்தன. யோவான் அங்கில் லாததிஞலே அந்த இரண்டு வசனங்களேயும், நடந்த பயங்கர சம்பவங்களேயும் தமது சுவிசேடத்தில் எழுதாமல் விட்டிருக்க லாம்.

ஆண்டவர் செய்த ஒழுங்கு அருமையானது. வறுமையுள்ள குடும்பத்துக்கு அனுப்பினுல் அவர்களுக்குப் பாரமாயிருக் கிறேமே என்கிற எண்ணம் அம்மாள் மனதை நாள்தோறும் வாதிக்கும். சகல வசதிகளுள்ள அவபக்தர்களிடம் அனுப் பினுல் அங்கே வசிப்பது அம்மாளுக்குச் சித்திரவதைபோலிருக் கும். இயேசுவின் சகோதரர் என்னப்பட்டவர்கள் உண்டே, அவர்களிடம் ஒப்புவிக்கக்கூடாதாவென்று கேட்டால், அவர்கள் இன்னும் அவிசுவாசிகளாகவே யிருக்கிருர்கள். முந்தினவராகிய பேதுருவிடம் அனுப்பக்கூடாதா? பேதுரு நல்லவர்தான். ஆனுலும் அவருடைய பதஷ்டபுத்திக்கும் அம்மாளின் அமர்ந்த சுபாவத்துக்கும் பொருந்தாது. ஆகை யால் தம்மீது மிகுந்த அன்புள்ள சீடனிடம் ஒப்புவித்தார். இது ஞானமுள்ள ஒழுங்கு. இருவருக்கும் ஏற்ற ஒழுங்கு. சீடர்களுக்குள் யோவான் செல்வமுள்ளவராயிருந்தார். அவருக்கு எருசலேம் பட்டணத்தில் வீடும் இருந்தது. தாயார் ஆறுதலோடும் அமைதலோடும் தன் வாழ்நாளேக் கழிப்பதற்கு அதுவே தகுந்த இடம். மேலும் இந்த ஏற்பாடு இவருடைய ஆவிக்குரிய ஜீவியத்துக்கும் அனுகூலமாயிருந்தது. இதில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் அதுதான். யோவானிட மிருந்து அம்மாள் அறியவேண்டிய காரியங்கள் இருந்தன.

அம்மாளிடமிருந்து யோவான் அறியவேண்டிய இரகசியங்கள் இருந்தன. ஊழிய நாட்களில் தாயார் மகனேடுகூடவே யிருந்தவர்கள் அல்ல. அக்காலத்தில் ஆண்டவர் பேசின, நடப்பித்த காரியங்களை கூடவேயிருந்து கவனித்தவர் யோவான். மேலும், வியாழன் இரவு மேல்வீட்டில் ஆண்டவர் தமது அடியாருக்குச் சொன்ன அருமையான போதனைகளை யோவான் மாத்திரம் எழுதி வைத்திருக்கிறார். அவைகளை 13ஆம் அதிகாரமுதல் 17 முடியக் காண்கிறோம். யோவான் அம்மாளுக்கு அவைகளை விவரித்துச் சொன்னபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. கவலையும் கண்ணீரும் பறந்துபோயின. அம்மாள் ஆவி மறுபடியும் தன் இரட்சக ராகிய தேவனில் களிகூர்ந்தது. இது ஒருபுறமிருக்க, தாயாரும் தன் மகனைப்பற்றிய இரகசியங்களை யோவானுக்குச் சொன்னார்கள். அவர் அற்புதப் பிறப்பு முதற்கொண்டு அவர் ஊழியத்தில் பிரவேசித்த நாள்வரை தன் மகனைப்பற்றி அறிந்த சகல காரியங்களையும் விவரமாய்ச் சொன்னார்கள். யோவானுக்குண்டான பரவசத்துக்கு எல்லையில்லை. இவர் தமது சுவிசேடத்தை முதல் மூன்று சுவிசேடங்களைப்போல் எழுதாமல் கிறிஸ்துவின் தெய்வீகத்தை முக்கியப்படுத்தி எழுதுவானேன் என்றால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இயேசுவைப்பற்றிய சகல இரகசியமும் மரியம்மாளிடமிருந்து அவருக்குக் கிடைத்தது. ஆகையால், இவர்: ஆதியில் வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை கடவுளோடிருந்தது, அந்த வார்த்தையாகிய கடவுளே மாம்சத்தில் வெளிப்பட்டா ரென்று தமது சுவிசேடத்தை ஆரம்பிக்கிறார். தன் இனத் தானும் தான் நெருங்கிப் பழகின மனுஷனுமாகிய இயேசுவை யோவான் கடவுளுக்குச் சமமாக்கி அவரை வணங்கவேண்டு மானால், ஒன்று அவர் முழுப் பைத்தியக்காரனாயிருக்க வேண்டும் அல்லது அவர் சொல்வது சத்தியமாகயிருக்க வேண்டும். இவ்வாறு இரட்சகரை இழந்த அன்பின் சீடனுக்கு ஆண்டவருடைய தாயார் தனக்குத் தாயாகக் கிடைத்தது அருஞ்செல்வம்போலிருந்தது. அருமை மகனை இழந்த தாய்க்கு அன்பின் சீடன் மகனாகக் கிடைத்தது தன் மகனையே கண்டடைந்ததுபோலிருந்தது. அம்மாள் சில சமயங்களில் யோவானைப் பார்த்து: நீ பேசுவது என் மகன் பேசுவதுபோ

லிருக்கிறதே, நீ செய்வது என் மகன் செய்வதுபோலிருக்கிறதே என்று சொல்லத்தக்கதாக யோவான் அம்மாளிடம் அவ்வளவு அருமையாக நடந்துகொண்டார்.

இரட்சகர் உயிர்த்தெழுந்தபின்பு தனித்துத் தமது தாயாருக்குத் தரிசனமளித்ததாகச் சொல்லப்படவில்லை. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுள்ள ஆண்டவராக, யார் யாருக்கு, எங்கெங்கே தரிசனமளிக்கவேண்டியதவசியமோ அங்கங்கே தம்மை வெளிப்படுத்தினர். அம்மாள் அன்பின் சீடனைவிட்டு விலகினவர்களல்ல. ஆண்டவர் உயிர்த்தெழுந்த செய்தி சீடர்களுக்குக் கிடைத்ததுபோல அம்மாளுக்கும் கிடைத்தது. இந்தச் சந்தோஷ செய்தியை யோவான் அம்மாளுக்கு அறிவிக்காதிருப்பதெப்படி? இந்நாட்களில் அம்மாள் சீடர்களோடிருந்ததாகத் தெரிகிறது. லூா. 24:33 இல் பதினொருவரும் அவர்களோடிருந்தவர்களும் கூடியிருக்கையில் இயேசு தாமே அவர்கள் நடுவில் நின்று அவர்களுக்குச் சமாதானம் கூறினர் என்று வாசிக்கிறோம். அவர்களோடிருந்தவர்களில் அம்மாளும் இருந்திருப்பார்கள். ஆண்டவர் பரலோகம் சென்றபின்பு ‘சீடர்கள் மேல்வீட்டில் கூடின போது, மற்ற ஸ்திரீகளும் இயேசுவின் தாயாகிய மரியாளும் அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்’ என்று வாசிக்கிறோம். பெந்தெகொஸ்தே நாளில் அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் கூடி வந்திருந்தபோது ஆவியின் நிறைவைப் பெற்றார்கள். அம்மாளுக்கும் ஆவியின் நிறைவு கிடைத்தது. தன் மகன் உயிரோடே வந்தார் என்கிற சந்தோஷம் ஒருபக்கமிருக்க, பரிசுத்தாவியின் உள்ளான வெளிப்படுத்தலால், சிலுவையில் கைவிடப்பட்டவராகத் தொங்கின மகனே சர்வத்துக்கும் மேலான ஆண்டவரென்று அறிந்துகொண்டார்கள். ஆ, எவ்வளவு சந்தோஷம்! காபிரியேல் தூதன் தன்னை வாழ்த்திப் புகழ்ந்து பேசினதும், மகனைப்பற்றிய உன்னதமான வாக்குகளும் பாழாயினவென்று நினைத்ததுபோக, சகலமும் மெய்யென்று கண்டு அகமகிழ்ந்தார்கள். இதோ இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள் என்று அம்மாள் பாடினதும் உண்மையாயிற்று. தான் பெற்று வளர்த்து சிலுவைக்கு

ஒப்புக்கொடுத்த மகன் மூலமாய் ஆயிரமாயிரமான பாவிகள் இரட்சிக்கப்படுவதைக் கண்டபோது அம்மாளுக்கு எப்படி யிருந்திருக்கும். மெய்யாகவே அவர்கள் பாக்கியவதிதான். இவ்வாறு மரியம்மாள் 12 வருடகாலம் யோவானேடு எருச லேமில் இருந்தார்களென்றும், அம்மாள் மரித்த பின்பே அப்போஸ்தலன் சுவிசேட ஊழியம் செய்வதற்காக எபேசுவுக் குப் புறப்பட்டுப்போனுரென்றும் சரித்திரம் கூறுகிறது.

## போதனை என்ன?

ஆவிக்குரிய ஆண்டவரே சரீரத்துக்கும் ஆண்டவராயிருக் கிருர். ஆவிக்குரிய காரியம் பூமிக்குரிய காரியம் என்று அவர் பிரிக்கவில்லை. தேவராஜ்யத்தின் வேலைக்காகத் தம்மை முழுவதும் ஒப்புவித்து, மனுமக்கள் இரட்சிப்புக்காக சிலுவை யில் போராடிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் தம்மைப் பெற்று வளர்த்த, தாயாரின் பராமரிப்புக்காகக் கவலைப்படு கிருர். மகாபெரிய காரியத்தில் ஈடுபட்டிருக்கிற நான், இந்த உலக காரியங்களில் தலையிடலாமாவென்று அவர் நினைக்க வில்லை. தன் தாயாருக்குத் தகுந்த ஏற்பாடு செய்தது அவருக்கு ஆறுதலாயிருந்தது. நமக்குள்ளே ஆவிக்குரிய காரி யங்களில் சிந்தையுள்ளவர்கள் உலக காரியங்களை வெறுப்பது வழக்கம். வேதம் வாசிப்பதும், ஜெபிப்பதும், பாடுவதும், பிரசங்கிப்பதுமே பக்திமார்க்கம் என்று நினைத்து சரீரத்துக் குரிய காரியங்களில் ஈடுபட்டவர்களை 'இவர்கள் உலகத்தார்' என்று குறைவாய்ப் பேசுகிருர்கள். உலகத்தில் பாடுபடா மலும், கல்வி கற்காமலும், உத்தியோகம் பார்க்காமலும், சம்பாதிக்காமலும், முயற்சி செய்யாமலும் போனுல் பிழைப்ப தெப்படி? எந்தெந்த நிலைமையில் தேவன் நம்மை வைத்திருக் கிருரோ அந்தந்த நிலைமையிலிருந்து நமது குடும்பங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும். ஆண்டவர் பார்த்து ஒருவரை தமது ஊழியத்திற்கென்று பிரிப்பாரானுல் அது காரியம் வேறே. அதுவரை நாம் இருக்கும் நிலைமையி லிருந்து தேவன் நமது கையில் ஒப்புவித்திருக்கிறவர்களுடைய சரீர ஆத்ம சேமங்களை விசாரிக்கவும் அவர்களை ஆற்றித் தேற்றவும் நாம் கடனுளிகளாயிருக்கிருேம். இந்தத் தொல்லை யெல்லாம் என்னத்துக்கு? அதைச் செய், இதைச் செய் என்று

தொந்தரவு கொடுக்கிறார்கள்; ஆவியின் கூட்டத்தாரோடு சேர்ந்துகொண்டால் எவ்வளவோ சந்தோஷமாயிருக்கலாமென்று நினைக்கிறோம். வாசிப்பதும், ஜெபிப்பதும், பாடுவதும் மனதுக்கு எழுப்புதல்தான். ஆனால் ஆண்டவர் நமக்குக் கொடுத்த கடமைகளை உதறித்தள்ளிவிட்டு சொகுசான வழியைத் தெரிந்துகொண்டால் அவர் நம்மை ஆசீர்வதிப்பதெப்படி? 'விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது, பேரன் பேத்திகளாவது இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து, பெற்றார் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக் கொள்ளக்கடவர்கள்; அது நன்மையும் தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது. ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால் அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்' (1 தீமோ. 5:4,8). தேவனிடத்தில் அன்பும் மனுஷரிடத்தில் அன்புமே உத்தம கிறிஸ்தவ ஜீவியம். மனுஷரை வெறுக்கிறவர்களிடத்தில் தேவ அன்பு இருப்பதில்லை. 'நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும் அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும் என் சரீரத்தைச் சுட்டெரிக்கக் கொடுத்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.'

# நான்காம் வார்த்தை

**'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?'** (மத். 27:46).

ஆண்டவர் சிலுவையில் சொன்ன ஏழு வார்த்தைகளை இரண்டாகப் பிரிக்கலாம். முதல் மூன்று வார்த்தைகளில், தம்மைச் சிலுவையிலறைந்தவர்களுக்கு மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டார், கள்ளனுக்குப் பரதீசை வாக்களித்தார், தாயாரின் பராமரிப்பை ஒழுங்குசெய்தார். முந்தி மற்றவர்களுடைய காரியங்களைக் கவனித்தபின், பிந்தின நாலு வசனங்களையும் தம்மைப்பற்றிச் சொன்னார். மரணப் படுக்கையிலிருப்பவன், முந்திப் பிறர் காரியங்களை ஒழுங்கு செய்த பிறகு தன் காரியங்களைக் கவனிப்பதுபோல ஆண்டவரும் செய்தார். முதல் மூன்று வார்த்தைகளையும் ஒன்றின் பின் ஒன்ருகச் சொன்னார். நாலாம் வார்த்தையோ அப்படியல்ல. தாயாரும், யோவானும் சிலுவையைவிட்டு நீங்கினவுடனே அவர் இந்த வார்த்தையைச் சொல்லவில்லை. அவர்கள் போய் மூன்று மணிநேரம் கழித்துத்தான் சொன்னார். அந்த மூன்று மணிநேரத்தில் என்ன நடந்தது?

## இருளுண்டான அதிசயம்

'ஆரும் மணிநேர முதல் ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று.' நமது கணக்குப்படி பன்னிரண்டு முதல் மூன்று மணிவரை. பன்னிரண்டு மணிக்குத் திடீரென இருள் வந்து பூமியை மூடிக்கொண்டது. அவ்விருள் எப்படி வந்ததென சாஸ்திரிகளால் சொல்லமுடியவில்லை. ஏனென்ருல், அது நடுப்பகலில் உண்டான இருள். அது சூரியகிரகணத்தால் உண்டான இருளுமல்ல. அமாவாசை காலத்தில்தான் சூரியகிரகணம் உண்டாகும். பூரணசந்திரன் பிரகாசித்த நாளில் கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டார். மத்தியானத்தில் உண்டான அந்த இருளுக்கு வானத்திலோ,

பூமியிலோ யாதொரு காரணமும் இருந்ததில்லை. இது எருச லேமில் மாத்திரம் உண்டான இருள் அல்ல. சீனருடைய நாளாகமத்தில் இவ்விருளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. எகிப்திலிருந்த வானசாஸ்திரி தியோனிசியஸ் என்பவன் இவ் விருளைக் குறித்து: ஒன்று தேவர்கள் இவ்வேளை பாடுபட வேண்டும் அல்லது உலகமே நிலைகுலைந்து அழியவேண்டும் என்று சொன்னனும்.

அதிசயமாய்த் தோன்றின இவ்விருளுக்குக் காரணமென்ன? சிருஷ்டிகர் படும் அவஸ்தையை சிருஷ்டி சகிக்கமுடியவில்லை. வல்லமையாய்ப் பிரகாசித்த சூரியன் சிலுவையின் துயரத் தைப் பார்க்கக்கூடாமல் தன் முகத்தை மூடிக்கொண்டது. பூமி இருளடைந்தது, மனுமக்கள் படும்பாடுகளைப் பார்த்து சிருஷ்டி துக்கிப்பதில்லை. இரத்தச்சாட்சிகள் தகனிக்கப்படு கிறார்கள். யுத்தக்களத்தில் ஆயிரமாயிரமான வீரர் மடி கிறார்கள். வானசேனைகளாகிய சூரியசந்திர நட்சத்திரங்கள் வழக்கம்போலவே தங்கள் பாதைகளில் மகிழ்ச்சியாய் ஓடு கின்றன. நரர் படும்பாடுகளைச் சற்றும் கவனியாமல் உங்க ளுக்கும் எங்களுக்கும் என்னவென்பதுபோல் நிர்விசாரமா யிருக்கின்றன. ஆனால், ஆண்டவர் அவஸ்தைப்படும் இவ் வேளையிலோ சூரியன் இருண்டுபோனது. மனுமக்களின் புண்ணியநாதனை பாடுபடுத்திப் பரியாசம்பண்ணின பாவி களின் வாய்களை அடைப்பதற்கும், அவர்கள் மனத்தைக் கலக்குவதற்கும் வல்லமையாய்ப் பிரகாசித்த சூரியன் திடீ ரென இருண்டுபோக தேவன் இடங்கொடுத்தார். இருள் பயத்தையும், பயம் மௌனத்தையும் உண்டாக்கும். கல்வாரி யில் மூன்று மணிநேரம் யாதொரு சத்தமில்லை. சுவிசேடத்தில் இந்த மூன்று மணிநேரத்தைக் குறித்த சரித்திரமில்லை. தூஷித்தவர்கள் எங்கே? பரியாசம்பண்ணினவர்கள் எங்கே? உதட்டைப் பிதுக்கித் தலைகளைத் துலுக்கினவர்கள் எங்கே? இருளின் மக்கள் இருளுக்குள்ளானார்கள். கற்களைப்போல் அசையாது நின்றுபோனார்கள். ஐந்து நிமிடமா, பத்து நிமிடமா? மூன்று மணிநேரங்களாக இக்கதிக்குள்ளானார்கள். மேலும், மனுமக்கள் இரட்சிப்புக்காக அருமைக் குமாரன் நிறைவேற்றும் இந்த மூன்று மணிநேர அகோர போராட் டத்தை அந்த அயோக்கியர்கள் பார்க்காதபடி பரமபிதா

காரிருளால் சிலுவையை மறைத்தார். மூன்று மணிநேரம் கழித்து அவரே அவ்விருளை அகற்றினர்.

## என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?

இவ்வார்த்தைகளின் மெய்யான கருத்தை பிதாவும் குமாரனும் அறிவார்களேயன்றி மனுஷர் அறியமுடியாது. ஆகையால், இதைப் பலரும் பலவிதமாய் அருத்தப்படுத்துவது இயல்பு. வேதாகமத்தில் இதைப்போல் கருகலான வசனம் வேறில்லை. எவ்வளவு விளக்கிக் காட்டினாலும் இன்னும் இது விளங்காத இரகசியமாகவேயிருக்கும். 'ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று குமாரன் கேட்டபோது, இன்ன காரணத்தாலே தான் என்று பிதா சொல்லவில்லை. ஆண்டவர் உயிர்த்தெழுந்தபின் தாம் இப்படிக் கேட்டதற்குக் காரணம் இன்னதென்று சீடர்களுக்குச் சொல்லியிருந்தாலும் நாம் அறிந்து கொள்ளலாம். சுவிசேடகர் அங்கங்கே சில வசனங்களை விளக்கிக் காட்டியிருக்கிருர்கள். இந்த வசனத்தையோ அவர்கள் தொடவில்லை. இது எக்காலமும் இரகசியமாகவேயிருக்கிறது. இரகசியமாயிருந்தாலும் படிப்படியாய் நாம் இவ்வசனத்தின் கருத்தை அறியவேண்டுமென்பது ஆண்டவர் விருப்பம். இது சுயஞானத்தினுல் அறியக்கூடியதல்ல. நாம் கிறிஸ்துவின் சிந்தைக்கொப்பாய் வளருவதற்கு ஏற்றபடி அவருடைய பாடுகளின் இரகசியத்தைக் கொஞ்சமாவது அறியக்கூடும். 'என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?' ஆண்டவர் வாயிலிருந்து இவ்வார்த்தைகள் பிறக்கலாமா? ஒருவேளை கைவிடப்பட்டதுபோல் தோன்றினுலும் சூழ்ந்து நிற்கும் பகைஞர் நிமித்தமாவது அதை அடக்கிக்கொள்ளக்கூடாதா? எத்தனையோ பேர் மனதில் கலங்கினுலும் வார்த்தையில் தீரம் காண்பித்ததுண்டே. அவருக்கு அவ்வளவு ஞானமில்லாமற் போனதென்ன? இவன் தேவனை நம்பியிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்று இப்பொழுதுதானே பரியாசம் செய்தார்கள். 'ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று அவர்கள் காதுகள் கேட்கச் சொன்னுல், தேவன் அவரைக் கைவிட்டது மெய்தான் என்று அவர்கள் சொல்லமாட்டார்களா? ஐயோ, ஆண்டவர் தமக்கு

எக்காலத்திலும் குறைவை உண்டாக்கும் வார்த்தையை பகிரங்கமாகச் சொல்லிவிட்டாரே என்று நாம் நினைப்போம். அவர் மாயக்காரராயிருந்தால் உள்ளத்திலொன்றும் வெளியிலொன்றுமாயிருப்பார். மனுஷர் மதிப்பு அவருக்கு அற்பக் காரியம். தாம் சொல்லும் இந்த வார்த்தையால் இடறலுண்டாகுமே என்று அவர் பயப்படவில்லை. அதை விளக்கிக் காட்டவேண்டுமென்று அவர் கவலைப்படவுமில்லை. சுவிசேடகராவது இவ்வார்த்தைகள் கிறிஸ்துவுக்கு குறைவாயிருக்குமென்று அவைகளை எழுதாது விட்டுவிடக்கூடாதா? அவர்கள் கட்டுமானக் கதை எழுதியிருந்தால் இவ்வசனத்தைச் சேர்த்திருக்கவே மாட்டார்கள். அவர்கள் உள்ளதை உள்ளபடி எழுதினுர்கள். கிறிஸ்துவின் சரித்திரம் உண்மையென்பதற்கு இந்த நாலாம் வசனம் பலத்த ஆதாரம்.

கிறிஸ்துவின் ஜீவியத்தை மொத்தமாகக் கவனிக்கும்போது இந்த நாலாம் வார்த்தை அதிகத் திகைப்பாயிருக்கிறது. அவர் பிறப்பு சம்பந்தமாய் நடந்த அதிசய சம்பவங்களை அறிவோம். ‘நம்மோடு கடவுள்’ என்னும் அருத்தமுள்ள இம்மானுவேல் என்னும் பேர்கொண்ட அவர், ‘தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்’ என்று சொன்ன காரணமென்ன? அவருடைய ஜீவியத்தில் பாவமற்ற பரிசுத்தராயிருந்தார். பிதாவின் சித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்றினுர். அப்படியிருக்க: ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கேட்கக் காரணமென்ன? அவருடைய போதகத்தைக் கவனிப்போம். மரணத்தின் இரகசியத்தைக் குறித்து அவரைப்போல் தெளிவாய்ப் போதித்தவர்கள் யார்? நமது அந்தகாரத்தை நீக்கும் வெளிச்சமும், பயத்தை அகற்றும் நம்பிக்கையும், மரணத்தை மேற்கொள்ளும் வல்லமையும் அவர் திருவாக்கால் நமக்குக் கிடைத்தன. இன்னும் அவர் கிரியைகளோ மகத்தானவைகள்; அவர் செய்த அற்புதங்களை அறிவோம். இவ்வளவு வல்லமையுள்ள அற்புதமூர்த்தி மரிக்கும் வேளையில் ‘தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்’ என்று கேட்பானேன்? பிதாவோடு இடைவிடாது அவருக்கிருந்த ஐக்கியத்தைக் கவனிக்கும்போது அவரைப் பார்த்து: ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கேட்பது நியாயமா? தாம் மரிப்பதற்காகவே வந்தவரென்பதை அவர் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்க, மரிக்கும் வேளை வந்த

போது ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கேட்பது சரியா? அதுமாத்திரமல்ல, தாம் மறுபடியும் உயிரோடெழும்புவதை யும், மகிமைக்குள் பிரவேசிப்பதையும் சீடருக்குத் திட்டமாய்ச் சொல்லியிருக்க, மரணநேரத்தில் நம்பிக்கையற்ற ஒரு மனுஷனைப்போல் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று புலம்பலாமா? அவருடைய ஜீவியமுழுவதையும் கவனிக்கும் போது மகா தைரியத்தோடும், தீரத்தோடும் அவர் மரிக்க வேண்டியதேயன்றி கைவிடப்பட்டேனே என்று அவர் சொல் வதற்கு எவ்வளவும் நியாயமில்லை. ஆகையால், இந்த வார்த்தைகள் ஆண்டவர் வாயிலிருந்து பிறந்ததற்குக் காரணம் வேறிருக்கவேண்டும்.

## பலருடைய அபிப்பிராயம்

அவர் தமது ஊழியத்தில் தோல்வியடைந்ததை நினைத்து இப்படிச் சொன்னார் என்பார் சிலர். தேவராஜ்யம் அவர் எதிர்பார்த்தபடி பலத்தோடு வரவில்லையாம். அந்த இராஜ் யத்தைக் குறித்து அவர் எவ்வளவோ போதித்தும், பலத்த கிரியைகளை நடப்பித்தும் இராஜ்யத்தை ஸ்தாபிக்க முடிய வில்லையாம். ஆகையால், மரிக்கும் இந்த வேளையில் தமக்கு நேரிட்ட தோல்வியை நினைத்து: என் தேவனே, ஏன் என்னை இப்படிக் கைவிட்டீர் என்று கேட்டார் என்கிறார்கள். இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால், அவர் ஊழி யத்தில் முதலிலிருந்து கடைசிவரை சகலமும் தேவசித்தப் படியே நடந்தது. ஒன்றிலாகிலும் அவர் தவறிப்போனதாக அவர் நினைத்தவரல்ல. ஜனங்கள் அவரை ஏற்றுக்கொண்டா லும் ஏற்றுக்கொள்ளாமற்போனாலும், தேவராஜ்யம் பிரத்தி யட்சமாகத் தோன்றினாலும் தாமதித்தாலும், பாவிகள் உடனே இரட்சிக்கப்பட்டாலும் அது பிந்தி நடப்பதாயிருந் தாலும், ஆண்டவர் மனதில் சோர்வோ, சந்தேகமோ, ஊழி யத்தில் தோல்வியடைந்தேனே என்கிற விசனமோ கிடை யாது. அவர் சகலத்தையும் தேவ ஒழுங்குப்படி கிரமமாகவும் அமைதலாகவும் செய்துகொண்டுபோனார். முடிவில் பிதா வைப் பார்த்து: ‘பிதாவே, பூமியில் நான் உம்மை மகிமைப் படுத்தினேன், நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியை யைச் செய்துமுடித்தேன்’ என்றார். அவர் மரணத்தோடு

அவரது ஊழியம் தோல்வியடைந்ததாக அவரது சீடர்களும், சிநேகிதர்களும், அவரிடம் நன்மை பெற்றவர்களும், அவருடைய விரோதிகளும் நினைத்திருக்கலாமேயன்றி, அவர் ஒருக்காலும் அப்படி நினைத்தவரல்ல. மலையில் அவருக்குண்டான மறுரூப மகிமை பிதா தந்த ஊழியத்தை அவர் பூரணமாய் நிறைவேற்றினுர் என்பதற்குப் பலத்த அத்தாட்சியாகும். ஆகையால், நாலாம் வசனத்துக்கு ஊழியம் தவறிப் போனதென்பது காரணமல்ல.

வேறு சிலர்: பாவிகள்மேல் வரவேண்டிய தேவகோபம் அவர் மேல் வந்தது. நாம் தண்டிக்கப்படவேண்டியதற்குப் பதிலாக அவர் தண்டிக்கப்பட்டார். தேவகோபம் அவருக்கு விரோதமாக எழும்பி, அவரை நொறுக்கி, அவரைப் பாடுகளுக்குட் படுத்தினது. இவைகளைச் சகிக்கமுடியாமல்: தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று சத்தமிட்டார் என்கிருர்கள். இதுவும் சரியல்ல. தேவகோபாக்கினை அவர்மேல் வரவுமில்லை, தேவனுல் அவர் தண்டிக்கப்படவுமில்லை. கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்து: அவர் தேவனுல் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று நாம்தான் எண்ணிக்கொண்டோம் என்பதாக ஏசாயாவே சொல்லுகிருர். பிதா நம்மை இரட்சிக்கும்படி தமது குமாரனை அனுப்பினதில் தமது கோபத்தையல்ல, தமது அன்பை விளங்கப்பண்ணுகிருர். குமாரன் பலவந்தத்தினுல் அல்ல, தாமே மனதார நமது பாவங்களை ஏற்றுக்கொண்டு பாடுபட்டு மரிக்கச் சம்மதித்துவந்தார். இவ்வாறு, அவர் பாடுபடுவதாலும், ஜீவனை நமக்காகக் கொடுப்பதாலும் பிதா அவரிடத்தில் அன்பாயிருக்கிருர் என்றல்லவோ இரட்சகர் சொல்லுகிருர். சிலுவையில் தொங்கும் குமாரன் மேல் பிதா அன்பாயிருக்கும்போது அவர்மேல் கோபாக்கினையை ஊற்றினுர்; அவரைத் தண்டித்தாரென்று பேசக்கூடாது. ஆகையால், நாலாம் வசனத்துக்கு தேவகோபமும் தண்டனையும் காரணமல்ல.

இன்னும் சிலர்: நாம் பாவிகளானதால் நமது சரீரம் பாடுகளைச் சகிக்கக்கூடியதென்றும், அவர் பரிசுத்தராகையால் சரீர வேதனையைச் சகிக்கமுடியாமல் மனஞ்சோர்ந்து ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கேட்டார் என்றும் சொல்லுகிருர்கள். அவர் பரிசுத்தராயிருந்தால் அதிக வேதனைப்பட்டிருக்க

மாட்டாரென்று சொல்லுகிற மறுபட்சத்தாரும் உண்டு. சரீர வேதனையைச் சகிக்கமுடியாமல் இப்படிச் சொன்னாரென்றால், இதற்கு முந்தியே அவர் சொல்லியிருக்கவேண்டும். தோட்டத்தில் இரத்தவேர்வை சிந்திப் போராடின சமயத்தில் சொல்லியிருக்கவேண்டும். அவர் முதுகு கிழிந்து இரத்தம் பீறிடும்படி வாரால் அடித்தபோது சொல்லியிருக்கவேண்டும். அவரைச் சிலுவையில் கிடத்தி கைகள் கால்களில் ஆணிகள் ஊடுருவும்படி அறைந்தபோது சொல்லியிருக்கவேண்டும். அச்சமயத்தில் பிதாவே, இவர்களுக்கு மன்னியும் என்றல்லவா வேண்டிக்கொண்டார். ஆ, எவ்வளவு கிருபை! எவ்வளவு பொறுமை! எவ்வளவு இராஜரீகம்! அவ்வளவு பாடுகள், நிந்தைகளின் மத்தியில் அவர் தமது வாயைத் திறக்கவில்லை. ஆகையால், இச்சமயத்தில் மாத்திரம் அவர் இவ்வாறு கேட்டதற்கு வேறு காரணமிருக்கவேண்டும். மேலும், அவரது அடியார் இரத்தச் சாட்சிகளாக சந்தோஷத்தோடும், பாடலோடும் மரணத்தைச் சகித்திருக்க, அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதி மரணவேதனைக்குப் பயந்தார் என்று சொல்வது எவ்வளவு குறைவு! எவ்வளவு தவறு!

வேறு சிலர்: தேவன் அவரைக் கைவிடாதிருந்தும் பாடுகளின் அகோரத்தால் தாம் கைவிடப்பட்டதுபோல் அவருக்குத் தோன்றியிருக்கலாம். அந்த உணர்வின்படி 'ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று கேட்டார் என்கிறார்கள். அவர் பிதாவுக்கு எப்போதும் பிரியமாய் நடந்தபடியால், பிதா அவரோடுகூடவேயிருந்தார் என்பது நிச்சயம். ஆனால், கைவிடப்படாதிருக்கும்போது கைவிடப்பட்டதாக அவர் எண்ணிக்கொண்டாரென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தேவன் தம்மைக் கைவிடாதிருந்தும் கைவிட்டதாக அத்தனை திரள் ஜனங்கள் கேட்க அவர் சொன்னது பொய்யாகுமே. இப்படிப்பட்ட தப்பிதமான பலவீனம் மனுஷரிடம் காணப்படுவது இயல்பு. முற்பிதாக்களில் அநேகர் இவ்வாறு கைவிடப்பட்டதாகப் புலம்பியிருக்கிறார்கள். நாமும் அந்தகாரத்தில் அகப்பட்டுத் தவிக்கும்போது தேவன் நம்மைக் கைவிட்டதாக எண்ணியிருக்கிறோம். ஆண்டவர் வாயிலிருந்து தவறுதலான வார்த்தை ஒருபோதும் வராது. அவர் பதஷ்ட

மாய் ஒன்றைச் சொல்லிவிட்டுப் பின்பு அதைத் திருத்ினவ ரல்ல. அவர் சொன்னது சொன்னதே. அது உண்மையே.

இன்னும் என்ன சொல்லுகிறார்கள்? அவர் எப்போதும் தேவனைத் தமது பிதாவென்று அழைத்திருக்க இந்நேரத்தில் 'என் தேவனே, என் தேவனே' என்று சொன்னதால் தாம் குமாரன் என்பதைப்பற்றி அவருக்குச்சந்தேகம் வந்திருக்கலாம் என்கிறார்கள். அந்தச் சந்தேகம் சாத்தானால் வந்ததென்றும், அந்தச் சந்தேகத்தினால் தாம் கைவிடப்பட்டதாக நினைத்தா ரென்றும் சொல்லுகிறார்கள். சாத்தான் வனாந்தரத்தில் அவரைச் சோதித்தபோது பிதா புத்திர சம்பந்தத்தை விட்டு அவர் அசையவில்லை. தோட்டத்தில் சொல்லமுடியாத அவஸ் தையை அவர் ஆத்துமா அனுபவித்தபோதும் அப்பா பிதாவே என்னும் சம்பந்தத்தை அவர் விடவேயில்லை. சிலுவையிலும் பிதாவே என்று முதல் வார்த்தையை ஆரம்பித்து பிதாவே என்று கடைசி வார்த்தையை முடித்தார். இந்த இடை நேரத் தில் மாத்திரம் தேவனே என்று சொல்லுவானேன்? அவ்வாறு சொன்னதற்கு வேறு காரணமிருக்கவேண்டும். அச்சமயத்தில் அவர் ஆத்துமாவில் நடந்த போராட்டம் என்ன? யாருடைய ஸ்தானத்தில் அவர் தொங்கினார்? அந்த மூன்று மணிநேரங் களின் அனுபவமென்னவென்பதை அறிந்துகொண்டால் அவர் தேவனே என்று அழைத்த காரணம் விளங்கும். அவருடைய தெய்வீக வல்லமையை மற்றவர்களுடைய நன்மைக்காகவே உபயோகித்தார். இங்கே மனுக்குலத்தின் பிரதிநிதியாக, தம்மை நம்மோடு ஒன்றாக்கி, நமது பாவத்தைத் தாமே சுமந்து பூரண மனுஷனாகப் பாடுபட்டதினால் 'என் பிதாவே' என்பதை நிறுத்தி 'என் தேவனே' என்று கூப்பிட்டாரென்னலாம். தெய்வீக முறைப்படி குமாரனுக்கு பிதா தேவனாகவும், பிதா வுக்கு குமாரன் தேவனாகவும் இருப்பதை மறக்கக்கூடாது. 'குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என் றென்றைக்குமுள்ளது. தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்' என்று எபிரேயரில் வாசிக்கிறோம். நாலாம் வசனத்தின் இரகசியத்தை அறியும்படி இவ்வாறு பல அபிப்பிராயங்கள் எழும்புவது இயல்பு. வசனத்தின் யதார்த்த மான கருத்தை நாம் அறிந்துகொள்ளமுடியாதென்றாலும்,

கூடியவரை வேத வாக்கியங்களின் உதவியைக்கொண்டு வசனத்தின் கருத்தை அறியும்படி பிரயாசப்படுவது நல்லது.

## பாத்திரமும் வேளையும்

'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று அவர் கேட்ட சமயத்தில் அவர் கைவிடப்பட்டவரல்ல. கடந்த மூன்றுமணி நேரமாய் அந்த அனுபவத்திலிருந்து போராடி மேற்கொண்டார். அச்சமயம் இருள் அகன்று மறுபடியும் சூரியன் பிரகாசித்ததுபோல, அவர் ஆத்துமாவைச் சூழ்ந்திருந்த இருள் நீங்கி வெளிச்சம் உதித்தது. அப்போது பிதாவைப் பார்த்து: என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கடந்துபோன அனுபவத்தைப்பற்றிக் கேட்கிறூர். கைவிடப்பட்ட இந்த அனுபவம் எப்படிப்பட்டதென்று ஒருவரும் திட்டமாய்ச் சொல்லமுடியாது. தமது பாடுகளின் சம்பந்தமாய்ஆண்டவர்வெளியிட்டவார்த்தைகளைக்கொண்டு அவ்வேளையில் நடந்ததென்னவென்பதை ஒருவாறு அறியலாம். பாத்திரம், வேளை என்னும் வார்த்தைகளை இரட்சகர் தமது பாடுகள் சம்பந்தமாய் உபயோகித்திருக்கிறூர். 'நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்க முடியுமா?' என்று யாக்கோபு யோவானைக் கேட்டார். பாடுபடுவதற்கு முந்தின நாளிரவில் அவர் பாத்திரத்தை எடுத்து: 'இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தம்' என்றூர். தோட்டத்துக்கு வந்தபோது: 'பிதாவே, உமக்குச்சித்தமானல் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்' என்று ஜெபித்தார். வேளை என்னும் வார்த்தையை அதிகமாய்ச் சொல்லியிருக்கிறூர். 'என் வேளை இன்னும் வரவில்லை' என்று தாயாரிடமும் சகோதரரிடமும் சொன்னூர். கிரேக்கர் தம்மைப் பார்க்கவந்தபோது: 'இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, பிதாவே, இந்த வேளையிலிருந்து என்னை இரட்சியும் என்று சொல்வேனே? ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்' என்றூர். வியாழன் இரவில் 'பிதாவே வேளை வந்தது' என்றூர். கெத்செமனேத் தோட்டத்தில் பிரவேசித்தபோது அந்த வேளை வெகு சமீபமாக வந்திருப்பதைக் கண்டு துக்கமடையவும், திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினூர். பிதாவை நோக்கி மிகவும் ஊக்கமாய் மும்

முறை ஜெபித்தார். அந்த ஜெபங்களில் அந்தப் பாத்திரம் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானுல் நீங்கும்படியாகவும், அந்த வேளை தம்மைவிட்டு நீங்கக்கூடுமானுல் நீங்கிப்போகும்படியாக வும் பிதாவை வேண்டிக்கொண்டார். பாத்திரமும் வேளையும் ஒன்றுதான். வேளை என்பது ஆத்மா மரண அந்தகாரத்தில் பிரவேசிக்கும் சமயத்தையும், பாத்திரம் என்பது அந்த அந்தகார பயங்கரத்தை அனுபவிப்பதையும் காட்டுகிறது.

நமது இரட்சகர் எவ்வளவு கொடிய பாடுகளுக்கும் பயந்தவ ரல்ல. நிந்தை, அவமானம், தூஷணங்களுக்கு அஞ்சினவ ரல்ல. சித்திரவதைகளுக்கும் சிலுவை மரணத்துக்கும் நடுங் கினவரல்ல. நீர் மரிக்கக்கூடாது என்று சொன்ன பேதுருவைப் பார்த்து: அப்பாலே போ, சாத்தானே என்றூர். அவர் பாடு களைக் கவனித்துப் படிப்போமானுல் கொஞ்சமாவது மனந் தளராமல் சாந்தத்தோடும் அமைதலோடும் சகலத்தையும் சகித்தார் என்று காண்போம். அப்படிப்பட்ட தைரிய நெஞ் சன் தோட்டத்தில் மிகுந்த வியாகுலமடைந்ததற்கும், முகங் குப்புற விழுந்ததற்கும் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் வேண்டிக்கொண்டதற்கும், இரத்தவேர்வை பெருந்துளிக ளாய்த் தரையில் சிந்தினதற்கும், அப்பா, பிதாவே இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடாதா? இந்த வேளை என்னை விட்டு விலகக்கூடாதாவென்று ஊக்கமாய் மன்றூடினதற்கும் காரணமென்ன? ஜீவகால முழுவதும் பிதாவின் சித்தத்தைப் பூரணமாய் உற்சாகமாய் நிறைவேற்றினவர் இந்த நேரத்தில் மாத்திரம் அந்தச் சித்தத்தை ஏற்றுக்கொள்வதில் இவ்வளவு தயங்குவானேன்? இந்தப் பாத்திரத்துக்கும் நாலாம் வசனத் துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. பாத்திரத்தின் இரகசி யத்தை அறிவது நாலாம் வார்த்தையின் கருத்தை அறிவதற்கு உதவியாகும்.

இந்தப் பாத்திரம் சாத்தான் அவருக்குக் கொடுத்ததல்ல. யூதாஸ் கொடுத்ததல்ல. சத்துருக்கள் கொடுத்ததல்ல. சீடர் கள் கொடுத்ததல்ல. அன்பு நிறைந்த பிதா தாமே தமது நேசகுமாரனுக்குக் கொடுத்த பாத்திரம். ‘என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரம்’ என்கிறூர். பிதா தமக்குப் பானம்பண்ணும்படி கொடுத்த அந்தக் கசப்பான பாத் திரத்தை அவர் கண்டபோது, நடுநடுங்கி முகத்தைத்

திருப்பிக்கொள்ளுகிறூர். மகா திகிலடைந்து அந்தப் பாத்திரம் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானுல் நீங்கிப்போகும்படி பிதாவை நோக்கி ஊக்கமாய் மன்றுடுகிறூர். அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணுவதும், அவ்வேளைக்குள் தாம் பிரவேசிப்பதும் பிதாவின் சித்தமாயிருக்கிறதென்று கண்டபோது மனப்பூர்வ மாய் அந்தப் பாத்திரத்தை ஏற்றுக்கொண்டு, வரப்போகிற பயங்கரமான வேளைக்குத் தம்மைக் கையளித்தார். பிதாவின் சித்தத்திற்கு உடனே இணங்கக்கூடாமல் தத்தளித்தபோதி லும், எப்போதும்போலவே இந்த நேரத்திலும் பிதாவின் சித்தத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்தார். பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளத் தாமதித்தது பாவமாகாது. ஏனென்றூல் பலவந்தமாய்க் கீழ்ப்படியச் செய்வது கீழ்ப்படிதல் அல்ல. நாம் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிவதே கீழ்ப்படிதலாகும். அவ்வாறு நேசகுமாரன் தமது சித்தத்தை ஏற்றுக்கொள்ளும்வரை பிதா காத்திருக்கிறூர். அவர் அவ்வாறு தாமதித்ததற்குக் காரண மும் இருக்கவேண்டும். பாத்திரத்தை உடனே ஏற்றுக்கொள் ளக் கூடாமல் அவர் கலங்கினதினுலேதான் பாத்திரத்தின் கசப்பு வெளிப்படுகிறது. அவர் பிதாவின் சித்தத்திற்குஇணங்கி பாத்திரத்தில் பானம்பண்ணச் சம்மதித்தவுடனே அவர் ஆத்து மாவைச் சூழ்ந்திருந்த வியாகுலமும், திகிலும், துக்கமும், போராட்டமும் நீங்கி, மிகுந்த அமைதலோடும் தைரியத் தோடும் சத்துருக்களுக்கு எதிர்கொண்டுபோனுர். அவர்களைப் பார்த்து: 'இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் வல்லமையுமாயிருக்கிறது' என்றூர். பேதுரு பட்டயத்தை உபயோகித்தபோது தடுத்து: 'என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணுதிருப்பேனே?' என்றூர். பாத்திரத்தில் அவர் பானம்பண்ணுவதும் அந்தகார வேளைக் குள் பிரவேசிப்பதும் மறுநாள் சம்பவிக்கப்போகிற காரியம். தோட்டத்தில் பானம்பண்ணச் சம்மதித்தார்; சிலுவையிலே அதை அனுபவித்தார். அந்த அனுபவமே நாலாம் வார்த்தை அவர் வாயிலிருந்து பிறந்ததற்குக் காரணம்.

பாத்திரத்தின் கசப்பையும் அந்த வேளையின் அனுபவத்தை யும் இன்னும் கொஞ்சம் நெருங்கிப் பார்ப்போம். அவர் நமக் காகப் பாவமாக்கப்பட்டதே அந்தப் பாத்திரம். அவர் நம்மை இரட்சிக்க வந்தபோது நமது பாவசம்பந்தமாய் மூன்று காரி

யங்கள் அவரில் நிறைவேறின. முதலாவது, அவர் நமது **பாவ மாம்சத்தின் சாயலில்** பிறக்கவேண்டியதாயிற்று. 'உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது' என்று தேவ தூதன் சொன்னபடி அவர் உலகத்தில் பிரவேசித்தபோது பாவமற்ற பரிசுத்த புருஷனுக விளங்கினுர். அவர் பரிசுத்தராயிருந்தும் அவரது சரீரமோ பாவ மாம்சத்தின் **சாயலா**யிருந்தது. சரீர சாயலில் அவரும் நாமும் ஒன்று. ஆனுல், நமது சரீரம் பாவமுள்ளது. அவர் சரீரத்தில் பாவமில்லே. ஆகையால் **பாவ மாம்சத்தின் சாயல்** என்பது பலவீனமும் அற்பமுமான மனித சுபாவத்தைக் குறிக்கும். அவரது சரீரம் பாவமற்றிருந்தும் நம்மைப்போல பசி, தாகம், களேப்பு, தவிப்பு, துக்கம், பலவீனம் முதலான காரியங்களுக்குத் தப்பினதல்ல. அவர் பாவ மாம்சத்தின் **சாயலில்** வந்ததினுலேதான் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்படவும் பலவித பாடுகளே அனுபவிக்கவும் இடமாயிற்று. அவர் **பாவ மாம்சத்தில்** வந்தார் என்று அப்போஸ்தலன் சொல்லாமல், பாவ மாம்சத்தின் சாயலில் வந்தார் என்று சொல்லியிருப்பதையும் கவனித்துக்கொள்ளவேண்டும் (ரோ. 8:3).

இரண்டாவது, அவர் நமது **பாவத்தைச் சுமந்து** தீர்க்கிறவராகவும் வந்தார். உலகத்தோற்றத்துக்குமுன் குறிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி அவர். மனுஷன் பாவம் செய்ததுமுதல் பாவம் நீங்கும் வழியை ஆட்டுக்குட்டியின் பலியினுல் தேவன் முற்பிதாக்களுக்குப் போதித்துவந்தார். அந்தப் பலிகள் பரத்திலிருந்து வரும் தேவ ஆட்டுக்குட்டிக்கு முன்னடையாளமாயிருந்ததேயன்றி பாவிகளே இரட்சிக்கக்கூடியவைகளாயில்லே. அவர் வெளிப்பட்டபோது: 'இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிறதேவாட்டுக்குட்டி' என்று ஸ்நானகன் கூறினுர். கிறிஸ்து உலகத்தில் இருந்த நாட்களில் அவருக்குள் பாவமில்லாதிருந்தும், அவர் பாவம் அறியாதவராயிருந்தும் மனுக்குலத்தின் **பாவத்தைச் சுமக்கிறவராயிருந்தார்.** அவரில் பாவம் இல்லாதிருந்தும் நமது பாவத்தை அவர் சுமந்தபடியால் அவர் 'அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார்.' பாவிகளோடு தம்மை ஒன்ருக்கி அவர்களுக்காகப் பரிதபித்து மனதுருகின இரகசியம் அதுதான். அவருக்கு நம

மீதுள்ள அளவில்லாத அன்பினுல் நமது பாவங்களையும், துக்கங்களையும், நோய்களையும், பலவீனங்களையும் தாமே ஏற்றுக்கொண்டு சுமந்தார். இவ்வாறு நமது பாவத்தைச் சுமக்கிறவராயிருந்தும் துக்கசாகரத்தில் அமிழ்ந்துபோகவில்லை. வியாகுலப்பட்டுத் தவிக்கவில்லை. முகங்குப்புற விழுந்து அழுது மன்ருடவில்லை. இரத்தவேர்வை சிந்தவில்லை. அவரோடே கூடியிருந்த பிதாவின் சமுகம் அவரைத் தேற்றினது. மனுமக்களுக்கு அவர் இடைவிடாமல் செய்துவந்த நன்மைகள் இன்னெருபக்கம் அவருக்கு ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுத்தன.

மூன்ருவது, அவர் பாவமாக்கப்பட்டார். பாவமறியாத அவரை தேவன் நமக்காகப் பாவமாக்கினுர். நமதாண்டவருடைய ஜீவிய முழுவதும் பிதாவின் ஆலோசனைப்படியே நடந்தது. முதலாவது ஆலோசனை: அவர் நமது பாவ மாம்சத்தின் சாயலில் பிறக்கவேண்டுமென்பது. அப்படியே பிறக்கச் சம்மதித்தார். இந்தப் பலவீன சரீரத்தில் ஏற்பட்ட போராட்டங்களையும் சோதனைகளையும் சகல கஷ்டங்களையும் பொறுமையாய்ச் சகித்தார். அவர் பாவம் செய்யவில்லை. பாவத்தை அறியவுமில்லை. இரண்டாவது, நமது பாவத்தை அவர் சுமந்து தீர்க்கவேண்டுமென்பது இன்னெரு ஆலோசனை. அவ்வாறு ஜீவகால முழுவதும் நமது பாவத்தையும் அதன் கேடுகளையும் சுமந்துகொண்டே தமது ஊழியத்தை நிறைவேற்றிக்கொண்டு போனுர். கடைசியாக அவர் பாவமாக்கப்படவேண்டுமென்பது இன்னெரு ஆலோசனை. இதுதான் பிதா நேசகுமாரனுக்குக் கொடுத்த பாத்திரம். இதுவே இரட்சகருக்குத் தோட்டத்தில் கொடிய துயரத்தைக் கொடுத்தது. அவர் பாவ மாம்சத்தின் சாயலில் வந்ததும் போதாது. பாவத்தைச் சுமந்து திரிந்ததும் போதாது. அவர் நமக்காகப் பாவமாக்கப்படவேண்டும். 'நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினுர்' (2 கொ. 5:21). பாவம் அறியாதவர் என்னும் வார்த்தைகள் பாவமாக்கப்பட்டார் என்பதை விளக்கிக் காட்டுகின்றன. நம்மில் நீதியில்லை; அவரில் பாவமில்லை. நாம் நீதியாகவேண்டுமானுல் அவர் பாவமாகவேண்டும். பாவம் நம்முடையது; நீதி அவருடையது. நாம் அவருக்குள் நீதியாகும்படிக்கு அவர் நமக்குள் பாவமாக

வேண்டியது. பாவி நீதியாக்கப்படும்போது தமக்குச் சொந்த மல்லாத தேவ நீதியைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறான். பரிசுத்தர் பாவமாக்கப்படும்போது தமக்குச் சொந்தமல்லாத பாவத்தைத் தமதாக்கிக்கொள்ளவேண்டியது. அவரிடத்தில் பாவமில்லை. அவர் பாவம் செய்யவில்லை. பாவமறியாத அவர், நமது பாவத்தையும் அதன் கேடுகளையும் தமக்குள் அறிந்தார். எவ்வளவு சரீரப் பாடுகளையும் வேதனைகளையும் சாந்தமாய் சகித்த அவருக்குப் பாவமாக்கப்படும் அனுபவம் பிராணன் போனதுபோலிருந்தது.

அவர் பானம்பண்ண முடியாமல் தத்தளித்த பாத்திரம் இதுதான். 'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று கேட்டதற்குக் காரணமும் இதுதான். அந்த மூன்றுமணி நேரமும் பாவமாக்கப்பட்ட அனுபவத்தில் இருந்தார். இதுவரை மற்றவர்களிடத்தில் பாவத்தைக் கண்டு பரிதபித்தார். தாம் மற்றவர்களிடத்தில் கண்டு அஞ்சின பாவம் இந்த வேளையில் அவரையே ஆண்டு கொண்டது. பாவம் அவர் பரிசுத்த சுபாவத்துக்கு அந்நிய மானது. பாவத்தோடு சம்பந்தப்படும் அருவருப்பு அவருடைய ஆத்துமாவுக்குத் தாங்கமுடியாத துயரத்தைக் கொடுத்தது. பாவம் அறியாத அவர் பாவமாக்கப்பட்டபோது பாவத்தின் கேடுபாடுகளை தமக்குள் அறிந்தார். பாவம் எங்கே காணப் பட்டாலும் பாவப்பிரமாணம் ஒன்றே. வேதவாக்கியம் கூறுகிறபடி பாவம் எங்கேயோ அங்கே தேவனுடைய முகம் மறைந்துபோகிறது. பிதா குமாரனில் அன்புள்ளவராயிருந்தும், ஒரு நிமிடமாவது பிரியாமல் எப்பொழுதும் அவரோடு கூடவேயிருந்தும், அவர் பாவமாக்கப்பட்ட இந்த மூன்று மணி நேரத்தில் பிதாவின் முகம் மறைந்தது. அவர் ஏற்றுக் கொண்ட உலகத்தின் பாவம் அவ்வாறு மறைத்தது. பிதாவின் அன்பு மாறவில்லை. ஆனால் பாவ இருள் இரட்சகரின் ஆத்து மாவைச் சூழ்ந்துகொண்டபோது பிதாவைக் காணக்கூட வில்லை. பிதாவின் முகம் மறைந்தது குமாரனுக்கு எவ்வளவு சஞ்சலமோ, அதுபோலவே குமாரன் முகம் மறைந்ததும் பிதாவுக்குச் சஞ்சலமாகவே இருந்திருக்கும். ஏனென்றால் சதா நித்திய காலங்களில் இவர்கள் இவ்வாறு பிரிந்தவர்க ளல்ல. இந்த அனுபவம் பிதா புத்திர சம்பந்தத்தில் முன்னு

மில்லே பின்னுமில்லே. இந்தப் புத்திக்கு எட்டாத பயங்கர மான அனுபவத்துக்கு நமது பாவமே காரணம். நான்தான் ஆண்டவருக்கு அருமையேயன்றி நமது பாவமும் அவருக்கு அருமையாகுமா? நம்மைக் கைதூக்கி இரட்சிக்கும்படி அவர் பயங்கரமான குழியிலும் உழையான சேற்றிலும் இறங்கத் தான் வேண்டியதாயிருந்தது. அவர் கஷ்டமில்லாமல் தூர நின்றுகொண்டு மக்களுக்குப் பாவமன்னிப்புக் கூறவந்தவ ரல்ல. நம்மைப் பாழாக்கின பாவம், மரணம் என்னும் வல்லமைகளோடு போராடி மேற்கொண்டு தம்மைச் சொந்த மாக்கிக்கொள்ளும் அடியார்களே நித்திய மகிமையில் சேர்க் கும் அதிபதியானுர்.

அந்த மூன்றுமணி நேரத்தில் நடந்ததென்ன? அவர் பாவ மாக்கப்பட்டதின் பலனுக பிதாவின் முகம் மறைந்தது. கனத்த இருள் அவர் ஆத்துமாவை மூடிக்கொண்டது. பரலோகத்திலோ பூலோகத்திலோ யாதொரு உதவியுமின்றிக் கைவிடப்பட்டவரானுர். நெடுகிலும் பயத்தோடு எதிர் பார்த்த வேளேக்குள்ளிருந்தார். கசப்பும் வெறுப்புமான பாத்திரத்தில் பானம்பண்ணினுர். அவ்வேளேயில் அவரடைந்த அவஸ்தையை மனுப்புத்திரரில் ஒருவனும் அறியான். வனுந்தர சோதனேயில் தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள். தோட்டத்தில் ஒரு தூதன் வந்து அவரைத் தேற்றினுன். இந்த வேளேயில் யாதொரு தூதனும் வரவில்லே. சாத்தானுடைய சர்வ சேனேகளும் பலமாய் அவரை எதிர்த்துப் போராடின. அவ் வேளேயில் பாவத்தின் பலனுன மரணத்தோடு போராடினுர். பாவிகளான மனுஷர் சரீரத்தில் உயிரோடிருக்கும்போதே தேவபார்வையில் மரித்தவர்கள். தேவனற்ற நிலேமை ஜீவனற்ற நிலேமை. இந்த மரணத்திலிருந்து நம்மை இரட்சிக் கும்படி தேவகுமாரன் வெளிப்பட்டார். அவர் மரணத்தை ஏற்றுக்கொண்டு அதை மேற்கொண்டபின் அவரே நமக்கு ஜீவனுகிருர். அவரைச் சொந்தமாக்கிக்கொள்ளுகிறவர்கள் மரணத்தைவிட்டு நீங்கி இப்போதே ஜீவனுக்குட் பிரவேசிக் கிருர்கள்.

நமது சரீரத்தைவிட்டு ஜீவன் பிரிவதை ஆண்டவர் மரண மென்று சொல்லாமல் நித்திரை என்கிருர். அப்போஸ்தலரும்

அதுபோலவே சொல்லுகிறுர்கள். மனுஷர் பார்வையில் மரித்தவர்களான யவீருவின் மகளேயும் லாசருவையும் குறித்து அவர்கள் மரிக்கவில்லே, நித்திரையாயிருக்கிறுர்கள் என்ருர். பவுலும் அதேமாதிரி நித்திரையடைந்தவர்கள், நித்திரை யடைந்தவர்கள் என்றே எழுதுகிருர். கடவுளற்ற நிலேமையே மரண நிலேமை.

இரட்சகர் தமது ஜீவனேப் பிதாவின் கையில் ஒப்புவித்தது அவருக்கு நித்திரையாகும், அவர் தமது நித்திரையால் நம்மை இரட்சிக்கும்படி வராமல் தமது மரணத்திஞல் நம்மை இரட்சிக்க வராமல் நமது ஆத்ம மரணத்திலிருந்து நம்மை இரட்சிக்க வந்தார். அதுபோலவே அவர் நமது நித்திரையி லிருந்து நம்மை இரட்சிக்க வந்தார். தமது மரணத்திஞல் நமது மரணத்தை அழித்து நம்மை இரட்சிக்க வந்தார். அது தான் நாலாம் வார்த்தையின் இரகசியம்.

சிலுவையில் இரண்டு காரியங்கள் சம்பவித்தன. ஒன்று மரணம்; மற்றது நித்திரை. மரணம் முந்தினது, நித்திரை பிந்தினது. பன்னிரண்டு மணிக்கும் மூன்று மணிக்கும் இடை யில் அவர் மகா வியாகுலத்தோடும் எதிர்பார்த்த மரணத்தை ஏற்றுக்கொண்டார். அவ்வேளேயில் 'ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்' (எபி. 2:9). அவர் மரணத்தில் வெற்றியடைந்தபின் பிதாவின் கரத்தில் தமது ஆவியை ஒப்புவித்து நித்திரையடைந்தார். அவர் மரிப்பதற்காகவே உலகத்திற்கு வந்தவர். மரணத்தின் கசப்பு இன்னதென்று அவர் ஒருவரே அறிவார். அவரைப்போல் பிறந்தவர்கள் இல்லே; அவரைப்போல் மரித்தவர்கள் இல்லே. விசுவாசிகள் விஷயத்தில் நித்திரை என்னும் வார்த்தை பிரதானமா யிருப்பதுபோல, இரட்சகர் விஷயத்தில் நித்திரையல்ல, மரணம் என்பதே பிரதானமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒன்றைக் கவனித்தால் அவர் கைவிடப்பட்டேன் என்று கேட்ட காரணம் சற்று விளங்கும். சில வாக்கியங் களேப் பார்ப்போம். 'கிறிஸ்துவே மரித்தவர்' (ரோ. 8:24). 'எல்லாருக்காகவும் ஒருவரே மரித்தார்' (2 கொ. 5:14). 'ஒவ்வொருவருக்காகவும் அவர் மரணத்தை ருசிபார்த்தார்' (எபி. 2:9). 'கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்' (1 கொ. 15:3). 'தம்மை

மரணத்திலிருந்து இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி வேண்டுதல் செய்தார்' (எபி. 5:7). 'என் ஆத்துமா மரணத் துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது' என்றார் (மத். 26:38). ஆண்டவர் சிலுவையில் நமக்காக அனுபவித்த மரணம் எத்தன்மையானதென்று நாம் அறியமுடியாவிட்டா லும், நமது இரட்சிப்புக்கு அந்த மரணம் அவருக்கு அவசியமா யிருந்ததென்பதைக் காண்கிறோம். அவரது அதிசயப் பிறப் பாலும், மாசற்ற ஜீவியத்தாலும், ஒப்பற்ற உபதேசத்தாலும், நிகரற்ற கிரியைகளினாலும் பாவிகள் இரட்சிக்கப்படுவதில்லை. அவர் பூமியிலிருந்து சிலுவைக்கு உயர்த்தப்படாவிடில், நாம் பாவப் படுகுழியிலிருந்து பரத்துக்கு உயர்த்தப்படுவதில்லை. உலகத்தோற்றத்திற்குமுன் பிதாவோடிருந்தவரும் 'அடிக்கப் பட்ட ஆட்டுக்குட்டியானவர்தான்,' இனி நித்திய மகிமையில் மீட்கப்பட்டோர் நடுவில் உலாவுகிறவரும் 'அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்தான்.' ஆண்டவர் ஜீவியத்தில் அவர் மரணமே பிரதானம் என்பதை இதிலிருந்தே அறிந்துகொள்ள லாம்.

அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் திரள் ஜனங்கள் மத்தியில் அவர் சஞ்சரித்தும் தனித்தவராகவே இருந்தார். அவரை அறிந்தது யார்? அவருடைய வீட்டார் அவரைக் கைவிட்டார்கள். சொந்த ஊரார் அவரைக் கைவிட்டார்கள். சிநேகிதர்கள் அவரைக் கைவிட்டார்கள். தேச அதிகாரிகள் அவரைக் கைவிட்டார்கள். நம்பியிருந்த அருமைச் சீடர் களும் அவரைக் கைவிட்டார்கள். இவர்கள் யாவரும் அவரைக் கைவிட்டபோதிலும் அவர் கலங்கவில்லை. ஏனென் றால் அன்புள்ள பரமபிதா பலத்த துருகம்போல் அவரோடு கூடவேயிருந்தார். பிதாவின் சமுகம் அவருக்கு ஜீவனாக இருந்தது. ஆனால், இந்த வேளையில் அந்தப் பிதாவின் முகம் மறைந்து கைவிடப்பட்டவரானார். என்றாலும், தேவன் மீதுள்ள நம்பிக்கையை அவர் இழந்துபோகவில்லை. கைவிடப் பட்டதேன் என்று அவர் கேட்டபோதிலும் இந்தப் பயங்கர மான போராட்டத்தில் அவர் நிகரற்ற வெற்றி அடைந்தார். ஆண்டவர் நமது பாவத்தை, சாபத்தை, மரணத்தைத் தம்மோடு சேர்த்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த தினால் அவர் சரீரத்தோடு சேர்ந்து அவைகளும் நொறுக்கப்

பட்டு அழிந்தன. 'தேவன் தம்முடைய குமாரனை பாவ மாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப்போக்கும் பலியாகவும் அனுப்பி மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். அவர் அப்படியே மரித்துப்போயிருந்தால் பாவமும் மரணமும் அவரை மேற்கொண்டதாகும். அவர் மறுபடியும் உயிரோடே வந்ததால் அவரடைந்த வெற்றி நிச்சயமாயிற்று.

'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்று எல்லாரும் கேட்கத்தக்கதாக மகா சத்தமாகக் கூப்பிட்டுச் சொன்னார். பந்தயத்தில் தோற்றுப்போனவன் தலைகவிழ்ந்து மௌனமாயிருப்பான். 'நான் தோற்றுப் போனேன்' என்று எல்லாரும் கேட்கும்படி விளம்பரம் செய்ய மாட்டான். ஆண்டவர் இந்த வார்த்தைகளைச் சொன்ன போது அங்கு நின்றவர்கள் என்ன நினைத்திருப்பார்கள்? அவரைப் பின்சென்று பணிவிடை செய்துவந்த ஸ்திரீகளுக்கு எப்படியிருந்திருக்கும்? அவரிடம் நன்மைபெற்ற மனுஷருக்கு எப்படியிருந்திருக்கும்? என்னுடனேகூட பரதீஸிலிருப்பாய் என்ற பாக்கியமான வாக்கைப்பெற்ற கள்ளனுக்கு எப்படி இருந்திருக்கும்? விசேஷமாக அவருடைய சத்துருக்களுக்கு எப்படி இருந்திருக்கும்? இவைகளை நினைத்து ஆண்டவர் பேசாமலிருந்தாரில்லையே என்போம். இவைகள் தோல்வியின் வார்த்தையாயிருந்தால் ஆண்டவர் அதைப் பிரஸ்தாபித் திருக்கமாட்டார். இது வெற்றி வசனமாகும். அவர் கைவிடப்பட்டதாகவிருந்த நேரத்தில் இவ்வார்த்தைகளை அவர் சொல்லவில்லை. அவர் மூன்று மணிநேரம் போராடி வெற்றியடைந்தபின் கடந்துபோன அந்த அனுபவத்தை நினைத்து, பிதாவைப் பார்த்து: தேவனே ஏன் இப்படி என்னைக் கைவிட்டீர் என்று பிரமிப்போடு கேட்கிறார். புறம்பே இருள் நீங்கி சூரியன் பிரகாசித்ததுபோல அவர் ஆத்துமாவை மூடி யிருந்த இருள் நீங்கி பிதாவின் அன்பு மறுபடியும் அங்கே பிரகாசித்தது. அப்போதுதான் இந்த வசனத்தைக் கூறினார். உலகோர் காது கேட்க தமது வெற்றியை விளம்பரம்பண்ணி னார். பிதா கொடுத்த பாத்திரத்தில் பானம்பண்ணின குமாரனுடைய பரிபூரண கீழ்ப்படிதல் பிதாவின் உள்ளத் தைப் பூரிக்கச்செய்தது. பிதாவின் அன்பு குமாரன்மேல் பூரணமாயிருந்த சமயத்திலேதான் கைவிடப்பட்ட அனுபவ

மும் அவருக்கு இருந்தது. இது நமது பாவத்தின் பலனே யன்றி பிதாவின் கோபமல்ல. பாவம் எவ்வளவு கொடிய தென்றும், ஆண்டவர் இரட்சிப்பைச் சம்பாதித்தது இலேசான காரியமல்லவென்றும் மனுஷர் அறிவதற்கு இந்த நாலாம் வார்த்தை பலத்த ஆதாரம்.

## போதனை

தேவன் நம்மைக் கைவிட்டதாக அநேக சமயங்களில் நினைத் திருக்கிறோம். என் ஜெபம் கேட்கப்படவில்லை, எனக்கு உதவி கிடைக்கவில்லை, என் துன்பம் நீங்கவில்லை, நான் எவ்வளவாய் அவரைத் தேடி இடைவிடாமல் அவரை நம்பியிருந்தும் அவரிடமிருந்து எனக்கு ஒரு பதிலுமில்லை, கொஞ்சமும் அவர் என்னைக் கவனிக்கவில்லை, என்னை ஏன் இப்படிக் கைவிட்டார் என்று புலம்புகிறோம். வியாதி நீடிக்கிறபோதும், பாடுகள் அதிகரிக்கிறபோதும், அருமையானவர்கள் மரிக்கிறபோதும், யுத்தத்தில் ஆயிரமாயிரமான பேர் மாண்டுபோகிறபோதும், மனுஷர் பஞ்சம் பசியால் வருந்தும்போதும் தேவன் அன்புள்ள வரானால் நமக்கேன் இத்தனை பாடுகள்? நம்மைக் கைவிட்டு விட்டாரே என்று அங்கலாய்ப்போர் அநேகர். பக்தர்க ளுடைய ஜீவியத்தில் ஏன் என்னும் கேள்விகள் ஏராளம். விசேஷமாய் ஆண்டவரோடு நெருங்கி ஜீவிப்பவர்களே ஏன் இப்படி என்று கேட்கிறார்கள். யோபின் ஆகமம் ஏன் என்னும் கேள்விகளால் நிறைந்திருக்கிறது. எரேமியாவின் புத்தகத் தில் ஏன் என்னும் கேள்விகளுக்குக் குறைவேயில்லை. பக்தனாகிய தாவீது ஏன் என்று அடிக்கடி கேட்டிருக்கிறார். ‘என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?’ என்று தன்னைக் குறித்துத் தீர்க்கதரிசனமாகச் சொன்னவர் அவரே.

மனுஷர் கேட்கக்கூடிய ஏன் என்னும் கேள்விகளெல்லாம் சேர்ந்து இரட்சகர் சிலுவையில் கேட்ட ஏன் என்னும் கேள்விக்குள் அடங்கிவிட்டன. நாம் கைவிடப்படாதபடி அவர் கைவிடப்பட்டார். ‘நான் உன்னைவிட்டு விலகுவது மில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை’ என்ற தேவவாக்கு கிறிஸ்துவுக்குள் நமக்குக் கிடைத்தது. அவ்வாக்கு ஒரு போதும் தவறாது. அது ஒருபோதும் பொய்யாகாது. நாம்

பாடனுபவிக்கலாம், துயரப்படலாம், கலங்கித் தவிக்கலாம், அமிழ்ந்தேபோனேம் என்று அஞ்சலாம். என்ன நேரிட்டா லும் சரி, நாம் ஒருக்காலும் கைவிடப்படுவதே இல்லை. மேலும் நாம் கைவிடப்பட்டதுபோல் தோன்றுவது நீடித்திருப்பது மில்லை. 'இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன், ஆனலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன்' என்ற வாக்குப்படி நம்மைச் சூழ்ந்திருக்கும் அந்தகாரம் கட்டாயம் நீங்கும். அவரது வெளிச்சம் மறுபடியும் நம்மீது பிரகாசிக்கும். அதிகாலை கனத்த இருளுக்கப்புறம் சூரியன் பிரகாசத்தோடு எழும்புவதுபோல, நமது கவலைகளும் கஷ்டங் களும் நீங்கி சமாதானமும் ஆறுதலும் நிச்சயமாக நமக்குக் கிடைக்கும். காரியங்கள் விளங்கினுலும் விளங்காவிட்டா லும் ஆண்டவர்மீதுள்ள பற்றுதலை விட்டுவிடக்கூடாது. 'என் தேவனே, என் தேவனே' என்று ஒருவன் சொல்லிக்கொண் டிருக்கிறவரையிலே அவன் கைவிடப்பட்டவனல்ல. 'குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, அவர்க ளுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையு மாக்குவேன். இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன்' என்று சொன்ன வர் உண்மையுள்ளவர்.

# ஐந்தாம் வார்த்தை

'தாகமாயிருக்கிறேன்' என்ருர் (*யோ. 19:28*).

'**தா**கமாயிருக்கிறேன்.' இது ஒரு சிறிய வார்த்தை. இதிலே என்ன விசேஷம் இருக்கிறது? இதையும் சிலுவை வாக்குகளில் ஒன்ருய்ச் சேர்க்கலாமா? மேலும் தாகமாயிருக்கிறேன் என்பதில் என்ன பரம ஞானமிருக்கிறது? உலகத்தில் குழந்தைகளும் வாலிபரும் முதியோரும் சர்வ சாதாரணமாகச் சொல்லிக்கொள்ளுகிற வார்த்தைதானே. தாகமாயிருக்கிறேன் என்று சொல்லாதது யார்? என்று கேட்கலாம். வார்த்தை சாதாரணந்தான். ஆனுல், அதைச் சொன்னவர் யார் என்றும், எந்தச் சந்தர்ப்பத்தில் சொன்ஞரென்றும் அறிவோமாஞல் இந்த வார்த்தையை சாதாரணமாக எண்ண மாட்டோம். வேலைக்காரன் ஒருவன் நம்மைப் பார்த்துவிட்டு நான் இன்னநாளில் திரும்பவும் வந்து உங்களைப் பார்க்கிறேன் என்று சொல்லிப் போகிருன். சில நாட்கள் கழித்து ஒரு பிரபுவினிடமிருந்து இன்னநாளில் நான் உங்களை வந்து பார்க்கிறேன் என்று ஒரு கடிதம் வருகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். 'உங்களை வந்து பார்க்கிறேன்' என்று இருவர் சொன்னதும் ஒன்றுபோலதானிருக்கிறது. ஆனுல், வேலைக்காரன் வரவை நாம் எதிர்பார்ப்பதற்கும் அந்தப் பிரபுவின் வருகையை எதிர்பார்ப்பதற்கும் வித்தியாசமில்லையா? வேலைக்காரன் வார்த்தையை மறந்தேவிடுவோம். பிரபுவின் வார்த்தையை மறக்கமுடியாது. எவ்வளவு ஆவலோடும் ஆயத்தத்தோடும் நாட்களை எண்ணி அவர் வருகைக்காக காத்துக் கொண்டிருப்போம்! வார்த்தை ஒன்றுதான். ஆட்கள் இருவரையும் ஒப்பிட முடியுமா? தாகமாயிருப்பதாக எல்லா மனுஷருந்தான் சொல்லுகிருர்கள். ஆண்டவர் தாகத்தோடு அவைகளை ஒப்பிடமுடியாது.

தாகமாயிருக்கிறேன் என்று சொன்னவர் யார்? எல்லார் பார்வையிலும் ஒரு மனுஷஞகத் தோன்றும் இவர் யார்? நாவு

வறண்டு தாகம் சகிக்க முடியாமல் தாகத்துக்காகக் கேட்ட இவர் யார்? இவர் உன்னதமான தேவனுடைய குமாரன். சகலத்தையும் உண்டுபண்ணினவர். 'நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன், பூமியும் அதன் நிறைவுகளும் என்னுடையவைகளே' என்றார். அது மெய்தான். அதுபோல அவர் தாகமாயிருந்தால் நமக்கேன் சொல்லப்போகிறார்? ஆறுகள், குளங்கள், தடாகங்கள், ஏரிகள் யாவும் அவருடைய வைகளே. ஆனால், நம்மை இரட்சிக்கும்படி என்று அவர் தம்மைக் கையளித்தாரோ, அன்று அவர் தமது தெய்வீக மகிமையை அகற்றி ஏழை மனுஷனுக உலகில் பிரவேசித்தார். அவர் தெய்வீக ஐசுவரியமுள்ளவராயிருந்தும் தமது தரித்திரத்தினாலே நம்மை ஐசுவரியவான்களாக்கும்படிக்கு நமது நிமித்தம் தரித்திரரானார். நமது மாம்சத்தில் மாம்சமும் எலும்பில் எலும்புமாகி தம்மை நம்மோடு ஒன்றாக்கினார். ஆகையால், அவருடைய பேச்சில் தெய்வீகமும் மனுஷீகமும் கலந்தே வருகிறது. அவர் தேவகுமாரனும் மனுஷகுமாரனுமா யிருக்கிறார். ஐசுவரியமும் தரித்திரமும் கலந்தே காணப்படு கிறது. உலகம் பிழைப்பதற்கு தாமே ஜீவ அப்பம் என்கிறார்; அவரோ பசியோடிருக்கிறார். சமாரிய ஸ்திரீயிடம் தாகத் துக்குக் கேட்கிறார். 'நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு ஒருக்காலும் தாகமுண்டாகாது' என்கிறார். தமதடியார்களுக்கு சிங்காசனங்களையும் பரம வாசஸ்தலங் களையும் வாக்குப்பண்ணுகிறார்; தமக்கு தலைசாய்க்க இடமில்லை என்கிறார். தாகமுள்ளவர்களுக்கு ஜீவ தண்ணீரை வாக்களிக் கிறார்; அவரோ தாகத்தால் சங்கடப்படுகிறார். உலகத்தாருக்கு ஆத்ம இளைப்பாறுதலைக் கொடுப்பேன் என்கிறார். அவருடைய ஆத்மாவோ கலங்குவதாகச் சொல்லுகிறார். உள்ளான ஐசுவரியத்தையும் புறம்பான தரித்திரத்தையும் காண்கிறோம். அவர் மகா பயங்கரமான போராட்டத்தில் ஈடுபட்டு, தீமை யான வல்லமைகளை சிலுவையிலே மேற்கொண்டு, மகத்தான இரட்சிப்பைச் சம்பாதித்ததின்பின் தமது சரீரத்தின் தாகத்தை உணர்ந்து 'தாகமாயிருக்கிறேன்' என்றார். அவருடைய பூரண மனுஷீகத்தை இந்தத் தாகம் வெளிப் படுத்துகிறது. நமது வேதனை, தாகம், பாடுகள் எத்தன்மை யானதென்று தமது சொந்த அனுபவத்தில் அறிந்து, நமக்

காகப் பரிதாபப்படவும் உதவிசெய்யவும்கூடிய மகா பிரதான ஆசாரியனுனர். என்ன அன்பு! எவ்வளவு கிருபை!!

## தாகக் கொடுமை

மனுஷன் அனுபவிக்கக்கூடிய சகல பாடுகளிலும் தாகத்துக்கு ஒப்பான வேதனை வேறெதுவுமில்லை. அது பசிக்கொடுமையிலும் பயங்கரமானது. பசியால் மனுஷன் வாடி, மயங்கி, சோர்ந்துபோகிறுன். தாகமோ அவனை மயங்கிப்போக விடாமல் வாட்டி வதைத்துக்கொண்டேயிருக்கும். பாதாளத்தில் வேதனைப்பட்ட ஐசுவரியவான் தாகத்துக்கு ஒரு கோப்பை தண்ணீர் கேட்கவில்லை. லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து தன் நாவைக் குளிரப் பண்ணும்படி கெஞ்சினுன். தாகக் கொடுமையை என்ன சொல்ல! எத்தனை ஆயிரம் பொன்னைக் குவித்தாலும் தாகம் நீங்குமா? சமுத்திரத்தில் வழிதப்பிப்போன கப்பலோட்டிகள் தாகம் சகிக்கமுடியாமல் கொடிய உப்புத் தண்ணீரைக் குடித்துச் சங்கடப்பட்டிருக்கிறுர்கள். வழிப் பிரயாணிகள் நா வறண்டு கண்ட இலைகள் தழைகளைத் தின்றுவிடுகிறுர்கள். யுத்தகளத்தில் காயப்பட்டு விழும் போர்வீரன் வேதனை சகிக்க முடியாமல் அலறுகிறுன். அவனைச் சுற்றிலும் காயப்பட்டோரும் சாகிறவர்களும் பயங்கரமாய்ப் புலம்புகிறுர்கள். தன்னைச் சூழ குண்டுகள் விழுந்து வெடித்த வண்ணமாயிருக்கின்றன. கொஞ்ச நேரத்திற்குள் இவை யாவையும் அவன் மறந்து வேறொரு ஆபத்துக்குள்ளாகித் தவிக்கிறுன். அது என்ன? தாகக் கொடுமைதான். தன் தாகந்தீர எதை வேண்டுமானுலும் கொடுத்துவிடுவான். தாகம்! தாகம்!! தாகம்!!!

'தாகமாயிருக்கிறேன்' என்றுர். இந்தத் தாகம் அதற்கு முந்தியே அவருக்கு இருந்திருக்கவேண்டும். முந்தினநாள் இரவில் தோட்டத்திலே மிகவும் வியாகுலப்பட்டு ஊக்கமாய்ப் போராடி ஜெபித்த சமயத்தில் அவர் வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது. அந்த வேளையில் அவருக்குத் தாகமுண்டாயிருக்காதா? அங்கே அவரைப் பிடித்ததுமுதல் மறுநாள் காலைவரை அவரை எவ்வளவோ பாடுபடுத்தி இங்குமங்கும் இழுத்தடித்தார்கள். விரோதிகள்

தூங்கி இளைப்பாறினார்கள். பசிதாகம் தீர்த்துக்கொண்டார்கள். அவரோ பசியோடும் தாகத்தோடும் இருந்தார். இவ்வளவு பலவீனமும் நா வறட்சியுமுள்ளவரை, நடக்க முடியாமல் தள்ளாடினவரை, கல்வாரி மலைக்குக் கொண்டு போய் சிலுவையில் அறைந்தார்கள். அவருடைய சரீரம் அசையக்கூடாமல் ஆணிகளில் தொங்கினபடியால் வேதனை அதிகரித்தது. இரத்தம் தாராளமாக வெளியேறக்கூடாமல் தலைக்கேறினபடியாலும், சுவாசாசயத்திலிருந்து இரத்தம் தாராளமாய் தேகத்தில் பரவக்கூடாததினாலும், இருதயம் வேதனையடைந்தது. சூரியனுடைய கொடிய வெயிலும் அனல் காற்றும் சேர்ந்து அவரது சரீரத்தின் ஈரத்தை உறிஞ்சி விட்டது. இப்படியிருக்க அவரது நா வறட்சியைக் கேட்பானேன்? வேதவாக்கியத்தின்படியே 'அவருடைய நாவு மேல் வாயோடே ஒட்டிக்கொண்டது.' தாகமாயிருக்கிறேன் என்றார்.

## இரு பானம்

இரட்சகரை விரோதிகள் தோட்டத்திலே பிடித்ததுமுதல் அவர் தாகத்தோடிருந்தார் என்பது நிச்சயம். அந்தத் தாகம் வரவர அதிகரித்தது. சகல பாடுகளையும் அவர் பட்டு உத்தரித்து மிகவும் களைத்து, கொல்கொதா வந்து சேர்ந்த போது அவருக்கு அகோர தாகமுண்டானது. சிலுவையில் அறையப்படுகிறவர்கள் தங்கள் வேதனைகளை உணராதபடி மயங்கிப்போகத்தக்கதாக ஒருவகைப் பானத்தை அவர்களுக்குக் கொடுப்பார்கள். இந்தப் பானத்தில் மயக்க மருந்து கலந்திருக்கும். இது எருசலேமிலுள்ள கண்ணியமான ஸ்திரீகளின் தர்ம காரியமாகவிருந்தது. அவர்களை சிலுவையில் கிடத்தி ஆணிகள் அறைவதற்குமுன்னே இந்தப் பானத்தைக் குடிக்கக் கொடுப்பார்கள். நமதாண்டவருக்கு அதைக் கொடுத்தபோது அவர் அதிகத் தாகத்தோடிருந்ததால் அதை ஆவலோடு வாங்கி வாயில் வைத்து ருசிபார்த்தார். ஏதோ மயக்க மருந்து அதிலே கலந்திருப்பதைக் கண்டவுடனே அந்தப் பானத்தைப் புறம்பே தள்ளிவிட்டார். அவ்வளவு கொடிய தாகத்திலிருக்கும் வேறொருவன் முழுவதையும் ஆவலோடு குடித்துவிடுவான். பிற்காலத்தில் அவரது அடியார் இரத்தச்

சாட்சிகளாய் மரிக்க நேரிட்டபோது இவ்விதமான பானத்தை வாங்கிச் சந்தோஷமாய்ச் சாப்பிட்டிருக்கிறார்கள். நமதாண்டவரோ நமது இரட்சிப்பை நிறைவேற்றும் இவ் வேளையில் கடைசிவரை தெளிந்த புத்தியோடும் திட மனதோடும் பாடுகளை அனுபவிக்கத் தீர்மானித்திருந்த படியால் கசப்புக்கலந்த பானத்தை புறம்பே தள்ளிவிட்டார். முதலாம் பானத்தை அவர்கள் கொடுக்க, அவர் வேண்டா மென்று தள்ளினார். அதை அவர் பானம்பண்ணியிருந்தால் சிலுவையின் ஏழு அருமையான வசனங்கள் நமக்குக் கிடைத் திருக்கா. இரண்டாவது பானத்தை தாமே கேட்டு வாங்கி உட்கொண்டார். இது மயக்கந்தரும் பானமல்ல.

## கருமமே கண்ணாயினார்

'மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், செவ்வி அருமையும் பாரார், அவமதிப்புங்கொள்ளார், கருமமே கண்ணாயினார்' என்னும் கவிப்படி ஆண்டவர் ஒரே காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருந்தபடியால், தமது அகோர தாகத்தை மறந்து போனார். அருமையானவர்களின் மரணமோ, பெருந் துயரமோ, கொடிய அவமானமோ நமது மனதை ஆண்டு கொள்ளும்போது சரீரத்தில் உள்ள வேதனை தெரிகிறதில்லை. ஆத்துமாவின் துக்கம் சரீரத்தின் வேதனையை மேற்கொண்டு விடுகிறது. உயிர்த்தப்பி ஓடும் போர்வீரன் பத்திரமான இடம் சேர்ந்தபின் தன் கை ஒடிந்துபோயிருப்பதைக் காண் கிறான். நெருப்பில் புகுந்து தன் பிள்ளையைக் காப்பாற்றின தகப்பன் பிந்தித்தான் தன் தேகத்தில்நெருப்பு பற்றியிருப்பதை உணருகிறான். சிம்சோன் ஒரு கழுதையின் தாடை எலும்பைக் கொண்டு பெலிஸ்தரில் ஆயிரம்பேரைக் கொன்றதின்பின் தன் தாகத்தை உணர்ந்தான். அப்பேர்ப்பட்ட பராக்கிரமசாலி கர்த்தரை நோக்கி: நான் தாகத்தால் சாகிறேனே என்றான். தேவன் அதிசயமாய்த் தண்ணீர் வரும்படி செய்து அவன் தாகத்தைத் தீர்த்தார். போர் முடிக்கிறவரை சிம்சோன் தன் தாகத்தை உணரவில்லை. நமதாண்டவர் நாற்பதுநாள் வனாந்தரத்திலிருந்தபோது தாம் உலகத்தில் நிறைவேற்றும்படி வந்த இரட்சண்ய வேலையை எவ்விதமாகச் செய்து முடிப்பது

என்பதைப்பற்றி பிதாவோடு ஆலோசனைபண்ணினுர். 'அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்; அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசி உண்டாயிற்று.' அதுவரை அவருக்குப் பசி தெரியவில்லை. அவர் ஆத்மா தேவ காரியத்தில் ஆழ்ந்திருந்தபடியால் சரீரபசி தோன்றவில்லை. ஓர் அருமையான புத்தகத்தை வாசித்துக்கொண்டு போவோமாஞல் பசிதாகம் தெரியாது. வாசித்து முடித்தவுடனே அகோர பசியிருக்கக் காண்கிருேம். இங்கே சிலுவையிலும் அதுபோல தான். அகோர தாகத்தோடு அவர் சிலுவையில் தொங்கினுர் என்பது நிச்சயம். மற்றவர்களைப்பற்றிக் கவலைப்பட்டாரேயன்றி தம்மை மறந்துபோனுர். சத்துருக்களுக்கு மன்னிப்பு, கள்ளனுக்குப் பரதீஸ், தாயாருக்குப் பராமரிப்பு; ஆனுல் தமது நாவு வறண்டுபோயிருப்பதை அவர் நினைக்கவில்லை. இதன்பின் மூன்று மணி நேரம் ஆத்ம போராட்டம். புறம்பே இருள் மூடிக்கொண்டது. பாவ அந்தகாரம் ஆத்மாவைச் சூழ்ந்து போராடுகிறது. மனுஷர் உதவியில்லை. தூதர் உதவியில்லை. பிதாவின் முகம் மறைந்தது. தனியாய்ப் போராடுகிருர். உலகத்தின் பாவத்தோடும், சாபத்தோடும், மரணத்தோடும் போராடி வெற்றி சிறந்தார். இருள் நீங்கி ஒளி பிரகாசித்தது. பிதாவின் திருமுக பிரகாசத்தைத் திரும்பவும் கண்டு களித்தார். இந்தக் கொடிய ஆத்ம போராட்டத்தில், தமது கொடிய சரீர தாகத்தை மறந்தேபோனுர். 'அதன்பின்பு, அதாவது இரட்சண்ய வேலையை நிறைவேற்றின பின்பு, எல்லாம் முடிந்ததென்று இயேசு அறிந்து தாகமாயிருக்கிறேன்' என்ருர்.

## யாரிடம் தாகத்துக்குக் கேட்கிருர்?

ஊழிய நாட்களில் தம்மைப் போஷித்துப் பராமரித்து வந்தவர்களும், கலிலேயாவிலிருந்து அங்கே வந்து சிலுவையைப் பார்த்தவண்ணமாய் நிற்கிறவர்களுமான ஸ்திரீகளிடம் அவர் கேட்கவில்லை. தமது சீடர்களிடம் கேட்கவில்லை. தம்மிடத்தில் நன்மைபெற்றவர்களிடம் கேட்கவில்லை. தம்மைச் சிலுவையிலறைந்த ரோமப் போர்ச்சேவகரைப் பார்த்து: எனக்குத் தாகமாயிருக்கிறது என்கிருர். நமது தேசத்தில் பெரிய கட்டிட வேலை நடக்கும்போது வெயிலின்

அகோரத்தால் வேலை செய்பவர்களுக்கு அடிக்கடி தாகமுண்டாகும். வெல்லமும் புளியும் சேர்த்து தண்ணீரில் கரைத்துப் பெரிய பானைகளில் வைத்துக்கொண்டு பானகாரமாக அதை ஊடே ஊடே குடித்துக்கொண்டே வேலை செய்வார்கள். சோடா ஆரஞ்சு கிரஷ் அக்காலத்தில் கிடையாது. கிடைத்தாலும் இந்தப் பானத்துக்குமுன் அவைகள் ஒன்றுமில்லை. அதுபோல ரோமப் போர்ச்சேவகரும் பகலின் உஷ்ணத்தாலுண்டாகும் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள புளிப்பும் சற்று தித்திப்புமான காடி நிறைந்த பாத்திரத்தைத் தங்களிடம் வைத்திருந்தார்கள். தம்மைச் சிலுவையிலறைந்த அந்தப் போர்ச்சேவகரைப் பார்த்து, தாகமாயிருக்கிறேன் என்று சொன்னார். சத்துருவுக்கு தயவுசெய்வது எளிது, ஆனால் அவனிடம் தயவுக்காகக் கேட்பதோ மிகவும் கஷ்டம். இத்தனை மணி நேரங்களாகத் தமது பாடு வேதனைகளை வெளியிடாது சகித்துக்கொண்டவர், இன்னும் கொஞ்சநேரம் தமது தாகத்தை அடக்கிக்கொள்ளக்கூடாதா? இன்னும் சில நிமிடங்களுக்குள் மரிக்கப்போகிறாரே. தாகத்தை வெளியிடாமலே மரித்துப்போனால் என்ன? தம்மைப் பாடுபடுத்தி தாம் வேதனைப்படுவதைப் பார்த்து பரிகாசம்பண்ணின பகைவர் காதுகேட்க தம் கஷ்டத்தைச் சொல்லி தயவு கேட்கலாமா? சிலர் தங்கள் பாடு வேதனையை மற்றவர்கள் அறியக்கூடாதென்று பல்லைக் கடித்துக்கொண்டாகிலும் மறைத்துக்கொள்வார்கள். இது வீண்பெருமையேயன்றி மெய்யான தைரியமல்ல. விசேஷமாய் விரோதிகள் நாம் படும் கஷ்டங்களை அறிந்தால் சந்தோஷப்படுவார்களே என்றெண்ணி அவர்கள் நிமித்தம் கஷ்டத்தை வெளியிடாது மறைக்கப் பார்க்கிறோம். ஆண்டவரிடத்தில் அப்படிப்பட்ட எண்ணமேயில்லை. சத்துருவுக்கு விட்டுக்கொடுக்கிறதா என்ற வீண்பெருமை அவரிடத்தில் கிடையாது. அவர் யாருடைய புகழ்ச்சியை நாடினார்? யாருடைய இகழ்ச்சிக்குப் பயந்தார்? அப்படி ஒன்றுமில்லை. மேலும் அவர்கள் அவரைப் பகைத்தார்களேயன்றி அவர் அவர்களைப் பகைக்கவில்லை. அவர்கள் தங்களைச் சத்துருக்களாக்கிக்கொண்டார்களேயன்றி, அவருக்குச் சத்துருக்கள் கிடையாது. அவர்களுடைய பகையையும் பாவங்களையும் மேற்கொள்ளும் அன்பல்லவோ சிலுவையில் பிரவாகிக்கிறது.

ஆகையால் அவர் தாகத்துக்குக் கேட்டது மாத்திரமல்ல, தாம் கேட்டது தமக்குக் கிடைக்கும் என்றும் நம்பினுர். அவர்கள் தம்மை இவ்வளவு கேவலமாய் நடத்திப் பாடு படுத்தினபோதிலும், மனுஷன் முழுவதும் பாழாய்ப்போனவ னல்லவென்பது அவருடைய நம்பிக்கை. ஒருவன் ஒரு விஷயத்தில் கெட்டவனுனுல் அவன் ஒன்றுக்குமே உதவ மாட்டான் என்று அவனைத் தள்ளிவிடுகிருேம். ஆண்டவர் அப்படி நினைத்தவரல்ல. அவர் அப்படி எண்ணியிருந்தால் பாவிகளைத் தேடி உலகத்துக்கு வந்திருக்கமாட்டார். மனுஷன் எவ்வளவு கெட்டவனுயிருந்தபோதிலும், அவருடைய சத்தத் துக்கு அவன் செவிகொடுப்பான் என்ற நம்பிக்கையே அவரை உலகத்துக்குக் கொண்டுவந்தது. அந்த நம்பிக்கையினுலேயே அவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு, அவர்களிடத்தில் அன்பு வைத்து, அவர்களோடே அந்நியோந்நியமாக நடந்து கொண்டார். இவர்களில் அநேகர் இராஜ்யத்தின் புத்திரரா னுர்கள். அந்த நம்பிக்கையினுலேதான் இந்தச் சமயத்திலும் தாகமாயிருக்கிறேன் என்று வாய்திறந்து கேட்டார். அவர் கேட்டு ஏமாந்துபோகவில்லை. போர்ச்சேவகரில் ஒருவன் அதைக்கேட்டதும், ஓட்டமாய் ஓடி, கடற்காளானை அதாவது கடற்பஞ்சை எடுத்து வந்து அங்கேயிருந்த காடிநிறைந்த பாத்திரத்தில் அதை நன்ருய்த் தோய்த்து, தன் கை அவருடைய வாய்க்கு எட்டாததால், அந்தப் பஞ்சை ஒரு கோலில் மாட்டி அவருடைய வாய்க்கு நீட்டிக்கொடுத்தான். ஆண்டவர் ஆவலோடும் நன்றியோடும் அதைப் பானம் பண்ணினுர். இந்தப் போர்ச்சேவகனுக்கு அவருடைய தாகத்தைத் தீர்க்கவேண்டுமென்கிற ஆசை எப்படி வந்தது? ஏறக்குறைய நாலுமணி நேரங்களுக்குமுன் இவன் மற்ற வர்களோடு சேர்ந்து அவரைச் சிலுவையிலறைந்தவனல்லவா? அப்படியிருக்க இந்த இரக்கக் குணம் அவனுக்கு வந்ததெப்படி? அவரைச் சிலுவையிலறைந்தபோது பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக் கிருர்களே என்று அவர் செய்த மன்ருட்டு பசுமரத்தாணி போல் அவன் மனதில் பதிந்தது. அதுமுதல் அவர் காரியங்களை அவன் கவனித்தான். எவ்வளவோ வேதனையோடு அவர் தொங்கின சமயத்தில் மற்றக் குற்றவாளிகளைப்போல்

முறுமுறுக்காமலும், தூஷிக்காமலும், சபிக்காமலும் தமது பாடுகளைப் பொறுமையோடும் சாந்தத்தோடும் சகித்ததை அவன் கண்டான். அவன் உள்ளத்தில் அவர்மேல் பரிதாபம் உண்டானது. ஆகையால் அவர் தாகமாயிருக்கிறேன் என்று சொன்னவுடனே அவருடைய தாகத்தைத் தீர்க்க முந்திக் கொண்டான். அவருடைய அடியாரின் தாகத்தைத் தீர்ப்பதை தமக்கே செய்ததாக மதிக்கும் கர்த்தர், தமது தாகத்தையே தீர்த்த மனுஷனை எப்படி மறப்பார்? சமாரிய ஸ்திரீயினிடம் தாகத்துக்குக் கேட்டு ஜீவதண்ணீரை அவளுக்கு அருளின ஆண்டவர், இந்த ரோமனுக்கு இரக்கம் செய்யாதிருப்பாரா? அவர் வரும் நாளிலே 'நான் தாகமாயிருந்தேன், நீ என் தாகத்தைத் தீர்த்தாய்' என்று முதல் முதல் இந்த ரோமனைப் பார்த்தல்லவா சொல்லப்போகிறூர். அவருக்காக நாம் செய்யும் அன்பின் கிரியை எவ்வளவு அற்பமாயினும் அதை மறந்துபோவதற்கு அவர் அநீதியுள்ளவரல்ல.

ஆனல் ஆண்டவருக்காக நாம் செய்யும் நற்காரியங்களுக்கு இடையூறுகள் வராமலிரா. மரியாள் இரட்சகர்மீதுள்ள அன்பினுல் அவருடைய சரீரத்தில் பரிமளதைலம் பூசினபோது யூதாஸ்காரியோத்தும் மற்றச் சீடர்களும் அவள்மேல் கோபங் கொண்டு இந்த வீண்செலவு என்னத்துக்கு என்று அவளைக் கடிந்துகொண்டார்கள். இரட்சகர் அவர்களைப் பார்த்து: நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன் தொந்தரவுபடுத்துகிறீர்கள்? இவள் என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிருள் என்ருர். அதுபோல இந்தப் போர்ச்சேவகன் அவருடைய தாகத்தைத் தீர்க்கும்படி விரும்பி பானத்தை அவர் வாயண்டை நீட்டுகிற சமயத்தில், அவரும் மகா ஆவலோடு வறண்டுபோன தம் வாயைத்திறந்து பானம்பண்ணப்போகிற சமயத்தில், சூழ்ந்து நின்ற மனுஷர் அவனைத் தடுத்து: கொடுக்காதே, பொறு பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானே பார்ப்போம் என்ருர்கள். அவனே அவர்கள் சொல்லுக்கு இணங்கவில்லை. என்ன ஆச்சரியம்! சிலுவையில் வெளிப்பட்ட தேவ அன்பு ஒருவனை இழுத்துக்கொள்ள, மற்றவர்கள் கடினப்பட்டுப் போனுர்களே. மூன்றுமணி இருளில் பயந்து நடுங்கினவர்கள், சூரியன் மறுபடியும் பிரகாசித்தபோது தங்கள் துர்க்குணத் துக்கே திரும்பினுர்கள். எத்தனை அற்புதங்களைக் கண்டால்

என்ன? எத்தனை பயங்கரமான சம்பவங்களைப் பார்த்தாலும் என்ன? தேவகிருபையேயன்றி மற்றொன்றும் மனுஷனைக் குணப்படுத்தாது. நமக்கும் ஆண்டவருக்குமுள்ள ஐக்கிய ஜீவியத்துக்கும், அவருக்காக நாம் செய்ய விரும்பும் அன்பான வேலைகளுக்கும் குணப்படாத மனுஷரால் இடையூறு வரும். அந்த இடையூறு வீட்டாராலே, இன ஜனத்தாராலே, மற்ற மனுஷராலே நேரிடும். நாம் மனஞ்சோர்ந்து பின்வாங்கிப் போகக்கூடாது. ஆண்டவருடைய தாகத்தைத் தீர்க்கும் இரட்சிப்பின் ஊழியத்தில் மற்றவர்கள் இடையூறு செய்ய இடங்கொடுக்கவே கூடாது.

## ஆண்டவரின் ஆத்ம தாகம்

தாகமாயிருக்கிறேன் என்று ஆண்டவர் சொன்ன இந்த ஐந்தாம்வசனத்தைஉடனே ஞானார்த்தமாகப்பேசுவாருண்டு. ஆத்துமாக்களை இரட்சிக்கும் வாஞ்சையினாலே 'தாகமாயிருக்கிறேன்' என்று சொன்னார் என்பார்கள். அது சரியல்ல. அவர் பட்ட சகல பாடுகளாலும் வேதனைகளாலும் அவருக்கு அகோர தாகம் உண்டானது மெய். அவரது நாவு வறண்டு தண்ணீரின்பேரிலுள்ள ஆவலினாலேயே தாகமாயிருக்கிறேன் என்றார். ஆனால் இந்த நாவின் தாகம் ஆத்துமாக்கள்மீதுள்ள தாகத்துக்கு அடையாளமாயிருந்தது. ஆத்துமாக்களை இரட்சிக்கும்படி அவர் தம்மைப் பாடுகளுக்கும் வேதனைகளுக்கும் ஒப்புக்கொடுத்ததின் பலனாகவே அவருக்குத் தண்ணீர்மீது தாகமுண்டாயிற்று. அந்தத் தாகத்தை ரோமப் போர்ச்சேவகரில் ஒருவன் தீர்த்தான். அவருடைய நாவு குளிர்ந்தபோது கடைசி இரண்டு வசனங்களையும் சொல்லி ஆவியை விட்டார்.

இன்னும் நமதாண்டவர் தாகமாயிருக்கிறார். அவருடைய நாவின்தாகம் தீர்ந்தபோதிலும் ஆத்மதாகம் தீரவில்லை. அவர் தமது ஆத்ம வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாகிற வரைக்கும் அந்தத் தாகம் நீங்கப்போகிறதில்லை. அவரால் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் மூலமாகத்தான் அவருடைய தாகம் தீரவேண்டும். தமது ஜீவ தண்ணீரை நமக்குக் கொடுத்து நமது தாகத்தைத் தீர்த்த இரட்சகருக்கு நாம் என்ன பதில் செய்யலாம்? அவர் அருளும் இரட்சிப்பைப்

பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஆண்கள், பெண்கள், பிள்ளைகளை அவரண்டை நடத்துவதே அவருடைய தாகத்தைத் தீர்க்கும் வழி. ஒரு சமயம் தாவீதரசனுக்குத் தாகமுண்டானபோது பெத்லகேம் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றுத் தண்ணீரின் மேல் ஆவல்கொண்டு, என் தாகத்திற்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவருகிறவன் யார் என்று கேட்டார். உடனே மூன்று பேர் தங்கள் உயிரையும் அருமையாக எண்ணுமல் சத்துருக் களின் பாளையத்திலே புகுந்துபோய் கிணற்றின் தண்ணீரை மொண்டு தாவீதிடம் கொண்டுவந்தார்கள். தங்கள் அரசனின் விருப்பத்துக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்தார்கள். இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாகிய நமது ஆண்டவரின் தாகத்தைத் தீர்க்க ஆவலுள்ளவர்கள் யார்? புறம்பான ஆசாரங்களாலும் சடங்குகளாலும் வழக்கமான ஆராதனை களினுலும் அவர் தாகம் தீரப்போகிறதில்லை. ஒருவன் கிறிஸ்து வைத் தன் ஜீவனுக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுவானுனல் அதுவே அவர் தாகத்தைத் தீர்க்கும். அவர் எதற்காக சிலுவையில் தொங்கி, பாடுகளை அனுபவித்து, உயிர் துறந் தாரோ, அந்த நோக்கம் நம்மில் நிறைவேறுவதே அவருடைய தாகம் தீரும் வழி. அந்த நோக்கம் நம்மில் நிறைவேறுமல் நாம் ஆயிரம் காரியங்களைச் செய்தாலும் பிரயோஜனமில்லை. 'தாகமாயிருக்கிறேன்' என்கிருர். பாவிகளின் இரட்சிப்பு அவருடைய தாகத்தைத் தீர்க்கும். மனுமக்களை இரட்சிப்பின் வழியில் நடத்தும் கிருபை நமக்கு அருளப்பட்டிருக்கிறது. உத்தம ஜீவியமும் உண்மையுமுள்ள ஊழியமும் வீணுகா. அன்பு நிறைந்த ஆண்டவரை நாம் உயர்த்திக் காட்டும்போது அவர் பாவிகளைத் தம்மிடம் இழுத்துக்கொள்ளுகிருர். உலகோர் உய்யும்படி தம்மையே தியாகஞ்செய்த மீட்பரின் தாகம் நம்மிலுண்டாவதாக. 'எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு எல்லாருக்கும் எல்லாமான' அப்போஸ் தலனுடைய ஆத்ம வாஞ்சை நம்மையும் நிரப்புவதாக. கிறிஸ்து வெளிப்படும்போது: 'நான் தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்' என்று நம்மைப் பார்த்துச் சொல்லும் பாக்கியம் நமக்குக் கிடைக்குமா?

இன்னெரு காரியம். நமக்கு வியாதிகள் பாடுகள் துன்பம் நேரிட்டால் அவைகளைப் பொறுமையாய்ச் சகிக்கும் குணம் நமக்

கில்லே. நாம் எத்தனையாய் ஜெபித்தும் பாடுகள் நீங்காவிட்டால் பேதலித்து மனஞ்சோர்ந்துபோகிறோம். நமது பாவங்களுக்காக ஆண்டவர் நம்மை இவ்வாறு தண்டிக்கிறார் என்று நினைக்கிறோம். பாவத்தினால் பாடுகள் உண்டாவது உண்மைதான். அப்பாடுகள் நம்மைச் சீர்ப்படுத்தி தேவ பக்தியாய் நடக்கச் செய்கிறது. ஆனால் பாடுகள் வேதனைகளுக்கு பாவங்களே எப்பொழுதும் காரணமல்ல அல்லது மனுஷர் பொதுவாய் நினைக்கிறபடி அவைகள் தேவ கோபாக்கினையல்ல. மாசற்ற பரிசுத்த இரட்சகன் நமது இரட்சிப்புக்காக பாடுகள் வேதனைகளை உத்தரித்தார். தாகத்தால் நாவறண்டு சஞ்சலப்பட்டார். ஆதிமுதல் எத்தனையோ உத்தம பக்தர்களும் பரிசுத்தவான்களும் பாடுகளையும் வேதனைகளையும் தங்கள் சரீரத்தில் அனுபவித்திருக்கிறார்கள். தங்கள்மீதுள்ள தேவ அன்பையும் அவரது பராமரிப்பையும் சந்தேகிக்காமல் சகல பாடுகளையும் பொறுமையாய்ச் சகித்திருக்கிறார்கள். யாதொரு முறுமுறுப்பின்றி பிதாவின் சித்தத்திற்குத் தங்களையும் தங்கள் பாடுகளையும் ஒப்புக்கொடுத்தபடியால் கிறிஸ்துவோடுள்ள பாடுகளின் ஐக்கியத்துக்கும் அவரது பரிசுத்தத்துக்கும் பங்குள்ளவர்களானார்கள். பாடுகள், வேதனை நீங்கும்படி நாம் பிடிவாதமாய் ஜெபிப்பதிலும் அவருடைய பரிசுத்த சாயல் நமக்குக் கிடைக்கும்படி வேண்டிக்கொள்வது நல்லது. வேறு எந்த விதத்திலும் கிடைக்காத கிறிஸ்துவின் நற்குணங்கள் பாடுகளைப் பொறுமையாய்ச் சகிப்பதினாலே கிடைக்கும். ஓர் அம்மாள் ஆஸ்பத்திரியில் வியாதியினால் கஷ்டப்படுகிறார்கள் என்று அவர்களுடைய சிநேகிதர்கள் பார்க்கப் போனார்கள். படுக்கையிலிருந்த அந்த அம்மாள் தன்னைப் பார்க்க வந்தவர்களைப் பார்த்து புன்னகையோடு நீங்கள் சுகமாயிருக்கிறீர்களா? வீட்டிலே எல்லாரும் சௌக்கியமாயிருக்கிறார்களாவென்று அன்புடன் விசாரித்தபோது, வந்தவர்கள் அம்மாளின் சுகத்தை விசாரிக்க முடியாமல் போய்விட்டது. அதல்லவா கிறிஸ்துவின் சிந்தை? அநேகருடைய விஷயத்தில் பாடுகள், நோய்கள் துர்க்குணத்துக்கு ஏதுவாயிருக்கின்றன. அவர்கள் முறுமுறுத்து கடினமான வார்த்தைகளைப் பேசி, தங்களையும் அலைக்கழித்து, வீட்டை நிர்த்தூளிபண்ணிவிடுவார்கள். தேவகிருபை சேர்ந்தால் அல்லாமல்

பாடுகள் தங்களிலே ஆசீர்வாதமுள்ளவைகள் அல்ல. நோய்கள், பாடுகள் நன்மையானவைகள் அல்ல. அவை தேவராஜ்யத்துக்குரியவைகள் அல்ல. அவைகள் முற்றிலும் மறைந்து போகும் காலம் வருகிறது. ஆனுல் நாம் இந்தச் சரீரத்திலிருக்கும் வரையில் தீமையானவைகளேக்கொண்டு நமக்கு நித்திய பாக்கியத்தை உண்டாக்குவது அன்புள்ள பிதாவின் சித்தமாயிருக்கிறது. பாடுகளேப் பொறுமையாய்ச் சகித்த பரிசுத்தவான்கள், பரிசுத்தவாட்டிகளால் திருச்சபைக்கும் உலகத்துக்கும் உண்டான நன்மை கொஞ்சமல்ல. பாடுகள் திருவசனத்தின் மூலமாகவும் ஜெப சிந்தையினுலும் நம்மில் பொறுமையையும், பரிசுத்தத்தையும், அனுதாபகுணத்தையும் உண்டாக்குகின்றன. ஆகையால் பாடுகளேயும் வேதனைகளேயும் யாதொரு முறுமுறுப்பின்றி பொறுமையாய்ச் சகித்துக்கொண்ட நமது மீட்பரின் சிந்தை நமக்குக் கிடைக்கும்படி மன்ருடுவோமாக. அவர் எல்லாவிதத்திலும் நமக்கொப்பாகி, இம்மைக்குரிய சகல சோதனைகளேயும் பாடுகளேயும் அனுபவித்தவரானபடியால், நமக்காகப் பரிதபிக்கவும் உதவிசெய்யவும் ஏற்ற இரட்சகராயிருக்கிருர்.

# ஆறும் வார்த்தை

'முடிந்தது' என்ருர் (யோ. 19:30).

ஐந்தாம் வார்த்தையைப்போலவே இந்த ஆறும் வார்த்தையும் ஒரே வார்த்தைதான். ஆங்கிலத்தில் 'It is finished' என்னும்மூன்று வார்த்தைகளால் இது திருப்பப்பட்டிருக்கிறது. ஆனுல் கிரேக்கப் பாஷையிலும் தமிழிலும் இது ஒரே வார்த்தையாக இருக்கிறது. 'முடிந்தது' என்பது ஐந்து எழுத்துக்கள் உள்ள ஒரு சிறிய வார்த்தையாயினும், அதிலடங்கியிருக்கும் கருத்துகளோ அளவிடப்படாதவைகளாயிருக்கின்றன. அதின் ஆழம், அகலம், நீளம், உயரம் இவ்வளவென்று கிரகிக்க முடியாது. வார்த்தையின் சக்தி அபாரமானது. தேவன் வார்த்தையினுலேயே சர்வ உலகங்களேயும் உண்டாக்கினுர். வார்த்தை கொல்லும் அல்லது உயிர்ப்பிக்கும்; குடும்பத்தைக் கட்டும் அல்லது அழிக்கும்; இராஜ்யங்களே நிலேநாட்டும் அல்லது நாசமாக்கும்; ஒருவனே மனுஷனுக்கும் அல்லது வீணனுக்கும். நாம் பேசும் வார்த்தைகளேக் குறித்து ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். முடிந்தது என்னும் இந்த வார்த்தை சத்துருக்களின் வாயிலிருந்து வந்திருக்கவேண்டியது. அவனேப் பிடித்தோம், அடித்தோம், சிலுவையிலறைந்து கொன்ருேம், எல்லாம் முடிந்தது, இனி அவனுலே என்ன ஆகும் என்று அவர்கள் சொல்லியிருக்க வேண்டியது. அவர்களல்ல, அவரே 'முடிந்தது' என்கிருர். அதாவது, சகலத்தையும் அவர்தாமே நிறைவேற்றி முடித்துப் பூரணரானுர் என்று அர்த்தம்.

மேலும் 'முடிந்தது' என்னும் இவ்வார்த்தை சாகிறவன் வாயில் பிறக்கும் சொல்லேப்போன்றதல்ல. அவன் வியாதிப்பட்டு, நீண்டகாலம் வேதனேயடைந்து, உயிர்போகும் வேளேயில்: அப்பா பட்டபாடு போதும், எல்லாம் முடிந்தது என்று

மெல்லிய குரலில் சொல்லி ஜீவனை விடுகிறுன். ஆண்டவர் முடிந்தது என்று சொன்னது அப்படியல்ல. முடிந்தது என்று அவர் பலத்த சத்தமாய்ச் சொன்னது மூவுலகும் கேட்டுப் பிரமிக்கத்தக்கதான வெற்றியின் இராஜரீக விளம்பரமாயிருந் தது. தாம் அடைந்த மகத்தான வெற்றியை யாவரும் அறியத்தக்கதாக முடிந்தது என்று ஆரவாரித்தார். இந்த வெற்றியின் சத்தத்தைக் கேட்டவுடனே சிலுவைக்கு எதிரே நின்று நூற்றுக்கு அதிபதி: 'மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்' என்று அறிக்கையிட்டான்.

## எவைகள் முடிந்ததெனப் பார்ப்போம்

*1*. சரீர சஞ்சாரம் முடிந்தது. ஆவிக்குரிய தேவகுமாரன் நம்மை இரட்சிக்கவேண்டுமானுல் எல்லாவிதத்திலும் நமக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. 'பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப் போலவே மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராகி' நமது பாவ மாம்சத்தின் சாயலில் வந்து பிறந்தார். நமது பாவத்தை ஏற்றுக்கொண்டு பாவத்தைப் போக்கும் பலியாக மரிப்பதற்கும், பாவத்தைத் தமது மாம்சத்திலே ஆக்கினைக் குள்ளாகத் தீர்ப்பதற்கும் மாம்ச சரீரம் அவருக்கு அவசியமா யிருந்தது.

நித்திய ஆயுசுள்ள அவர் இவ்வாறு சரீரத்தில் வந்ததினுலே அவருக்கு 'பன்னிரண்டு வயதானபோது', 'முப்பது வயதான போது' என்று அவருடைய சரீரசஞ்சார காலத்தை கணக் கிட்டுப் பேசுகிறோம். முடிந்தது என்னும் வார்த்தையோடு அளவுக்குட்பட்ட சரீர வாழ்க்கை ஒழிந்தது. மேலும் நம்மைப் போன்ற சரீரத்தில் அவர் சஞ்சாரம் செய்தபடியால் சரீரத் துக்குரிய பசி, தாகம், அலுப்பு, களைப்பு, ஆயாசம் முதலான வைகளை அனுபவிக்க நேரிட்டது. பலவீன சரீரத்தில் அவர் வாசஞ்செய்தபடியால் சாத்தான் மகா மும்முரமாய் அவரைச் சோதிக்க இடம் பெற்றுன். பலத்த சத்தத்தோடும் கண்ணீ ரோடும் ஜெபிக்க, அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந் துளிகளாகத் தரையில் விழ, மகா வியாகுலத்தோடும், திகி லோடும், துக்கத்தோடும் போராடி முகங்குப்புற விழுந்தார்.

அவர் சரீரத்தில் இருந்தபடியால் மூர்க்க வெறிகொண்ட சத்துருக்கள் அவரை எவ்வளவோ பாடுபடுத்தி, அங்குமிங்கும் இழுத்தடித்து, சிலுவையிலறைந்து வேதனைக்குள்ளாக்கினார்கள். முடிந்தது என்னும் சொல்லோடு அவருடைய சரீர சஞ்சாரமும் அதற்குரிய சகல போராட்டங்களும் முடிந்தன. முப்பத்துமூன்று வயதெனச் சொல்லப்பட்டவர் நித்தியத்திற்குள் நித்தியவாசியாகப் பிரவேசித்தார். சரீர சம்பந்தமான பலவீனங்களும் பாடுகளும் ஒழிந்தன. ஆனால் இந்த சரீர வாழ்க்கையின் அனுபவத்தினாலே பலவீன பாவிகளாகிய நமக்காகப் பரிதபிக்கவும் உதவி செய்யவும் வல்லமையுள்ள ஆண்டவராயிருக்கிறார். இது நமக்குப் பெரிய ஆறுதல். அவர் சரீரம் பாடுகளுக்குட்பட்டிருந்தும் பாவமற்றதும், பிதா வாசம்பண்ணும் ஆலயமுமாயிருந்தது. இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்றும் நாளில் எழுப்புவேன் என்று அவர் சொன்ன பிரகாரம் பலவீன சரீரம் மாறி மகிமையான சரீரத்தோடே எழுந்தார்.

2. **முன்னடையாளங்களும் தீர்க்கதரிசனங்களும் நிறைவேறி முடிந்தன.** உலகத்தில் வருகிறவரான தமது குமாரனைக் குறித்து தேவன் பற்பலவிதமாய் பங்குபங்காகவும் வகைவகையாகவும் முற்பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தார். பக்தர்களான விசுவாசிகள் அவருக்கு முன்னடையாளமாயிருந்தார்கள். ஆசரிப்புக்கூடாரத்தின் ஆராதனைகள், பலிகள், ஆசாரங்கள், சடங்குகள் சகலமும் கிறிஸ்துவைப் பற்றினதாயிருந்தன. எபிரேயருடைய சரித்திரமும் அவர்களோடு சம்பந்தப்பட்ட காரியங்களும் வரப்போகிற மேசியாவுக்கு அடையாளங்களாயிருந்தன. இவை யாவற்றுக்கும் மேலாக தீர்க்கதரிசிகள் ஒருவருக்குப்பின் ஒருவராகக் கூறி அறிவித்த விசேஷங்கள் யாவும் கிறிஸ்துவில் நிறைவேறவேண்டியதா யிருந்தன. 'வேதவாக்கியங்கள் என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கின்றன' என்றும், 'புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது' என்றும், 'இதோ எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரனைக் குறித்து தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும்' என்றும், 'அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிற வாக்கியம் என்னிடத்தில் நிறைவேறவேண்டும்' என்றும்

சொல்லி, கடைசியாக இவ்வாறு வேதவாக்கியங்கள் யாவும் தம்மில் நிறைவேறினவென்பதைக் கண்டு, 'முடிந்தது' என்று முழங்கினுர். கடந்த இருபத்துநாலு மணிநேரத்துக்குள் தீர்க்கதரிசனங்கள் ஒன்றன்பின் ஒன்ருக நிறைவேறினதைப் பார்க்கும்போது ஆச்சரியமாயிருக்கும். அவர் உயிர்த்தெழுந்த பின்புகூட சீடர்களைப் பார்த்து: நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறியாயிற்று என்று சொல்லி அவர்கள் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தினுர். பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி கிறிஸ்துவைப் பிரசங்கித்தவர்கள் வேதவாக்கியங்கள் அவரில் எவ்வளவு திட்டமாய் நிறைவேறினவென்பதை விவரித்துக் காண்பித்தபோது திரளான யூதர்கள் விசுவாசிகளானுர்கள். உலகத்தில் யாராகிலும் ஒரு மனுஷன் இந்த முன்னடையாளங்களையும் தீர்க்கதரிசனங்களையும் தன்னில் நிறைவேற்ற முடியுமா? கிறிஸ்துவைத் தவிர வேறு யாரிடத்திலாகிலும் இவைகள் நிறைவேறினவென்று யாராகிலும் ரூபிக்கக்கூடுமா? கிறிஸ்துவே வேதாகமத்தின் திறவுகோல். அவரை எடுத்துவிட்டால் வேதாகமம் விளங்காத புத்தகமாகும். நமது இரட்சிப்பின் சம்பந்தமான தீர்க்கதரிசனங்கள் நிறைவேறித் தீர்ந்தபோதிலும் இன்னும் நிறைவேறவேண்டிய தீர்க்கதரிசனங்கள் உண்டு. 'அதுவரை பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்.'

3. பிதா கொடுத்த வேலை முடிந்தது. உன்னதமான மகிமையிலிருந்து உலகத்துக்கு வந்தவர் யாதொரு நோக்கமற்று, காரியமற்று வந்தவரல்ல. அநேகர் கடவுள் தங்களை உலகத்தில் அனுப்பின நோக்கம் இன்னதென்று அறியாமலும், அறியும்படி நாடாமலும் தங்கள் வாழ்நாட்களைக் கழித்து மாண்டுபோகிறுர்கள். கஷ்டப்பட்டாகிலும் சம்பாதித்துச் சாப்பிடவேண்டும் என்பதே அவர்கள் வாழ்க்கையின் நோக்கமாகயிருக்கிறது. அதற்கு மேலான சிறந்த நோக்கம் அவர்களுக்கில்லை. இன்னும் பலர் விசேஷித்த காரியங்களை நிறைவேற்றுவதற்கு தங்களை ஒப்புக்கொடுத்து புகழ்பெற்றிருக்கிறுர்கள். யுத்தவீரன் தேசங்களைப் பிடிப்பதற்கென்று தன்னை ஒப்புக்கொடுத்துவிடுகிறுன். தேசாபிமானி தன்

தேசத்தை விடுவிப்பதற்காகப் போராடுகிருன். தத்துவ சாஸ்திரி அறிவை விருத்திசெய்யும்படி உழைக்கிருன். நூதன காரியங்களைக் கண்டுபிடிக்கிறவன் இயற்கையின் இரகசியங்களை அறியும்படி பாடுபடுகிருன். புதிய கண்டங்களைக் கண்டு பிடிக்கிறவன் எத்தனையோ ஆபத்துகளுக்கும் அஞ்சாமல் சமுத்திர ஆழங்களைக் கடந்து செல்லுகிருன். மனுஷன் எத்தனை எத்தனை அரிய காரியங்களைச் செய்தபோதிலும் ஆண்டவர் நிறைவேற்றும்படி வந்த வேலைக்குமுன் அவைகள் எம்மாத்திரம்? மனுமக்கள் யாவரும் தேவ வழியைவிட்டு விலகி ஏகமாய்க் கெட்டுப்போனுர்கள். சாத்தானுல் வஞ்சிக்கப்பட்டு சகலவித அக்கிரமங்களுக்கும் அடிமைகளானுர்கள். தேவராஜ்யத்தின் ஆளுகையை ஏற்றுக்கொண்டு நடப்பாரில்லை. கெட்டுப்போன மனுஷன் தேவாசீர்வாதத்தைப் பெற்று வாழவேண்டுமென்ருல் அவனுடைய அக்கிரமங்களும் பாவங்களும் நிவிர்த்தியாக வேண்டும். அவன் பரமபிதாவோடு ஒப்புரவாகி, அவரது இராஜ்யத்தின் ஆளுகையை ஏற்றுக்கொண்டு, அவருடைய சித்தத்தின்படி பிழைக்க வேண்டும். இந்த மகா பெரிய இரட்சிப்பின் வேலையை நிறைவேற்ற உலகில் எவன் தகுதியுள்ளவன்? நசரேயனுகிய இயேசு இந்த மகத்தான வேலையைச் செய்து முடிக்கும்படி உலகத்திற்கு வந்தார். இது ஒன்றே அவரது பிரதான வாஞ்சையும் தாகமுமாயிருந்தது.

அவர் உலகத்தில் பிரவேசித்தபோது: ‘தேவனே உமது சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன்’ என்று சொன்னுர். மனுமக்கள் இரட்சிக்கப்படுவதே அந்தச் சித்தம். சிறு பிராயத்தில் தன் தாயைப் பார்த்து: ‘ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா?’ என்று கேட்டார். அவர் பிரவேசித்ததன் முதல் கொண்டு பிதா தமக்குத் தந்த வேலையை நிறைவேற்றுவதில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவராயிருந்தார். என்னென்ன இடையூறுகள் சோதனைகள் தமக்கு நேரிட்டபோதிலும், பிதா தமக்கு ஏற்படுத்தின பாதையைவிட்டு அவர் விலகினதில்லை. ‘நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது நிறைவேறுமளவும் நான் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்’ என்ருர். அவர் சமாரிய ஸ்திரீயிடம் பேசி முடிந்தபின், சீடர்கள் அவரிடம்

வந்து சாப்பிடும்படிக் கேட்டபோது: 'நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்குண்டு, நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனம்' என்றார். பிறவிக்குருடனுக்குப் பார்வை கொடுத்த சமயத்தில் 'பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யமுடியாத இராக்காலம் வருகிறது' என்றார். பிதா தமக்குக் கொடுத்த வேலையை தமது இஷ்டம்போல் அல்ல, பிதாவின் சித்தப்படியே செய்து கொண்டு போனார். அவரது ஜீவியமும், பிரயாணங்களும், உபதேசமும், அற்புத கிரியைகளும், சகலமும் பிதாவின் சித்தம் போலவே நடந்தன. 'நான் எப்பொழுதும் என் பிதாவுக்குப் பிரியமானவைகளைச் செய்கிறேன்' என்றார். 'நான் நிறைவேற்றும்படிக்கு பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும், நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது' என்றார். கடைசியாக தமது வேலை முடியும் சமயத்தில் பிதாவைப் பார்த்து: 'பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்' என்றார். அவர் சிலுவையில் தொங்கும் இந் நேரத்தில் தமது ஜீவியம் முழுவதையும் பின்னாக நோக்கிப் பார்க்கிறார். பிதா தந்த வேலையில் ஏதாவது விடப்பட்டதோ, செய்யாமல் தவறின காரியம் ஏதாகிலும் உண்டோவென்று அவர் பார்த்தபோது, ஒன்றுமில்லை என்று கண்டு முடிந்தது என்று ஆர்ப்பரித்தார். மனுஷர் பார்வையில் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படாமலும் அவர் செய்த வேலைக்குத் தகுந்த பலனில்லாமலும் போனதுபோல் தோன்றினாலும், அவர் செய்த உண்மையுள்ள ஊழியம் தவறுவதில்லை; அதற்குப் பலன் இல்லாமற்போவதுமில்லை. ஆத்துமாக்களுக்காக உண்மையாய் உழைக்கும் தேவ ஊழியர் சோர்ந்துபோக அவசியமேயில்லை. உண்மையுள்ள ஊழியம் ஒருக்காலும் வீண்போகாது என்பது நிச்சயம்.

4. வேலையின் பலனான பாடுகளும் முடிந்தன. பாடின்றிப் பலனில்லை. ஒரு மனுஷனை அவன் நிழல் பின்தொடருவது போல ஊழியத்தோடு பாடும் சம்பந்தப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து ஒரு பெரிய வேலையைச் செய்யும்படி வந்தார். அதை நிறைவேற்றுவதில் பெரிய பாடுகளை உத்தரித்தார். அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார் என்று மனுஷர் அவரைப் புகழ்ந்து பேசினார்கள். அவரது கிருபை நிறைந்த ஜீவியத்தையும், ஆவிக்குரிய மேலான போதனைகளையும், அவர் ஜனங்களுக்காகப் பரிதபித்து அவர்களுக்குச் செய்த காருண்ய செயல்களையும் கவனிப்பவர்கள் அவரை எவ்வளவோ மதித்துக் கொண்டாடுவார்கள். அப்படியிருந்தும் தேவனுடைய வீட்டைக் கட்டும்படி ஏற்பட்டிருந்த யூத அதிகாரிகளோ அவரைப் பகைத்து அவரது ஊழியத்துக்கு இடையூறு உண்டாக்கினார்கள். அவர்கள் அவரைப் பகைப்பதற்கு நியாயமேயில்லை. 'முகாந்தரமில்லாமலே பகைத்தார்கள்,' 'பொல்லாங்கு செய்கிறவன் ஒளியைப் பகைக்கிறான்' என்று ஆண்டவர் சொன்னபடியே அவர்கள் பொல்லாதவர்களான தால் நல்லவரைப் பகைத்தார்கள். அவர் அவர்களுக்கு ஒரு தீமையும் செய்யவில்லை. அப்படியிருந்தும் அவரது மாசற்ற ஜீவியம் அவர்களுடைய அசுத்த ஜீவியத்தைக் கண்டித்தது. அவருடைய ஆவிக்குரிய மேலான போதனை அவர்களுடைய மாயத்தையும், அவர்கள் மார்க்கத்தின் பேராலே நடப்பித்து வந்த சகல அக்கிரமங்களையும் கண்டித்தது. அவருடைய காருண்ய செயல்கள் திரளான ஜனங்கள் அவரை இடைவிடா மல் பின்பற்றும்படி செய்தன. இதைக் கண்டதும், அவர்கள் பொறாமையினால் நிறைந்து மூர்க்கவெறி கொண்டவர்களாகி, எப்படியாகிலும் அவரைத் தொலைப்பதே சரி என்று முடிவு செய்துகொண்டார்கள். அந்தகார அதிபதியும் அவர்களோடு சேர்ந்துகொண்டான். கடைசியாக அவரைப் பிடித்து, கொடிய பாடுகள் படுத்தி, சிலுவையிலறைந்தார்கள். அவர்கள் என்னென்ன செய்தபோதிலும் பிதா தந்த வேலையில் ஒன்றை யாகிலும் நிறைவேற்றாது அவர் விட்டுவிடவில்லை. மரண பரியந்தம் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து அவரது சித்தத்தைப் பரி பூரணமாய் நிறைவேற்றி முடித்தார். அவர் இருதயம் பிதா வின் அன்பினால் நிறைந்திருந்தது. அவர் மனம் பிதாவின் ஆலோசனைகளால் நிறைந்திருந்தது. அவர் சரீரம் பிதா வாசம் பண்ணும் பரிசுத்த ஆலயமாயிருந்தது. அவருடைய சித்தம் பிதாவின் சித்தத்துக்குப் பூரணமாய் அமைந்து அசைக்க

முடியாத பர்வதம்போல் உறுதியாயிருந்தது. அவருடைய சரீரத்தை எவ்வளவோ பாடுபடுத்தி, சித்திரவதை செய்து, வேதனைக்குள்ளாக்கினுர்கள். அவருடைய சித்தத்தையோ அசைக்க முடியவில்லே. ஒரு பெரிய மாளிகையைப் பல வருடங்களாக கட்டுகிறவன் அது முடியும் நாளில்: அப்பா, கடைசியாக முடிந்தது என்று மகிழ்வதுபோலவும், சமுத்திரத்தில் பிரயாணம்பண்ணுகிற கப்பல் மாலுமி, புயலில் அடிபட்டு, அங்குமிங்கும் இழுப்புண்டு, அமிழ்ந்தோம் என்று கலங்கியிருந்து கடைசியாக கரைசேருவாஞனுல், கடவுளுக்கு ஸ்தோத்திரம்! ஆபத்து முடிந்தது என்று சந்தோஷப்படுவதுபோலவும் ஆண்டவரும் முடிந்தது என்று மகிழ்ச்சியோடு கூறினுர்.

எஜமானுடைய உத்தம ஊழியர் பாடுகளுக்கு எப்படித் தப்பமுடியும்? நமது ஊழியம் சொகுசானதல்ல. மற்றவர்கள் மெய்யாகவே ஆசீர்வதிக்கப்படும்படி நாம் உண்மையாய் ஊழியம் செய்வோமானுல் நமக்குப் பாடுகள் உண்டென்பது நிச்சயம். நமது ஊழியம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பதுபோலவே, நமது பாடுகள் நம்மில் மனத்தாழ்மையையும், பரிசுத்தத்தையும் உண்டாக்குவதற்கு ஏதுவாயிருக்கின்றன. காரணமில்லாமல் நம்மைப் பகைப்பவர்களும் இருப்பார்கள். எல்லாருமே நமக்குப் பிரியமாயிருப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது. நமது ஊழியத்தால் அநேகர் ஆசீர்வதிக்கப்படுகிறுர்கள் என்று சாத்தான் காணும்போது தன் ஆட்களே எழுப்பி நமக்கு இடையூறையும் கவலேயையும் உண்டாக்கப் பார்ப்பான். ஆனுல் அவன் மேற்கொள்ள மாட்டான்.

ஆண்டவர் தமக்கு நேரிட்ட பாடுகளினிமித்தம் முறுமுறுக்கவில்லே. தம்மைப் பாடுபடுத்தினவர்கள்மேல் கோபங்கொள்ளவுமில்லே. இவை யாவும் தேவசித்தப்படி நடக்கிறதென்று கண்டார். உலகம் இரட்சிக்கப்படுவதற்காக பிதா தாமே தம்மைப் பாடுகளின் வழியாக நடத்துகிறுர் என்று அவர் அறிந்து மனப்பூர்வமாய்ப் பாடுகளேச் சகித்து, முடிந்தது என்று சொல்லி சிலுவையிலே வெற்றியடைந்தார். கிறிஸ்துவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கவேண்டும். அவர் நிமித்தம் வரும் பாடுகளே நாம் சாந்தத்தோடும் பொறுமையோடும் சகிக்கவேண்டும்.

5. பிதாவை வெளிப்படுத்தும் வேலே முடிந்தது. ஆண்டவர் நிறைவேற்றும்படி வந்த ஒரே வேலே உலகத்தின் இரட்சிப் பாயினும், அது பல கிளேகள் உள்ளது. பாவங்களேப் போக்கி, பாவிகளே இரட்சிக்கவேண்டும், பிசாசின் கிரியைகளே அழித்து தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டும். பிதாவை நமக்கு வெளிப்படுத்தி அவரோடே நம்மை ஐக்கியப்படுத்தவேண்டும். இவைகளில் பிரதானமானது பிதாவை வெளிப்படுத்தல். நம்மில் அன்புவைத்து தமது குமாரனே அனுப்பினவர் பிதாவே, நமது இரட்சிப்புக்கான சகல காரியங்களேயும் கிறிஸ்துவின் மூலமாய் நிறைவேற்றி வைத்தவர் அவரே. நம்மை நித்திய மகிமையில் சேர்ப்பதற்காகத் தமது அருமைக் குமாரனே உபத்திரவம், பாடுகள் மூலமாய்ப் பூரணப்படுத் தினவர் அவரே. அந்தப் பிதாவை நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்றே கிறிஸ்து மனுமக்கள் நடுவில் சஞ்சாரம் செய்தார். 'தேவனே ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லே, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேருன குமாரனே அவரை நமக்கு வெளிப்படுத்தினுர்' என்னும் வாக்கியத்தின்படி பிதாவை வெளிப்படுத்தும் நோக்கமாகவே ஆண்டவர் சகலத்தையும் செய்தார். அவர் தமது பரிசுத்த ஜீவியத்தின் மூலமாகவும், போதனைகள் மூலமாகவும், காருண்யசெயல்கள் மூலமாகவும், பாடுகள் மூலமாகவும் பிதாவை வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தார். ஜனங்கள் இதை அறிந்துகொள்ளா மல் அவரை எலியாவென்றும், எரேமியாவென்றும், பூர்வ காலத்து தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் பலவாருகப் பேசி ஞர்கள். மூன்று வருடகாலமாய் இரவுபகல் அவரோடு கூடவேயிருந்த சீடர்களாகிலும் இந்த இரகசியத்தை அறிந் தார்களா? இல்லே.

கிறிஸ்து பாடுபடுவதற்கு முந்தின நாளிரவில் பிலிப்பு அவரைப் பார்த்து: 'ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும்' என்ருர். ஆண்டவ ருக்கு இது எப்படியிருந்திருக்கும்? ஐயோ, சகலமும் வீணு யிற்றே என்று அவர் எண்ணியிருக்கமாட்டாரா? அந்த மூன்று வருடகாலமும் தம்மில் அவர்கள் பிதாவைக் காணவேண்டு மென்கிற நோக்கத்தோடுதானே அவர்களோடு தங்கி, அவர்கள் காதுகள் கேட்க உபதேசம்பண்ணி, அவர்கள்

கண்கள் காண பலத்த காரியங்களை நடப்பித்தார். எதை அவர்கள் அறியவேண்டுமென்று ஆண்டவர் விரும்பினுரோ அதிலே அவர்கள் தவறினுர்கள். கடைசியிலே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது ஒன்று எங்களுக்குப் போதும் என்று கேட்கிறுர்கள். எவ்வளவு விசனமான காரியம்! ஆண்டவர் பட்டபாடெல்லாம் வியர்த்தமாயிற்றே? பிதாவை வெளிப்படுத்தும்படி அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் நஷ்டமாயிற்றே?

என்ன, பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களோடே கூடயிருந்தும், நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லலாம்? பிதா எந்த வழியாகத் தம்மை வெளிப்படுத்தவேண்டுமோ அந்த வழியாக அவர் தம்மை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறுர். நானே அந்த வழி. அப்படியிருக்க, பிதாவைக் காண்பியும் என்றுல் வேறு நான் எப்படி காண்பிப்பது? நீ என்னை அறியாததினுலே தான் இப்படிக் கேட்டாய், அறிந்திருந்தால் இப்படிக் கேட்டிருக்கமாட்டாய் என்றுர். பிலிப்புவுக்கு இது விசனமாயிருந்திருக்கும். நான் இவரை எவ்வளவோ அறிந்திருக்க, நான் தம்மை அறியவில்லை என்கிறுரே, என்ன ஆச்சரியம் என்று பிலிப்பு நினைத்திருப்பார். பிலிப்பு கிறிஸ்துவின் ஜீவியத்தையும், போதனைகளையும், பலத்த செய்கைகளையும் நன்றுய் அறிந்திருந்தார். அவர் கிறிஸ்துவைப் புறம்பாக அறிந்திருந்தாரேயொழிய, அவருக்குள் வாசம்பண்ணி சகல கிரியைகளையும் நடப்பித்த பிதாவை அவர் காணவில்லை. ஒருவன் கிறிஸ்துவைப்பற்றி எவ்வளவோ அறிந்திருந்தபோதிலும், அவரில் பிதாவைக் காணுவிட்டால் அவன் கிறிஸ்துவை அறிந்தவனல்ல. ஒருவன் கிறிஸ்துவை எவ்வளவோ விசுவாசித்தபோதிலும், பிதா அவரிலும் அவர் பிதாவிலும் இருக்கிற தெய்வீக ஒற்றுமையை அறியாவிட்டால் அவனுடைய விசுவாசத்தினுல் பிரயோஜனமில்லை.

சீடர்கள் கிறிஸ்துவோடே எவ்வளவு காலம் இருந்தாலும், அவர்கள் அறிவு மாம்சத்துக்குரிய புறம்பான அறிவேயல்லாமல் வேறல்ல. பெந்தெகொஸ்தே நாளுக்கப்புறம் ஆவியானவரின் போதனையால் கிறிஸ்துவை உள்ளபடி அறிந்துகொண்

டார்கள். 'பிதா தவிர வேறெருவனும் குமாரனை அறியான்,' குமாரனும், 'குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறரோ அவனைத் தவிர வேறெருவனும் பிதாவை அறியான்' என்றர். நாம் பிதாவை அறியவேண்டுமானல், அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்தவேண்டும். குமாரன் மூலமாய் அவர் தம்மை வெளிப்படுத்துகிறர். நாம் குமாரனை அறியவேண்டுமானல், குமாரன் தம்மை வெளிப்படுத்தவேண்டும். ஆவியானவர் குமாரனை வெளிப்படுத்துகிறவர். கிறிஸ்துவுடனே எப்போதும் கூடவிருக்கும் சிலாக்கியம் சீடர்களுக்கிருந்தும் ஆவியானவரின் போதனையில்லாததினலே கிறிஸ்துவில் வெளிப்பட்ட பிதாவை அவர்கள் காணவில்லை. 'ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் அவனுக்கு நான் என்னை வெளிப்படுத்துவேன்' என்று இரட்சகர் சொன்னபடி ஆவியானவர் மூலமாய் தம்மடியாருக்குத் தம்மை வெளிப்படுத்துகிறர். ஆவியானவர் குமாரனை வெளிப்படுத்த, குமாரன் பிதாவை வெளிப்படுத்துகிறர். மூன்று வெளிப்படுத்துதல்கள் அல்ல. வெளிப்படுத்தல் ஒன்றுதான்.

இங்கே ஒரு பயம். நாம் சுவிசேடத்தை ஆவலோடு படிக்கும்போதும், நிருபங்களைக் கருத்தாய் ஆராய்ச்சி செய்கிறபோதும், கிறிஸ்து ஒருவரே நமது கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் நிற்கிறர். அவரது பேரன்பையும், அவர் நமக்காகப் பட்ட பாடுகள், அவமானங்கள், வேதனைகளையும், அவர் கிருபையாய் நம்மைத் தம்மிடம் அழைப்பதையும், அவர் நமக்காக ஆயத்தம்பண்ணியிருக்கும் மகிமையுள்ள நித்திய பாக்கியங்களையும் கவனிக்கும்போது அவரையே நமது மனம் நாடுகிறது, பற்றிக்கொள்ளுகிறது, போற்றுகிறது. அவரே நமது தியானமும், ஜெபமும், பேச்சும், பிரசங்கமும், நமக்கெல்லாமுமாகிவிடுகிறர். இதுவே விசுவாசிகளின் அனுபவம். அப்படியானல் பிதாவுக்கு இடம் எங்கே? அவரை முற்றிலும் மறந்தோமே. அவர் கோபப்படமாட்டாரா? நன்றி கெட்டவர்களே, உங்களை இரட்சிக்கும்படி நான் என் குமாரனைக் கொடுத்து உங்களில் அன்புகூர்ந்திருக்க, நீங்கள் என்னைத் தள்ளிவிட்டு அவரைப் பற்றிக்கொண்டீர்களே என்று சொல்லமாட்டாரா என்கிற பயம் வருகிறது. வெளியிலே சொல்லாவிட்டாலும் தங்கள் மனதில் நினைப்பவர்கள் அநேகர்.

‘இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் முடியாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான்’ என்றார். இது உண்மைதான். இரண்டு எஜமான்களுக்கு வேலை செய்கிறவன் இருவருக்கும் பிரியமாய் நடப்பது கஷ்டம். ஒருவனை அதிகமாய்க் கவனித்து, அவனுக்கே பணிவிடை செய்தால் மற்றவனுக்கு எரிச்சல் உண்டாகும். என்ன, நீ என்னைக் கவனிக்கிறதில்லை. அவரையே பற்றிக்கொண்டிருக்கிறாய், ஜாக்கிரதையாயிரு என்று அதட்டுவான். ஆனால், பிதாவும் குமாரனும் இரண்டு எஜமான்கள் அல்ல. வெவ்வேறு சுபாவமுள்ள இரண்டு எஜமான்களாயிருந்தால் நம்மால் பிதாவையும் குமாரனையும் சேவிக்க முடியாது. பிதா, குமாரன், ஆவி மூன்றும் ஒன்றுதான். பிதாவின் சித்தம், குமாரனுடைய சித்தம், ஆவியின் சித்தம் மூன்று சித்தங்களாயிராமல் ஒரே சித்தமாயிருக்கிறது. பிதாவின் அன்பு, குமாரனின் அன்பு, ஆவியானவரின் அன்பு ஒரே அன்புதான். நாம் ஆவியானவரை ஏற்றுக்கொள்ளும்போது, குமாரனையும் பிதாவையும் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாது. நம்மைப்போலவே சீடர்களுக்கும் கிறிஸ்துவே பிரதானமாயிருந்தார். ஆகையால், அவர்கள் பிதாவைக் காண விரும்பினார்கள். அவர்கள் அறியாமையை ஆண்டவர் கடிந்துகொண்டு: என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான், என்னை அறிந்தவன் பிதாவை அறிந்தான், நானும் பிதாவும் ஒன்று, இரண்டு எஜமான்கள் அல்ல, நான் என் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறது உங்களுக்குத் தெரியவில்லையா என்று கேட்டார். பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள இந்த ஒற்றுமையைக் கவனிக்கும்போது நாம் கிறிஸ்துவுக்குச் செய்கிற சகல காரியங்களும் பிதாவுக்கே செய்ததாகும். என்னை விசுவாசிக்கிறவன் என்னையல்ல, என் பிதாவை விசுவாசிக்கிறான், என்னில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவில் அன்பாயிருக்கிறான், என்னைக் கனம்பண்ணுகிறவன் பிதாவைக் கனம்பண்ணுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் பிதாவை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னைக் காண்கிறவன் என் பிதாவைக் காண்கிறான். ஏனென்றால் நானும் பிதாவும் ஒன்று, நான் பிதாவிலிருக்கிறேன், பிதா என்னிலிருக்

கிறார் என்கிறார். கிறிஸ்து தேவனை நமக்கு வெளிப்படுத்த வந்தபடியால் நாம் கிறிஸ்துவையல்ல, தேவனையே பற்றிக் கொண்டு அவரையே வணங்கவேண்டுமென்றும், கிறிஸ்து அதற்கு நமக்கு மாதிரி காண்பித்திருக்கிறார் என்றும் பேசு கிறார்கள். கிறிஸ்துவை விட்டுவிட்டால் பிதாவிடம் சேரு வதற்கு வழி எங்கே? 'நானே வழி, என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவிடம் வரான்' என்றாரே. இதற்கு அருத்த மென்ன? ஒரு சிநேகிதன் நம்மை வீட்டுக்கழைக்கும்போது: வெளியே ஒரு வாசலிருக்கும், அதற்குள் நுழைந்து நேரே நடந்துவந்தால் என் வீட்டைக் காண்பீர்கள் என்கிறான். அது போல கிறிஸ்துவும் நாம் நுழைந்து அவரைப் பின்னாக விட்டுக் கடந்து பிதாவிடம் போகிறதற்கு அவர் உயிரற்ற ஒரு வாசலா? என்னாலேயல்லாமல் பிதாவைக் காணமுடியாது என்கிறார். அவர் மூலமாகவும் அவருக்குள்ளும் நாம் பிதாவைக் காண லாமே தவிர அவரை விட்டுவிட்டால் பிதா மறைந்தே போவார். பிதாவை அறிவதற்கும் அவரோடு ஐக்கியப்படு வதற்கும் கிறிஸ்து வழி. இம்மையிலும் அவர்தான் வழி, நித்தியத்திலும் அவர்தான் வழி. நாம் நேரே தேவனைக் காணமுடியாது. நாம் எக்காலமும் பிதாவை கிறிஸ்துவிலே தான் கண்டு ஆனந்திக்கவேண்டும். இதுவே தேவ ஏற்பாடு. நாம் கிறிஸ்துவுக்குக் கொடுக்கிற சகல அன்பும் கனமும் பிதா வுக்கே கொடுப்பதாகும். ஆகையால், கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு தம்மை அசட்டை செய்ததாக பிதா ஒருக்காலும் கோபப்பட நியாயமே இல்லை. 'இவர் என் நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்' என்று பிதா தாமே நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். கிறிஸ்து நம்மை தேவனோடு ஐக்கியப்படுத்தும்படி மரித்தார், ஆகை யால் கிறிஸ்துவைவிட்டு தேவனோடு ஐக்கியப்படுவதையே நாம் பிரதானமாகத் தேடவேண்டும் என்கிறார்கள். ஆனால், 'தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கு கிறார்' என்பதையும், 'கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு நம்மை அழைத்திருக்கிறார்' என்பதையும் மறந்துவிடுகிறார்கள்.

6. **மனுஷனை வெளிப்படுத்தும் வேலை முடிந்தது.** பூமியி லுள்ள சகல சிருஷ்டிப்புகளையும் உண்டுபண்ணின கடவுள், இவைகளை ஆளும்படி மனுஷனைத் தமது சாயலிலும் ரூபத்தி

லும் உண்டாக்கினர். மனுஷன் சிருஷ்டிப்பின் கிரீடமும் பூமிக்கு அதிபதியுமானுன். சகலமும் அவனுக்குக் கீழ்ப் படுத்தப்பட்டிருந்தது. சிருஷ்டிப்புகளில் வெளிப்பட்ட தேவ ஞானத்தைத் தியானித்து மகிழ்கிறவனுகவும், தேவ சித்தத் தின்படி சகலத்தையும் செய்ய பூரண விருப்பமுள்ளவனுகவும் இருந்தான். சாத்தானுல் வஞ்சிக்கப்பட்டு பாவஞ்செய்த போது அந்தப் பாக்கியமான நிலைமையை இழந்து சீர்கெட்டவ னுன். அவன் ஆவி, ஆத்துமா, சரீரம், மனம், சித்தம், புத்தி சகலமும் சீரழிந்து அன்புள்ள பிதாவைவிட்டு மறைந்து விலகினுன். அவனிலிருந்து தோன்றிய சந்ததிகள் எல்லாம் இந்தப் பாவ நோய்க்குள்ளாகி சகல கேடுகளுக்கும், சாபத் துக்கும், மரணத்துக்கும் ஆளானுர்கள். நம்மை இரட்சிக்கும் படி தேவகுமாரன் மனுஷனுக வெளிப்பட்டார். அவர் தமது ஜீவியத்தால் பிதாவை வெளிப்படுத்தினதுபோலவே மனுஷன் எப்படிப்பட்டவனு யிருக்கவேண்டுமென்பதையும் தமது ஜீவி யத்தால் வெளிப்படுத்தினுர். அவர் மனுஷரில் ஒரு மனுஷ னுகச் சஞ்சரித்தபோதிலும் அவருக்கும் மற்ற மனுஷருக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருந்தது.

மனுஷன் எவ்வளவோ கெட்டுப்போயிருந்தும் தன் கேட்டை உணராமல் பெருமையும் இறுமாப்பும் உள்ளவனுக நடந்து கொள்ளுகிருன். சாத்தான் தன்னுல் வஞ்சிக்கப்பட்ட மனுஷரை மேலும் மேலும் கெடுத்துக்கொண்டே போகிருன். நாகரீகமும் சாஸ்திர அறிவும் உலகத்தில் பெருகிவிட்டது என்று மனுஷர் பெருமை பாராட்டினுலும், அக்கிரமங்களும் பாவங்களும் துணிகரங்களும் கூடவே பெருகினதால் தாங்கள் மிருகங்களிலும் கேடானவர்கள் என்கிற உணர்ச்சி அவர்களுக் கில்லை. தேவகிருபை பெற்ற பக்தர்களோ தாங்கள் மனுஷ ரல்லவென்றும், புழுக்களென்றும், மிருகங்களென்றும், நாயினும் கேடானவர்களென்றும் புலம்பித் தவிக்கிருர்கள். தன் கேட்டை அறியாதவன் மனுஷனல்ல. நமது உள் வினையை அறிவதற்கு பரம வெளிச்சம் அவசியம். கிறிஸ்து உலகத்தின் ஒளியாக வந்தார். சாதாரண ஏழை மனுஷனுக சஞ்சரித்தார். அவரைக் கண்டவர்கள், அவரும் மனுஷன், நாமும் மனுஷராவென்று வெட்கி மறையவேண்டியதாயிற்று. தன் அழுக்கு வஸ்திரத்தை உணராதிருந்தவன், சுத்த வெண்

வஸ்திரம் தன் பக்கத்தில் வருவதைக் கண்டவுடனே ஒளித்துக் கொள்ளுவதுபோல பாவிகள் மறைந்தார்கள். இந்த வித்தியாசத்தினுல் ஆலய அதிகாரிகள்பொருமைகொண்டுஅவரைப் பகைத்தார்கள். மனுஷனுகச் சஞ்சரித்த கிறிஸ்துவின் ஜீவியத்தைக் கவனிக்கும்போது நாம் எவ்வளவோ கெட்டுப் போயிருக்கிருேம் என்பது தெரியவரும். அவர் பிதாவுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் எப்படி நடந்துகொண்டார்? அவர் பாவமற்ற பரிசுத்த மனுஷனுக இருந்தார். தேவன்மீதும் மனுஷர்மீதும் அன்பு நிறைந்தவராயிருந்தார். சாந்தமும் மனத்தாழ்மையுமாக நடந்துகொண்டார். சகல தீமைகளையும் சகித்து மகா பொறுமையைக் காண்பித்தார். எங்கும் எல்லாருக்கும் எப்பொழுதும் நன்மை செய்தார். தேவசாயலின்படியும் தேவரூபத்தின்படியும் உண்டாக்கப்பட்ட மனுஷன் எப்படியிருக்கவேண்டும் என்பதைத் தமது வாழ்க்கையில் ரூபித்துக் காண்பித்தார். அந்நாள்முதல் இந்நாள்வரை சகல மனுஷரும் நோக்கிப் பார்த்து நடக்க வேண்டிய மாதிரி மனுஷன் அவரே. இவ்வாறு சகல காரியங்களிலும் மனுஷன் எப்படி நடக்கவேண்டுமென்பதை அவர் பூரணமாய் வெளிப்படுத்தினபின் சிலுவையில் முடிந்தது என்ருர்.

7. மகத்தான இரட்சிப்பின் வேலை முடிந்தது. அவர் பிதாவை நமக்கு வெளிப்படுத்தினபோதிலும், நமது கெட்டுப் போன பாவ நிலைமையை நமக்கு வெளிப்படுத்தினபோதிலும், இதினுலே காரியம் வாய்க்கப்போகிறதில்லை. நம்மைப் பாழாக்கின பாவம் சாபம் மரணம் அகற்றப்படவேண்டும். பிதாவாகிய தேவனுேடு நமக்கு ஐக்கியம் உண்டாகவேண்டும். இந்த மகத்தான இரட்சிப்பை ஆண்டவர் சிலுவையில் சம்பாதித்தார். எத்தனை காரியங்களை வேதவாக்கின்படி அவர் பரிபூரணமாய் நிறைவேற்றி முடித்திருந்தாலும், நமது சகல கேடுகளுக்கும் காரணமாயிருக்கிற பாவத்தைத் தொலைக்காமலும், பரம வாசலைத் திறக்காமலும் போனுல் அவர் உலகத்தில் வந்ததில் பிரயோஜனமில்லை. ஆகையால் ஆண்டவர் தாம் செய்த சகல காரியங்களைப் பார்க்கிலும் சிலுவையின் மரணத்தையே முக்கியப்படுத்திப் பேசினுர். இந்த மரணமே அவர் ருசிபார்த்த கசப்பான பாத்திரம். இந்த மரணத்தை

ஏற்றுக்கொண்டு போராடி, மரணத்துக்கு அதிகாரியான சாத்தானை அழித்து வெற்றியடைந்து, நமக்கு மகத்தான இரட்சிப்பைச் சம்பாதித்து முடித்தார். பாவமன்னிப்பு, நீதி, சமாதானம், ஜீவன், புத்திரபாக்கியம், பரம சுதந்தரம் முதலான சகல நித்திய ஆசீர்வாதங்களும் இந்த இரட்சிப்பில் அடங்கியிருக்கிறது. பிதாவின் கரத்தில் தமது ஆவியை ஒப்பு வித்தது மரணமல்ல, அது சந்தோஷமான பிரயாணம். ஆண்டவர் அனுபவித்த மரணமோ பன்னிரண்டுக்கும் மூன்று மணிக்கும் இடையிலுள்ள பயங்கரமான அனுபவமாகும். அந்த மரணமே பாவத்தால் விளைந்த சகல கேடுகளையும் அழித்தது. அந்த மரணமே இரட்சிப்பில் அடங்கியிருக்கும் சகல ஆசீர்வாதங்களையும் நமக்குக் கொடுத்தது. அவர் முடிந்தது என்று சொன்னவுடனே பரலோகமும், ஆம்: முடிந்தது என்று பதிலுரைத்தது.

ஆண்டவர் தாம் நிறைவேற்றின கிரியைகளாலும், பாடுகள் மரணத்தாலும் நமது இரட்சிப்பைச் சம்பாதித்திருக்க, அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப் படுவதற்குப் பதிலாக, தங்களைத் தாங்களே இரட்சித்துக் கொள்ள முயலுபவர்கள் அநேகர். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து மரித்தாரென்று சொல்லிக்கொண்டே தங்கள் சுய கிரியைகள் மூலமாய் இரட்சிக்கப்படப் பார்க்கிறார்கள். ஒரு கிறிஸ்தவனைப் பார்த்து: நீர் இன்று மரிக்க நேரிடுமானால் இரட்சகரிடம் போவீரென்னும் நிச்சயமுண்டாவென்று கேட்க அவர்: நிச்சயமுண்டென்றார். எப்படி என்று கேட்டதற்கு அவர்: நான் முன்னே குடிப்பேன், இப்போ விட்டுவிட்டேன். முன்னே கோவிலுக்குப் போவதில்லை, இப்போ போகிறேன். முன்னே வேதம் வாசிக்கமாட்டேன், இப்போ வாசிக்கிறேன். சொல்லவேண்டுமானால் எவ்வளவோ மாறுதல் என்னில் உண்டாயிருக்கிறது என்றார். இவருடைய இரட்சிப்பில் கிறிஸ்துவின் பேரையே காணோம். ஒருவன் தன் சீர்திருத்தத்தினாலே, சுய கிரியைகளாலே இரட்சிக்கப்படக்கூடுமானால் கிறிஸ்து மரித்தது வீணாகும். வேதம் கூறுகிறபடி ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை இரட்சிக்கும்படி உயிரைக் கொடுத்த ஆண்டவரைச் சொந்தமாக்கிக்கொள்ளும்போது அவரே அவனுக்கு இரட்சிப்பாகிறார். சகேயு, சமாரியா

ஸ்திரீ, பாவியான மனுஷி, வலதுபக்கத்துக் கள்ளன், பவுல் முதலானோர் இரட்சிக்கப்படும்படி என்ன கிரியைகளைச் செய் தார்கள்? ஒன்றுமில்லை. தங்களை இரட்சிக்கும்படி சகல கிரியைகளையும் செய்துமுடித்த ஆண்டவரைச் சொந்தமாக்கிக் கொண்டார்கள். இரட்சிப்பு நம்மாலாகிறதல்ல. அது கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு இலவசமாக அருளப்பட்டிருக் கிற தேவனுடைய ஈவு. ஆகையால் நமது சுய கிரியைகளினாலே இரட்சிக்கப்படப் பார்ப்போமானால் ஆண்டவர் சிலுவையில் முடிந்தது என்று சொன்ன சொல்லுக்கு அது விரோதமாகும். இரட்சிக்கப்பட்டபின் ஆண்டவர்மீதுள்ள அன்பினாலே எவ் வளவோ நற்கிரியைகளைச் செய்யலாம். அப்படிச் செய்யும்படி கிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். கிருபையாய்க் கிடைக்கும் இரட்சிப்பை கிரியைகளால் சம்பாதிக்கப் பார்ப்ப தெப்படி?

நமது முடிவு எப்படியிருக்கும்? நமது ஆவி பிரியும் வேளை வரும்போது, நமது ஜீவியத்தைக் குறித்தும், ஊழியத்தைக் குறித்தும் ஆண்டவர் சொன்னதுபோல் முடிந்தது என்று சொல்லமுடியுமா? ஒருக்காலும் முடியாது. அப்போஸ்தலன் 'நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன்' என்று சொன்னது வாஸ்தவந்தான். ஆனால் பவுலுடைய முடித்தேன் என்பதை, ஆண்டவருடைய முடிந் தது என்பதோடு ஒப்பிடமுடியுமா? தமது ஜீவியம், அறிவு, ஊழியம் யாவும் குறைவுள்ளதென்று அப்போஸ்தலனே அறிக்கையிடுகிறார். நிறைவானது வரும்போது இந்தக் குறைவுகள் நீங்கிப்போகும் என்கிறார். மனுமக்களில் கிறிஸ்து ஒருவரே தமது வேலையைப் பூரணமாய் நிறைவேற்றினவர். அவருடைய பிள்ளைகளுடைய ஜீவியமும் ஊழியமும் அவருக் குள் நிறைவாகும். அவரடைந்த வெற்றி நமது வெற்றி யாகும். நாம் எவ்வளவு குறைவுள்ளவர்களாயிருந்தபோதி லும் கிறிஸ்துவுக்குள் நமது பிதாவின் பார்வையில் பரிபூரண முள்ளவர்களாகக் காணப்படுவோம்.

தேவன் தமது குமாரனை உலகத்தை இரட்சிக்கும் நோக்க மாக அனுப்பினார். யோவான்ஸ்நானகனை கிறிஸ்துவுக்கு முன் தூதனாகப் போகும் நோக்கமாக அனுப்பினார். நம்மைப் பற்றியென்ன? யாதொரு நோக்கமில்லாமல் அவர் நம்மை

உலகத்தில் அனுப்பியிருக்கிறுரா? கஷ்டப்பட்டுச் சம்பாதித்துச் சாப்பிடும்படி அனுப்பியிருக்கிறுரா? வேறே மேலான நோக்கமில்லையா? 'என் பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்' என்று ஆண்டவர் தம் அடியாருக்குச் சொல்லுகிறுர். இதிலே நமது ஜீவியத்திலும் வேலையிலும் ஆண்டவருக்கும் நமக்கும் சம்பந்தமிருக்கிறது. அவருக்கென்று பிழைக்கவும் அவருக்கென்று உழைக்கவும் நம்மை அனுப்பியிருக்கிறுர். இது எவ்வளவு பெரிய சிலாக்கியமும் மேலான உத்தரவாதமுமா யிருக்கிறது. நாம் இதை உணராமல் பாவங்களிலும் சோம்பலிலும் அருமையான காலத்தைப் பாழாக்கிப் போட்டோம். ஜீவன் பிரியும்போது, 'பிதாவே, பூமியிலே உம்மை மகிமைப்படுத்தினேன், நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்' என்று இரட்சகர் சொன்னதுபோல் நாம் சொல்ல முடியாதே. இதுவே நாம் எக்காலமும் இருக்கும் இடமல்ல. நித்திய மகிமைக்குட் பிரவேசித்து எக்காலமும் ஆண்டவரோடுகூட இருக்கும்படி நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வதற்கு இந்தச் சுருக்கமான காலத்தைத் தந்திருக்கிறுர்.

ஆண்டவர் தங்களை உலகத்தில் அனுப்பின மேலான நோக்கத்தை அநேகர் நினைக்கிறதில்லை. இம்மைக்குப்பின் நித்திய வாழ்வு உண்டென்பதை நம்புகிறதில்லை. இங்கேயே சதாகாலமும் இருப்பவர்களைப்போல நினைக்கிறுர்கள், பேசுகிறுர்கள், சகல காரியங்களையும் நடப்பிக்கிறுர்கள். அவர்கள் கண்களுக்குமுன் தெய்வ பயமில்லை. கல்வாரிச் சிலுவையில் வெளிப்பட்ட தேவனுடைய அதிசய கிருபையையும் அன்பையும் அவர்கள் மதிக்கிறதில்லை. தேவன் தங்களை உலகத்தில் அனுப்பின நோக்கத்தை அறிந்து, அவருடைய சித்தத்தின்படி பிழைக்காதவர்கள் அழிவுக்குரியவர்களாகிறுர்கள். இக்காலத்தில் நடைபெறும் கொடிய யுத்தங்கள் இதற்கு ஆதாரம். அன்புள்ள ஆண்டவரை மறந்து, அவரது வசனத்தை அவமதித்து, அக்கிரமமான வழிகளில் தங்கள் இஷ்டம்போல் நடப்பவர்களை சாத்தான் ஆண்டுகொள்ளுகிறுன். தேவனுக்கு மகிமையும் உலகத்துக்கு ஆசீர்வாதமுமா யிருக்கவேண்டிய மனுஷர், உலகத்தை நாசம்பண்ணும் கொலைபாதகராஞர்

கள். இவர்களுடைய முடிவு சஞ்சலமும் தவிப்புமாகும். ‘மனுஷன் எதை விதைக்கிறுனே அதையே அறுப்பான்.’

இது மிகவும் கொடிய காலம். அப்போஸ்தலன் ரோமர் முதலாம் அதிகாரம் 29 முதல் 31ஆம் வசனம் முடிய 23 அக்கிரமங்களேயும், 2 தீமோத்தேயு மூன்றும் அதிகாரம் 2 முதல் 5ஆம் வசனம் வரை 19 பாவங்களேயும்பற்றிச் சொல்லி, இவைகள் கடைசி நாட்களின் அடையாளங்கள் என்கிறுர். இந்த 42 பாவங்கள் மாத்திரமல்ல, இன்னும் அதிகமாய் அவர் சொல்லக்கூடும். ஆனல் சகல அக்கிரமங்களும் அப்போஸ்தலன் கூறியிருப்பவைகளில் அடங்கியிருக்கின்றன. இனிமேல் அல்ல, இந்த அக்கிரமங்களேயும் பாவங்களேயும் இப்போதே காண்கிறேம். தேவனுடைய மக்களாகிய நாம் நம்மைச் சூழ்ந்திருக்கிற பாவங்களால் இழுப்புண்டு போகாமல், ஆண்டவருக்கு நம்மைப் பூரணமாய் ஒப்புவித்து, அவருக்குச் சித்தமானதைச் செய்வதிலும், அவர் நம்மை உலகில் அனுப்பின மேலான நோக்கத்தை நிறைவேற்றுவதிலும் அனுதினமும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். பூலோகம் பரலோகம் என்றும், இம்மை மறுமை என்றும் ஆண்டவர் இரண்டாகப் பிரிக்கவில்லே. இம்மையும் மறுமையும் ஒரே தொடர்ச்சிதான். இங்கிருப்பவனே மரணவாசல் மூலமாய் நித்தியத்திற்குள் பிரவேசிக்கிறுன். நித்திய மகிமையோ, நித்திய நிந்தையோ என்பது அவனவனுடைய ஜீவியத்தைப் பொருத்தது. கசப்பை விதைத்து தித்திப்பை அறுப்பவன் யார்? அக்கிரமத்தை விதைத்து ஆசீர்வாதத்தைக் காண்பவன் யார்?

அருமை இரட்சகரே நமக்கு மாதிரி. அவரே நமக்கு வழி. அவரோடுள்ள ஐக்கியமே நமது முடிவை நமக்கு இன்பமாக்கும். கிறிஸ்துவின் ஆராய்ந்து முடியாத ஐசுவரியத்தை நாம் அறியாமல் ஆவிக்குரிய ஜீவியத்தில் தரித்திரராகயிருக்கிறேம். பாவமன்னிப்பு என்கிறேம், அதன் பாக்கியத்தை அறிந்தவர்களல்ல. ஜீவன் என்கிறேம், அதன் வல்லமையை அறிந்தவர்களல்ல. சமாதானம் என்கிறேம், அதன் ஆழத்தை அறிந்தவர்களல்ல. இதுபோலவே, இரட்சிப்பில் ஆசீர்வாதங்கள் ஒவ்வொன்றிலும் வெகு சொற்பமாகவே ருசிபார்த்திருக்கிறேம். இன்னும் நாம் கரையோரமே நிற்கிறேம்; சமுத்திரம்

போன்ற ஆசீர்வாதங்களோ இன்னும் நமக்கு எட்டாதவை யாகவே இருக்கின்றன. கர்த்தர் நமது இருதயத்தை விசால மாக்குவாராக. நமது விசுவாசத்தைப் பெருகச் செய்வாராக. ஆவிக்குரிய பரமகாரியங்களில் பசி தாகத்தை உண்டாக்குவா ராக. ஆண்டவருக்குப் பிரியமான ஜீவியமும், உண்மையான ஊழியமும் நல்ல முடிவை நமக்குத் தரும். நமது கடைசி நேரத்தில் முடிந்தது என்று சொல்லி நமது ஆவியை இரட்சகர் கைகளில் ஒப்புவிக்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்.

# ஏழாம் வார்த்தை

'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்ருர் *(லூ. 23:46)*.

ஆண்டவர் சிலுவைமீதிருந்து அருளிய வார்த்தைகள் ஏழு. முதல் மூன்று வார்த்தைகளும் பன்னிரண்டு மணிக்குமுன் சொல்லப்பட்டவை. பிந்தின நாலு வார்த்தைகளும் மூன்று மணிக்குப்பின் சொல்லப்பட்டவை. முதல் மூன்று வார்த்தைகளை நிறுத்தி நிறுத்தி சாவகாசமாய்ச் சொன்ஞர். பிந்தின நாலு வார்த்தைகளையும் அலைமேல் அலைபோல் ஒன்றுக்குப்பின் ஒன்ருக சில நிமிடங்களில் சொல்லி முடித்தார். முதல் மூன்று வார்த்தைகள் மற்றவர்களுக்காக; பிந்தின நாலு வார்த்தைகள் தம்மைப்பற்றியவை. முந்தின மூன்று வார்த்தைகளைச் சாதாரண குரலில் சொன்ஞர்; பிந்தின வார்த்தைகளையோ பலத்த சத்தமாய்ச் சொன்ஞர்.

ஆரும் வார்த்தையில் அவர் 'முடிந்தது' என்று முழங்கினதைக் கேட்டால் அதற்குமேல் அவர் பேசமாட்டார் என்றும், அத்தோடு சகலமும் முடிந்ததென்றும் நினைப்போம். முடிவுக்கு மேல் ஒரு முடிவா? கடைசிக்குமேல் ஒரு கடைசியா? அப்படியாஞல் ஆறு வார்த்தைகளோடு நிற்கவேண்டியது. முடிந்தது என்று சொன்னவுடனே அவர் ஆவியை விட்டுவிடவேண்டியது. ஆஞல் 'பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்று ஏழாவது வார்த்தையைக் கூறிஞர். அவர் முடிந்தது என்று சொன்னபோதே நமது இரட்சிப்புக்கான காரியங்கள் யாவும் நிறைவேறி முடிந்தது. ஆகையால் அதைப்பற்றி மேலும் அவர் பேசவேண்டிய அவசியமில்லை. இந்த ஏழாம் வார்த்தையோ இனிச் சம்பவிக்கப்போகிற காரியங்களுக்கு ஆரம்பமாயிருக்கிறது. தமது ஆவியைப் பிதாவின் கையில் ஒப்புவிப்பதும், உயிரோடெழும்புவதும், பரலோகம் போவதும், பரிசுத்த ஆவியை அனுப்புவதுமான காரியங்களை

ஏழாம் வார்த்தை எதிர்நோக்குகிறது. முடிந்தது என்பது மனுஷருக்கு; ஆவியை ஒப்புவிப்பது பிதாவுக்கு. முடிந்தது என்னும் சொல்லோடு உலகத்தை வழியனுப்பிக்கொள்ளு கிறார்; ஆவியை ஒப்புவிக்கிறேன் என்னும் சொல்லோடு பிதா விடம் போகிறார். இந்தக் கடைசி வார்த்தை ஏழு வார்த்தை களில் ஒன்றானாலும் அதன் பார்வை வேறே.

பிதாவே என்று தொடங்கி பிதாவே என்று முடித்தார். பிதா வினால் நிறைந்தவர் பிதாவை மறக்கமுடியாது. பிதாவைப் பற்றியே போதித்தார். பிதாவே என்று ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார். இஸ்ரவேலர் ஒரு ஜாதியாக தேவனைப் பிதா என்று அழைத்தார்கள். ஆனால் தனிப்பட்ட மனுஷன் அவரை பிதா என்று அழைக்கத் துணியவில்லை. கிறிஸ்து வந்த பின்புதான் தேவனை நமது அன்புள்ள பிதாவாக அறிந்து பணிந்துகொள்ளுகிறோம். இப்படியிருக்க நாலாம் வார்த்தை யில் மாத்திரம் பிதாவே என்று அவர் சொல்லாமல் 'என் தேவனே, என் தேவனே' என்று அழைத்ததற்குக் காரண மென்ன? அவ்வேளையில் அவர் இருந்த நிலையே அதற்குக் காரணம். உலகத்தின் பாவம் அவர் ஆத்துமாவைச் சூழ்ந்து, அவர் பாவமாகித் தவிக்கும் வேளையில் பிதாவின் முகம் மறைந்தது. எப்பொழுதுமுள்ள இன்ப ஐக்கியத்தை இழந் தார். தமது ஆத்துமாவை மரணத்திலூற்றும் அந்த போராட்ட மான வேளையிலே, கனத்த இருள் அவரை மூடிக்கொள்ளவே, பிதாவே என்று கூப்பிட முடியாமல் தேவனே என்னும் பொது வார்த்தை சொல்லிக் கூப்பிட்டார். என் தேவனே என்ப தற்கு என் பெலனே என்று அர்த்தம். கெட்ட குமாரன் விஷயத்தில் தகப்பன் அன்பு மாறாமலிருந்தும் மகனோ தன்னைக் குமாரன் என்று சொல்லத் தைரியமில்லாமல் கூலிக்காரரில் ஒருவனாக வைத்துக்கொண்டால் போதும் என்று எண்ணினான். அவன் செய்த பாவமே இதற்குக் காரணம். நாம் பிதாவுக் குப் பிரியமாய் நடக்கும்போது, பிதாவே, பிதாவே என்று எவ்வளவு அருமையாய்க் கூப்பிடுகிறோம். நாம் பாவத்தில் அமிழ்ந்திருக்கும் வேளையில் ஐக்கியத்தை இழந்துபோவதால் பிதாவே என்று சொல்ல நாணி, கடவுளே என்கிறோம். நமது பாவத்தை ஏற்றுக்கொண்டு போராடின சமயத்தில் தேவனே என்று சொன்னவர், பாவத்தை மாம்சத்தில் ஆக்கினைக்

குள்ளாகத் தீர்த்து வெற்றியடைந்தபின், பிதாவின் அன்புள்ள முகத்தை மறுபடியும் கண்டு, பிதாவே என்று சொல்லுகிறார்.

## கிறிஸ்துவும் வேதவசனமும்

நமது ஆண்டவர் வேதவசனத்தோடு தமது ஜீவிய ஓட்டத்தை முடிக்கிறார். அவர் சொன்ன நாலாம் வார்த்தை இருபத்திரண்டாம் சங்கீதத்திலுள்ளது. இந்த ஏழாம் வார்த்தை முப்பத்தோராம் சங்கீதத்திலுள்ளது. மற்ற ஐந்து வார்த்தைகளும் கருத்தில் வேதவசனங்களோடு சம்பந்தப் படாதவைகள் அல்ல. சங்கீதத்திலுள்ள இந்த வசனத்தில் முதலில் ஒன்றைத் தாமே கூட்டிக்கொள்ளுகிறார். கடைசியி லுள்ளதை விட்டுவிடுகிறார். 'பிதாவே' என்னும் வார்த்தை யைச் சேர்த்துக்கொள்ளுகிறார். 'நீர் என்னை மீட்டுக்கொண் டீர்' என்பதை விட்டுவிடுகிறார். அவரே நமது மீட்பரா யிருக்கும்போது அவர் மீட்கப்படவேண்டிய அவசியமில்லை. 'பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்றார். பழைய ஏற்பாட்டு பக்தர்கள் ஆவியின் ஏவுதலால் அநேக அருமையான விஷயங்களை எழுதியிருக்கிறார்கள். என்றாலும் தேவகுமாரன் வந்து பிதாவை நமக்கு வெளிப்படுத் தின பிரகாரம் முற்பிதாக்கள் அவரை அறிந்துகொள்ளவில்லை. இந்த வசனத்தோடு **பிதாவே** என்னும் வார்த்தையை ஆண்டவர் சேர்த்தது எவ்வளவு ஆறுதலைக் கொடுக்கிறது. 'பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்.' புதிய ஏற்பாட்டின் கருத்துக்களை, அதாவது பிதாவின் அன்பை யும் கிருபையையும் பழைய ஏற்பாட்டு வசனங்களோடு சேர்ப் போமானால் எவ்வளவோ மாட்சிமையாயிருக்கும்.

இயேசுகிறிஸ்து வேதவசனத்தால் நிறைந்திருந்தார். சிறு பிராய முதல் வேதவாக்கியங்களை அறிந்தும் அவைகளைச் சொந்தமாக்கியும் இருந்தார். தேவபக்தியுள்ள யூதத் தாய்மார் தங்கள் பிள்ளைகளுக்கு வேதவாக்கியங்களைக் கற்றுக்கொடுப் பது வழக்கம். இதிலே ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட மரியம்மாள் யாருக்கும் பிந்தினவர்களல்ல. தன் அருமைப் பிள்ளைக்கு ஒழுங்காய் வேதவசனங்களைக் கற்பித்து வந்தார்கள். அவர் ஜெப ஆலயத்துக்குப் போனபோதெல்லாம் வேதவசனங்

களை ரபிமார் வாசிப்பதை ஆவலோடு கவனிப்பார். வேலை ஒழிந்த நேரங்களில் தாமே தனித்து ஜெப ஆலயத்துக்குப்போய் புத்தகச் சுருளை எடுத்து வாசித்துத் தியானிப்பார். அவர் தச்சுவேலையில் ஈடுபட்டிருக்கும் சமயத்திலும் வேதவசனங் களே அவர் இருதய ஆராய்ச்சியாக இருந்தன. ஆகையால், அவர் ஊழியத்தில் பிரவேசித்தபோது வேதவாக்கியங்களைத் தாராளமாக உபயோகித்தார். சீடர்களுக்குப் போதித்த போது வேதவாக்கியங்களின்படி போதித்தார். வனாந்தரத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டபோது வேதவசனங்கொண்டு இவனை மேற்கொண்டார். விரோதிகள் அவரோடு தர்க்கித்த சமயங்களில் வேதவாக்கியங்களைக்கொண்டு 'அவர்கள் வாயை அடைத்தார். நீங்கள் வேதத்தை வாசிக்கவில்லையா? நீங்கள் வேதவாக்கியங்களை அறியாதிருக்கிறதென்ன? என்று அவர் களைக் கேட்டார். அவரது ஜீவியமும் ஊழியமும் வேதவாக்கி யங்களின் நிறைவேறுதலாயிருந்தன, உயிர்த்தெழுந்த பின்பு தமது சீடர்களுக்குத் தம்மைப்பற்றி வேதவாக்கியங்கள் கூறி யிருப்பதை விவரமாய் எடுத்துப் போதித்தார். தமது தனி ஜீவியத்திலும் பொது ஊழியத்திலும் வேதவசனத்தையே பிரதானமாகக் கையாடினார். அதுபோல அவரது ஆவி பிரியும் இந்தக் கடைசி நேரத்திலும், 'பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்றார். வேறே வார்த்தைகளைச் சொல்லி ஜீவனை விடக்கூடாதா? பிதாவே உம்மிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்துக்கு வந்தேன், மறுபடியும் உலகத்தை விட்டு உம்மண்டை வருகிறேன் என்று சொல்லி ஆவியை விட்டிருக்கலாமே. அது உண்மையாயினும், அதைப் பார்க்கி லும் ஆத்ம நங்கூரம்போன்ற வேதவாக்கைச் சொல்லி ஜீவனை விடுவது அவருக்கு நலமாகத் தோன்றிற்று.

சிலுவையில் வெளிப்பட்ட கிறிஸ்துவின் சிந்தையை இரத்தச் சாட்சியான ஸ்தேவானிடத்திலும் காண்கிறோம். அவர் ஆவியில் வைராக்கியங்கொண்டு யூதருடைய பாவங்களைக் கண்டித்துப் பேசினபோது, அவர்கள் மூர்க்கங்கொண்டு அவரைக் கல்லெறிந்தார்கள். அவரோ: 'கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்' என்றும், 'ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தா திரும்' என்றும் சொல்லி நித்திரையடைந்தார். இரட்சகரைப்

போலவே சத்துருக்களுக்கு மன்னிக்கும்படி ஜெபித்தார். இரட்சகரைப்போலவே தமது ஆவியை ஒப்புவித்து ஜீவனை விட்டார். ஆனால், ஒரு வித்தியாசம். ஆண்டவர் இந்த இரண்டு காரியங்களிலும் தமது பிதாவை நோக்கி ஜெபித்தார். ஸ்தேவானோ தன் இரட்சகராகிய இயேசுவைப் பார்த்து சத்துருக்களுக்கும் மன்னிக்கவும் தமது ஆவியை ஏற்றுக்கொள்ளவும் வேண்டிக்கொண்டார். பாவமற்ற பரிசுத்தர் தம்மை பிதாவின் கைகளில் ஒப்புவித்தார். பாவிகளான நாமோ நமது இரட்சகர் கைகளில் நம்மை ஒப்புவிக்கிறோம். முதலிலிருந்து கடைசி வரை அவரே நமது இரட்சகர். ஒவ்வொரு நெருக்கத்திலும், கஷ்டத்திலும், கவலையிலும், பாடுகளிலும், வேதனையிலும், தத்தளிப்பிலும், திகிலிலும் அன்புள்ள இரட்சகரே நமது அடைக்கலம். அவரே நமக்கு எல்லாம்.

## வேதவசனம் தேவன் அருளிய ஈவு

மரணப்படுக்கையிலிருப்பவர்களுக்கு வேதவசனத்தைப் போல் ஆறுதலையும் நம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுக்கக்கூடியது வேறெதுவுமில்லை. அவர்கள் சுகத்தோடிருக்கும்போது பல புத்தகங்களை வாசித்து ஆனந்திக்கலாம், சரீரத்தைவிட்டு நீங்கும் வேளை வரும்போது அவைகள் ஒன்றுக்கும் உதவா. சிறந்த கல்விமானான ஒருவர் மரணப்படுக்கையிலிருந்தார். அவர் மிகவும் விரும்பக்கூடிய ஒரு புத்தகத்தை அவருக்கு வாசித்தார்கள். அவரோ இந்தப் புத்தகம் எனக்கு வேண்டாம். அது எனக்குப் பிரியமில்லை. என் ஆண்டவருடைய திருவாக்குகளை எனக்கு வாசியுங்கள். அது என்னை உயிர்ப்பிக்கும் என்றார். கர்த்தருடைய வசனம் ஆவியும் ஜீவனுமானது. அதை அடிக்கடி வாசித்துத் தியானிக்கிறவர்கள் பாக்கியவான்கள். இந்த ஜீவிய முழுவதற்கும் நமது ஜீவன் பிரியும் கடைசி நேரத்துக்கும் வேண்டிய அருமையும் ஆறுதலுமான வசனங்கள் வேதாகமத்தில் உண்டு. அவ்வசனங்கள் நமக்குள் வாசமாயிராமல், புத்தகத்தில் மாத்திரம் இருந்தால் பிரயோஜனமில்லை. எவ்வளவு வேதவசனங்கள் நமக்குள் இருக்கிறதோ அவ்வளவுதான் நமது சொந்த வேதாகமம். மேஜையின்மேலிருக்கிற வேதாகமம் நமக்குச் சொந்தமாகாது. நமது ஆண்டவருக்குள் வேதவசனங்கள் சம்பூரணமாயிருந்தது

போல நமக்குள்ளுமிருந்தால் சகல காரியங்களிலும் அவைகள் நம்மைத் தாங்கி வழிநடத்தும். படுக்கும்போது நம்மைக் காப்பாற்றும், விழிக்கும்போது நம்மோடு சம்பாஷிக்கும், நடக்கும்போது நமது வழிக்கு ஒளியாயிருக்கும். நமது ஜீவன் பிரியும் கடைசி நேரத்தில் பரம ஒளியை நமக்குள் பிரவேசிக்கச் செய்து, அந்தகாரத்தை ஒழித்து, திட நம்பிக்கையோடே இரட்சகரிடம் போக ஆதரவளிக்கும். இக்காலத்தில் அநேகர் வேதத்தை மதிக்கிறதில்லை. வேலைகள் அதிகம், வாசிக்க நேரமில்லை. ஆனால், கட்டுக்கதைகளையும் வர்த்தமானங்களையும் ஆவலோடு ஒழுங்காய்ப் படிப்பார்கள். தங்களுக்கு நித்திய ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் வேதவசனத்தையோ அசட்டை செய்கிறார்கள். வேத அசட்டை தேவ அசட்டை. ஒருவன் வேதத்தைப் புறக்கணித்து தேவனிடத்தில் பற்றுதலாயிருப்பான் என்பது வீண்பேச்சு. கர்த்தருடைய ஜீவவார்த்தைகளை மதிக்காததினாலேதான் பயங்கரமான யுத்தத்தால் இன்று உலகம் அழிகிறது. வேதத்தை மதிக்காத ஒருவன் சாக நேரிட்டால் அவனைத் தைரியப்படுத்தும் வேறு வார்த்தைகளை எந்த மனுஷனும் அவனோடு பேசமுடியாது.

## வேதவசனத்தை ஜெபமாக்குகிறார்

ஆண்டவர் தமது ஆவியை விடும் நேரத்தில் வேதவசனத்தைச் சொன்னதுமாத்திரமல்ல, அந்த வசனத்தையே ஜெபமாக்கினார். அவர் தமது கடைசி நேரத்தில் தம் சொந்த வார்த்தைகளைச் சொல்லி எவ்வளவோ அருமையாய் ஜெபித்து ஆவியை விட்டிருக்கலாம். அப்படிச் செய்யாமல், 'பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்று வேதவசனத்தையே ஜெபமாகச் சொல்லி சரீரத்தை விட்டுப் பிரிந்தார். ஆண்டவர் சிலுவையில் சொன்ன ஏழு வார்த்தைகளில் முதலும், நடுவும், கடைசியும் ஜெபமாகும். அவர் வேதவசனத்தால் நிறைந்திருந்ததுபோலவே, ஜெப சிந்தையிலும் நிறைந்திருந்தார். அவர் எப்பொழுதும் ஜெபிக்கிற சுபாவமுள்ளவராதலால், சிலுவையில் கொடிய வேதனைப்படும் சமயத்திலும் ஜெபிக்கத் தவறவில்லை. ஜெபத்தோடே தமது ஓட்டத்தை முடித்தார்.

நாம் எப்பொழுதும் எல்லாக் காரியங்களுக்காகவும் ஜெபிக்க வேண்டியது அவசியம். விசேஷித்த சமயங்களில் நாம் விசேஷித்து ஜெபிக்கவேண்டும். துன்பங்கள் பெருகும்போது, வியாதியால் பாடுபடும்போது, ஆபத்துகள் சமீபிக்கும்போது, மனுஷர் நம்மைக் கைவிடும்போது, சத்துருக்கள் தீமை செய்யும்போது நாம் தேவனை நோக்கி ஜெபிக்கவேண்டும். வேறு வழியில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக நமது மரணப்படுக்கையில் ஜெபம் மிகவும் அவசியம். இவ்வளவு காலமாய் வாசஞ் செய்த உலகத்தை விட்டு மறைகிறோம். நமக்கு அருமையானவர்களையும், இனத்தார் சிநேகிதர்களையும், உத்தியோகம் சம்பாத்தியத்தையும், சொத்து சுதந்தரங்களையும் விட்டுப் பிரிகிறோம். துணைக்குக்கூட வருவாரில்லை. தனித்தே மறுமைக்குட் பிரவேசிக்கவேண்டும். இப்படிப்பட்ட சமயத்தில் நமக்குச் சகாயர் யார்? அருமை இரட்சகரை நோக்கி ஜெபித்து நம்மை அவர் பாதுகாப்புக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர் நம்மிடத்தில் வந்து நம்மைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ளுகிறார். கர்த்தர் நம்மோடிருப்பதால் நாம் பயப்படுவதில்லை. 'நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்.'

தேவனற்ற மரணப்படுக்கை எவ்வளவு சஞ்சலமும் பயங்கரமுமானது! அநேகருடைய முடிவு அப்படியேயிருக்கிறது. சுகமும் பலமுமாயிருந்த காலங்களில் ஆண்டவரைத் தேடாதவர்கள் கடைசி நேரத்தில் மாத்திரம் எப்படி தேடப்போகிறார்கள்? காலமெல்லாம் உலகத்தில் பற்றுதல் வைத்தவர்களுக்கு ஜீவன் போகிற நேரத்தில் பரமவாசஸ்தலத்தை வாஞ்சிக்கும் வழக்கம் எப்படி வரும்? ஆகையால் தேவனைப்பற்றி, மறுமையைப்பற்றிப் பேசுவது அவர்களுக்குப் பிரியமிராது. ஒருவர் மரணப்படுக்கையிலிருந்தபோது சிலர் ஜெபிக்கும்படி வந்தார்கள். ஜெபித்தால் வியாதியஸ்தருக்கு தான் சாகப்போகிறேனோ என்கிற பயமுண்டாகுமென்று எண்ணி ஜெபம் செய்யவேண்டாமென்று வீட்டிலிருந்தவர்கள் தடுத்துவிட்டார்கள். எக்காலமும் ஜெப சிந்தையுள்ளவர்களுக்கு மரணப்படுக்கையில் ஜெபிப்பது இயல்பாயிருக்கும்.

நாம் நமது சுய வார்த்தைகளைச் சொல்லி ஜெபிப்பதிலும் வேதவாக்கியங்களை ஜெபமாக்குவோமானால் எவ்வளவோ வல்லமையுள்ளதாயிருக்கும். யாக்கோபு பெயர்ஷேபாவை விட்டுப் பதான் அராமிலுள்ள தன் மாமன் வீட்டுக்கு ஓடிப் போகையில், தேவன் அவருக்குத் தரிசனமாகி: நான் உன்னோடிருப்பேன், நீ போகிற இடமெல்லாம் உன்னைக் காப்பேன், இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன், நான் உனக்குச் சொன்னதைச் செய்து தீர்க்குமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார். யாக்கோபு இருபது வருடம் கழித்துத் தன் தேசத்துக்குத் திரும்புகையில் ஏசா எதிர்கொண்டு வருவதை அறிந்து தேவனைப் பார்த்து: என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமானவரே, உன் தேசத்துக்குத் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்றும், உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன் என்றும் அடியேனுக்குச் சொன்னீரே, என் சகோதரன் ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும் என்று ஜெபம்பண்ணினார். ஆண்டவர் தமது வாக்கைக் கனப்படுத்தி யாக்கோபைக் காப்பாற்றினார். ஒரு தகப்பன் ஐரோப்பாவுக்குப் பிரயாணம் போகிற தன் மகனுக்காக ஜெபம்பண்ணினார். 121ஆம் சங்கீதத்தையும் இன்னும் வேறு அநேக வேதவாக்குகளையும் வரிசையாகச் சொல்லி ஊக்கமாய் ஜெபித்தார். அதைக் கேட்டவர்கள் எல்லாருடைய இருதயங்களில் ஆழ்ந்த உணர்ச்சியும் பரவசமுமுண்டானது. ஆண்டவர் செய்ததுபோல நாமும் வேதவசனத்தை ஜெபமாக்கவேண்டும். நமது சுய இஷ்டம் போல் ஜெபிப்பதால் நிச்சயமில்லை. தேவவாக்கைக்கொண்டு தேவனோடு பேசுவது வல்லமையுள்ளது, அவர் தமது வாக்குக்குக் கட்டுப்பட்டவர். 'நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்' என்றார். வேதவாக்கியங்களின்படி போதிக்க மாத்திரமல்ல, வேதவாக்கியங்களின்படி ஜெபிக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும். நமக்கு எத்திசையிலிருந்தும் ஒத்தாசை வராவிட்டால்: 'எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்' என்று விசு

வாசத்தோடு ஜெபித்தால் ஒத்தாசை வராமலிராது. மிகவும் தத்தளிப்பான சமயத்தில்: 'மலை விலகினாலும் பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலுமிருக்கும் என்று என்மேல் மனதுருகுகிற கர்த்தராகிய நீர் சொன்னீரே' என்று ஜெபிக்கலாம். 'கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் ஒருக்காலும் வெட்கமடையாதபடி செய்யும்' என்று ஜெபிக்கலாம். 'உம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் சேர்ந்து நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று சொன்னீரே.' எனக்கு விரோதமாயிருக்கும் காரியங்களை அடியேனுக்கு அனுகூலமாக்கியருளும் என்று ஜெபிக்கலாம். நாம் எடுத்து ஜெபிக்கத்தக்கதான, நமது ஆபத்து அவசரங்களுக்கேற்ற எத்தனையோ அருமையான வாக்குகள் வேதத்தில் உண்டு. வேதவாக்கியங்களைக்கொண்டு ஜெபிப்பது நமக்குள் நிச்சயத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும். தேவபக்தியுள்ள பிரசங்கி ஒருவர் இருந்தார். வேதத்தின்மேல் அதிக வாஞ்சையுள்ளவர். திடீரென கண்பார்வையை இழந்தார். என்றாலும் மரணபரியந்தம் வேதவாக்கியங்கள் நிறைந்த அவருடைய பிரசங்கங்களைக் கேட்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். வேதம் அவருக்குள்ளிருந்தது. அவர் கண்ணிழந்தும் வேதத்தை இழக்கவில்லை. இப்படியிருக்க வேதம் அறியாத ஒரு மனுஷன் வேதவசனங்களை எப்படி ஜெபமாக்குவான்? வேதவாக்கியங்களின் அறிவும் ஜெப சிந்தையும் உத்தம கிறிஸ்தவனுடைய இலட்சணம்.

## தமது ஆவியை ஒப்புவித்தார்

தேவாலயமானது பிராகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலமென மூன்று பாகங்கள் உள்ளது. அதுபோலவே மனுஷனும் ஆவி, ஆத்மா, சரீரமென மூன்று பாகங்கள் உள்ளவன். இவைகளில் சரீரம் பூமியோடு சம்பந்தப்பட்டது. அது மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டு மண்ணில் விளையும் பதார்த்தங்களாலே போஷிக்கப்படுகிறது. தேவன் நமது சரீரத்தை நாம் பிரமிக்கத்தக்க அதிசயமாக உண்டாக்கியிருக்கிறார். நமது சரீரம் ஆண்டவருக்குச் சொந்தம். அது அவர்

வாசம்பண்ணும் ஆலயம். இந்த சரீரத்தின் மூலமாகத்தான் நாம்தேவராஜ்யத்தின்ஊழியத்தைநிறைவேற்றவேண்டியதாயிருக்கிறது. அதை நாம் அற்பமாக நினைத்து பாவச் செயல்களால் கெடுத்துவிடக்கூடாது. நமது ஜீவன் பிரியும்போது மண்ணான சரீரம் மண்ணுக்குத் திரும்பி மண்ணோடு கலந்து போகிறது. அந்த நிலைமைக்கு நித்திரை என்று பேர். கர்த்தர் திரும்ப வரும்போது அதிசயமாய் நமது சரீரத்தை எழுப்பி, தமது மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

நமது ஆத்மா ஆவிக்கும் சரீரத்திற்கும் நடுவில் இருந்து கிரியை செய்கிறது. தேவன் மண்ணிலிருந்து மனுஷனை உண்டாக்கினபோது அவன் நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதினார். அப்படியே மனுஷன் உயிருள்ள ஆத்துமாவானான். ஆத்மா ஜீவனைக் குறிக்கும். ஆண்டவர் ஓரிடத்தில் 'தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபமென்ன?' என்றும், அதே விஷயத்தைப் பேசுகையில் 'தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபமென்ன?' என்றும் கேட்டார். 'என் ஆத்மா கலங்குகிறது' என்றும், 'என் ஆத்மா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது' என்றும் அவரே சொன்னார். தமது சீடர்களைப் பார்த்து, 'ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் தள்ளி அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்' என்றார். ஆத்மா ஜீவனாயிருப்பதுபோலவே அறிவும், ஞானமும், வல்லமையும் உள்ளதாயிருக்கிறது. அது ஆவிக்கும் சரீரத்துக்கும் நடுவில் இருக்கிறது. ஆத்மா சரீரத்தோடு சேர்ந்து பெரிய காரியங்களை நடப்பிக்க முடியும். மறுபக்கம் ஆவியோடு சேர்ந்து தேவகாரியங்களில் உதவிசெய்ய முடியும்.

சரீரம் முற்றிலும் மண்ணோடு சம்பந்தப்பட்டதுபோல ஆவி தேவனோடும் நித்தியத்தோடும் சம்பந்தப்பட்டது. நமக்கும் தேவனுக்குமுள்ள சகல காரியங்களும் ஆவியின் மூலமாகவே நடக்கின்றன. ஆவிதான் மெய்யான மனுஷன். அறிவிலுள்ள ஆத்மா ஆவியோடே சேர்ந்துகொள்ளும்போது தேவபக்திக்கடுத்த காரியங்கள் வெகு சிறப்பாய் நடந்தேறும். அது சரீர இச்சைகளுக்கு இணங்கி சரீரத்தோடு சேர்ந்துகொள்ளும்போது பாவச் செயல் விளையும். இதனாலேதான் கல்வியில் சிறந்த மனுஷரில் சிலர் பாவத்தில் அமிழ்ந்துபோகிறார்கள். அவர்கள்ஆத்மாவாகிய புத்திஆவியினால் நடத்தப்படாததால்

கேவலமாய் நடக்கிறார்கள். ஆனால், ஆத்மா சரீரத்தையும் சேர்த்துக்கொண்டு ஆவியோடு இணங்கி நடக்குமானால் மகத்துவமான காரியங்களை அது செய்யக்கூடும். அப்பொழுது பவுல் சொல்லுகிறபடி ஆண்டவர் வரும்போது நமது ஆவி, ஆத்மா, சரீர முழுவதும் குற்றமற்றதாய்க் காணப்படும். ஆத்மா ஜீவனாகச் சரீரத்தோடும், அறிவாக ஆவியோடும் சம்பந்தப்பட்டிருக்கிறது. 'என் ஆத்மா கர்த்தரை மகிமைப் படுத்துகிறது; என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களி கூறுகிறது' என்று மரியம்மாள் பாடினார்கள். ஆவிக்கும் ஆத்மாவுக்குமுள்ள சம்பந்தத்தினாலே வசனத்தைப் போதிக் கிறவர்கள் 'ஆத்மாவும் சரீரமும்' என்றும், 'ஆவியும் சரீரமும்' என்றும் மனுஷனை இருபாகங்கள் உள்ளவனாகப் பேசுவார்கள். ஆவி, ஆத்மா, சரீரம் இம்மூன்றும் சேர்ந்ததே மனுஷன். இவைகளில் ஆவியே பிரதானம். அது தேவனோடு சம்பந்தப் பட்டது. தேவ ஆவியானவர் நமது ஆவியோடு சேர்ந்து சாட்சி கொடுப்பதாக பவுல் எழுதுகிறார். அது உண்மை என்பதை நாமும் அனுபவத்தில் அறிவோம். ஆண்டவர் ஜீவனை விடும் சமயத்தில் தமது சரீரத்தைப்பற்றியோ, ஆத்துமாவைப் பற்றியோ ஒன்றும் சொல்லாமல்: 'பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்றார். அவர் தமது ஆத்து மாவை மரணத்தில் ஊற்றினார். தமது சரீரத்தை மனுஷர் கைகளில் விட்டுவிட்டார். தமது ஆவியையோ பிதாவின் கைகளில் ஒப்புவித்து சரீரத்தை விட்டுப் பிரிந்தார்.

இதுவரை பாவிகளின் கைகளில் அகப்பட்டுப் பாடுபட்டவர், அவர்கள் கைகளிலிருந்து விலகி பரமபிதாவின் கைகளுக்குத் தம்மை ஒப்புவித்தார். தமது சரீரம் மகிமையோடு எழும்பும் வரை, தமது ஆவி பிதாவின் பாதுகாப்பில் இருப்பது அவருக்கு எவ்வளவு சந்தோஷம்! இது அவருக்கு மரணமாகுமா? ஒருக்காலுமாகாது. சரீரத்திலிருந்தவர் பூரண அறிவோடும், தெளிவான புத்தியோடும், மிகுந்த சந்தோஷத்தோடும் அன்புள்ள பிதாவிடம் போவது மரணமாகுமா? அவர் பிதாவின் கைகளில் தமது ஆவியை ஒப்புவித்ததை மரணமென்று பேசுகிறோம். அவர் சிலுவையில் மரித்தார் என்று சொல்லும் போது, இந்த ஏழாம் வார்த்தையை நினைக்கிறோம். இந்த ஏழாம் வார்த்தை அவர் உலகத்தை இரட்சிக்கும்படி ஏற்றுக்

கொண்ட மரணமாயிருந்தால் அந்த மரணம் நிறைவேறுவதற்கு முன்னே இரட்சிப்பு முடிந்தது என்று அவர் எப்படிச் சொல்லலாம்? கிறிஸ்துவின் ஜீவியம், ஊழியத்தில் அவரது மரணமே பிரதானம். அவர் மரிக்காவிட்டால் உலகத்திற்கு இரட்சிப்பில்லை. மரிப்பதற்காகவே அவர் உலகத்திற்கு வந்தார். அப்படியிருக்க மரிக்காமலிருக்கும்போதே இரட்சிப்புக்கான காரியங்கள் எல்லாம் நிறைவேறி முடிந்தது என்று அவர் எப்படிச் சொல்லமுடியும்? ஆகையால் பிதாவின் கைகளில் தமது ஆவியை ஒப்புவித்தது அவருக்கு மரணமாகாது. நமக்கும் அது மரணமாகாது. நமது சரீரத்தை விட்டு ஆவி பிரிவதிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி ஆண்டவர் வரவில்லை. அது நல்லார் பொல்லார் எல்லாருக்கும் ஏற்பட்ட வழியாயிருக்கிறது. அதை மரணமென்று சொல்லாமல் நித்திரை என்று சொல்லுகிறார். மரணமென்பது நாம் உயிரோடிருக்கும் போதே நம்மை ஆண்டுகொண்டிருக்கிறது. இந்த உள்ளான மரணத்திலிருந்து விசுவாசிகளை ஆண்டவர் இப்போதே இரட்சிக்கிறார். அவர் பிறப்பில் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்துக்கு வந்தார். அவர் ஆவியை ஒப்புக்கொடுத்ததில், உலகத்தைவிட்டு மறுபடியும் பிதாவிடம் சென்றார். அவர் ஏற்றுக்கொண்டு நிறைவேற்ற வந்த மரணம் நாலாம் வார்த்தைக்கு முந்தியே அனுபவித்தாயிற்று. அந்த மரணத்துக்குத்தான் அவர் பயந்தார். அந்த மரணத்தை எதிர்பார்த்தே தோட்டத்தில் திகிலடையவும், மிகுந்த வியாகுலப்படவும், இரத்த வேர்வை சிந்தவும் நேரிட்டது. ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும் அந்த வேளை தம்மைவிட்டு நீங்கக்கூடாதாவென்று பிதாவிடம் மன்றாடினார். அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணினாலொழிய உலகத்துக்கு இரட்சிப்பில்லை என்று கண்டபோது பானம்பண்ணச் சம்மதித்தார். பன்னிரண்டு முதல் மூன்றும் மணிவரை அந்தப் பயங்கரமான வேளைக்குள்ளிருந்து மரணத்தை ருசிபார்த்தார். அவர் பாவமாக்கப்பட்ட அந்த நேரத்தில் பிதாவைக் காணோம். எவ்வளவு கொடிய பாடுகளையும் சாந்தமாய்ச் சகிக்கும் ஆண்டவர் பிதாவின் முகம் மறையச் சகிக்கமாட்டார். அது அவருக்கு மரணமாயிருந்தது. தகப்பனைவிட்டுப் பிரிந்த கெட்ட மகனைப்பற்றி: 'என் குமாரன் மரித்தான்' என்று தகப்பன் சொன்னார்.

ஜீவனாகிய பிதாவின் பிரிவே கிறிஸ்துவுக்கு மரணமாயிற்று. இந்த மரணத்துக்கு நமது பாவம் காரணமாயிற்று. அந்த மரண இரகசியத்தை நாம் அறியமுடியாது. 'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்று சொன்னவருக்கே அதன் இரகசியம் தெரியும். இந்த மரணத்தில் அவர் வெற்றியடைந்தபின் எல்லாம் முடிந்தது என்று முழங்கினார். எல்லாம் முடிந்த பிறகு பிதாவிடம் போகிறார், அவர் ஜீவனை எடுக்க ஒருவனாலும் முடியாது. அவரே அதைக் கொடுத்தார், மறுபடியும் எடுத்துக்கொண்டார். பிதாவின் கைகளில் ஆவியை ஒப்புவித்தது அவருக்கு அளவற்ற சந்தோஷம். பிதாவிடம் அவர் போவதற்காக சீடர்கள் சந்தோஷப்படவேண்டும் என்றார் (யோ. 14:28). ஆவியை ஒப்புவித்ததை மரணமென்று அவர் பேசவில்லை. பிதாவிடம் போவதைப்பற்றி அவர் திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவுமில்லை. பிதாவிடம் போவதை தம்மைவிட்டு நீங்கிப் போகும்படி அவர் ஜெபிக்கவில்லை. சந்தோஷமாக தமது ஆவியைப் பிதாவிடம் ஒப்புவித்தார். அது அவருக்கு ஒரு பிரயாணம்போலிருந்தது. அவர் சரீரத்தினின்று ஆவி நீங்கினதை மரணமென்று சொல்லவேண்டுமானால், அவர் தமது ஆத்துமாவில் அனுபவித்த புத்திக்கெட்டாத மரணத்துக்கு அது புறம்பான அடையாளம் என்கலாம்.

ஆண்டவர் சிலுவையில் அடைந்த வெற்றியினால் தமது அடியாரை ஆண்டுகொண்டிருந்த மரண பயத்தை அகற்றினார். இரட்சிக்கப்படாதவர்கள் உயிரோடிருக்கும்போதே மரித்தவர்களாயிருக்கிறார்கள். அவரை ஜீவனாக ஏற்றுக்கொண்டவர்கள் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பிரவேசிக்கிறார்கள். இனி அவர்கள் ஜீவனின் பிள்ளைகளேயல்லாமல் மரணத்தின் பிள்ளைகளல்ல. இப்பொழுதே அவர்களுடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. அவர்களுடைய கடைசி நேரம் வரும்போது தங்கள் இரட்சகர் செய்ததுபோலவே, தங்கள் ஆவியை ஆண்டவர் கைகளில் ஒப்புவித்து அவரிடம் போகிறார்கள். சரீரத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவிடம் போவது அவர்களுக்கு ஓர் அறையிலிருந்து மறு அறைக்குப் போவதுபோலிருக்கிறதேயன்றி மரணமாகாது. அது மறுமைக்குட் பிரவேசிக்கும் ஒரு

வாசல்போலாகிறது. அவர்கள் பாடுகளும் வேதனைகளும் நீங்கி தங்கள் இரட்சகரிடம் சென்று பாக்கியமான வாழ்வை அனுபவிக்கிறார்கள்.

இப்படியிருக்க, 'மனுஷன் மரணத்தோடே அழிந்துபோகிறான், அவன் மறுமைக்குள் பிரவேசிப்பதில்லை, ஏனென்றால் தலையில் மூளையிருக்கிறது, அதன் மூலமாய் அவன் யோசிக்கவும் காரியங்களை நடப்பிக்கவும் கூடியவனாயிருக்கிறான், சரீரம் அழியும்போது மூளையும் அழிகிறது. அதன்பின்பு மனுஷனுக்கு யோசனையோ அறிவோ கிடையாது, ஆகையால் மனுஷர் மரிக்கும்போது அழிந்துபோகிறார்கள். அப்புறம் கிறிஸ்து வரும்போது அவர்களை எழுப்பி அவர்களுக்கு ஜீவனைக் கொடுக்கிறார்' என்று சிலர் போதிக்கிறார்கள். இது வேதவசனங்களுக்கும் அனுபவத்திற்கும் நேர் எதிரிடையான போதனை. குமாரனை ஏற்றுக்கொள்ளுகிறவன் நித்திய ஜீவனை இப்பொழுதே ஏற்றுக்கொள்ளுகிறான். அவரே நமக்குள் ஜீவனாகப் பிழைக்கிறார். இது நமது ஜீவியத்தில் பெரிய மாறுதலை உண்டாக்குகிறது. குமாரனை ஜீவனாகப் பெற்று அவராலே பிழைக்கிறவன், மரிக்கும்போது அந்த ஜீவனை இழந்துபோய் அநேக வருடங்களுக்கு அப்புறம் அந்த ஜீவனைப் பெறுவான் என்பது எப்படிப் பொருந்தும்? தேவ அன்பை நாம் பெற்றுக்கொண்டு, நாமும் அவரில் அன்பாயிருக்க, மரணம் வந்ததும் நாம் முழுவதும் அழிந்து அந்த அன்பை இழந்துபோவோம் என்பதையும், அநேக வருடங்களுக்கு அப்புறம் அந்த அன்பை மறுபடியும் காண்போம் என்பதையும் யார் ஏற்றுக்கொள்ள முடியும்? 'அன்பு ஒருக்காலும் ஒழியாது' என்று வேதம் கூறவில்லையா? மேலும் அன்பின் இரட்சகர் தமது பிள்ளைகளின் அன்பை இழந்து எத்தனை வருடம் காத்திருப்பார்? இப்போது ஆண்டவரும் நாமும் ஒருவரிலொருவர் ஐக்கியப்பட்டு ஜீவிக்க, மரணத்தால் இந்த தேவ ஐக்கியம் அழிந்து, பின்பு அநேக வருடங்களுக்குப் பிறகு அந்த ஐக்கியம் கிடைக்கும் என்பதை ஆண்டவர் சகிப்பாரா? இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீஸில் இருப்பாயென்று ஆண்டவர் சொல்லியிருக்க, கள்ளன் மரித்து இந்த இரண்டாயிரம் வருடக்காலமாக பரதீஸையோ கிறிஸ்துவையோ காணாமல் அழிந்துபோனான் என்று சொல்வது நியாயமா? சரீரத்தைவிட்டுப் பிரிந்து

கிறிஸ்துவுடன்கூட இருப்பேன் என்று பவுல் சொல்லியிருக்க, பவுல் மரணத்தோடு அழிந்துபோனார், அவர் கிறிஸ்துவிடம் போகவில்லை என்று சொல்வது சரியா? 'நான் பிழைக்கிறபடியால் நீங்களும் பிழைப்பீர்கள்' என்று ஆண்டவர் சொல்லியிருக்க, அந்த உயிர்த்தெழுதலின் ஜீவனை அடியார் பெற்றிருக்க, ஒருவரும் பிழைக்கிறதில்லை, மூளை அழிந்ததோடு எல்லாம் அழிந்தது என்று சொல்லத்தகுமா? மேலும் மூளையே மனுஷனுடைய அறிவுக்கு மூலகாரணமல்லவே. மூளைதான் மனதும், யோசனையும், புத்தியுமானால் அந்த மூளையைப்பற்றி ஆராய்ச்சி செய்து புத்தகம் எழுதியிருக்கிறார்களே, அந்த அறிவு எந்த மூளையிலிருந்து வந்தது? ஆவியாயிருக்கிற கணக்கற்ற தேவதூதர்களுக்கு மூளையில்லையே. அவர்கள் எப்படி யோசிக்கிறார்கள், தேவசித்தத்தை நிறைவேற்றுகிறார்கள்? ஆவியே மனுஷனில் பிரதானமான பாகம். ஆவியே உள்ளான மனுஷன். சரீரம் அழிவதால் சகலமும் அழிந்ததென்று பேசுவது தவறு. அதிக விருத்தாப்பியரான ஒரு தேவ பக்தனைப் பார்த்து: ஐயா, சுகமாயிருக்கிறீர்களாவென்று கேட்டபோது அவர்: நான் நல்ல சுகமாயிருக்கிறேன், ஆனால் நான் குடியிருக்கிற வீடுதான் மோசமான நிலைமையிலிருக்கிறது, சீக்கிரம் நான் அதைவிட்டு வெளியேற வேண்டியதிருக்கும் என்றார். இங்கே மோசமான நிலைமையிலிருந்த வீடு அவருடைய சரீரம். அவருடைய ஆவியோ ஆண்டவரிடம்போக பூரண ஆயத்தமாயிருந்தது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு வெகு காலத்துக்குமுன் மரித்துப்போயிருக்க, தேவன் மோசேயிடம்: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமா யிருக்கிறேன் என்றார். இல்லாமற்போனவர்களுக்கு அவர் தேவனாயிருப்பது எப்படி? அவர்கள் தேவனுக்கு முன்பாக பிழைத்திருக்கிறார்களே. எபிரேயர் நிருபத்தார் தேவனுடைய ஜனங்களுக்கு எழுதும்போது: 'நீங்கள் ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்' என்கிறார். ஆகையால் சரீரத்தைவிட்டுப் பிரியும் விசுவாசிகள் தங்கள் ஆண்டவரிடம் போய்ச் சேருகிறார்கள் என்பது

நிச்சயம். அவர் கரத்திலிருந்து ஒன்றும் நம்மைப் பிரிக்க முடியாது. 'மரணமானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்' என்றார் பவுல் (ரோ. 8:38,39).

## நல்ல ஜீவியமும் நல்ல முடிவும்

எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமாய் நடந்துகொண்ட குமாரன் முடிவில் சந்தோஷமாய் பிதாவின் கைகளில் தமது ஆவியை ஒப்புவித்தார். சமாதானத்தோடும் அமர்ந்த சிந்தையோடும் மகிமையில் பிரவேசித்தார். நமது முடிவு எப்படியிருக்கவேண்டும் என்பதற்கு அவர் மாதிரியாயிருக்கிறார். நமது கடைசி நேரத்தில் நாம் ஆண்டவரிடம் போக வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். 'நீதிமான் மரிப்பது போல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவைப்போலிருப்பதாக' என்று பிலேயாம் விரும்பினான். முடிவோ பயங்கரமாயிற்று. ஏனென்றால் அவன் விருப்பம் நன்றாயிருந்தது, நடக்கையோ மோசமாயிருந்தது. முடிவைப்பற்றிக் கவலைப்படுவதினால் என்ன பிரயோஜனம்? வழி சரியாயிருந்தால் சேரும் இடமும் சரியாயிருக்கும். கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. மரம் நல்லதென்றால் கனியும் நன்றாயிருக்கும்.

சிலர் தங்கள் ஆவியைப் பார்க்கிலும் தங்கள் சரீரத்தைப் பற்றி அதிகக் கவலை எடுத்துக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மரித்தால் தங்களுக்கு இவ்விதமாக உடுத்தவேண்டும், இவ்விதமான பெட்டி செய்யவேண்டும், கல்லறைத் தோட்டத்தில் இன்ன இடத்தில்தான் வைக்கவேண்டும், தங்கள் கல்லறையை இன்னின்ன விதமாய்க் கட்டவேண்டும் என்று சொந்தக்காரருக்கு ஏற்கெனவே உத்தரவிடுகிறார்கள். மற்றவர்கள் தங்கள் மக்கள் மனுஷர் சொத்து சுதந்தரம் இவைகளைப் பற்றிய கவலையிலே அமிழ்ந்துபோகிறார்கள். அநேகரிடத்தில் மறுமையைப்பற்றிய நிச்சயமில்லை. காலமெல்லாம் இங்கேயே இருப்பவர்களைப்போலவே சகல காரியங்களிலும் நடக்கிறார்கள். முடிவு வரும்போது தத்தளிக்கிறார்கள். தாங்கள்

ஆவலோடு பற்றிக்கொண்டவைகளைக் கட்டாயம் விட்டுப் பிரியவேண்டும். ஆண்டவரிடத்தில் போவதற்கோ ஆயத்த மில்லை. இரட்சகர் பரலோகம் சென்று நமக்கு வாசஸ்தலங்களை ஆயத்தம்பண்ணுகிறார். ஆவியானவர் நமக்குள் வந்து இங்கே நம்மை ஆயத்தம்பண்ணுகிறார். நமது சரீரம் இங்கேயிருந் தாலும் நமது குடியிருப்பு பரலோகத்திலிருக்கவேண்டும். நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு நாம் நெருங்கி ஜீவிக்கவேண்டும். அவரை அறிகிற அறிவிலும் அன்பிலும் நாளுக்குநாள் நாம் அதிகமதிகமாய் வளரவேண்டும். பரிசுத் தாவியின் உள்ளான கிரியையினாலும், திருவசனத் தியானத்தி னாலும், ஜெப சிந்தையினாலும் கிறிஸ்துவின் சாயலுக்கொப் பாய் நாளுக்குநாள் மறுரூபமாகவேண்டும். மற்றவர்களுடைய இரட்சிப்புக்காக உத்தம ஊழியம் செய்யவேண்டும். நாம் இவ் விதமாய் நடந்துகொள்வோமானால் நமது முடிவைப்பற்றிப் பயப்படவேண்டியதில்லை. நல்ல ஜீவியம் நல்ல முடிவைத் தானாகவே நமக்குக்கொடுக்கும். வேளை வரும்போது 'கர்த்த ராகிய இயேசுவே உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக் கிறேன்' என்று சொல்லி சந்தோஷமாக மகிமையில் பிரவேசிக் கலாம். கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொள்ளாமலும், ஜீவியத்தில் மாறுதலடையாமலும், பரலோக வாஞ்சை யில்லாமலும் காலம் கழித்துவருகிற பேர்க் கிறிஸ்தவர்கள் என்ன செய்வார்கள்? எங்கே போவார்கள்? நாம் கிறிஸ்த வர்களாக எத்தனை ஆராதனைகளுக்குப் போனாலும், எத்தனை நற்கருணையில் சேர்ந்தாலும், ஆலயத்துக்காக எவ்வளவு பணங் களைச் செலவு செய்தாலும், நமது ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதல் இல்லாமலும், 'ஒளியிலுள்ள பரிசுத்தவான்க ளுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு' இப்போதே நாம் தகுதியாக்கப்படாமலும் போனால் நமது முடிவு மிகுந்த ஏமாற்றத்தையே உண்டாக்கும். நாம் ஆண்டவர் சமுகத்தில் சேரத்தகாதவர்களென்று தள்ளப்படுவது எவ்வளவு துக்கமும் பரிதாபமுமான காரியம்! மேலும் நமது முடிவு எப்போது வருமென்று அறியாதிருக்கும்போது மறுமையை மறந்து நிர்விசாரிகளாய்க் காலம் கழிப்பது சரியா? சம்பாதித்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும்படி தேவன் நம்மை இந்த உலகத் துக்கு அனுப்பாமல், அவருக்கு மகிமையாக இங்கே நாம்

பிழைக்கவும், நித்திய பரம வாழ்வுக்காக நம்மை ஆயத்தப் படுத்திக்கொள்ளவும் இந்தச் சுருக்கமான காலத்தை நமக்குத் தந்திருக்கிறார். இதை முற்றிலும் மறந்து, பாவங்களால் இழுப்புண்டு, உலக மக்களாக பிழைப்பது சரியல்ல. எந்த நேரத்தில் ஆண்டவர் நம்மை அழைத்தாலும், இதோ வருகிறேன் இரட்சகரே என்று சொல்லக்கூடிய உத்தம ஜீவியத்தை நமக்கு அருளுவாராக.

# கிறிஸ்துவின் சிலுவை

**'நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே யல்லாமல் வேறொன்றையும் குறித்து ஒருக்காலும் மேன்மை பாராட்டாதிருப்பே னாக'** *(கலா. 6:14)*.

ஒரு நீள மரமும் அதன் குறுக்கே ஒரு சிறு மரமும் சேர்ந்தது சிலுவை. பூர்வத்தில் பாரசீகம், எகிப்து, கிரேக்கு முதலிய தேசங்களில் குற்றவாளிகளைச் சிலுவையிலறைந்து கொல்லும் வழக்கம் இருந்தது. இவர்களிடமிருந்து ரோமரும் சிலுவையை உபயோகிக்கக் கற்றுக்கொண்டார்கள். சிலுவைத் தண்டனை ரோமப் பிரஜைகளுக்கல்ல. ரோமன் சிலுவையைத் தன் கையினாலும் தொடான். அதைப் பார்ப்பதும், அதைப்பற்றிப் பேசுவதும், அதை நினைப்பதுங்கூட ரோமனுக்கு இழிவு. ஆனால் அவர்கள் சிறைபிடித்துவரும் அடிமைகளை, தேசக் கலகக்காரரை, கொலைபாதகர்களைச் சிலுவையிலறைந்து கொல்லுவார்கள். யூதர்களோ குற்றவாளிகளைக் கல்லெறிந்து கொல்லுவார்கள். சிலுவை மரணம் அவமானமும் நிந்தையும் வேதனையும் குரூரமுமானது. அப்படிப்பட்ட சிலுவைமரத்திலே இயேசுவை அறைந்தார்கள். அந்தச் **சிலுவையைக் குறித்தே யன்றி** வேறொன்றையுங் குறித்து ஒருக்காலும் மேன்மை பாராட்டமாட்டேன் என்று பவுல் சொல்லுகிறார். கொலை செய்தவர்களை தூக்குமரத்தில் போடுவது நம் தேசத்து வழக்கம். எவனாகிலும் ஒருவன் அந்தத் தூக்குமரத்தைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டமாட்டேன் என்று சொல்வானானால் ஜனங்கள் என்ன நினைப்பார்கள்? அவனைப் புத்தி சுயாதீனமில்லாத பைத்தியக் காரன் என்பார்கள். அந்தப் பைத்தியக்காரப் பட்டம் பவுலுக் கும் கிடைத்தது. சிலுவை யூதருக்கு இடறல், கிரேக்கருக்குப் பைத்தியம், ரோமருக்கு அருவருப்பு. பவுலுக்கோ அது நிகரற்ற மேன்மையும் மகிமையுமாயிருந்தது. இதற்குக்காரண

மென்ன? சிலுவையில் அநேகர் அறையப்பட்டு மரித்திருக்கிருர்கள். இரண்டு கள்ளரும் சிலுவையில் அறையப்பட்டார்கள். இவர்களுடைய சிலுவையைப்பற்றி யாராகிலும் கனவிலும் நினைத்ததுண்டா? அப்படியிருக்க கிறிஸ்துவின் சிலுவைக்கு உலகமெங்கும் இவ்வளவு மேன்மையும் மகிமையும் வந்ததெப்படி? உலகமாத்திரமல்ல, பரலோகவாசிகளும் சிலுவையின் இரகசியத்தை அறிய ஆவலுள்ளவர்களாயிருக்கிருர்கள்.

பவுல் மேன்மை பாராட்டின சிலுவை எது? அவர் ஆயிரந்தரம் சிலுவை, சிலுவை என்று சொன்னுலும் சிலுவை மரத்தை அவர் நினைத்தவரல்ல. சிலுவையில் அறையுண்டு மரித்த ஆண்டவரையே அவர் நினைக்கிருர். 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை' என்கிருர். அதில் அறையப்பட்டு மரித்தவராலே நிந்தையான சிலுவை மேன்மைபெற்றது. சிலுவையைப்பற்றிய போதனைகள் யாவும் கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்ததேயல்லாமல் சிலுவை மரத்தைக் குறித்தல்ல. விசுவாசிகள் பெற்றுக்கொள்ளும் இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் யாவும் கிறிஸ்துவின் மரண பலனேயன்றி சிலுவை மரத்தால் உண்டானவைகளல்ல. இங்கே சிலுவை என்று நாம் சொல்லும்போதெல்லாம் கிறிஸ்துவின் மரணத்தையே நினைக்கிருேம். ஆகையால் சிலுவை மரத்தில் ஏதோ புண்ணியமோ சக்தியோ இருப்பதுபோல் அதைப் பூஜிப்பதும் நமஸ்கரிப்பதும் சரியல்ல. கள்ளன் சிலுவைக்கும் கிறிஸ்துவின் சிலுவைக்கும் வித்தியாசமில்லை. இரண்டும் மரம்தான். இப்புத்தகத்தின் ஆரம்பப் பிரசங்கத்தில் சிலுவைக் காட்சியின் புறம்பான காரியங்களைக் கவனித்த நாம், இந்த முடிவுப் பிரசங்கத்தில் சிலுவையின் ஆவிக்குரிய போதனைகளைக் கவனிப்போம்.

## கிறிஸ்துவின் மரணமில்லாமல் இரட்சிப்பில்லை

அநேகர் கிறிஸ்துவைத் தங்களுக்கு மாதிரியாகத் தெரிந்துகொள்ளுகிருர்கள். அவர் மனுமக்கள் நடுவில் எவ்விதமாக நடந்துகொண்டாரோ அதுபோல் நாமும் நடந்து மோட்சக் கரை சேரவேண்டும் என்றுர்கள். கிறிஸ்து நமது ஜீவியத்திற்கு மாதிரி என்பதை நாம் மறுக்கிறதில்லை. வேறு அநேகர்

கிறிஸ்துவை விசேஷித்த குருவாக மதிக்கிறூர்கள். அவர் போதனைகளை நாம் கைக்கொண்டு நடக்கவேண்டுமென்றும், மலைப்பிரசங்கத்தை நமது வாழ்க்கைக்குப் பிரமாணமாக்கிக் கொள்ளவேண்டும் என்றும் சொல்லுகிறூர்கள். இதையும் நாம் மறுக்கிறதில்லை. வேறு பலர் கிறிஸ்து இரத்தச்சாட்சியாக மரித்தாரென்றும், சத்தியத்திற்காக சிலுவையில் தமது ஜீவனை விட்டாரென்றும் சொல்லுகிறூர்கள். இதையும் நாம் மறுக்கிறதில்லை. ஆனால் அவருடைய சிலுவை மரணத்தாலேதான் தங்களுக்கு இரட்சிப்பு உண்டென்பதை இவர்கள் அறியவில்லை. கிறிஸ்துவின் ஜீவியம் முழுவதிலும் அவரது மரணமே பிரதானம். அவர் இராப்போஜனத்தை ஏற்படுத்துகையில் அப்பத்தைக் கொடுத்து: இது என் சரீரம் என்றும், இரசத்தைக் கொடுத்து: இது என் இரத்தம் என்றும் சொல்லி, 'என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்' என்றூர். அச்சமயத்தில் சீடர்கள் அதன் கருத்தை அறிந்துகொள்ளாமற் போனாலும், ஆண்டவர் தமது மரணத்தை நினைவுகூரும்படி அதை ஏற்படுத்தினூர் என்பதைப் பிந்தி அறிந்துகொண்டார்கள். பவுல் இதைப்பற்றி எழுதுகையில், 'நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்' என்று சொல்லியிருக்கிறூர்.

நமதாண்டவருடைய ஜீவியத்தில் நாம் என்றும் மறவாமல் நினைவுகூரத்தக்க காரியங்கள் பலவுண்டு. அவரது அற்புத பிறப்பை யார் மறக்கக்கூடும்? உலகிலுள்ள எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி அவரது பிறப்பல்லவா? அப்படியிருந்தும், என் பிறப்பை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்று ஒரு நியமத்தை அவர் ஏற்படுத்தாமல் தமது மரணத்தை நினைவுகூரும்படி சொல்லவேண்டியதென்ன? அவருடைய ஜீவியத்தைக் கவனிப்போம். அது குற்றமற்ற, மாசற்ற, பரிசுத்த ஜீவியமாயிருந்தது. அவரைப்போல் பாவமின்றிப் பிழைத்தவன் ஒருவனுமில்லை. அப்படியிருந்தும்: என் பரிசுத்த ஜீவியத்தை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்று ஒன்றை ஏற்படுத்தினூரா? அவருடைய போதனைகளைக் கவனிப்போம். அவர் பேசினதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை. இன்றும் ஆராய்ந்து

முடியாத ஞானக்களஞ்சியமாயிருக்கிறது. அப்படியிருந்தும் என் போதனைகளை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்று ஒன்றை ஏற்படுத்தினரா? அவரது அற்புத செயல்களைப் பார்ப்போம். எல்லாருடைய கண்கள் காண அவர் நடப்பித்த அதிசயச் செயல்களை யார் மறக்கக்கூடும்? அவருடைய சத்துருக்களே: 'நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே, இதோ உலகமே அவனைப் பின்சென்று போயிற்றே' என்று புலம்பினார்கள். தமது அற்புதங்களை நினைவுகூரும்படி ஏதாவதொன்றை ஏற்படுத்தவுமில்லை. ஆனால் உலகத்தின் பார்வையில் மிகவும் இழிவான தமது சிலுவை மரணத்தை நாம் என்றும் நினைவுகூரும்படி ஏற்பாடு செய்தார். இதற்குக் காரணமென்ன?

அவரது பிறப்பு எவ்வளவு அற்புதமாயிருந்தாலும் அதினாலே நமக்கு இரட்சிப்பு வராதென்பதை அவர் அறிவார். அவரது ஜீவியம் எவ்வளவு பரிசுத்தமாயிருந்தாலும் அது நம்மை இரட்சிக்காதென்பதை அறிவார். அவரது பரிசுத்த ஜீவியத்தை மாதிரியாக பின்பற்றி இரட்சிக்கப்படப் பார்க்கிறவன் ஏமாந்துபோவான். அது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதுபோலாகும். அவர் யார்? நாம் யார்? அவர் கிட்ட அண்டலாமா? அவருடைய போதனைகள் முற்றிலும் ஆவிக்குரியவைகள். ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் அவைகளை அறியமாட்டான், அவைகளைக் கைக்கொண்டு நடக்கவுமாட்டான். இவர்கள் மோட்சம் சேருவதற்குக் குறுக்கு வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். மலைப்பிரசங்கமே அந்த வழி. அவர்கள் அதைக் கைக்கொண்டு நடப்பதோ இன்னும் மலையாகவேயிருக்கிறது. முடிவாக அவருடைய காருண்ய செயல்களைக் கவனிப்போம். அவைகள் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. அவரது நற்கிரியைகள் நமது துர்க்கிரியைகளைக் கண்டிக்கின்றன. அவரைப்போல் கிரியைகளை நடப்பித்தவன் ஒருவனுமில்லை.

அப்படியானால் கிறிஸ்துவின் அற்புத பிறப்பு, அவரது மாசற்ற ஜீவியம், அவரது உன்னத போதனைகள், அவரது அற்புத செயல்கள் நமக்கு அவசியமில்லை என்று சொல்லலாமா? ஒருபோதும் சொல்லக்கூடாது. சகலமும் நமக்கு

அவசியம்தான். ஆனால் கிறிஸ்துவின் மரணமின்றி இவைகள் நம்மை இரட்சிக்கா. ஆண்டவருடைய பூலோக ஜீவியம் அவர் பிறப்பிலிருந்து தொடங்கி சிலுவையில் முடிகிறது. நமது ஜீவியமோ அவர் சிலுவையில் ஆரம்பித்து, பின்பு அவரது ஜீவிய மாதிரி, போதனைகள், கிரியைகளை நோக்கு கிறது. அவர் மரணத்தின் மூலமாய் நமது பாவங்கள் மன்னிக் கப்பட்டு தேவனோடு ஒப்புரவாகிறோம். அவர் பரிசுத்த ஆவியினாலே அற்புதமாகப் பிறந்ததுபோல, அந்த ஆவியின் மூலமாய் நாம் மறுபடி பிறக்கிறோம். இது தேவன் நமக்குள் நடப்பிக்கிற மேலான பிறப்பு. இதன்பின் பிதாவுக்குப் பிரிய மான பிள்ளைகளாக இரட்சகருடைய ஜீவிய மாதிரியைப் பின்பற்ற நாடுகிறோம். பிறக்குமுன் நடப்பாரில்லை. அவர் நமக்கருளும் ஆவியின் பலத்தால் அவரைப்போல் ஜீவிக்க விரும்புகிறோம். அவரோடுள்ள நெருங்கிய ஐக்கியத்தால் அவரது சிறந்த இலட்சணங்களும் தேவ சிந்தையும் நமக்குக் கிடைக்கின்றன. அவர் நமது ஜீவனாக நமக்குள் வசிப்பதினாலே அவருடைய சாயலுக்கொப்பாக நாளுக்குநாள் மறுரூபமடை கிறோம். இதுவே கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றும் உண்மையான வழி. ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் ஆண்டவர் நடந்த மாதிரியை எப்படிப் பின்பற்ற முடியும்? நாம் அவருடைய போதனைகளைக் கைக்கொள்வதும் இது போலவே. முன்னே அவைகள் நமக்கு விளங்கினதில்லை. அவைகளைக் கைக்கொண்டு நடப்பது அசாத்தியமாயிருந்தது. ஆவியினால் மறுபடி பிறந்தபின் புதிதாய் பிறந்த குழந்தை களைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சைகொள்ளுகிறோம். முன்னே விளங்காத காரியங்கள் இப்போது விளங்குகின்றன. முன்னே கைக் கொள்ளமுடியாத அவரது கற்பனைகளை இப்போது மகிழ்ச்சி யோடே கைக்கொண்டு நடக்க பலமடைகிறோம். அவரது காருண்ய செயல்களைக் கவனிப்போம். அவர் எப்படி அதிசய மானவரோ அதுபோல அவரது கிரியைகளும் அதிசயமாயிருந் தன. அவர் எங்கும் எப்பொழுதும் எல்லாருக்கும் நன்மை செய்கிறவராயிருந்தார். அவரோடுள்ள ஐக்கியம் நமது ஜீவியத்தைக் கனிகள் நிறைந்ததாக்குகிறது. ஒரு காலத்தில் துர்க்கிரியைகளாலே சீரழிந்துபோயிருந்த நாம் அவரில் நிலைத்

திருப்பதினுலே நற்கிரியைகளாகிய கனிகளைக் கொடுக்கிறோம். நமது மூலமாய் அநேகர் இரட்சிப்பையும், ஆறுதலையும், சமாதானத்தையும் பெற்று ஆண்டவருக்கு மகிமையாகப் பிழைக்கிறார்கள். கர்த்தருக்குத் தன்னை முற்றிலுமாய் ஒப்புக் கொடுத்த ஒரு சகோதரன் ஒரு சகோதரி மூலமாய் பரமபிதா நடப்பிக்கச் சித்தமாயிருக்கும் மகத்துவமான காரியங்களை நாம் அளவிடமுடியாது. அவர்களிடத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் புரண்டோடும். 'என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினுலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பலமுண்டு' என்று பவுல் சொன்னதுபோல, அவர் நமக்குள் கிரியை நடப்பிக்கிற அளவின்படியே நாம் போராடிப் பிரயாசப்படுகிறோம். இவை யாவற்றிற்கும் மூலகாரணம் கிறிஸ்துவின் மரணமே. நமது பாவங்களுக்காக மரித்து எழுந்த இரட்சகரை நாம் சொந்தமாக்கிக்கொள்ளும்போது நம்மில் மேலான மறு பிறப்பும், அவரது ஜீவிய மாதிரியைப் பின்பற்றும் ஆவலும், அவரது போதனைகளை அறிந்து அவைகளின்படி நடக்கும் பலமும், நமது ஜீவியத்தில் நற்கிரியைகள் நிறைந்தவர்களாகி அநேகருக்கு ஆசீர்வாதமாகப் பிழைக்கும் பாக்கியமும் கிடைக்கிறது. இதுவே இரட்சண்ய ஒழுங்கு. தேவமக்கள் பரிசுத்தவான்களுடைய அனுபவமும் இதுவே. இப்படியிருக்க ஜென்ம சுபாவத்தார் சிலுவையைத் தள்ளிவிட்டு கிறிஸ்துவின் மாதிரிப்படி நடந்து, அவரது போதனைகளை, விசேஷமாய் மலைப்பிரசங்கத்தைக் கைக்கொண்டு மோட்சக் கரை சேரலாம் என்று நினைப்பது சுத்தத் தவறு.

## சிலுவையின் சக்தி

கிறிஸ்துவின் சிலுவை பாவிகளை இழுத்து இரட்சிக்கும் தேவகாந்தம். 'நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்' என்றார். இது அவர் பரலோகத்துக்கு உயர்த்தப்படுவதல்ல வென்பதை யோவான் பிந்தின வசனத்தில் விளக்கிக் காட்டுகிறார். 'தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறார் என்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்' என்கிறார். இரட்சகர் நிக்கொதேமோடு பேசினபோது, 'சர்ப்பமானது

வனாந்தரத்திலே மோசேயினால் உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தம்மை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப் படவேண்டும்' என்றார். வேறொரு சமயம் ஆண்டவர் யூதரைப் பார்த்து: 'நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு நானே அவரென்று அறிவீர்கள்' என்றார். இது சிலுவையைக் குறிக்கும். மனுஷர் அவரைப் பரலோகத்திற்கு உயர்த்தமாட்டார்கள், உயர்த்தவுமுடியாது. கிறிஸ்துவை பரலோகத்திற்கு உயர்த்துவது பிதாவின் வேலை. 'அவர் மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார், ஆதலால் தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி . . . எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.' ஆண்டவர் நம்மை இரட்சிக்கும் வல்லமை சிலுவைமூலம் வெளிப்படுகிறது. தமது அற்புத பிறப்பினால், பரிசுத்த ஜீவியத்தால், தமது போதனைகளால், தமது பலத்த செய்கைகளால் அவர் நம்மை இரட்சிப்பதாகச் சொல்லாமல் தமது சிலுவை மரணத்தின் மூலமாகவே நம்மைத் தம்மிடம் இழுத்துக்கொள்ளுகிறார். அப்படியானால் அவரது பிறப்பு, ஜீவியம், போதனை, கிரியைகள் நமது இரட்சிப்போடு சம்பந்தப்படவில்லையா? அவைகளை நாம் தள்ளிவிடலாமா? கூடாது. அவைகள் ஒன்றோடொன்று சங்கிலிபோல் இணைக்கப்பட்டிருக்கின்றன. அவை யாவும் சேர்ந்து அவருடைய சிலுவை மரணத்துக்கு மேன்மையையும் மதிப்பையும் கொடுக்கிறது. அவர் ஜீவகால முழுவதும் தேவசித்தப்படியே நடந்தார். ஒரு விஷயத்திலாகிலும் அவர் தவறினதில்லை. அவர் ஏதாவது ஒரு காரியத்தில் தவறியிருந்தால் அவர் தம்மையும் இரட்சித்துக்கொள்ளமாட்டார்; நம்மையும் இரட்சித்துக்கொள்ள மாட்டார். அநேகரை நித்திய மகிமையில் சேர்க்கவந்த நமது இரட்சிப்பின் அதிபதியாகிய அவர், சோதனைகள், போராட்டங்கள், உபத்திரவங்கள் மூலமாகப் பூரணராகி சிலுவைக்குச் சென்றார். நன்றாய்ப் பரீட்சிக்கப்பட்டவரும், குற்றமற்றவரும், மாசற்றவருமாய் விளங்கின அவர், தமது மரணத்தின் மூலமாய் நம்மை இரட்சிக்கும்படி சிலுவைக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர் சிலுவைக்கு முன்னுள்ள

காரியங்கள் யாவும் அவர் மரணத்துக்கு மேன்மையையும் மதிப்பையும் கொடுக்கிறது. அவர் மரணத்தில் விளங்கிய அதிசயமான அன்பும் கிருபையும் பாவியின் உள்ளத்தை உருக்கி அவரிடமாக இழுத்துக்கொள்ளுகிறது. கிறிஸ்துவின் மரணமே சிலுவையின் சக்தி. பரலோகத்தில் மீட்கப்பட்டோரின் பாட்டைக் கவனித்தாலும் இதன் உண்மை விளங்கும். அவர்கள் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்தோ, ஜீவியத்தைக் குறித்தோ, போதனைகளைக் குறித்தோ, அற்புதங்களைக் குறித்தோ பாடாமல், அவருடைய மரணத்தைக் குறித்தே பாடுகிறார்கள். 'நீர் அடிக்கப்பட்டு சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உமது இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர், நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்' (வெளி. 5:9,10). கிறிஸ்துவுக்கு 'அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்' என்னும் பேரே திரும்பத் திரும்ப வருகிறது. இரட்சிக்கப்பட்டவர்கள் அவருடைய மரணத்தையும் அந்த மரணத்தாலுண்டான நித்திய பாக்கியங்களையும் நினைத்து இடைவிடாமல் துதித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் பிழைப்பதற்காக உலகத்தில் பிறக்கிறோம். சாவு வந்து விடாதபடி எவ்வளவோ ஜாக்கிரதையாயிருக்கிறோம். அவரோ மரிப்பதற்காகவே உலகத்தில் பிறந்தார். அந்த மரணமே உலகத்தை இரட்சிக்கும் தேவ பலமாயிருக்கிறது. அவர் மறுரூப மலையிலிருந்து நேரே பிதாவிடம் போயிருப்பாரானால் அவர் மாத்திரம் அங்கேயிருப்பார். வேறொருவனும் மோட்சவாசலைக் காணப்போகிறதில்லை. நாம் அவர் மாதிரிப்படி நடந்து, அவர் போதனைகளைக் கைக்கொண்டு இரட்சிக்கப்படக்கூடுமானால், கிறிஸ்து சிலுவையில் மரிக்க வேண்டிய அவசியமேயில்லை. 'சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபலமாயிருக்கிறது' (1 கொ. 1:18).

## சிலுவை மரணத்தின் அவசியம்

சிலுவை தற்செயல் அல்ல. சிலுவை தமக்கு அவசியமென்பதை ஆண்டவர் திட்டமாய் அறிந்திருந்தார். அவசியம் என்பதைக் குறிக்கும்படி **வேண்டும்** என்கிற வார்த்தையை உபயோகிக்கிறார். 'என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க**வேண்டும்**.' 'மனுஷகுமாரன் உயர்த்தப்பட**வேண்டும்**.' 'நான் முழுக**வேண்டிய** ஒரு ஸ்நானம் உண்டு.' 'மனுஷகுமாரன் எருசலேமுக்குப்போய் . . . கொல்லப்பட்டு உயிரோடெழுந்திருக்க**வேண்டும்**.' 'இவ்விதமாகச் சம்பவிக்க**வேண்டும்** என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும்?' 'கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் **வேண்டியதில்லையா?**' 'என்னைக் குறித்து எழுதியிருக்கிறதெல்லாம் நிறைவேற**வேண்டும்**.' 'எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும் மூன்றும்நாளில் எழுந்திருக்கவும் **வேண்டும்**.' இவைபோன்ற வசனங்களைக் கவனிக்கும்போது சிலுவை மரணம் அவர் எதிர்பாராமல் சம்பவித்த காரியமல்லவென்றும், தப்பமுடியாமல் அகப்பட்டுக்கொண்டவரல்லவென்றும் அறிகிறோம். மரிக்க**வேண்டு**மென்பது அவரது உறுதியான தீர்மானம். 'அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது எருசலேமுக்குப்போகத் தமது முகத்தைத் திருப்பினார்' என்று வாசிக்கிறோம். ஒரு சேனைவீரன் தன் சத்துருவை ஜெயிக்கும்படி மகா வீரத்தோடு அவனுக்கு எதிர்கொண்டு போவதுபோல, ஆண்டவரும் தமது சிலுவையை நோக்கி சீடர்களுக்கு முன்னே நடந்துபோனார். அவருடைய மனோதீரமும் உறுதியும் அவர் முகத்தில் விளங்கின. சீடர்களோ ஆண்டவர் போகிற மாதிரியைப் பார்த்துத் திகைத்து அவருக்குப்பின்னே பயத்தோடு போனார்கள்.

## சிலுவை அவர் கண்களைவிட்டு விலகினதில்லை

'என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதில்லையா?' என்பதில் சிலுவை அடங்கியிருக்கிறது. ஸ்நானகனைப் பார்த்து: 'இப்போது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது'

என்பதில் சிலுவையும் சேர்ந்திருக்கிறது. யூதர்கள் அவரைப் பகைக்குமுன்னே, சிலுவையைப்பற்றி அவர்கள் நினைக்குமுன்னே, அவர் சிலுவையை நினைத்தார், அதைக் கண்டார், ஏற்றுக்கொண்டார். அந்த மூன்று வருட ஊழியத்தில் சந்தோஷத்திலும், துக்கத்திலும், பிரயாணங்களிலும், சோதனைகளிலும், இடைவிடாத வேலைகளிலும் சிலுவையை அவர் மறக்கவில்லை. ஆனால் அதைப்பற்றி ஆரம்பத்தில் மற்றவர்களோடு பேசவில்லை. தம்மை தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று சீடர்கள் அறிக்கைசெய்தது முதல் படிப்படியாய் சிலுவையைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். ஆரம்பத்தில் சிலுவையைப்பற்றி மறைவாகவும், சற்று பிந்தி கொஞ்சம் தெளிவாகவும், கடைசியில் அதிகத் தெளிவாகவும் பேசினார்.

தமது மரணம் உயிர்த்தெழுதலைப்பற்றி அவர் மறைவாகப் பேசினபோது ஜனங்கள் அறிந்துகொள்ளவில்லை, சீடர்களும் அறிந்துகொள்ளவில்லை. தமது மரணத்தை நினைத்து 'வேளை, வேளை' என்று சொன்னார். அதன் கருத்தை அறிந்தது யார்? தேவாலயத்தைச் சுத்திகரித்தபோது: 'இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளுக்குள் நான் அதை எழுப்புவேன்' என்றார். அதன் கருத்தை ஒருவரும் அறிந்துகொள்ளவில்லை. பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்றார். அது அவர் மரணத்தினால் உண்டாகும் அதிகாரம் என்பதைக் கண்டது யார்? 'மணவாளன் தங்களைவிட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்போது மணவாளனுடைய தோழர் உபவாசிப்பார்கள்' என்றார். மனுஷகுமாரன் உயர்த்தப்படுவதால் விசுவாசிகளின் மறுபிறப்பு உண்டாகுமென்றார். யோனா மீன் வயிற்றுக்குள் இருந்ததுபோல மனுஷகுமாரனும் பூமியின் இருதயத்தில் இருப்பாரென்றார். கோதுமை மணி செத்ததானால் மிகுந்த பலனைக் கொடுக்கும் என்றார். எஜமான் தன் ஒரே குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்; தோட்டக்காரர் அவனைத் தோட்டத்துக்குப் புறம்பே தள்ளிக் கொலை செய்தார்கள் என்றார். தமது மரணத்தைப்பற்றி இவைபோன்ற வசனங்களைக் கூறினார். கேட்டவர்களுக்கோ அது மறைபொருளாயிருந்தது.

சற்று பிந்திக் கொஞ்சம் தெளிவாய்ப் பேசினுர். சேவகர் ஆலயத்தில் அவரைப் பிடிக்க வந்தபோது: 'இன்னும் கொஞ் சக்காலம் நான் உங்களோடிருந்து பின்பு என்னை அனுப்பின வரிடத்திற்குப் போகிறேன்' என்ருர். தம்மை இன்னுரென்று அறியாமல் திகைத்த யூதரைப் பார்த்து: 'நீங்கள் மனுஷ குமாரனை உயர்த்தினபின்பு நானே அவரென்று அறிவீர்கள்' என்ருர். தம்மை நம்பாத ஜனங்களைப் பார்த்து: 'நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிருன்' என்ருர். பரிசேயரைப் பார்த்து: 'நான் இன்றைக்கும் நாளைக்கும் நடமாடி நோய்களைக் குணமாக்கி பிசாசுகளைத் துரத்தி மூன்ரும் நாளில் நிறைவடை வேன்' என்ருர். இவைபோன்ற வார்த்தைகள் கொஞ்சம் தெளிவே தவிர, சிலுவையைப் பூரணமாய் வெளிப்படுத்தக் கூடியவைகள் அல்ல.

நாட்கள் நெருங்கினபோது ஆண்டவர் தமது மரணத்தைப் பற்றி அதிகத் தெளிவாய்ப் பேசினுர். 'மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு இந்தச் சந்ததியாலே ஆகாதவரென்று தள்ளப் படுவார்.' 'இதோ எருசலேமுக்குப் போகிருேம், மனுஷ குமாரன் பிரதான ஆசாரியர் வேதபாரகரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படுவார்.' 'மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார், அவர்கள் அவரைக் கொலை செய் வார்கள், ஆகிலும் மூன்ரும்நாளில் உயிர்த்தெழுந்திருப்பார்.' 'மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.' மரியாள் பரிமளதைலம் பூசினபோது: 'நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமான என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்' என்ருர். இரண்டு நாட்களுக்குப் பின்பு பஸ்காப் பண்டிகை வரும், அப்பொழுது 'மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படும்படி ஒப்புக் கொடுக்கப்படுவார்.' 'மெய்யாகவே உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்.' 'மனுஷகுமாரன் பாவிகள் கையில் ஒப்புக்கொடுக்கும்படியான வேளை வந்தது.' 'நான் என் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திற்கு வந்தேன், மறுபடியும் உலகத்தைவிட்டு என் பிதாவிடம் போகிறேன்.' 'என்னைப்பற்றிய காரியங்கள் முடிவுபெறுங்

காலம் வந்திருக்கிறது.' 'நான் உயிர்த்தெழுந்தபின்பு உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்' என்றார். ஆண்டவர் தமது சிலுவை மரணத்தை ஆதிமுதல் அறிந்திருந்த போதிலும் அனுவசியமாய்த் தமது சீட்டரைக் கலங்கவைக்க மனமில்லாமல் துவக்கத்தில் மறைவாகவும், சற்றுப் பிந்தி கொஞ்சம் தெளிவாகவும், கடைசியில் முழுத் தெளிவாகவும் சிலுவையைப்பற்றி அறிவித்தார் என்று மேற்கூறிய வசனங்களால் அறிகிறோம்.

## தமது மரணத்தைத் தாமே நிறைவேற்றினார்

நாம் சுவிசேட சரித்திரத்தைப் படிக்கும்போது சத்துருக்களே அவரைப் பிடித்து, அடித்து, அவமானப்படுத்தி, அநியாய விசாரணை செய்து, தாங்கள் தீர்மானித்தபடியே அவரைச் சிலுவையிலறைந்து கொன்றுபோட்டதாகவும், அவரோ வாய் பேசாத ஆட்டைப்போல் அவர்கள் கைகளில் அகப்பட்டுத் தப்ப வழியின்றி மரணத்தை அனுபவித்ததாகவும் தோன்றும். அவருக்குச் சம்பவித்த சகலமும் விரோதிகளின் முயற்சிகளும் அவர்களுடைய ஏற்பாடுகளுமாயிருந்ததாகவே காண்போம். அது உண்மை அல்ல. தமக்கு நேரிட்ட சகல பாடுகளையும் சிலுவை மரணத்தையும் ஆண்டவர் தாமே நிறைவேற்றி முடித்தார் என்பதே உண்மை. மறுரூப மலையில் மோசேயும் எலியாவும் அவரிடம் வந்து, 'அவர் எருசலேமிலே நிறைவேற்றப் போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.' அவருக்குச் சம்மதமில்லையென்றால் அவரைப் பிடிக்கவோ கொல்லவோ ஒருவராலும் முடியாது.

முன் பல சமயங்களில் அவரைக் கொல்லும்படி அவர்கள் கற்களை எடுத்துக்கொண்டபோதெல்லாம் அவர் அவர்கள் நடுவிலிருந்து மறைந்தார். நாசரேத்தூரார் மலைச்சிகரத்திலிருந்து அவரைக் கீழே தள்ளிக்கொல்லும்படி கொண்டுபோன போது அவரைக் காணோம். தோமாவின் யோசனைப்படி யூதேயாவுக்குப் போகாமலே விலகிக்கொண்டால் அவருக்கு ஆபத்தில்லை. வியாழன் இரவில் அவர் கெத்செமனேக்குப் போகாமல் வேறு எங்கேயாவது போயிருந்தால் யூதாஸ் அவரைக் காட்டிக்கொடுப்பதேது? சத்துருக்கள் பிடிப்பதேது? தோட்டத்தில் தம்மைப் பிடிக்கும்படி வந்த சேனையைப்

பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தேவதூதர்களைக் கொண்டு சங்காரம்பண்ணமுடியும். ஒரே ஒரு தூதன் அசீரியரின் சேனையில் இலட்சத்து எண்பத்தையாயிரம்பேரை சங்காரம்பண்ணினனே. தோட்டத்தில் தம் கிட்ட நெருங்கின சத்துருக்களை கீழே விழும்படி செய்த அவரது சக்தியைத் திரும்பவும் திரும்பவும் உபயோகிப்பாரானுல் அவர்கள் கடைசிவரை விழுவதும் எழும்புவதுமாயிருப்பார்களேயன்றி அவரைப் பிடிக்கவோ கொல்லவோ முடியாது. ஈ மொய்த்தாற்போல பிலாத்துவுக்குமுன் யூத அதிகாரிகளும் ஜனத்திரளும் கூடிநின்று: இவனைச் சிலுவையிலறையும், சிலுவையிலறையும் என்று கூக்குரலிட்ட சமயத்தில் அவர்களெல்லாரையும் அப்படியே கீழே விழும்படி செய்திருப்பாரானுல் பிலாத்து அடக்கமுடியாமல் குலுங்கக் குலுங்கச் சிரித்திருப்பான். தன் முன்னிற்பவர் இன்னுரென்பதையும் கண்டிருப்பான். எருசலேமுக்கு அவர் பவனி சென்றபோது தம்மைப் பின்சென்ற இலட்சக்கணக்கான ஜனங்களிடம் ஆயுதங்களை எடுத்துக்கொள்ளும்படி சைகை காட்டியிருப்பாரானுல் யார் எதிர்க்கமுடியும்? ஜனக்கூட்டத்துக்குப் பயந்து தானே அதிகாரிகள் இதுவரை அவரைப் பிடிக்க தைரியமற்றிருந்தார்கள். பவுல் விசாரிக்கப்பட்ட சமயத்தில் பரிசேயருக்கும் சதுசேயருக்கும் பிரிவினையைக் கிளப்பிவிட்டுத் தப்பித்துக்கொண்டதுபோல, ஞானக்களஞ்சியமாகிய அவர் சனகரீம் சங்கத்தில் பிரிவினையை உண்டாக்கித் தப்பிக்கொள்ளலாம். பிரதான ஆசாரியனுன காய்பா: நீ தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்துதானுவென்று கேட்டபோது பதில் சொல்லாமலேயிருந்துவிட்டால், தேவதூஷணம் என்ற குற்றத்துக்கும் சிலுவைக்கும் இடமேது? பிலாத்துவோடு பட்சமாய்ப் பேசி அவனைக் கைக்குள்ளே போட்டுக்கொண்டால் அவன் யூதருடைய இஷ்டத்துக்கு அவரை ஒப்புக்கொடுத்திருக்கமாட்டான். அவர் சிலுவைக்குத் தப்பவேண்டுமானுல் இலேசாய்த் தப்பியிருக்கலாம். அவரைப்பிடிக்கவோ சிலுவையிலறையவோ ஒருவனுலும் முடியாது. 'ஒருவனும் என் ஜீவனை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான், நானே அதைக் கொடுக்கிறேன்' என்று அவர் சொன்னபடியே அவர் தம்மையே தந்த தியாகேசனுனர்.

## அது மனப்பூர்வமான மரணம்

நம்மை இரட்சிக்கும்படி அவர் தம்மைத்தாமே மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்தபடியால் அவருடைய மரணம் மேன்மை பெற்றது. 'தம்மைத்தாமே' என்னும் வார்த்தைகள் அருமையானவைகள். அவர் தம்மை ஒப்புக்கொடுத்தார்; தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். பலவந்தமில்லே. தேவன் ஆபிரகாமைப் பரீட்சிக்கும்படி ஒரே மகன் ஈசாக்கைப் பலியிடும்படி கேட்டார். மகா உத்தமனுன ஆபிரகாம் மறுவார்த்தை பேசாமல் ஈசாக்கைப் பலியிடும்படி தீர்மானித்தார். அதை வெளியிட்டால் பெருத்த இடையூறு வருமென்று அஞ்சி, தன் மனேவிக்குச் சொல்லவில்லே. மகன் ஈசாக்குக்குச் சொல்லவில்லே. அவன் உடனே தன் தாயிடம் சொல்லிவிடுவான். தன் உத்தம ஆலோசனேக்காரனுன எலியேசருக்கும் சொல்லவில்லே; வேலேக்காரருக்கும் சொல்லவில்லே; தெய்வத்தை வணங்கிவரப்போவதாக மாத்திரம் சொல்லிப் புறப்பட்டார். தகப்பனும் அருமை மகனுமாக பலியிடும் மலேயை நோக்கி நடந்துபோகிருர்கள். அப்பொழுது ஈசாக்கு தகப்பனேப் பார்த்து: என் தகப்பனே, இதோ நெருப்பும் கட்டைகளும் இருக்கிறதே, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்று கேட்டான். பெற்ற மகனிடமிருந்துவரும் இந்தவார்த்தைகளே எந்தத் தகப்பன் சகிப்பான்? அவருடைய இருதயம் எவ்வளவு பாடுபட்டிருக்கும்! தன்னே அடக்கிக்கொண்டு, என் மகனே, அதை தேவன் பார்த்துக்கொள்வார் என்ருர். ஈசாக்கைக் கட்டி கட்டைகளின்மேல் படுக்கவைத்து கத்தியை எடுக்கும் சமயத்தில் தேவன் ஆபிரகாமைக் கூப்பிட்டு: நீ உன் புத்திரனென்றும், ஏகசுதனென்றும், நேசகுமாரனென்றும் பாராமல் அவனே எனக்காக ஒப்புக்கொடுத்தபடியால் அந்த ஒப்புக்கொடுத்தலேயே தகனபலியாக ஏற்றுக்கொண்டேன். நீ பிள்ளேயாண்டான்மேல் உன் கையைப் போடாதே. அவனுக்கு ஒன்றும் செய்யாதே என்று தடுத்துவிட்டார். ஆபிரகாம் தன் மகனே மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்ததுபோலவே வாலிபனுன மகன் ஈசாக்கும் மனப்பூர்வமாய்த் தன்னே பலியிடும்படி ஒப்புக்கொடுத்ததை இங்கே காண்கிருேம். இரட்சகருடைய காரியமும் இதுபோலவே. பிதா தமது

குமாரனை நமக்காக மனப்பூர்வமாய்க் கொடுக்க, குமாரனும் மனப்பூர்வமாய் தம்மைத்தாமே நமக்காகத் தந்தார். ஆண்டவர் மனப்பூர்வமாய் மரணத்துக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தபடியால் அவர் ஜீவனோடிருக்கும்போதே பாவத்தைப் போக்கும் பலியாயிருந்தாரென்று சொல்லலாம். அவர் இடையில் வந்தவரல்ல. மனுமக்களை இரட்சிக்கும்படி 'அவர் உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாயிருக்கிறார்.' மனுஷர் உண்டாகுமுன்னே அவர்களுடைய இரட்சிப்பு தேவ சமுகத்தில் ஆயத்தமாயிருப்பதைக் காண்கிறோம். ஆகையால் கிறிஸ்து அவருக்கு முன்னிருந்தவர்களும் அவருக்குப் பின்னுள்ளோருமான எல்லா விசுவாசிகளுக்கும் இரட்சகராயிருக்கிறார். அவர் உலகோர் கண்கள் காண ஒரு நாளில் சிலுவையில் மரித்திராவிட்டால் தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பையும், கிறிஸ்துவுக்குள் அவர் உண்டுபண்ணின இரட்சிப்பின் ஒழுங்கு இன்னதென்பதையும் நாம் அறிய முடியாது. ஆதிகாலமுதல் குமாரனுக்குள் மறைவாயிருந்த இரட்சிப்பை தேவன் சிலுவையின்மூலம் உலகத்துக்குத் தெரியப்படுத்தினார். 'அவர் தமது ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்.' அவருக்கு மனதில்லாதிருக்க சத்துருக்கள் பலவந்தமாய் அவரைப் பிடித்து சிலுவையிலறைந்திருப்பார்களானால் அது குரூரமான கொலையாகுமே தவிர, நம்மை இரட்சிக்கும் பாவ நிவாரணப் பலியாகாது. தமது பாடுகள் மரணத்தைத் தாமே மனப்பூர்வமாய் நிறைவேற்றினார்.

## சிலுவையின் மகிமை

கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து சில காரியங்களைக் கவனித்தோம். அதாவது, சிலுவை மரணம் மகா நிந்தையும் அவமானமும் வேதனையும் குரூரமுமானதென்றும், சிலுவையில் அவர் மரிக்காமல் உலகத்துக்கு இரட்சிப்பில்லை என்றும், சிலுவை பாவிகளை இழுத்துக்கொள்ளும் தேவசக்தியுள்ளதென்றும், சிலுவை தமக்கு அவசியமென்பதை ஆண்டவர் அறிவித்தாரென்றும், சிலுவை ஒருபோதும் அவர் கண்களை விட்டு விலகினதில்லை என்றும், சிலுவை மரணத்தை அவர்

தாமே மனப்பூர்வமாய் நிறைவேற்றினுரென்றும்பார்த்தோம். இப்பொழுது முடிவாக சிலுவையின் மகிமையைக் கவனிப்போம்.

'கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றைக் குறித்தும் ஒருக்காலும் மேன்மைபாராட்டமாட்டேன்' என்று பவுல் கலாத்தியருக்கு எழுதினுர். கிறிஸ்துவை சிலுவையிலறையப்பட்டவராக அவர்கள் கண்களுக்கு முன்பாக நிறுத்தி மகிமையின் சுவிசேடத்தை அவர்களுக்குப் பிரசங்கித்திருந்தார். ஆனுல் அவர்கள் வேறு போதனைகளுக்குச் செவிகொடுத்து பின்வாங்கினதைக் கண்டபோது மிகுந்த வைராக்கியங்கொண்டு: 'நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேடத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனுவது, வேறொரு சுவிசேடத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனுயிருக்கக்கடவன்' என்றுர். வேறொரு சுவிசேடம் என்பது சிலுவையைத் தள்ளிவிட்ட சுவிசேடம். அது சுவிசேடமாகாமல் சாபமாகும் என்கிறுர். அவருடைய மாதிரியின்படி நடப்போம், அவருடைய போதனைகளைக் கைக்கொண்டு ஈடேறுவோம், நற்கிரியைகள் செய்து புண்ணியம் சம்பாதிப்போம் என்று பேசுகிறவர்கள் எல்லாரும் சிலுவையற்ற சுவிசேடத்தை உண்டாக்கப்பார்க்கிறவர்கள். சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவே அப்போஸ்தலனுடைய பிரசங்கப்பொருள். 'நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்' என்றும், 'இயேசுகிறிஸ்துவை சிலுவையிலறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்' என்றும் கொரிந்தியருக்கு எழுதினுர். தம்மைக் குறித்துப் பேசினபோது 'நாஞே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து ஒருக்காலும் பெருமைபாராட்டாதிருப்பேனுக' என்று சொன்னுர். பவுல் சிறந்த கல்விமான். உலகத்தில் எவ்வளவோ மேன்மையாய்ப் பிழைத்திருக்கலாம். நன்றுய்ச் சம்பாதித்து, யாதொரு கஷ்டமின்றிச் சௌகரியமாய் வாழ்ந்திருக்கலாம். அப்படியிருந்தும் தமக்கு இலாபமானவைகள், மேன்மையானவைகள் யாவையும் குப்பையென்று

தள்ளிவிட்டு, அவமானமான சிலுவையில் மரித்த ஒருவருக்குத் தன்னை அடிமையாக ஒப்புக்கொடுத்தார். தன் ஜீவகால முழுவதிலும் கிறிஸ்துவின் சிலுவையை அறிவிப்பதற்காகத் தன் நேரம், பலம், வரம் யாவற்றையும் தத்தம் செய்தார். தரையிலும் கடலிலும் மோசமும் ஆபத்துமான பிரயாணங்கள் செய்து, எல்லாவிடங்களிலும் சிலுவையின் இரட்சகரைப் பிரசங்கித்து பல சபைகளை ஸ்தாபித்தார். இதனால் அவர் கண்ட பலன் என்ன? ஆபத்துகள், அவமானங்கள், துன்பங்கள், பாடுகள், வேதனைகள், பசிதாகம், சிறைச்சாலைகள், முடிவில் சிரச்சேதம் இவைகள்தான். சிலுவையைப் பிரசங்கிக்கிற விஷயத்தில் தனக்கு என்ன நேரிட்டாலும் அவர் மனஞ் சோர்ந்துபோகவில்லை. தன் பிராணனையும் அருமையாக எண்ணவில்லை. யூதனுக்கு இடறலும், கிரேக்கனுக்குப் பைத்தியமும், ரோமனுக்கு அருவருப்புமான சிலுவை அப்போஸ்தலனுக்கு இவ்வளவு மகிமையாக மாறினதெப்படி? அவர் தாமே பகைத்து வெறுத்துத் தள்ளின சிலுவையை எல்லாவிடங்களிலும் இவ்வளவு மேன்மையாகப் பேசின தற்கும், அவர் எழுதிய நிருபங்கள் யாவும் சிலுவைமயமா யிருப்பதற்கும் காரணமென்ன?

மற்ற அப்போஸ்தலரைப்போல பவுல் கிறிஸ்துவை மாம்சத்தில் கண்டு அவரோடு பழகினவரல்ல. ஆனால் இயேசு என்னப்பட்டவர் தேவதூஷணக் குற்றத்தினிமித்தம் சிலுவையிலறையப்பட்டு மரித்தவர் என்பதும், அநேகர் அவரைப் பின்பற்றி அவரைத் தெய்வமாக வணங்குகிறார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். இது அவருக்குச் சகிக்க முடியாத கோபத்தை உண்டாக்கினது. இந்த மார்க்கத்தை வேரோடு அழிப்பதே சரியென்று தீர்மானித்து, அதிகாரி களோடு கலந்துகொண்டு, கிறிஸ்துவின் அன்பர்களை, அவருடைய பரிசுத்தவான்களைக் கொடிய பாடுகள்படுத்தி, சிறையிலடைத்துவைத்தார். இதே காரணமாக தமஸ்கு வுக்குப்போனார். பட்டணத்துக்குச் சமீபிக்கையில் சிலுவை நாதன் திடீரென அவரைப் பிடித்தார். பரம ஒளி பிரகாசித்தது. பவுல் பார்வையற்றுக் கீழே விழுந்தார். சவுலே சவுலே என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்கிறசத்தம் கேட்டது. நீர் யார் ஆண்டவரே என்று பவுல் கேட்க, நீ

துன்பப்படுத்துகிற இயேசு நான் என்கிற பதில் வந்தது. அவ்வளவுதான். உள்ளம் உடைந்தது, கண்ணீர் பெருகினது, கால்கள் தள்ளாடின. அந்நிமிடமே மகிமையின் கர்த்தரான சிலுவைநாதனுக்குத் தம்மை அடிமையாகக் கையளித்தார். இதுவே பவுலின் அற்புத மாறுதலுக்குக் காரணம். அவருடைய குணப்படுதலுக்குப் பரம இரட்சகனேயன்றி உலகத்தில் வேறு எந்த மனுஷனும் காரணமாயிருந்ததில்லை. இந்தப் பரம தரிசனத்தை அப்போஸ்தலன் ஒருபோதும் மறந்தவரல்ல. அவருடைய ஆச்சரியமான மாறுதலுக்கும், உன்னதமான ஜீவியத்திற்கும், ஒப்பற்ற ஊழியத்திற்கும், சகல பாடுகளையும் சாந்தமாய்ச் சகித்துக்கொண்ட பொறுமைக்கும் இந்தப் பரம தரிசனமே காரணம். அவரை ஆட்கொண்ட ஆண்டவரே தமது அடியானை முதலிலிருந்து கடைசிவரை கைதாங்கி நடத்தினார். தாம் யாரென்பதையும், தமக்கும் தேவனுக்கு முள்ள சம்பந்தமின்னதென்பதையும், சிலுவையின் மூலமாய் தாம் உண்டுபண்ணின மகத்தான இரட்சிப்பு எவ்வளவு விசாலமானதென்பதையும் பவுலுக்கு வெளிப்படுத்தினார். சிலுவையில் வெளிப்பட்ட தேவனுடைய அளவில்லாத அன்பையும், கிருபையின் ஐசுவரியத்தையும் பவுல் தம் சொந்த அனுபவத்தில் கண்டார். முன்னே அவருக்குக் கொடிய வெறுப்பும் அவமானமுமாகத் தோன்றின சிலுவையே இப்பொழுது ஒப்பிடக்கூடாத மகிமையாக விளங்கினது. சிலுவையில் மரித்தவர் இன்னார் என்னும் அறிவு அவர் சிலுவையை அவ்வளவு மேன்மைப்படுத்திப் பேசக் காரணமா யிற்று. சிலுவைமூலம் கிறிஸ்து சம்பாதித்த மகத்தான இரட் சிப்பு அவர் செய்த ஆச்சரியமான ஊழியத்திற்குக் காரணமா யிற்று. அவரைப்போல் சிலுவையின் இரகசியங்களை வெளிப் படுத்தினவர்கள் இல்லை. பாவமன்னிப்பு, சுத்திகரிப்பு, நீதி, சமாதானம், நித்தியஜீவன், புத்திர சுவிகாரம், பரிசுத்த ஜீவியம், பரம சுதந்தரம், உள்ளான மறுரூபம், சரீர மீட்பு, நித்திய மகிமை இவை யாவும் சிலுவையின் மூலமாய் உண்டான இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் என்று கண்டார். அதையே சுவிசேடமாக எங்கும் போதித்தார். அவிசுவாசி களுக்கு அவமானமாகத் தோன்றின சிலுவை, பவுலுக்கு நித்திய மகிமையாயிற்று. ஆகையால், 'நானோ நம்முடைய

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே யல்லாமல் வேறொன்றையும் குறித்து ஒருக்காலும் மேன்மை பாராட்டாதிருப்பேனாக' என்றார்.

சிலுவையைப்பற்றி ஆண்டவருடைய மதிப்பென்ன? அது அவமானமும் நிந்தையும் வேதனையுமான மரணமென்று அவருக்கு தெரியும். ஆகையால் அதற்குத் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று நினைத்தாரா? அவர் சிலுவைக்குத் தப்பவேண்டுமானால் எத்தனையோ வழிகள் உண்டென்பதை ஏற்கெனவே கவனித்தோம். அவர் பயந்து நடுங்கினதும் தம்மைவிட்டு நீங்கும்படி வேண்டிக்கொண்டதுமான காரியம் வேறே. அதை நாலாம் வார்த்தையில் காண்பித்திருக்கிறோம். சிலுவைக்கோ அவர் பின்வாங்கவில்லை. அவரே சிலுவைக்கு எதிர்கொண்டு போனார். அது சீக்கிரம் நிறைவேற வேண்டுமென்று விரும்பினார். சிலுவை எவ்வளவு அவமானமுள்ளதாயினும் உலகோர் இரட்சிக்கப்பட அது பிதாவினால் ஏற்படுத்தப்பட்ட வழியாதலால் ஆண்டவர் அதைத் தமக்கு மகிமையாகவே மதித்தார். தன் தேசத்தைக் காப்பாற்ற ஒருவன் எவ்வளவு பாடுகள், அவமானங்களைச் சகிக்க நேரிட்டாலும் அவைகளைத் தனக்கு மகிமையாக எண்ணுவதுபோல, நமதாண்டவரும் சிலுவை மூலமாய் பெரிய இரட்சிப்பு மனுமக்களுக்கும் கிடைக்கப்போவதால் அதைச் சந்தோஷமாகவே ஏற்றுக் கொண்டார். மகிமையாகவும் எண்ணினார். 'அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு அவமானத்தை எண்ணாமல் (அதாவது அவமானத்தை அவமதித்து) சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.' சிலுவை தமக்குச் சமீபித்தபோது: 'பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்' என்றார். 'மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது' என்றார். 'இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார், தேவன் அவரில் மகிமைப் பட்டிருந்தால் தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்' என்றார். கடைசியாக 'பிதாவே, வேளை வந்தது, உமது குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப் படுத்தும்' என்று ஜெபித்தார். சிலுவை தமக்கு அவமானமல்ல,

மகிமையே என்கிறார். தமது சிலுவையைப்பற்றி ஆண்டவர் சீடர்களோடு பேசினபோது, பேதுரு அவரைத் தடுத்து, அது ஒருபோதும் கூடாது என்று ஆண்டவரைக் கடிந்துகொண்டார். ஆண்டவர் பேதுருவைப் பார்த்து: 'எனக்குப் பின்னாகப் போ சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய், தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கேற்றவைகளைச் சிந்திக்கிறாய்' என்றார். அப்படிப்பட்ட நிலைமையில் அகப்பட்டிருக்கிற வேறொருவன் தன் சிநேகிதன் தன்னைத் தடுத்ததற்காக எவ்வளவோ நன்றிபாராட்டுவான். ஆண்டவர் பேதுருவுக்குப் பாராட்டின நன்றியோ 'எனக்குப் பின்னாகப் போ சாத்தானே' என்பதுதான். சிலுவைக்குப் போகவேண்டுமென்கிற தீர்மானமல்லவா பேதுருவை இவ்வாறு கடிந்து பேசும்படி செய்தது. மேலும் பேதுருவின் பார்வை வேறே; இரட்சகருடைய பார்வை வேறே. பேதுரு மனுஷரையும் அவர்கள் செய்யப்போகிற கொடுமைகளையும் அவமானங்களையும் நினைத்துப் பேசினார். பேதுரு மனுஷருக்கேற்றவைகளைச் சிந்தித்தார். ஆண்டவரோ தேவன் பக்கத்திலிருந்து சிலுவையின் ஒழுங்கையும், சிலுவைமூலம் உண்டாகும் மகத்தான இரட்சிப்பையும் கண்டார். ஆகையால் சிலுவையைத் தமக்கும் பிதாவுக்கும் மகிமையாக எண்ணினார்.

அப்போஸ்தலனுடைய போதனையின்படி சிலுவையின் இரட்சிப்பு மகா விசாலமானது. அதன் ஆழம், அகலம், நீளம், உயரம் இன்னதென்று நாம் அறியமுடியாது. நித்தியமாய் நாம் அனுபவிக்கும் இரட்சிப்பு இந்தச் சிலுவையின் பலனாகவேயிருக்கும். கிறிஸ்துவின் சிலுவை வானத்தையும் பூமியையும் அளாவி நிற்கிறது. பரலோகத்திலுள்ளவைகளையும் பூலோகத்திலுள்ளவைகளையும் சிலுவை தனக்குள் கூட்டிச் சேர்க்கிறது. சிலுவை சர்வ ஜாதிகளையும் ஒன்றாய் இணைக்கும் சக்தியுள்ளது. தேவராஜ்யம் பிரத்தியட்சமாகும் காலத்தில் தேவனே சகலத்திலும் சகலமுமாயிருந்து ஆளுகைசெய்வதற்கு இந்தச் சிலுவையே காரணமாயிருந்ததென அறிவோம். 'என் பாவங்களை மன்னிக்க கிறிஸ்து மரித்தார்' என்று பாடினது போக, சிலுவையானது இப்பிரபஞ்சமனைத்துக்கும் சர்வ லோகங்களுக்கும் இரட்சிப்பாயிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவோம்: 'நம்மை இரட்சிக்க கிறிஸ்து உலகத்திற்கு

வந்தார்' என்று நாம் காலமெல்லாம் நினைத்திருக்க, பரலோகத்திலுள்ளவைகள், பூலோகத்திலுள்ளவைகள், காணப்படுகிறவைகள், காணப்படாதவைகள், சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள் முதலான சகலத்திலும் அவரது சிலுவையின் வெற்றி நடப்பிக்கும் பலத்த மாறுதலைக் கண்டு பரவசமடைவோம்.

பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் கிறிஸ்து தமது மரணத்தின் மூலமாய் தேவனோடு ஒப்புரவாக்குகிறார் என்று சொல்லியிருக்கிறது. மனுஷன் பாவஞ்செய்து தேவ பகைஞனாய்ப் போனபடியால் அவனை ஒப்புரவாக்கவேண்டியது அவசியமே. மனுஷனுடைய பாவம் அவனை மாத்திரமல்ல, பூமியிலுள்ள சிருஷ்டிகள் யாவையும் பாழாக்கிக் கெடுத்தது. கெட்டுப்போனவனுடைய ஆளுகைக்குட்பட்ட யாவும் தங்கள் ஆதி அழகையும் சுயாதீனத்தையும் இழந்து மாயைக்குக் கீழானது. அதுமுதல் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது. சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ள ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் கிறிஸ்துவின் மரணம் மனுஷனையும் அவனோடு சம்பந்தப்பட்டுக் கெட்டுப்போன பூமியிலுள்ள சிருஷ்டியனைத்தையும் ஒப்புரவாக்குகிறது என்று பார்க்கிறோம் (ரோ. 8:19—22). இது சரி.

ஆனால் **பரலோகத்திலுள்ளவைகளை** ஏன் ஒப்புரவாக்க வேண்டும்? மனுஷனுடைய பாவத்தால் பரலோகவாசிகள் கெட்டார்களோ? அல்ல. சீடர்களில் அநேகர் ஆண்டவரை விட்டுப் பின்வாங்கினபோது அவர் பன்னிருவரையும் பார்த்து நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்று கேட்டார். அப்படிப்பட்ட குறிப்பு அவர்களில் தோன்றினபடியினாலேதான் கேட்டார். அந்த உருக்கமான கேள்வி அவர்கள் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தி அவரை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளும்படி செய்தது. தேவதூதரில் ஒரு கூட்டத்தார் பாவஞ்செய்தபோது மற்றவர்களிடம் அவ்விதமான எண்ணம் தோன்றியிருக்குமோ? அதனாலே அவர்கள் கறைப்பட்டார்களோ? நமக்குத் தெரியாது. 'அவர் தம்முடைய பணிவிடைக்

காரரிடத்தில் நம்பிக்கை வைப்பதில்லை, தம்முடைய தூதரின் மேலும் புத்தியீனத்தைச் சுமத்துகிறாரே' என்றும், 'இதோ, தமது பரிசுத்தவான்களையும் அவர் நம்புகிறதில்லை, வானங் களும் அவர் பார்வையில் சுத்தமானவைகள் அல்ல' என்றும் வாசிக்கிறோம் (யோபு 4:18; 15:15). இது இப்படியிருக்க, எபிரேயர் நிருபத்தார், பரலோகத்திலுள்ளவைகளும் சுத்தி கரிக்கப்படவேண்டியது என்கிறார். 'பரலோகத்திலுள்ளவை களுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ள வைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளினாலே சுத்திகரிக் கப்படவேண்டியதாமே' என்கிறார் (எபி. 9:23). பரலோ கத்திலுள்ளவைகளுக்கு சுத்திகரிப்பு அவசியமென்ன? மனுஷ ருடைய அக்கிரமங்களும் பாவங்களும் கர்த்தருடைய சமுகத் துக்கு எட்டி, அதனாலே பரலோகம் தீட்டுப்பட்டதோ? பரலோக புத்தகத்தில் எழுதப்பட்டவைகளும், தேவனுடைய ஞாபகத்தில் இருப்பவைகளுமான பாவங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்ததோ? நாம் என்ன சொல்லமுடியும்? பூமிக்குரிய காரியங்களையே நாம் அறியாதிருக்க, பரலோகத்தில் நடக்கும் காரியங்களை நாம் எப்படி அறியமுடியும்? ஆனால் ஒன்று நிச்சயம். பூலோ கத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் கிறிஸ்து தமது மரணத்தின் மூலமாய் தேவனோடு ஒப்புர வாக்குகிறார் என்பதை நாம் மறுக்கமுடியாது. அந்த ஒப்புர வாக்குதல் எப்படி நடக்கிறதென்பது தெரியவில்லை. தேவ தூதர்கள் சம்பூரணர்கள் அல்ல. ஒருவரும் கிட்ட அண்ட முடியாத பரிசுத்த ஒளியில் வசிக்கும் தேவனுக்கு அவர்கள் சற்று தூரமானவர்களே. தேவரகசியங்களையும் அவருடைய இரட்சிப்பின் ஒழுங்கையும் சிருஷ்டிகளாகிய அவர்கள் பரி பூரணமாய் அறிந்தவர்கள் அல்ல. ஆகையால் பவுல்: 'தேவன் நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே உன்னதங்களிலுள்ள துரைத் தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞான மானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவருகிறது' என்கிறார். கிறிஸ்துவின் மரணம் முன்னைப்பார்க்கிலும் அவர் களுக்கு தேவனோடு நெருங்கிய ஐக்கியத்திற்கும் அறிவுக்கும்

வழி உண்டாக்கலாம். இது அவர்கள் விஷயத்தில் ஒப்புர வாகுதல் ஆகலாம்.

மேலும் கிறிஸ்துவுக்கும் சர்வசிருஷ்டிக்குமுள்ள சம்பந்தத் தைக் கவனிக்கவேண்டும். பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ் டிக்கப்பட்டது. சர்வலோகங்களை உண்டாக்கினவரும் காப் பாற்றி வருகிறவரும் அவரே. இவ்வாறு அவர் சர்வலோகங் களையும் தாங்கி நடத்தும் ஜீவனுயிருக்க, சகலமும் அவருக்குள் நிலைநிற்க, அவருடைய மரண பலன்களுக்கு அவைகள் எப்படி விலகமுடியும்? சிருஷ்டிகரான அவரே சர்வத்துக்கும் மீட்பரு மாயிருக்கிறுர். ஒரு மனுஷனுடைய பராமரிப்பிலும் பாது காப்பிலும் இருக்கிற ஒரு பெரிய குடும்பத்திலுள்ளவர்களை அவனுடைய இலாபமோ நஷ்டமோ பாதிப்பதுபோல, பர லோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமான முழுக் குடும்பத்துக்கும் சிருஷ்டி கர்த்தாவாகிய அவருடைய மரணபலன் சகல குறைகளையும் நீக்கி தேவனேடு ஒப்புர வாகுதலை உண்டாக்குகிறது. 'புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும்' என்பதும், 'இதோ, நான் சகலத்தையும் புதி தாக்குகிறேன்' என்பதும் தேவனேடு சகலமும் ஒற்றுமையாகி தேவனே சகலத்திலும் சகலமுமாயிருக்கும் பாக்கியமான காலத்தைக் குறிக்கிறது. அக்காலத்தில் சகல இடறல்களும் அக்கிரமங்களும் பாவங்களும் அறவே ஒழிய, எங்கும் எல்லா வற்றிலும் அவருடைய சித்தமே செய்யப்படும்; அவருடைய இராஜ்யமே ஆளுகை செய்யும். ஆகையால் அவருடைய திருநாமம் மகிமைப்படும். அந்த நல்ல காலம் சமீபித்திருக் கிறது.

இவை யாவும் உண்மையாயினும் நாம் இங்கே நின்றுவிடக் கூடாது. கிறிஸ்துவினுடைய மரணத்தோடு அவருடைய உயிர்த்தெழுதலையும் சேர்க்கவேண்டும். அவருடைய உயிர்த் தெழுதல் சிலுவையின் வெற்றியையும் மகிமையையும் உறுதிப் படுத்துகிறது. அவர் உயிரோடெழும்பவில்லையென்றுல் இது வரை நாம் பேசின யாவும் வியர்த்தமாகும். அவர் உயிரோ டெழும்பவில்லையென்றுல் அவருடைய சிலுவை மற்றவர்க ளுடைய சிலுவைகளைப்போல் மறக்கப்பட்டுப்போகும். அதி லிருந்து யாதொரு நன்மையையும் நாம் எதிர்பார்க்கமுடி

யாது. ஆண்டவர் தமது மரணத்தைப்பற்றிப் பேசினபோதெல்லாம் தமது உயிர்த்தெழுதலையும் சேர்த்தே பேசியிருக்கிறார். அவர் உயிர்த்தெழுந்து பரலோகம் போய்த் தமது உயிர்த்தெழுதலின் ஜீவனை, அதாவது தமது ஆவியை அனுப்பி தமது மரணத்தால் சம்பாதித்த இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைத் தமதடியாரின் ஜீவியத்தில் பலிதப்படுத்தினார். அவருடைய சரீரமாகிய திருச்சபை உண்டானது. அவரைச் சொந்தமாக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுகிறவர்களை அவரே தமது சரீரமாகிய சபையில் அவயவங்களாகச் சேர்த்துக் கொள்ளுகிறார். இரட்சிப்பின் மாறுதலை அறியாதவர்கள் சபையிலிருந்தாலும் அவருடைய சரீரத்தின் அவயவங்களாக மாட்டார்கள் (அப். 2:47). அவருக்கே சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

# சபைகளின் நிலைமையும் தேவ ஊழியரும்

ஆண்டவர் தமது மரணத்தின் மூலமாய் இவ்வளவு மகத்துவமான இரட்சிப்பை உண்டுபண்ணியிருக்க நமது சபைகளின் நிலைமை எப்படியிருக்கிறது? தேவ அன்பிலும் தேவ பலத்திலும் சிறந்து விளங்கவேண்டிய சபைகள் சாத்தானுடைய வஞ்சகத்தால் சீர்குலைந்திருப்பது எவ்வளவு பரிதாபம். நம்மைச் சூழ எங்கே பார்த்தாலும் மனுஷர் கெட்டுப்போவதற்கு ஏதுவான தீமைகள் பெருகியிருக்கின்றனவேயன்றி பக்திக்குரிய அனுகூலங்கள் இல்லை. தேவபக்தி என்பது அருமையிலும் அருமையாகிவிட்டது. மக்கள் மனங்கொண்டபடி நடக்கத் துணிந்திருக்கிறார்கள். ஆண்டவருடைய மெய்யடியார் தற்காலத்துச் சபைகளின் நிலைமையைக் குறித்து வருந்துகிறார்கள். தம்மையே தந்த தயாளருக்கு இது எப்படியிருக்கும்?

ஆதிச்சபையில் இரட்சிக்கப்படுகிறவர்களை மாத்திரம் கர்த்தர் தமது சரீரமாகிய சபையில் சேர்த்துக்கொண்டுவந்தார். மற்றவர்கள் அவர்களோடு சேரத்துணியவில்லை. இரட்சிப்பின் மாறுதல் அவ்வளவு பலமாய் அவர்களில் காணப்பட்டது. ஆனால் காலம் செல்லச்செல்ல இரட்சிப்பைப் பார்க்கிலும் சபையின் தொகையையும் மற்றக் காரியங்களையும் முக்கியப்படுத்தினதால், குணப்படாத அநேகர் சபைகளில் சேர்ந்துகொண்டார்கள். சபைகள் திருவசனப் போதனையினாலும் தேவாவியாலும் நடத்தப்படவேண்டியதிருக்க, தெய்வ பக்தியோ, இரட்சிப்பின் மாறுதலோ இல்லாதவர்கள் அவர்களுடைய உத்தியோகம் செல்வாக்கினிமித்தம் சபையின் ஆலோசனைக்காரராக நியமிக்கப்பட்டார்கள். அன்பு ஆளவேண்டிய சபையை அதிகாரம் ஆண்டுகொண்டது. சபையின்

சட்டங்களும் விதிகளும் சர்க்கார் முறைகளைப் பின்பற்றினதாக இருக்கின்றன. சபைகளின் சீர்கெட்ட நிலைமைக்கும், கலகம் குழப்பங்களுக்கும், கட்சிப் பிரிவினைகளுக்கும் இவைகள் காரண மாயின. சபையின் விரோதியாகிய சாத்தான், சபைக்குள் தனக்குச் சொந்தமானவர்களைக்கொண்டு சகல தீமைகளையும் நடப்பிக்க இடம்பெற்றான்.

சபைகள் வல்லமையிழந்து தவிக்கின்றன. பாவத்தை மேற் கொண்டு பரிசுத்தமாய்ப் பிழைக்கும் சக்தியில்லை. அநேகர் பேருக்குத்தானே கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். ஆலயம் போவதும், ஆராதனைக்கிருப்பதும், ஞானஸ்நானம் இராப் போஜனத்தை ஆசரிப்பதும் சபைக்கடுத்த மற்றக் காரியங்களை நடப்பிப்பதுமே போதும் என்றிருக்கிறார்கள். ஆயிரங் காரி யங்களை நாம் செய்துவந்தாலும் நமது ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதல் இல்லாமற்போனால் கிறிஸ்து மரித்தது நமக்கு வீணாகுமே. அவர் எதற்காக மரித்தாரோ அந்த நோக்கம் நம்மில் நிறைவேறாவிட்டால் நமக்குப் பிரயோஜனமென்ன? 'நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைக்கும்படி' அவர் மரித்தாரேயல்லாமல் பாவங்களில் நிலைத்திருந்து நமது ஆத்துமாவைப் பாழாக்கும்படிக்கு அவர் மரிக்கவில்லை. பாவம் அற்பக் காரியமாயிருந்தால் உன்னதமான கடவுள் தமது நேசகுமாரனை இவ்வளவு பாடுகளுக்கும் மரணத்துக்கும் ஒப்புக் கொடுத்திருக்கமாட்டார். நாம் இரட்சிப்பைப் பெற்று தேவ பக்தியாய்ப் பிழைப்பது இம்மைக்கும் மறுமைக்கும் நமக்கு ஆசீர் வாதம். பாவ ஜீவியமோ இம்மைக்கும் மறுமைக்கும் சாபம். நமது சபைகளிலுள்ள ஒவ்வொருவரும், தேவன் நமக்குப் பாராட்டிய அதிசயமான கிருபையை மதித்து, கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அவருக்கென்றே பிழைக் கிறதாயிருந்தால், அவர்கள் தங்களுக்கும், தங்கள் குடும்பங்க ளுக்கும், சபைக்கும் எவ்வளவோ ஆசீர்வாதமாயிருப்பார்கள். நமது சீர்கெட்ட நிலைமையை உணர்ந்து நாம் குணப்படாத படிக்கு, சாத்தான் சபைகளில் பலவித கொண்டாட்டங் களையும், உற்சவங்களையும், வியாபாரங்களையும், ஏலங்களையும் நுழைத்து நமது கவனத்தை வேறு திசைகளில் திருப்பிவிடு கிறான். சபைகளில் மாம்சத்துக்குரியவர்கள் காண்பிக்கும்

உற்சாகத்தையும் சாமர்த்தியத்தையும் அளவிடமுடியாது. அவ்வளவும் தேவனுடைய பார்வையில் அருவருப்பேயாகும்.

நமது ஜீவியம் கட்டாயம் மாற்றப்பட வேண்டும். இதற்கு வேறொன்றும் ஈடாகாது. இவ்வாறு மாற்றப்படுவது நமக்கு மறுபிறப்பாகும். இந்த மறுபிறப்பு நாம் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கும், அதன் ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கும் வழியாகும். கிறிஸ்து சிலுவையில் சம்பாதித்த இரட்சிப்பைக் குறித்து சர்வலோகங்களும் பிரமித்துக் களிகூர, அவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்பதற்குக் காரணமென்ன? அநேகர் மறுமையை மறந்து இம்மைக்காகவே பிழைக்கிறார்கள். தங்கள் செல்வம், பலம், நேரம் யாவற்றையும் இம்மைக்கென்றே செலவழிக்கிறார்கள். இம்மையின் வாழ்வே மெய்யான வாழ்வுபோல் அவர்களுக்குத் தோன்றுகிறது. நாம் எக்காலமும் இங்கேயே இருக்கப்போகிறவர்கள் அல்ல; திடீரென இம்மையைவிட்டுப் போகும் நேரம் வந்துவிடும். எங்கே போகிறது? நாம் எங்கே போகிறோம் என்பதை இப்போதுள்ள நமது ஜீவியம் தீர்மானிக்கிறது. ஒருவன் எவ்விதமாக இம்மையில் பிழைக்கிறானோ அவ்விதமாகவே மறுமைக்குள் பிரவேசிப்பான். இரட்சகரை மறந்து பாவ வழியில் நடக்கிறவர்கள் 'நித்திய மகிமையில்' பிரவேசிப்பதெப்படி? உலகத்தில் அமிழ்ந்து தங்கள் ஆத்துமாவைப் பாழாக்கினவர்கள் 'ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதெப்படி?' இதை வாசிக்கும் சகோதரரே, கர்த்தர் இந்த நேரத்தில் உம்மை அழைக்கிறதாயிருந்தால் சந்தோஷமாய் அவரிடம் போக ஆயத்தமாயிருக்கிறீரா?

நாங்கள் பாவிகள் என்பது உண்மைதான்; ஆனாலும் கடைசி நேரத்தில் கெஞ்சிக்கேட்டால் அவர் இரக்கப்பட்டு நம்மை மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளமாட்டாரா என்கிறார்கள். ஆண்டவர் இரக்கப்பட்டு நமக்கு ஆயிரங் காரியங்களைச் செய்யலாம்; ஆனால் அவர் இரக்கப்பட்டு மோட்சத்தைக் கொடுக்க முடியாது. நாலாம் வகுப்பு படித்த ஒருவன் உயர்ந்த கலாசாலைத் தலைமை ஆசிரியரிடம் போய்: 'ஐயா, என்மேல் இரக்கம்வைத்து உங்கள் கல்லூரியில் ஆசிரியர் வேலை தர வேண்டும்' என்று கேட்கிறான் என்று வைத்துக்கொள்வோம்.

தலைமையாசிரியர் என்ன சொல்வார்? உன்மேல் இரக்கம் வைத்து வேறு எந்த உபகாரமும் செய்வேன். ஆனால் உன்னை ஓர் ஆசிரியராக ஏற்படுத்துவதற்கு உனக்குத் தகுதியில்லையே என்று சொல்லமாட்டாரா? மோட்சம் என்பது இம்மையில் மறுபடி பிறந்து, ஆவியினால் ஆயத்தமாக்கப்பட்டுவரும் தேவ மக்களுக்கு, மறுமையில் பிதாவின் வீட்டிலே இரட்சகர் ஆயத்தம் பண்ணிவரும் வாசஸ்தலமாகும். மேலே வாசஸ்தலம் ஆயத்த மாகிறது; கீழே நாம் ஆயத்தமாகிறோம். நமக்குள் வசிக்கும் தேவ ஆவியானவர் இங்கே நம்மைக் கிறிஸ்துவின் சாயலுக் கொப்பாக மறுரூபப்படுத்திவருகிறார். இம்மையில் நாம் அவரோடும் அவர் நம்மோடும் தங்கினால் மகிமையில் அவர் எங்கேயிருக்கிறாரோ அங்கே நாமும் அவரோடிருப்போ மென்பது நிச்சயம். மோட்சம் வேண்டும் என்கிற கவலை நமக்கு அவசியமில்லை. மோட்சத்தின் அதிபதியாகிய ஆண்டவரைச் சொந்தமாக்கிக்கொள்வதே மோட்சத்தைச் சொந்தமாக்குவதாகும். அவரே நமது மோட்சமும் மகிமையுமாயிருக்கிறார். அவரிடத்தில் அன்புகூராமலும், அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரோடு சஞ்சரிக்காமலும் பேர்க் கிறிஸ்தவர்களாயிருக்கிறவர்கள், கடைசியில் கெஞ்சிக்கேட்டால் இரக்கப்பட்டுச் சேர்த்துக் கொள்வாரென்று நினைப்பது பிசாசின் வஞ்சமேயாகும். மோட்சத்தில் நாம் பிரவேசிக்குமுன்னே மோட்சம் இப்போதே நமக்குள் பிரவேசிக்கவேண்டும். இருதய மறுரூபம் இங்கேயே ஆரம்பிக்கவேண்டும். பரமபிதா நாம் தமது குமாரனுடைய சாயலுக்கொப்பாக மாறும்படி நம்மை அழைத்திருக்கிறார். அவருடைய பிள்ளைகள் தங்கள் உள்ளான மனுஷனில் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் மகிமையின்மேல் மகிமை யடைந்து மறுரூபமாகிவருகிறார்கள். இதுவே சிலுவையின் முடிவான நோக்கம். நாம் எந்த மிஷனிலிருந்தாலும், எந்தச் சபையிலிருந்தாலும், எந்தச் சங்கத்திலிருந்தாலும், எந்த ஆவியின் கூட்டத்திலிருந்தாலும், என்னென்ன கொள்கைகளை ஆசாரங்களை அனுசரித்தாலும், பாவ வழியை விட்டு விலகி, கிறிஸ்துவின் சிந்தையையும் அவரது சிறந்த குணத்தையும் பெற்று, தெய்வ சுபாவத்திற்கு நாம் பங்குள்ளவர்களாகா விட்டால், இவைகளில் ஒன்றுமே நம்மை இரட்சிக்க

மாட்டாது. எத்தனே வருடக் காலத்து கிறிஸ்தவர்களா யிருந்தாலும் 'அக்கிரமச் செய்கைக்காரரே, நீங்கள் எவ்விடத் தாரோ, நான் ஒருக்காலும் உங்களே அறியேன். என்னேவிட்டு அகன்றுபோங்கள்' என்று நியாயாதிபதியாகிய கர்த்தர்சொல் லும்போது எப்படியிருக்கும். அதுவே நரகம்போலிராதா? இங்கே சொல்லப்பட்டவைகளே ஒருவன் நம்பாதிருக்கலாம்; இதை யார் கண்டதென்று பரியாசமும் செய்யலாம். ஆகிலும் அவன் மரிப்பது எப்படி நிச்சயமோ, அதுபோலவே நியாயாதி பதிக்குமுன் அவன் நிறுத்தப்படுவதும் நிச்சயமென்பதை உணர்ந்துகொள்ளட்டும். ஒருவராகிலும் அவர் சமுகத்துக்குத் தப்பமுடியாது. கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக்கொள்ளுகிற வர்களே அவர் இப்போதே இரட்சிக்கிருர். நாம் தேவனுடைய பிள்ளேகள் என்னும் நிச்சயத்தையும் சந்தோஷத்தையும் தமது ஆவியின் மூலமாய் இப்போதே கொடுக்கிருர். ஜீவியத்தில் மாறுதலடைந்தவர்கள் சபையில் பெருகுவது சபைக்கு ஆசீர்வாதம், ஆண்டவருக்கு எவ்வளவோ சந்தோஷம்.

தேவ ஊழியரான நமக்கொரு வார்த்தை. சபையாரைக் குறைகூறி நாம் தப்பிக்கொள்ளமுடியாது. ஆண்டவரே இரட்சிக்கிறவர், அவரே ஆசீர்வதிக்கிறவர் என்பது மெய்யா யினும், அவரது இரட்சிப்பின் சுவிசேடத்தை ஜனங்களுக்கு அறிவிக்கும் கிருபை நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் நிற்கும் ஸ்தானம் மகா பயபக்திக்குரியது. நமது உத்தர வாதமும் பெரிது. ஆண்டவர் தமது மரணத்தால் சம்பாதித்த இரட்சிப்பின் ஊழியம் நமது கையிலிருக்கிறது. நமது ஜீவியத் தாலும் ஊழியத்தாலும் அநேகரை ஆண்டவரிடம் நடத்துவ தற்கு அவர் நம்மை ஏற்படுத்தியிருக்கிருர். அவர்களுடைய ஆசீர்வாதத்திற்கோ கேட்டுக்கோ நாம் காரணமாயிருக்க லாம். கர்த்தருக்கு நம்மை முழுவதுமாய் ஒப்புவித்து, அவரது திருவசனத்தை உண்மையாகப் பிரசங்கித்து வருவோமாளுல் பலனில்லாமல் போகாது. பாவ ஜீவியத்திலிருப்போமாளுல் ஆண்டவர் நம்மை உபயோகிக்கமாட்டார். ஆகையால், ஒருவன் இவைகளேவிட்டு தன்னேச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோக மானதும்,'எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான

கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்' (2 தீமோ. 2:21). வர்ணிப்பான வார்த்தைகளும் ஆரவாரமான சப்தமும் ஊழிய மாகாது. நமது பிரசங்கங்கள் 'வசனத்தோடு மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத் தோடும்' நம்மிலிருந்து புறப்படவேண்டும். நமது சபை சிறியதோ பெரிதோ, அதிலுள்ள ஒவ்வொருவரும் ஆண்டவரை அறிந்து பற்றிக்கொள்ளும்படி பிரயாசப்படவேண்டும். கிறிஸ்துவே எப்பொழுதும் நமது பிரசங்கப் பொருளாயிருப் பாராக. ஆவியானவர் நமது பக்கத்துணையாயிருந்து, கேட்போருடைய இருதயங்களை அசைத்து, இரட்சகரண்டை அவர்களை இழுத்துக்கொள்வார். அவர் நமக்குப் போதித்து நம்மை நடத்துவதாலே சபையில் கூடிவரும் பற்பல நிலைமை யுள்ள தேவ மக்களுக்கு, அவரவருக்கு வேண்டிய ஆறுதலையும், நம்பிக்கையையும், தைரியத்தையும், பலத்தையும் கொடுத்து ஆசீர்வதிக்கிறார். இது எவ்விதம் நடக்கிறதென்று நாம் அறிய மாட்டோம். நாம் கர்த்தரை நம்பி உண்மையாக அவர் வசனத்தைக்கூறி அறிவிக்கும்போது ஆவியானவர் இந்த வேலையைச் செய்கிறார். சபையிலுள்ள எல்லாருமே இரட் சிக்கப்பட்டால்தான் நமது ஊழியம் உண்மையானதென்று நாம் சொல்லுகிறதில்லை. எத்தனை பிரசங்கங்களைக் கேட்டா லும் நிர்விசாரமாயிருப்பவர்கள் எக்காலத்திலும் உண்டு. நாம் சோர்ந்துபோகாமல் நமது ஊழியத்தை உண்மையாக நிறைவேற்றுவோமானால் ஏற்ற காலத்தில் பலன் காண்போம். கர்த்தர் உண்மையுள்ளவர்.

**நல்ல ஊழியத்துக்கு நல்ல ஜீவியம் அவசியம்.** கசப்பான ஊற்றிலிருந்து நல்ல ஜலம் வராது. கிறிஸ்துவின் ஸ்தானாதி பதிகளாகிய நமது ஜீவியம் ஆண்டவர் பார்வையில் எப்படி யிருக்கிறது? அவரே நமது வாழ்க்கையின் ஒரே நோக்கமா யிருக்கிறாரா? அவரையே முழு வாஞ்சையோடு இரவும் பகலும் தேடுகிறோம் என்பதை ஆண்டவர் அறிந்திருக்கிறாரா? திருவசனத் தியானத்திலும் ஜெப சிந்தையிலும் நிலைத்திருக் கிறோமா? கர்த்தருக்கு ஊழியம் செய்வது சங்கடமாயிராமல் சந்தோஷமாயிருக்கிறதா? ஆராதனை முழுவதிலும் முதலி லிருந்து கடைசிவரை தேவாவியின் பலம் காணப்படுகிறதா? ஜெபம், வேதவாசிப்பு, பாட்டு, போதனை யாவும் ஆவியின்

பலத்தோடு செய்யப்படுகிறதா? இதைச் சபையார் அறிவார்களா? சபையார் தங்கள் நடுவில் பிரசன்னமாயிருக்கும் தேவ சமுகத்தை உணர்ந்து பயபக்தியோடும் உண்மையோடும் நம்மோடு சேர்ந்து ஆராதிக்கிறார்களா? கர்த்தர் மெய்யாகவே இந்த ஸ்தலத்தில் இருக்கிறாரென்று புதிதாய் ஆலயத்துக்கு வருகிறவர்கள் உணருகிறார்களா? ஆராதனை முடிந்தபின் சபையார் தாங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை நினைத்து நன்றியோடும், துதியோடும், முகமலர்ச்சியோடும் தங்கள் வீடுகளுக்குத் திரும்புகிறார்களா? ஜீவனுள்ள ஆண்டவர் ஒவ்வொரு ஆராதனையிலும் தமது கிருபைகளை நமக்கு அருளாவிட்டால் நமது ஆலயங்களாலும் ஆராதனைகளாலும் பிரயோஜனமென்ன? விருதாவிலே தம்மைத் தேடும்படிக்கு அவர் நமக்குச் சொல்லவில்லை. மற்ற இடங்களிலே எப்படி நடந்துகொள்ளுகிறார்களோ அதுபோலவே ஆலயத்திலும் பயபக்தியின்றி நடந்துகொள்ளுகிறார்கள். மனுஷனுக்குக் கொடுக்கிற மரியாதைகூட அவர்கள் கடவுளுக்குக் கொடுக்கிறதில்லை. இவர்கள் குணப்படாதவர்களும் ஆண்டவரை அறியாதவர்களுமாயிருக்கிறார்கள். தேவாசீர்வாதம் நமக்குக் கிடைக்கிறதில்லையென்றால், அவர் நம்மைச் சந்தித்து ஆசீர்வதிக்கிறதில்லையென்றால், தடையைக் கண்டுபிடித்து, கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி மன்றாடவேண்டும்.

நம்மிடத்தில் இல்லாததை நாம் மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாது. சபையார் ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் முந்தி நாமே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கவேண்டும். அனுபவ ஊழியம் உண்மையான ஊழியம். மாயமான ஊழியம் மனுஷரை ஏமாற்றினாலும் ஆண்டவரை ஏமாற்றமுடியாது. கடமைக்கென்றோ, பிழைப்புக்கென்றோ, மனுஷர் தயவை அல்லது புகழ்ச்சியை நாடியோ, நாம் செய்யும் ஊழியம் தேவ ஊழியமாகாது. அப்படிப்பட்ட ஊழியம் உண்மையற்றதும், சபையார் மனதைக் கடினப்படுத்தி, தேவகாரியங்களை அவர்கள் அசட்டையாய் நினைக்கும்படி செய்வதுமாயிருக்கும். ஆராதனை நடத்துவது பெரிய காரியமா? வாசிப்புத்தானே, ஜெபந்தானே, பிரசங்கம்தானே என்று வெகு இலேசாய் நினைக்கிறவர்கள் இருக்கிறார்கள். உத்தம கிறிஸ்தவ ஜீவியமும், உண்மையான ஊழியமும் இலேசான காரியமல்ல. கிறிஸ்துவே நமக்குள்

ளிருந்து அவைகளை நடப்பிக்கவேண்டும். ஒருவர் வேத சாஸ்திரம் கற்று, பரீட்சையில் தேறி, பி.டி. பட்டம் வாங்குவதாலே தேவ ஊழியக்காரனுகமாட்டார். அவர் தமது அறிவினுலே வேதம் வாசிக்கலாம், ஜெபிக்கலாம், பிரசங்கிக்கலாம்; ஆனுல் அது தேவ ஊழியமாகாது. ஆண்டவரை அறிந்து, அவரில் முழுவதும் அன்புகூர்ந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறவர்களே உத்தம ஊழியராவார்கள். 'யோனுவின் குமாரனுகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிருயா? அப்படியானுல் என் ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் மேய்ப்பாயாக; ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவனுனுல் என்னைப் பின்பற்றக்கடவன்' (யோ. 21:15,16; 12:26). இவ்வித இலட்சணங்கள் உள்ளவர்களை ஆண்டவர் தமது ஊழியராகப் பாவித்து நடத்துகிருர். சபைகளில் பேருக்கு கிறிஸ்தவர்கள் இருப்பதுபோலவே பேருக்கு ஊழியக்காரரும் இருக்கிருர்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கும் சபைகளுக்கும் கேடாயிருப்பார்கள். மாம்சத்துக்குரியவர்கள் ஆவிக்குரிய கனிகளை எப்படிக் கொடுக்கமுடியும்? மற்ற வேலைகளைப்போல தேவ ஊழியத்தையும் நினைத்துவிடக்கூடாது. நமது ஜீவியம் கர்த்தரோடு சரியாயிராவிட்டால் நமது வேலைகள் ஒன்றும் சரியாயிராது. தேவகாரியங்களில் நமது மாம்சம் எவ்வளவோ உற்சாகத்தைக் காட்டக்கூடும். ஆனுல் அவைகள் பிதாவை மகிமைப்படுத்தும் கனிகளாகா. அவைகள் கனிகளாயிருந்து ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனப்படவேண்டுமானுல், நாம் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு அவரில் நிலைத்திருந்து ஊழியம் செய்ய வேண்டும். உத்தம ஊழியத்துக்கு இடையூறுகள் அநேகமுண்டு. நமது ஒன்றுமில்லாமையை உணர்ந்து, ஆண்டவருக்கு முழுவதுமாய் நம்மை ஒப்புவித்து, அவருக்கென்றே நாம் பிழைக்கும்போது அவர் வல்லமையாய் நம்மை உபயோகிப்பார். சத்துரு நம்மை மேற்கொள்வதில்லை.

ஆகையால் நம்மையே சில கேள்விகள் கேட்போம். நமது ஜீவியம் முற்றிலும் மாற்றப்பட்டிருக்கிறதா? நமது ஜீவனுகிய கிறிஸ்து நமக்குள் வசிக்கிருரா? அவரது அன்பால் நிறைந்திருக்கிருேமா? அவரது திருவசனத் தியானம் நமது இருதயங்களைப் பரவசப்படுத்துகிறதா? நாம் ஊழியம் செய்யும்போது

நமது பலவீனத்தில் அவர் பலம் காணப்படுகிறதா? கர்த்தர் கூட இருந்து சபையாரை ஆசீர்வதிக்கிறார் என்கிற நிச்சயம் நமக்குண்டா? ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணிக்கொள்ள வேண்டுமென்கிற வாஞ்சையோடு பிரசங்கிக்கிறோமா? நமது ஜீவியத்திலும் ஊழியத்திலும் நாம் கர்த்தரை மகிமைப் படுத்தும்போது அவர் ஜனங்களைத் தம்மிடமாக இழுத்து ஆசீர்வதிக்கிறார். தீயோனின் ஆலோசனைகள் ஒழியும். சிலுவையின் வெற்றி சர்வத்தையும் ஆண்டுகொள்ளும். காலம் நிறைவேறும்போது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பூரண அழகுபொருந்தி தேவதூதரையும் பிரமிக்கச் செய்யும். தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார்.

கர்த்தர் எவ்வளவு பெரியவரென்றும், அவரது இரட்சிப்பு எவ்வளவு மாட்சிமையானதென்றும் நாம் உணரும்போது, அற்பராகிய நம்மை இவ்வளவு உன்னதமான ஊழியத்துக்கு அழைத்த அவருடைய கிருபையை என்றும் மறக்கமுடியாது. உலகத்தில் சர்க்காரில் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களும், கண்ணியமான பட்டங்களைப் பெற்றவர்களும் எவ்வளவோ பெருமையடைகிறார்கள். வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவரும், சர்வ ஜீவன்களையும் பராமரித்துக் காப்பாற்றுகிறவரும், இராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த் தாவுமாகிய அவருக்கு நாம் ஊழியக்காரராயிருப்பதின் மேன்மையை இன்னும் நாம் உணர்ந்தவர்களல்ல. நமக்குள் மேன்மையையும் அளவில்லாத சந்தோஷத்தையும் கொடுக்க வேண்டிய தேவ ஊழியம், சங்கடமும் சஞ்சலமுமாக மாறிப் போனதென்ன? விசுவாசத்தை இழந்தோம். மேலே பார்க்க மறந்தோம். நம்மையும் நமது ஊழியத்தையும் தேவனோடு சம்பந்தப்படுத்திப் பார்க்கத் தவறினோம். நமது வேலையில் அதிகாரிகளோ, சபை ஆலோசனைக்காரரோ அதிகமாய் சம்பந்தப்பட்டபடியால் அது மனுஷர் ஊழியமாகவே மாறிப் போய்விட்டது. இன்னும் பல இடையூறுகளின் மத்தியில் நாம் வேலை செய்யவேண்டியதாயிருப்பதால் மகிழ்ச்சிக்குரிய ஊழியம் மனச்சோர்வையும் மனக்கசப்பையும் உண்டாக்கி யிருக்கலாம். நமதாண்டவருக்கு நேரிடாத போராட்டங்களா நமக்கு வந்துவிட்டன? எவ்வளவு பகை, விரோதங்கள், அவமானங்கள், இடையூறுகள், சோதனைகள் அவரை இடை

விடாமல் நெருக்கிக்கொண்டிருந்தன. அவைகளொன்றும் அவருடைய மன உறுதியையும் திடசித்தத்தையும் அசைக்க முடியவில்லே. காரணமென்ன? பிதா தம்மை அனுப்பினுர் என்பதையும், உலகத்தை இரட்சிக்கும் நோக்கமாக அனுப்பினுர் என்பதையும் அவர் ஒருபோதும் மறந்தவரல்ல. அதுபோலவே நமக்கும். அவரே நம்மைத் தெரிந்துகொண்டு, தமது ஊழியத்தைச் செய்ய அனுப்பினவர். ‘என் பிதா என்னே அனுப்பினதுபோல நானும் உங்களே அனுப்புகிறேன்’ என்ருர். இதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. நம்மை அனுப்பி யிருக்கிறவர் யார் என்பதையும், அவரது இரட்சண்ய ஊழியம் எவ்வளவு மேலானது என்பதையும் நாம் அமர்ந்திருந்து யோசிப்போமாஞல், நமது சந்தோஷத்திற்கு அளவிராது. அவருடைய இராஜ்யத்துக்காக உண்மையாய் உழைக்கிற வர்களேப் பிதா கனம்பண்ணுமல் விடார். ‘ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களேப்போலவும் என் றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்’ (தானி. 12:3).

---

## எமது லெந்து கால வெளியீடுகள் !

வாழ்விக்கும் கிறிஸ்து (1973)
—சாமுவேல் கமலேசன்
தமிழாக்கம்: தி. பாக்கியமுத்து .. ரூ. 2·00

அன்பின் குரல் (1972)
—சா. அமிர்தம் & தா. தங்கராஜ் .. ரூ. 1·75

புதிய மானிடம்
—திலகவதி பால் .. ரூ. 5·00

இயேசுவின் வழக்கும் மரணமும் (1971)
—ஜேம்ஸ் ஸ்டாக்கர் .. ரூ. 4·00

பெருகும் பெருநோக்கு (1970)
—ஸ்தேவான் நீல் .. ரூ. 1·50

வாழ்க்கையில் வல்லமை (1969)
—தா. த. நைல்ஸ் .. ரூ. 1·50

ஆத்துமநேசரின் அங்க மகத்துவம்
—சாமுவேல் பவுல் ஐயர் .. ரூ. 2·00

CLS

THE SEVEN WORDS

By Rev. S. Paramanandam

விலை ரூ. 3·50 (இந்தியாவில்)